சத்திய

வேத அகராதி

[illegible]

[illegible]

சென்னை — இந்தியா

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Personal Information

Name ....

Address...

....

City..

State..................................Zip.................

Phone No...

Mobile No..

E-mail...

Date of Birth.......................Age............

Blood Group...

சத்திய
வேத அகராதி

"நடமாடும் வேதாகம பல்கலைக்கழகம்"
பேராசிரியர் டாக்டர். கிரீன் ரோஸ்
துணைவேந்தர்
சத்தியம் பல்கலைக்கழகம்

REACHING THE WORLDS OF WORD
TRUTH UNIVERSITY INTERNATIONAL

Truth University INTERNATIONAL
Revelation Reformation Revolution

Regd.Office: 7/1 Clarke Road Frazer Town
Bangalore 560 005 Ph: 080-25806613
Corporate Office: 35/2 Residency Road 4th Cross
Bangalore - 560 025 Ph:080-25559184
Campus: Hennur Bunde Bangalore - 560 045
E-mail:- truthuniversity777@yahoo.in
www.truthuniversity.net / www.truthuniversity.org

உதவி ஆசிரியர் குழு

டாக்டர். A J. ராஜா சேர்வை

டாக்டர். S. மைக்கேல் நிக்ஸன்

டாக்டர்.A. எட்வின் பிரபு

டாக்டர். சின்னதுரை ஜோஸ்

டாக்டர். P.சந்திரக் குமார்

டாக்டர். M.சுரேஷ் ஞானையா

சகோ. A. ஜொலிபர்

சகோ. T. சாமுவேல்

சகோ. D. பிலிப்ராஜ்

சகோ. I. ஜார்ஜ் பெர்னான்டஸ்

சகோதரி.மேரி

முதலாம் பதிப்பு : ஜனவரி 2011

பிரதிகள் : 1000

© பேராசிரியர் டாக்டர். கிரீன் ரோஸ்

துணைவேந்தர்

சத்தியம் பல்கலைக்கழகம்

பெங்களூர் - இந்தியா

COPYRIGHT NOTICE

Written permission must be obtained from the Truth University of India as copyright holder, prior to the reproduction of any part of this publication in any form or by any means electronic or mechanical, including photocopying, recording, or any information storage and retrieval system.

Printed by ***Ravi Shankar Bangalore***

சத்தியத்திற்குள் அன்பானவர்களே 3யோவான் 1., வழியும்,**சத்தியமும்**, ஜீவனுமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

பிதாவாகிய தேவன் **சத்தியம்** (ஏசா 65:16)
குமாரனாகிய இயேசு **சத்தியம்** (யோவா 14:6)
ஆவியானவராகிய தேவன் **சத்தியம்** (யோவா 16:13)

ஆகவே தேவனே **சத்தியம்** அவரது வார்த்தைகள் **சத்தியம்** (யோ 17:17) அந்த சத்திய வார்த்தைகளை நாம் அறிந்து கொள்வது தேவசித்தம் (I தீமோ 2:4) **சத்தியத்தை** அறிய வரும் போது **சத்தியம்** நம்மை விடுதலையாக்கும் என்பது நிச்சயம் (யோ 8:32).

எனவே **சத்திய** வேதத்தை தேட (ஏசா 34:16), தியானம்பண்ண (சங் 1:2), ஆராய (யோ 5:39) இந்த **சத்திய வேத அகராதி** தங்களுக்கு பெரிதும் உதவி செய்யும் என நம்புகிறேன்.

மனித சாயலான நம்மை தேவசாயலாக மாற்ற வந்த இயேசு கிறிஸ்து என்றென்றும் மாறாதவர் (எபி13:8) **சத்திய** பிதாவின் சித்தம் நம்மிலே நிறைவேற **சத்திய** இயேசு நமக்குள் வாசம் பண்ண **சத்திய** ஆவியானவர் நம்மை வழி நடத்துவாராக!

உயிர்த்தெழுந்த இயேசு உங்களை ஆசீர்வதித்து, உயர்த்தி, பாதுகாப்பராக!

சத்திய வார்த்தைக்குள்,

"நடமாடும் வேதாகம பல்கலைக்கழகம்"
போராசிரியர் டாக்டர். கிரீன் ரோஸ்
துணைவேந்தர்
சத்தியம் பல்கலைக்கழகம்.

"மாற்றங்கள் என்றுமே மாறாதவை"

பொருளடக்கம்

பைபிள் என்ற பெயர் 1
பழைய ஏற்பாடு : பொருளடக்கம் 2
வேதாகம சரித்திர உலகச் சம்பவங்கள் 4
ஆதியாகமம் 5
யாத்திராகமம் 8
லேவியராகமம் 9
புத்தக ஒப்புமை 10
எண்ணாகமம் 11
புத்தக ஒப்புமை 12
உபாகமம் 13
யோசுவா 14
நியாயாதிபதிகள் 15
நியாயாதிபதிகளின் பெயர் அட்டவணை 17
புத்தக ஒப்புமை 18
ரூத் 19
I, II சாமுவேல் 20
I, II இராஜாக்கள் 22
இஸ்ரவேல் இராஜாக்கள் 23
யூதா இராஜாக்கள் 24
I, II இராஜாக்கள் 25
I, II நாளாகமங்கள் 26
எஸ்றா 27
நெகேமியா 28
எஸ்தர் 29
யோபு 31
சங்கீதப் புத்தகம் 32
நீதிமொழிகள் 35
பிரசங்கி 36
உன்னதப்பாட்டு 37
தீர்க்கதரிசிகள் 39
தீர்க்கதரிசிகளுடைய சேவகத்தின் பொருள் 40
கால நிருபண அட்டவணை 41
பெரிய தீர்க்கதரிசிகள் - ஏசாயா 43
எரேமியா 44
புலம்பல் 45
எசேக்கியேல் 47
தானியேல் 49
சிறிய தீர்க்கதரிசிகள் - ஓசியா 51
யோவேல் 54
ஆமோஸ் 55
ஒபதியா 56
யோனா 58
மீகா 59
நாகூம் 61
ஆபகூக் 63
செப்பனியா 64
ஆகாய் 65
சகரியா 67
மல்கியா 69
இரண்டு ஏற்பாடுகளின் ஒப்புமை 72
இடையே நடந்த சம்பவங்கள் 73
பலஸ்தீனாவின் நிலை 74
அக்காலத்தில் நடந்த முக்கிய சம்பவங்கள் 76
தள்ளுபடியாகமம் 77
தார்க்கும் 79
தல்முட் 80
யூதருடைய சிரேஷ்டசபை 81
யூதருடைய ஜெப ஆலயம் 82
வேதபாரகர் 83
கால நிருபண ஒழுங்கு 84
இயேசுவின் ஜீவியம் 85
சுவிசேஷங்கள் 86
மத்தேயு எழுதின சுவிசேஷம் 87
மாற்கு எழுதின சுவிசேஷம் 89
லூக்கா எழுதின சுவிசேஷம் 91
யோவான் எழுதின சுவிசேஷம் 94
அப்போஸ்தலருடைய நடபடிகள் 96
நிருபங்கள் 98
ரோமருக்கு எழுதின நிருபம் 100
கொரிந்து 103
கொரிந்தியருக்கு எழுதின நிருபங்கள் 104
I, II கொரிந்தியர் 106
I, II கொரிந்தியர் 107
கலாத்தியர் 108
கலாத்தியருக்கு எழுதின நிருபம் 109
எபேசு 111
எபேசியருக்கு எழுதின நிருபம் 113
பிலிப்பி பட்டணம் 115
பிலிப்பியருக்கு எழுதின நிருபம் 116
கொலோசெயருக்கு எழுதின நிருபம் 118
I தெசலோனிக்கேயருக்கு எழுதின ... 120
II தெசலோனிக்கேயருக்கு எழுதின ... 121
தீமோத்தேயு 122
தீமோத்தேயுக்கு எழுதின நிருபங்கள் 124
I தீமோத்தேயு 125
II தீமோத்தேயு 127
தீத்து 129
தீத்துவுக்கு எழுதின நிருபம் 131
பிலேமோனுக்கு எழுதின நிருபம் 132
எபிரெயருக்கு எழுதின நிருபம் 134
பொதுவான நிருபங்கள் 136
யாக்கோபு எழுதின பொதுவான நிருபம் 137
பேதுரு 139
பேதுரு எழுதின பொதுவான முதலாம் ... 142
பேதுரு எழுதின பொதுவான இரண்டாம்... 143
அப்போஸ்தலனாகிய யோவான் 145
யோவான் எழுதிய முதலாம் நிருபம் 147
யோவான் எழுதின இரண்டாம் நிருபம் 148
யோவான் எழுதின மூன்றாம் நிருபம் 149
யூதா எழுதின பொதுவான நிருபம் 151
யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் 152
இரண்டு புத்தகங்களின் ஒப்புமை 154
சொல் அறிமுகம் - பரிசேயர் 155
சதுசேயர் 156
செலோத்தியர் (தீவிரவாதிகள்) 157
சமாரியர் 158
எப்பிக்கூரியர் 159
ஸ்டோயிக்கர் 160
சனகெரிப் சங்கம் 161
ஜெப ஆலயம் (சினகாக்) 162
நியாய சாஸ்திரிகள் 163
அர்த்தமு தேவி (தியானாள்) 164
அளவுகள் 165
எபிரெயர் கால அட்டவணை 167
ஆங்கிலம் மற்றும் தமிழ் கால அட்டவணை 168
சத்தியமுத்தி 169

வேதாகம கணிதத்தின் ஏழுபடிகள்	170
நடமாடும் வேதாகமம் - ஏழு படிகள்	172
தேவசித்தம் - ஏழு படிகள்	174
ஆத்துமாவில் - ஏழு படிகள்	176
ஆவியின் - ஏழுபடிகள்	178
சரீரம் - ஏழுபடிகள்	180
சத்திய தேவன்	182
சத்தியவேதம்	183
கூட்டுதல், குறைத்தல், புரட்டுதல்	184
தேடுதலின் இரகசியங்கள்	185
ஆராய்தலின் இரகசியங்கள்	186
தியானித்தலின் இரகசியங்கள்	187
வார்த்தை ஆராய்ச்சி - சந்தோஷம்	188
வசன ஆராய்ச்சி	189
அதிகார ஆராய்ச்சி	190
சத்திய மனிதனின் - சத்திய ஆத்துமா	191
சத்தியமனிதனின் - சத்திய ஆவி	192
சத்திய மனிதனின் - சத்திய சரீரம்	193
தெய்வீகத்தின் இரகசியங்கள்	194
தேவதூதர்களின் இரகசியங்கள்	195
பிசாசைக்குறித்த இரகசியங்கள்	196
மனிதனின் இரகசியங்கள்	197
குற்றத்தின் இரகசியங்கள்	198
இயேசுவின் முதல் வருகையின் ...	199
இரட்சிப்பைக் குறித்த இரகசியங்கள்	201
சீஷனைக் குறித்த இரகசியங்கள்	203
கிறிஸ்தவனைக் குறித்த இரகசியங்கள்	204
பரிசுத்த ஆவியானவரைக் குறித்த...	205
சபையைக் குறித்த இரகசியங்கள்	206
ஸ்நானத்தைக் குறித்த இரகசியங்கள்	207
அபிஷேகத்தைக் குறித்த இரகசியங்கள்	209
ஜீவ அப்பத்தைக் குறித்த இரகசியங்கள்	210
ஜீவ தண்ணீரைக் குறித்த இரகசியங்கள்	211
ஜீவ ஒளியைக் குறித்த இரகசியங்கள்	212
எலும்பைக் குறித்த இரகசியங்கள்	214
கல்லைக் குறித்த இரகசியங்கள்:	215
ஆசீர்வாதத்தைக் குறித்த இரகசியங்கள்	217
சோதனையைக் குறித்த இரகசியங்கள்	219
பாடுகளைக் குறித்த இரகசியங்கள்	220
கனிகளைக் குறித்த இரகசியங்கள்	221
ஆயத்தத்தின் இரகசியங்கள்	222
இயேசுவின் இரண்டாம் வருகை	223
உயிர்த்தெழுதலைக் குறித்த இரகசியங்கள்	224
உபத்திரவ காலங்களைக் குறித்த...	226
மகா உபத்திரவகால இரகசியங்கள்	228
ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்	229
மூன்றாவது உலக மகா யுத்தம்	230
ஆயிர வருட அரசாட்சி	232
கொம்பைக் குறித்த இரகசியங்கள்	233
வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு	235
நியாயத்தீர்ப்பின் புத்தகங்கள்	236
கிரீடங்களைக் குறித்த இரகசியங்கள்	238
நித்தியத்தைக் குறித்த இரகசியங்கள்	239
மூன்று பரதீசைக் குறித்த இரகசியங்கள்	241
மூன்று இரவு மூன்று பகல்	243
யோனாவின் மரணம்	245
பரலோகம் மூன்றாம் வானத்தில் இல்லை	247
தீபாவளியைக் (தீபாளி) குறித்த...	248
பக்ரீத்தைக் குறித்த இகரசியங்கள்	250
கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்த...	252
ரோமன் கத்தோலிக்க நண்பர்களுக்கு	255
மரித்தவர்களுக்கான வேத வசனங்கள்	259
ரோமன் கத்தோலிக்கர்	262
சத்தியத்துக்கு விரோதமான கொள்கைகள்	264
இயேசுவே மத்தியஸ்தர் (பரிந்துபேசுகிறவர்)	266
மரியாள் என்னும் கன்னி அமல உற்பவி	267
அமல உற்பவி	268
பலவித மார்க்கங்கள்-சமணம்	269
புத்த மதம்	270
கிறிஸ்தவ மார்க்கம் - தோற்றம், விதம்	271
இந்து மார்க்கம்	273
கீதை சொல்லும் போதனைகள்	277
கீதையிலுள்ள சில உபதேசங்கள்	279
இஸ்லாம் மார்க்கம்	283
ஈசா (இயேசு) குரானிலும், பைபிளிலும்	293
அதிகாரம் 2	298
மரியாளின் அதிசயமான கருத்தரிப்பு	299
இயேசுவின் கன்னிப்பிறப்பு	300
இயேசு ஆசீர்வதிக்கப்படுதல்	301
இயேசு பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுதல்	302
இயேசுவின் பாவமில்லாத தன்மை	303
இயேசுவின் அற்புதங்கள்	304
இயேசு வருங்காலத்தை அறிந்திருந்தார்	305
மத்தியஸ்தர்	306
தேவனுடைய வார்த்தையானவர்	307
இயேசுவின் மரணம்	308
இயேசுவின் உயிர்த்தெழுதல்	309
மரித்து உயிர்த்தப்பின் பரமேறினார்	310
சிருஷ்டி கர்த்தா	311
இயேசு கிறிஸ்து திரும்ப வருவார்	313
அதிகாரம் : 3	315
தெய்வம் ஒருவரே என்பதற்கான சான்றுகள்	325
தெய்வத்துக்கு இருக்க வேண்டிய சிறப்புத்...	328
யசூர் வேதம்	330
கைவல்ய நவநீதம்	331
குருகீதை	332
சகஸ்கர நாமாவளி	334
ரிக்வேதம் உத்திராட்சிக் காண்டம்	336
பலதரப்பட்டவர்களின் சாட்சிகள்	338
மனிதன் மரித்தபின் போகக்கூடிய இடங்கள்	345
ஒரே மெய்த்தெய்வம்	347
இயேசு கிறிஸ்துவுக்குரிய தன்மைகள்	349
இயேசு கிறிஸ்துவே	352
பரிசுத்த வேதம் (பைபிள்) கூறுகிறது	353
பலவித மார்க்கம், பெரியோர்களின்...	354
புலவர் பெருமக்களின் சாட்சிகள்	364
பல நாட்டுத் தலைவர்கள்	366
விஞ்ஞானிகள், தத்துஞானிகள்	367
எழுத்தாளர்கள்	370
நாத்தீகர்களின் கூற்று	371
அரசர்கள் கொடுத்த சாட்சிகள்	372
அறிஞர்கள், வழக்கறிஞர்களின் சாட்சிகள்	373
ஆன்மீக வாதிகளின் சாட்சிகள்	379
சத்தியம் பல்கலைக் கழகத்தின் விளக்கம்	380
சத்தியம் பல்கலைக் கழகத்தின் தரிசனம்	383
சத்தியம் பல்கலைக் கழகத்தின் திட்டம்	385
சத்தியம் பல்கலைக்கழகத்தின்...	386
சத்தியம் பல்கலைக்கழகம் வழங்கும் படிப்பு...	387
வேத ஆராய்ச்சிப் பயிற்சிகள்	389
ஜீவ விருட்சத்தின் வெளியீடுகள் (Tree of Life)	390
வார்த்தை ஊழியம்	393

பைபிள் என்ற பெயர்

ஆங்கிலத்தில் "பைபிள்" (Bible) என்ற பெயர் கான்ஸ்டான்டிநோபில் (Constantinople) சபைத் தலைவனாயிருந்த கிறிசொஸ்தம் (Crysostum) என்பவரால் கொடுக்கப்பட்டது. கி.பி.398-404.

அறுபத்தாறு புத்தகங்களை மட்டும் தன்னகத்தே கொண்டு தேவனுடைய வெளிப்பாட்டின் எழுத்து வடிவமாக விளங்குவதே பரிசுத்த வேதாகமம். சுலபமாக கற்றுக் கொள்ளுவதற்கு வசதியாக இது பழைய ஏற்பாடு (உடன்படிக்கை) என்றும், புதிய ஏற்பாடு (உடன்படிக்கை) என்றும் இரண்டாகப் பிரிக்கப்ப்ட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் இதில் உள்ளன. பழைய ஏற்பாட்டு நூலில் மேசியா இயேசு கிறிஸ்துவினுடைய வருகையைக் குறித்து பறைசாற்றும்போது புதிய ஏற்பாட்டு நூல்கள் மேசியா (இயேசு கிறிஸ்து) வினுடைய வாழ்க்கையையும், போதனைகளையும் தெளிவாகக் கூறுகிறது.

நாற்பதிற்கும் மேற்பட்ட எழுத்தாளர்களால் 1600 வருட கால அளவில் அறுபது தலைமுறைகளாக பூமியின் 3 கண்டங்களிலிருந்து 3 மொழிகளில் எழுதி முடிக்கப் பட்டதே பரிசுத்த வேதாகமம். உலகத்திலேயே மிக அதிக மான மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. உலகிலேயே மிக அதிகமான மக்களால் வாசிக்கப் படுகிறதுமான ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமமே.

பழைய ஏற்பாடு : பொருளடக்கம்

பழைய ஏற்பாட்டை எளிதில் கற்பதற்கு வசதியாக நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. ஐந்தாகமங்கள் (ஆதியாகமம் முதல் உபாகமம் வரை)
2. வரலாற்று நூல்கள் (யோசுவா முதல் எஸ்தர் வரை)
3. கவிதை நூல்கள் (யோபு முதல் உன்னதப்பாட்டு வரை)
4. தீர்க்கதரிசன புத்தகங்கள் (ஏசாயா முதல் மல்கியா வரை)

எபிரெயர், பழைய ஏற்பாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்தார்கள். அவையாவன:-

1. நியாயப் பிரமாணம்
2. தீர்க்கதரிசனம்
3. பிரபந்தம்

நியாயப் பிரமாணம்:- என்பது பஞ்சாகமம் அல்லது மோசே எழுதின ஐந்து புஸ்தகங்கள்.

தீர்க்கதரிசனம்:- இதில் யோசுவா, நியாயாதிபதிகள், முதலாம், இரண்டாம் சாமுவேல், முதலாம், இரண்டாம் இராஜாக்கள் என்பவைகளும், ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் ஆகிய பெரிய தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களும் அடங்கியுள்ளன.

பிரபந்தம்:- என்பதில் யோபு, சங்கீதம், நீதிமொழிகள் ரூத், எஸ்தர், பிரசங்கி, உன்னதப் பாட்டு, புலம்பல், இரண்டாம் நாளாகமம், எஸ்றா, நெகேமியா, தானியேல் என்பவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஏற்பாடு என்பது ஒரு உடன்படிக்கை அல்லது தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையிலுள்ள நியமம்.

தேவனே அதை ஏற்படுத்தினார். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இவ்விரண்டு ஏற்பாடுகளுக்குமிடையில் சம்பந்தமுண்டு.

வேதாகம சரித்திர உலகச் சம்பவங்கள்

1. இஸ்ரவேல் எகிப்திலிருந்த காலம். கி.மு. 1600-1200.
2. இஸ்ரவேலின் ராஜ்யகாலம் கி.மு. 900-607-

   இஸ்ரவேலின் வடராஜ்யம் அழிக்கப்பட்டு, யூதாவும் கீழ்ப்படுத்தப்பட்டது.
3. பாபிலோனிய ராஜ்யம் கி.மு. 606-536 எருசலேம் அழிக்கப்பட்டு, யூதா சிறைபோனது.
4. பெர்சிய ராஜ்யம் கி.மு. 536-330
5. கிரேக்க ராஜ்யம் கி.மு. 330-148 பழைய புதிய ஏற்பாட்டுக்கிடையிலுள்ள காலம்.
6. ரோம ராஜ்யம் கி.மு. 148-கி.பி. 476, கிறிஸ்து உலகத்திலிருந்த காலம் கி.மு. 4-கி.பி. 33. பின் கிறிஸ்தவ சபையின் தொடக்கம்.
7. கிரேக்க ராஜ்ய காலத்தில் வேதம் எபிரெய பாஷையிலிருந்து கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.
8. எருசலேமில் பரிசேயர், சதுசேயர் பக்தி வைராக்கியர் என்னும் கூட்டங்கள் எழும்பின. “சனதரீம்” என்னும் ஆலோசனை சங்கமும் ஏற்பட்டது.

ஐந்தாகமங்கள்

ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபகாமம் ஆகிய ஐந்து நூல்களைக் கொண்ட பகுதியே ஐந்து ஆகமங்கள் எனப்படும்.

ஆதியாகமம்

மோசே (ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டவன்)

ஆதியாகமத்தைக் குறித்து அறிவதற்கு முன்பு அதன் ஆக்கியோனான மோசேயைக் குறித்து சிறிது கவனிப்போம்.

லேவியின் சந்ததியாராகிய அம்ராம், யோகபேத் என்பவர்களின் மகன். இவன் எகிப்தில் பிறந்து, மூன்று மாதப் பிள்ளையாயிருக்கையில், பார்வோனின் குமாரத்தி இவனை ஒரு நாணற் பெட்டிக்குள்ளிருக்கக் கண்டு, அவனை எடுத்து வளர்த்தாள். (யாத். 2:3-10) அவன் ராஜமனையில் ராஜகுமாரனைப் போல் நாற்பது வயது மட்டும் வளர்ந்தான். (அப். 7:23)

மோசே தான் பெரியவனான போது, பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப் பதைத் தெரிந்து கொண்டான். (எபி. 11:24-25)

மோசேக்கு நாற்பது வயதான போது, அவன் தன் ஜனத்தோடு சேர்ந்து கொள்ளப் பார்த்தும், அவர்கள் அவனை ஏற்றுக் கொள்ளவில்லை. அதினிமித்தம் தனக்கு மோசம் நேரிடும் என நினைத்து, அங்கிருந்து மீதியான் தேசத்துக்குப் போய் அங்கே சஞ்சரித்தான். அத்தேசத்து ஆசாரியனுடைய குமாரத்தியை விவாகம்பண்ணி, இரண்டு குமாரர் பிறந்தார்கள் (அப். 7:24-29)

நாற்பது வருஷம் சென்றபின், கர்த்தருடைய தூதன் அவனுக்குத் தரிசனமாகி, எகிப்துக்குப் போய், இஸ்ரவேல் ஜனத்தை மீட்டுக் கொண்டு வரும்படிச் சொன்னார். (யாத். 3-4; அப். 7:30-35).

யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் புஸ்தகங்கள் மோசே இஸ்ரவேல் ஜனங்களை மீட்டுக் கொண்டு, சிவந்த சமுத்திரத்தைக் கடந்து, வனாந் தரத்தில் பிரயாணம் பண்ணி, கானான் தேசத்துக்கருகில் போய்ச் சேர்ந்ததைப் பற்றி விவரிக்கின்றன.

மோசே மேரிபா தண்ணீரண்டையில் மனம் பதறிப் பேசினதினிமித்தம் கானான் தேசத்துக்குட்படக் கூடாமற் போயிற்று. (எண். 20:1-13). ஆனாலும், அந்த தேசத்தை நேபோ மலை மேல் நின்று பார்த்தபின், 120-ம் வயதில் மோவாப் தேசத்தில் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டான். (உபா. 34:1-6).

மோசே பூமியிலுள்ள சகல மனுஷரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவன். (எண். 12:6-8).

ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய புஸ்தகங்களை மோசே எழுதினான்.

"ஆதியிலே தேவன்" என்பதோடு வேதாகமம் தொடங்குகிறது. அதாவது : "தேவன் இருக்கிறார். அவர் ஒருவரே தேவன், அவரே சிருஷ்டி கர்த்தர். தேவன் ஒன்று மில்லாமையில் சர்வ லோகத்தையும் சிருஷ்டித்தார்" என்பதே அதன் கருத்து.

கி.மு. 1688-ல் இப்புத்தகம் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது.

புத்தகப் பகுப்பு :

1. சிருஷ்டிப்பு (1:1 - 2;25)

2. வீழ்ச்சி (3:1 - 24)

3. காயீனும், ஆபேலும் (4:1 - 26)

4. சேத்தின் வம்ச வரலாறு (5:1 - 32)

5. ஜலப்பிரளயம் (6:1 - 8:22)

6. நோவாவின் வம்ச வரலாறு (9:1 - 10:32)

7. பாபேல் கோபுரம் (11:1 - 32)

8. ஆபிரகாமின் வரலாறு (12:1-25:18)

9. ஈசாக்கின் வரலாறு (25:19 - 26:35)

10. யாக்கோபின் வரலாறு (27:1 - 26:43)

11. யோசேப்பின் வரலாறு (37:1 - 50:26)

ஆதியாகமம் புத்தகத்தில் 50 அதிகாரங்களும் 1533 வசனங்களும் உள்ளன.

யாத்திராகமம்

எபிரெய பாஷையில் "நாமங்கள்" என்றும் கிரேக்க மொழியில் "புறப்படுதல்" என்றும் கருத்துள்ள பெயர் இப்புஸ்தகத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் : மோசே

காலம் : கி.மு.1688.

புத்தகப் பகுப்பு :

1. இஸ்ரவேலர் எகிப்துக்குச் செல்லுதல் (1:1 - 22)
2. மோசேயின் பிறப்பு, வாழ்க்கை, தெரிந்து கொள்ளுதல், அனுப்புதல் (2:1 - 4:31)
3. மோசேயின் ஊழியம் (5:1 - 7:7)
4. எகிப்தில் ஏற்பட்ட வாதைகள் (7:8 - 11:10)
5. பஸ்காவும், விடுதலையும் (12:1 - 15:21)
6. இஸ்ரவேலர் வனாந்தரத்தில் (15:22 - 40:38)

யாத்திராகமத்தில் 40 அதிகாரங்களும் 1213 வசனங்களும் உள்ளன. இவ்விரண்டு புஸ்தகங்களுக்குமுள்ள நெருங்கிய சம்பந்தம்

ஆதியாகமம்	யாத்திராகமம்
தெய்வீக நோக்கம்	தெய்வீக நிறைவேற்றம்
மனுஷீக பிரயாசம்	தெய்வீக வல்லமை
தோல்வி	ஜெயம்
வாக்குத்தத்தம்	நிறைவேற்றம்
ஜனம் தெரிந்தெடுத்தல்	ஜனம் அழைக்கப்படல்
தெரிந்தெடுக்கும் கிருபை	தெரிந்தெடுக்கும் விதம்

லேவியராகமம்

லேவியராகமம் பரிசுத்தத்தைக் குறித்துக் கூறும் புஸ்தகம், "கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக" என்பதே இப்புஸ்தகத்தின் உள்ளடக்கம்.

ஆசிரியர் : மோசே

காலம் : கி.மு.1686.

புத்தகப் பகுப்பு :

1. பலிகள் (1:1 - 7:38)
2. ஆசாரியத்துவம் (8,9,10 அதிகாரங்கள்)
   தெரிந்து கொள்ளுதல்,
   அனுப்புதல் (2:1 - 4:31)
3. சுத்திகரிப்பிற்கான
   சட்டங்கள் (11 -15 அதிகாரங்கள்)
4. ஆராதனை (16, 17 அதிகாரங்கள்)
5. அறநெறிச் சட்டங்கள் (18, 19, 20 அதிகாரங்கள்)
6. ஆசாரியத்துவப்
   பிரமாணங்களும்,
   பண்டிகைகளும் (21:1 - 24:9)
7. சிட்சையின் பிரமாணங்கள் (24:10-23)
8. ஓய்வுநாள் மற்றும் சொத்துக்கள்
   பற்றிய பிரமாணங்கள் (25ம் அதிகாரம்)
9. சாபமும், ஆசீர்வாதமும் (26ம் அதிகாரம்)
10. பொருத்தனைகள் (27ம் அதிகாரம்)

இப்புத்தகத்தில் 27 அதிகாரங்களும் 859 வசனங்களும் உள்ளன.

புத்தக ஒப்புமை

இவ்விரண்டு புஸ்தகங்களுக்குமுள்ள நெருங்கிய சம்பந்தம்.

யாத்திராகமம்

பிராயச்சித்தபலியின் குறிப்பு பாவிகளைப் பற்றியது.

தேவன் மனுஷனிடம் வருவது.

கிறிஸ்து இரட்சிக்கிறவர்.

தேவனுடைய அன்பு, பாவ மன்னிப்பு

சாத்தானிலிருந்து விடுதலை.

தேவன் மலையிலிருந்து பேசுகிறார்.

லேவியராகமம்

பிராயச்சித்தபலியின் போதனை பரிசுத்தவான்களைப் பற்றியது.

மனுஷன் தேவனிடம் போவது.

கிறிஸ்து பரிசுத்தமாக்குகிறவர்.

தேவனுடைய வெளிச்சம்.

பரிசுத்தமடைதல்.

தேவனுக்குப் பிரதிஷ்டை.

தேவன் ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து பேசுகிறார்.

எண்ணாகமம்

இப்புத்தகம் எபிரெய பாஷையின் "வனாந்தரத்தில்" (In the wilderness) என்றும் கிரேக்க பாஷையில், "எண்ணாகமம்" என்றும் குறித்துள்ளது. இஸ்ரவேல் ஜனங்கள் இரண்டு முறை தொகையிடப்பட்டதினால், "எண்ணாகமம்" எனப்பட்டது.

ஆசிரியர் : மோசே

காலம் : கானானில் பிரவேசிப்பதற்கு முன்.

புத்தகப் பகுப்பு :

1. சீனாயிலிருந்து வாக்குத்தத்த நாட்டிற்குப் புறப்படுதல் (1:1 - 10:10)
2. சீனாயிலிருந்து காதேஸிற்கு (10:11-12:16)
3. காதேஸில் (13:1-20:13)
4. காதேஸிலிருந்து மோவாப் சமபூமி வரை (20:14-22:21)
5. மோவாபில் (22:22-32:42)
6. இதர விஷயங்கள் (33-36 வரை)

இப்புத்தகத்தில் 36 அதிகாரங்களும் 1288 வசனங்களும் உள்ளன.

புத்தக ஒப்புமை

இவ்விரண்டு புஸ்தகங்களுக்குமுள்ள நெருங்கிய சம்பந்தம்

லேவியராகமம்	எண்ணாகமம்
விசுவாசியின் வணக்கம்	விசுவாசியின் ஜீவியம்
பரிசுத்தமாகுதல்	பிரயாணம் போகுதல்
ஆவிக்குரிய நிலை	ஆவிக்குரிய வளர்ச்சி
உள்ளான நிலை	புறம்பான நடை
சடங்காசார முறை	சரித்திர முறை
பரிசுத்த ஸ்தலம்	வனாந்தர ஜீவியம்
தேவனுக்கு ஊழியம்	மனுஷருக்கு ஊழியம்

உபாகமம்

உபாகமம் பஞ்சாகமத்தின் கடைசிப் புஸ்தகம். எபிரெய பாஷையில் இதன் பொருள் "வசனங்கள்" (உபா.1:2) கிரேக்க மொழியில், "சொன்னதைச் சொல்லுதல்" அல்லது "இரண்டாம் பிரமாணம்" எனப்படும்.

இல்க்கியா தேவாலயத்தில் கண்டெடுத்த புஸ்தகம் உபாகமம் என்று எண்ணப்படுகிறது. (II இரா. 22 :8) எஸ்றா வாசித்த புஸ்தகமும் இதுவாயிருக்கலாம். (நெகே. 8:1) எசேக்கியாவின் மனுஷர் வைத்திருந்த கர்த்தருடைய வேத புஸ்தகமும் இதுவே. (II நாளா. 17: 8-9) தாவீது சாலொமோனுக்கு மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி, நடந்து கொள்ளென்று சொன்னதும் இந்தப் புஸ்தகத் தையே குறிக்கிறது. (I இரா 2:1-4). யோசுவா

கற்களில் பேர்த்தெழுதின நியாயப்பிரமாண புஸ்தகமும், இதுவே. (யோசு. 8:32).

ஆசிரியர் : மோசே

காலம் : கி.மு. 1645

இடம் : கானானுக்குள் பிரவேசிப்பதற்கு சற்று முன் மோவாப் சமபூமியில் வைத்து

புத்தகப் பகுப்பு :

1. முகவுரை (1:1 - 5)
2. வரலாற்றுப் பின்னணி (1:6-4:43)
3. உடன்படிக்கையின் நிபந்தனைகள் (4:44-26:19)
4. உறுதிப்படுத்துதல் (27 - 30 அதிகாரங்கள்)
5. தலைமைத்துவத்தின் தொடர்ச்சி (31-34 அதிகாரங்கள்)

இப்புத்தகத்தில் 34 அதிகாரங்களும் 958 வசனங்களும் உள்ளன.

யோசுவா

கர்த்தர் வாக்குப்பண்ணின தேசத்துக்கு இஸ்ரவேலை வழிநடத்திப் போகும்படி, யோசுவாவுக்குக் கட்டளை பிறந்ததோடு இப்புஸ்தகத்தின் விஷயம் ஆரம்பித்து, அவன் தேசத்தைப் பிரித்துக் கொடுத்ததோடு முடிவடைகிறது.

ஆசிரியர் : யோசுவா

காலம் : கி.மு. 1370க்கும் 1330க்கும் இடையில்

புத்தகப் பகுப்பு :

1.	கானானில் பிரவேசித்தல்	(1:1 - 5:12)
2.	கானானைக் கைப்பற்றுதல்	(5:13-12:24)
3.	நாட்டைப் பங்கிடுதல்	(13 - 21 அதிகாரங்கள்)
4.	முடிவுரை	(22 - 24 அதிகாரங்கள்)

இப்புத்தகத்தில் 24 அதிகாரங்களும் 685 வசனங்களும் உள்ளன.

நியாயாதிபதிகள்

யோசுவா மரித்த காலம் தொடங்கி, சவுல் ராஜாவான நாட்கள் மட்டுமுள்ள 300 வருஷ சம்பவங்கள் இப்புஸ்தகத்தில் குறித்துள்ளன. ரூத்தின் சரித்திரமும், முதலாம் சாமுவேலின் முதல் எட்டு அதிகாரங்களில் குறிக்கப்பட்டவைகளும், நியாயாதிபதிகளின் காலத்தைச் சேர்ந்தவை.

ஆசிரியர் : சாமுவேல்

காலம் : கி.மு. 1126.

புத்தகப் பகுப்பு :

யோசுவாவின் மரணம் முதல் சாமுவேல் தீர்க்கதரசி வரையிலான காலத்தின் வரலாறு இப்புத்தகத்தில் இடம் பெறுகிறது. இக்கால அளவில் வாழ்ந்த 12 நியாயாதிபதி களில் 6 நியாயாதிபதிகளைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள் ளன. 200 ஆண்டுகளின் வரலாற்றை இப்புத்தகத்தில் காணலாம்.

1. முகவுரை (1:1 - 2:5)
2. இஸ்ரவேலில் எழும்பின நியாயாதிபதிகள்(2:6-16:31)
   - அ) ஒத்னியேல் (3:1 - 11)
   - ஆ) ஏகூத் (3 : 12-30)
   - இ) சம்கார் (3 :31)
   - ஈ) தெபொராளும், பாராக்கும் (4,5 அதிகாரங்கள்)
   - உ) கிதியோன் (5 : 8)
   - ஊ) தோலா (10 :1,2)
   - எ) யாவீர் (10 : 3 - 5)
   - ஏ) யெப்தா (10:6 - 11:40)

ஐ) இப்சான் (12 : 8 -10)

ஒ) ஏலோன் (12 : 11, 12)

ஓ) அப்தோன் (12 : 13 - 15)

ஔ) சிம்சோன் (13 :1 -16 :31)

3. அ) இஸ்ரவேலரின் ஆவிக்குரிய சீர்குலைவு (17 : 1)

ஆ) இஸ்ரவேலரின் தார்மீக சீர்குலைவு (21 : 26)

இப்புத்தகத்தில் 21 அதிகாரங்களும் 618 வசனங்களும் உள்ளன.

நியாயாதிபதிகளின் பெயர் அட்டவணை

பகைஞர்	ஒடுக்கிய காலம் (வருஷம்)	நியாயாதிபதி	ஓய்வு காலம் (வருஷம்)	குறிப்பு
மெசொப்பொத்தாமியா	8	ஒத்னியேல்	40	நியா.3:9-11
அம்மோனியர், மோவாபியர், அமலேக்கியர்	18	ஏகூத்	80	நியா.3:15
பெலிஸ்தியர்	20	சம்கார்		நியா. 3:31
கானானியர்	20	தெபொராள் பாராக்	40	நியா. 4:5-31
மீதியானியர்	7	கிதியோன்	40	நியா. 6:8
		அபிமெலேக்கு	3	நியா. 9:22
		தோலா	23	நியா. 10:2
		யாவீர்	22	நியா. 10:8
அம்மோனியர்	18	யெப்தா	31	நியா. 10-12 அதி
		இப்சான்		
		ஏலோன்		
		அப்தோன்		
பெலிஸ்தியர்	40	சிம்சோன்	20	நியா. 13-16 அதி

புத்தக ஒப்புமை

இவ்விரண்டு புஸ்தகங்களுக்குமுள்ள சம்பந்தம்.

யோசுவா	நியாயாதிபதிகள்
பரலோக விஷயங்கள்	பூலோக விஷயங்கள்
ஆவிக்குரியவை	மாம்சத்துக்குரியவை
ஆர்ப்பரிப்பு	புலம்பல்
வெற்றி	தோல்வி
முன்னேற்றம்	பின் வாங்குதல்
விசுவாசம்	நம்பிக்கையீனம்
சுயாதீனம்	அடிமைத்தனம்

ரூத்

ரூத் நியாயாதிபதிகளின் காலத்திலிருந்த ஒரு மோவாபிய பெண். எலிமெலேக்கு,நகோமி என்பவர்களின் மகனாகிய மக்லோன் இவளை மோவாப் தேசத்தில் விவாகம் செய்தான். எலிமெலேக்கும், மக்லோனும் மரித்தபின், நகோமியும் ரூத்தும் பெத்லெகேமுக்கு வந்து தங்கியிருந்தார்கள். ரூத் வயல் வெளியில் வேலைசெய்து, தங்களை ஆதரித்துக் கொண்டு வந்தாள். அந்நாட்களில் போவாஸ் இவளை விவாகஞ் செய்து, ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளை தாவீதின் முன்னோனானான். இயேசுவும் அவன் வம்சத்தில் பிறந்தார்.

ஆசிரியர் : திட்டமாகக் கூறமுடியாது. யூத பாரம்பரியத் தின்படி சாமுவேல் தீர்க்கதரிசி என நம்பப்படுகிறது.

காலம் : கி.மு. 1600க்கும் 1500க்கும் இடையில்

புத்தகப் பகுப்பு :

1. முகவுரை - நகோமி மோவாபிற்கு செல்லுதல்(1:1-5)
2. நகோமி மோவாபிலிருந்து பெத்லகேமிற்குத் திரும்புதல் (1:6-22)
3. ரூத் போவாஸின் வயலில் (அதிகாரம் 2)
4. ரூத் போரடிக்கும் களத்தில் (அதிகாரம் 3)
5. ரூத் பட்டண வாசலில் (4:11-12)
6. முடிவுரை (4:13-22)

இப்புத்தகத்தில் 4 அதிகாரங்களும் 85 வசனங்களும் உள்ளன.

ஐ, ஐஐ சாமுவேல்

எப்பிராயீம் தேசத்தில் ராமதாயீம் ஊரில் எல்க்கானா என்பவனுக்கு இரண்டு மனைவிகளிருந்தார்கள். ஒருத்தி பெயர் அன்னாள். அவளுக்குப்பிள்ளை இல்லை. அவளும் புருஷனும் சீலோவுக்குப் பலியிடப் போனபோது,

அன்னாள் கர்த்தரை நோக்கி அழுது, விண்ணப்பம் பண்ணி, ஒரு ஆண் பிள்ளையைக் கேட்டாள். அப்படியே ஒரு பிள்ளை பிறந்த போது, அதற்குச் சாமுவேல் என்று பேரிட்டு, நசரேய விரதத்துக்குட்படுத்தினாள். பிள்ளை வளர்ந்தபின், அவனைச் சீலோவுக்குக் கொண்டு போய் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று பிரதான ஆசாரியனாகிய ஏலியினிடம் ஒப்புக் கொடுத்தார்கள். (1 சாமு. 1ம் அதி)

ஆசிரியர் : சாமுவேல்.

காலம் : கி.மு. 1204க்கும் 1035க்கும் இடையில்

இஸ்ரவேலரின் நூறு வருட வரலாற்றை இதில் காணலாம்.

I சாமுவேல் புத்தகத்தில் 31 அதிகாரங்களும் 810 வசனங்களும்,

II சாமுவேல் புத்தகத்தில் 24 அதிகாரங்களும் 695 வசனங்களும் உள்ளன.

புத்தகப் பகுப்பு :

I சாமுவேல்

1. சாமுவேலின் வாழ்க்கையும் ஊழியமும் (1:1-7:17)
2. சவுலின் வாழ்க்கையும் ஊழியமும் (8:1 - 14:52)
3. தாவீதின் வாழ்க்கையும் ஊழியமும்

பாகம் (1) 15:1:31:13)

II சாமுவேல்

4. தாவீதின் ஊழியம் (பாகம்(2) 1:1-20:26)
5. தாவீதின் இறுதி நாட்கள் (21:1-24:25)

உ. உ. ராஜாக்கள்

இஸ்ரவேல், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம். அந்நிய ஜாதியாரால் ஒடுக்கப்பட்ட வேளைகளில், அவர்களுடைய கூக்குரலைக் கேட்டு தேவன் நியாயாதிபதிகளைக் கொடுத்தார். பின்பு மற்ற ஜாதிகளுக்கிருந்தது போல தங்களுக்கு ராஜாக்கள் வேண்டுமென்று கேட்கவே ராஜாக்களையும் கொடுத்தார்.

இஸ்ரவேல் இராஜாக்கள்

காலம் கி.மு. 975–730

இஸ்ரவேல் இராஜாக்கள்	வருஷம்	குறிப்பு
யெரொபெயாம்	22 வருஷம்	I இரா. 12. II நாளா. 10
நாதாப்	2 வருஷம்	I இரா. 15
பாஷா	24 வருஷம்	I இரா. 15
ஏலா	2 வருஷம்	I இரா. 16
சிம்ரி	7 நாட்கள்	I இரா. 16
உம்ரி	12 வருஷம்	I இரா. 16
ஆகாப்	22 வருஷம்	I இரா. 21
அகசியா	2 வருஷம்	I இரா. 22
யோராம்	12 வருஷம்	II இரா. 3:1
யெகூ	28 வருஷம்	II இரா. 9-10
யோவாகாஸ்	17 வருஷம்	II இரா. 13
யோவாஸ்	16 வருஷம்	II இரா. 13
யெரொபெயாம் II	41 வருஷம்	II இரா. 15
சகரியா	6 மாதம்	II இரா. 15:8-12
சல்லூம்	1 மாதம்	II இரா. 15:10-14
மெனாகேம்	10 வருஷம்	II இரா. 15:14-22
பெக்காகியா	2 வருஷம்	II இரா. 15:23-26
பெக்கா	20 வருஷம்	II இரா. 15:27-31
ஓசெயா	9 வருஷம்	II இரா. 17

யூதா இராஜாக்கள்

காலம் கி.மு. 975–597

யூதா இராஜாக்கள்	வருஷம்	குறிப்பு	
ரெகொபெயாம்	17 வருஷம்	I இரா 12,	II நாளா 11
அபியாம்	3 வருஷம்	I இரா 15,	II நாளா 13
ஆசா	41 வருஷம்	I இரா 15,	II நாளா 14
யோசபாத்	25 வருஷம்	I இரா 22,	II நாளா 17
யோராம்	8 வருஷம்	II இரா 8,	II நாளா 21
அகசியா	1 வருஷம்	II இரா 8,	II நாளா 22
அத்தாலியாள்	6 வருஷம்	II இரா 11,	II நாளா 23
யோவாஸ்	40 வருஷம்	II இரா 12,	II நாளா 24
அமத்சியா	29 வருஷம்	II இரா 14,	II நாளா 25
அசரியா (உசியா)	52 வருஷம்	II இரா 15,	II நாளா 26
யோதாம்	16 வருஷம்	II இரா 15,	II நாளா 27
ஆகாஸ்	16 வருஷம்	II இரா 16,	II நாளா 28
எசேக்கியா	29 வருஷம்	II இரா 18,	II நாளா 29
மனாசே	55 வருஷம்	II இரா 21,	II நாளா 33
ஆமோன்	2 வருஷம்	II இரா 21,	II நாளா 33
யோசியா	31 வருஷம்	II இரா 22,	II நாளா 34
யோவாகாஸ்	3 மாதம்	II இரா 23:31,	II நாளா 36
யோயாக்கீம்	11 வருஷம்	II இரா 23,	II நாளா 36
யோயாக்கீன்	3 மாதம்	II இரா 24,	II நாளா 36
சிதேக்கியா	11 வருஷம்	II இரா 25,	II நாளா 36

I, II இராஜாக்கள்

இஸ்ரவேலரின் 4 நூற்றாண்டு வரலாற்றை இதில் காணலாம்.

ஆசிரியர் : பாபிலோன் சிறையிருப்பில் இருந்த யாரோ ஒருவராக இருக்கலாம். ஏசாயா என்றும், எரேமியா என்றும் கருதுகிறவர்கள் உள்ளனர்.

காலம் : கி.மு. 562க்கும் 536க்கும் மத்தியில்.

புத்தகப் பகுப்பு :

1. சாலொமோனின் ஆட்சிக்காலம் (1:1-12:34)
2. பிளவுபட்ட இஸ்ரவேலின் வரலாறு (12:35:2 ராஜாக்கள் 27:30)

1. I ராஜாக்களின் புத்தகத்தில் 22 அதிகாரங்களும் 816 வசனங்களும்,
2. II ராஜாக்களின் புத்தகத்தில் 27 அதிகாரங்களும் 719 வசனங்களும் உள்ளன.

I, II நாளாகமங்கள்

இப்புஸ்தகங்கள் தொடக்கத்தில் எஸ்றா, நெகேமியா புஸ்தகங்களோடு சேர்த்து ஒரு கால நிருபண சரித்திரமாக எழுதப்பட்டது. கிரேக்க மொழி பெயர்ப்பில் "இராஜாக்களின் புஸ்தகங்களில் குறிக்கப்படாதவைகள் இவைகளில் குறிக்கப்பட்டுள்ளன" எனக் கருத்துள்ள பெயர் கொடுக்கப்பட்டது.

இப்புஸ்தகங்களில் சவுலின் மரணம் தொடங்கி, கோரேஸ் கட்டளை கொடுத்த கி.மு. 536-ம் வருஷம் வரையுள்ள சரித்திரம் குறிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் : எஸ்றா என்னும் வேதபாரகன்

காலம் : கி.மு. 450.

புத்தகப் பகுப்பு :

1. வம்ச வரலாறு (1:1-9:44)
2. தாவீதின் ஆட்சிக்காலம் (10:1-29:30)
3. சாலொமோனின் ஆட்சிக் காலம் (2 நாளா1:1-9:31)
4. யூதப் பேரரசு (10:1-36:23)

1 நாளாகமத்தில் 29 அதிகாரங்களும் 942 வசனங்களும், 2 நாளாகமத்தில் 36 அதிகாரங்களும் 822 வசனங்களும் உள்ளன.

எஸ்றா

இவன் செராயாவின் குமாரன். ஆரோனின் சந்ததியான். மோசேயின் நியாயப் பிரமாணத்தில் தேறின வேதபாரகன். பாபிலோனில் சிறைப்பட்டிருந்த யூதருக்குள் ஆசாரிய ஊழியஞ் செய்து கொண்டிருந்த இவன், அர்தசஷ்டா ஆளுகிற காலத்தில், பெர்சியாவுக்குப் போனான். அர்தசஷ்டா ஒரு நிருபத்தை எழுதி அவனுக்குக் கொடுத்து, எருசலேமுக்குப் போகும்படி சொல்லி யனுப்பினான்.

ஆசிரியர் : எஸ்றா என்னும் வேதபாரகன்

காலம் : கி.மு. 456க்கும் 444க்கும் நடுவில்

புத்தகப் பகுப்பு :

1. பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதல் (1:1-2:70)
2. தேவாலயச் சீரமைப்பு (3:1-6:22)
3. எஸ்றாவின் எருசலேம் பயணம் (7:1 - 8:36)
4. எஸ்றாவின் சீர்திருத்தங்கள் (9:1 - 10:44)

இப்புத்தகத்தில் 10 அதிகாரங்களும் 250 வசனங்களும் உள்ளன.

நெகேமியா

நெகேமியா என்பதன் பொருள் "ஆறுதல்" இவன் யூதா கோத்திரத்தான். அகலியாவின் குமாரன். பெர்சிய ராஜாவாகிய அர்தஷ்டாவின்கீழ், சூசான் அரமனையில் பானபாத்திரக்காரனாயிருந்தான்.

இப்புஸ்தகத்தோடு இஸ்ரவேலின் பழைய ஏற்பாட்டுச் சரித்திரம், யோசுவாவின் நாட்கள் தொடங்கி, மல்கியாவின் காலம் வரை, 1020 வருஷ சம்பவங்கள் முடிவடைகிறது. (கி.மு. 1451-432).

ஆசிரியர் : நெகேமியா

காலம் : கி.மு. 456க்கும் 444க்கும் நடுவில்

புத்தகப் பகுப்பு :

1. நெகேமியா சூசான் அரமனையில் (அதிகாரம் 1)
2. நெகேமியா எருசலேமில் (அதிகாரம் 2)
3. எருசலேமின் அலங்கம் கட்டப்படுதல் (அதிகாரம் 3)
4. எதிர்ப்புகள் (அதிகாரம் 4)
5. சமூக பொருளாதார பிரச்சனைகள் (அதிகாரம் 5)
6. நெகேமியாவிற்கு எதிரான அச்சுறுத்தல்கள் (அதிகாரம் 6)
7. சிறைப்பட்டோரின் பெயர்கள் (அதிகாரம் 7)
8. எஸ்றாவின் பிரசங்கம் (அதிகாரம் 8, 9, 10)
9. எருசலேமின் குடிகள் (அதிகாரம் 11)
10. அலங்கத்தின் பிரதிஷ்டை (அதிகாரம் 12)
11. நெகேமியாவின் சீர்திருத்தங்கள் (அதிகாரம் 13)

இப்புத்கத்தில் 13 அதிகாரங்களும் 406 வசனாங்களும் உள்ளன.

எஸ்தர்

பாபிலோனிலிருந்து யூதர் அநேகர் திரும்பி எருசலேமுக்குப் போனார்கள். இன்னும் அநேகர் அங்கே தங்கியிருந்தார்கள். அவர்களில் மொர்தெகாய், எஸ்தர் என்பவர்களைப் பற்றி இப்புஸ்தகத்தில் குறிக்கப் பட்டுள்ளன.

எஸ்தர் பென்யமீன் கோத்திரத்து கீஸ் என்பவனின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீ. வாசனை மரமென்னும் அர்த்தமுள்ள "அத்சாள்" (Hadassah) அவளது எபிரெயப் பெயர். அந்நாட்களில் அவளுடைய சிறிய தகப்பனாகிய மொர்தெகாய், ராஜ அரமனையில் ஊழியஞ் செய்து கொண்டிருந்தான் எஸ்தர், தாய் தகப்பன் இல்லாத வளானதால், அவன் அவளைத் தன் குமாரத்தியாக எடுத்துக் கொண்டான். (எஸ். 2:7)

அக்காலத்தில், பெர்சிய ராஜாவாகிய அகாஸ்வேரு எஸ்தரை விவாகம் செய்த போது, அவள் ராஜாத்தி யானாள்.

ஆசிரியர் : நிச்சயமில்லை. ஆனாலும் வேதபாரனாகிய எஸ்றா என்று நம்பப்படுகிறது.

காலம் : கி.மு. 465க்குப் பின்.

புத்தகப் பகுப்பு :

1. வஸ்தி ராணி தள்ளப்படுதல் (1:1 - 22)
2. எஸ்தர் ராணி பதவிக்கு உயர்த்தப்படுதல் (2:1 - 23)
3. ஆமானின் சதி ஆலோசனை (3:1-15)
4. எஸ்தரின் தீர்மானம் (4:1-17)

5. எஸ்தரின் முதலாம் விருந்து (5:1-14)

6. ஆமானின் வீழ்ச்சி (6:1-14)

7. எஸ்தரின் இரண்டாம் விருந்து (7:1-10)

8. மொர்தெகாயின் வெற்றி (8:1-17)

9. பூரீம்பண்டிகை (9:1-10:3)

இப்புத்தகத்தில் தேவன் என்கிற சொல் பயன்படுத்தப் படவில்லை. இதில் 10 அதிகாரங்களும் 167 வசனங்களும் உள்ளன.

யோபு

யோபு பூர்வ காலத்தில் ஊத்ஸ் தேசத்திலிருந்த ஒரு ஐசுவரியவான். இவனைப் பற்றி (எசே. 14:14) லிலும், (யாக் . 5:5-11)லிலும் குறித்திருக்கிற படி உண்மையானதென்று தெரிகிறது.

2. யோபு என்னும் பேருடைய, இசக்காருடைய ஒரு குமாரனிருந்தான். (ஆதி. 46:13)

கவிதை நூல்களின் பிரிவிலுள்ள ஒரு புத்தகம் இது. இதன் ஆசிரியரைத் திட்டமாக கூறமுடியாது. எனினும் பெரும்பான்மையான வேதப்பண்டிதர்கள் யோபு அல்லது மோசே என்று நம்புகின்றனர். எழுதப்பட்ட காலம் கி.மு. 1849க்கும் 1703க்கும் நடுவில்.

புத்தகப் பகுப்பு :

1. யோபுவின் வாழ்க்கையும் சோதனையும் (1,2 அதிகாரங்கள்)
2. யோபுவுக்கும் நண்பர்களுக்கும் இடையிலான உரையாடல்கள் (3-27 அதிகாரங்கள்)
   - அ. யோபுவின் புலம்பல் (அதி 3)
   - ஆ. முதலாம் தொடர் உரையாடல் (அதி 4 - 14)
   - இ. 2ம் தொடர் உரையாடல் அதி. 15-21)
   - ஈ. 3ம் தொடர் உரையாடல் (22-26 அதிகாரங்கள்)
   - உ. யோபுவின் பிரசங்கங்கள் (அதி. 27)
3. ஞான உபதேசம் (28ம் அதிகாரம்)
4. யோபுவின் புலம்பல் (29:1-42:6)
5. யோபுவின் இறுதிக்காலம் (42:7-17)

இப்புத்தகத்தில் 42 அதிகாரங்களும் 1070 வசனங்களும் உள்ளன.

சங்கீதப் புத்தகம்

சங்கீத புஸ்தகம் எபிரெயருடைய பாட்டுப் புஸ்தகம் எனப்படலாம்.

இப்புஸ்தகத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பகுதியும், மங்களத் துதியோடு முடிவடைகிறது. அவையாவன: (I) 1-41, (II) 42-72, (III) 73-89, (IV) 90-106, (V) 107-150.

Repeated

இப்புஸ்தகத்திலுள்ள 150 சங்கீதங்களில், 100-ல் ஆக்கியோன் யாரென்று குறித்துள்ளது. தாவீது-73, கோராகின் புத்திரர்-10, ஆசாபின் புத்திரர்-12, சாலொமோன்-2, தேதான், ஏமான், மோசே என்பவர்கள் ஒவ்வொன்று. மிகுதியான 50-ல் எழுதினவனின் பெயர் சொல்லப்படவில்லை.

காலம்:- தாவீதின் நாட்கள் தொடங்கி, எசேக்கியாவின் நாட்கள் வரையுள்ள 300 வருஷங்களுக்குள் சங்கீதங்களில் அதிகமானவை எழுதப்பட்டன.

சங்கீதங்கள் பலவிதக் கருத்துகளும் போதனைகளுமுடையன. அவைகளைப் பின்வருமாறு வகை வகையாகப் பிரிக்கலாம்.

மேசியாவைப் பற்றியவை. 16, 22, 24, 40, 68, 69, 118.

மனஸ்தாபத்தைக் குறிக்கிறவை: 6, 32, 38, 51, 102, 130, 143.

அல்லேலூயா சங்கீதங்கள்: 106, 111-113, 117, 135, 140-150.

உபதேசமுள்ளவை: 1, 5, 7, 15, 17, 50, 73, 94, 101.

பிரயாணத்துக்கடுத்தவை: 120-134.

ஜெப சங்கீதங்கள்: 17, 86, 90, 102, 142.

ராஜரீக சங்கீதங்கள்: 90-100.

பயபக்திக் குரியவை: 3, 16, 54, 61, 86, 28, 41, 59, 70, 67, 122, 144.

காலை சங்கீதங்கள் : 3-5, 19, 57, 63, 108.

மாலை சங்கீதங்கள் : 4, 8, 143.

தியானத்துக்குரியவை : 16, 56, 60.

கலக்கமான வேளையில் : 4,5, 11, 28, 41, 55, 59, 64, 109, 120 ,140, 143.

தீர்க்கதரிசனங்கள் : 2, 16, 22, 40, 45, 68, 69, 72, 97, 110, 118.

சரித்திர முறையானவை : 78, 105-106.

நமது ஆண்டவரைப் பிசாசு சோதித்த வேளையில், 91-ம் சங்கீதத்திலிருந்து அவன் எடுத்துச் சொன்ன வைகளை அவர் ஏற்றுக் கொண்டார்.

கடைசி ராப்போஜன முடிவில், அவர் தமது சீஷரோடு 113-118 சங்கீதங்களைப் பாடினார். (மத். 26:30) அவர் சிலுவையில் தொங்கின வேளையிலும், சங்கீதமே அவருடைய தியானமாயிருந்தது. அவர் சங்கீத வசனத்தைச் சொல்லிக் கொண்டே தமது ஜீவனையும் விட்டார்.

தமக்குச் சம்பவித்தவை சங்கீதங்களில் குறித்திருந் தவை யென்றும், (யோவா. 13:18) சங்கீதங்களில் தம்மைக் குறித்து, எழுதியதெல்லாம் நிறைவேற வேண்டும் என்றும் சொன்னார். (லூக். 24:44).

பவுலும், சீலாவும் பிலிப்பி பட்டணத்தில் காவலிலிருந்து பாடின பாட்டுகளும் சங்கீதங்களே .(அப். 16:25).

சங்கீதங்களைப் பொதுவாய் தாவீதின் சங்கீதங்கள் என்று சொன்னதன் நியாயம், அவனே அதிகமான சங்கீதங்களை எழுதினதோடு, எல்லாவற்றையும் திரட்டிச் சேர்த்தான் என்பதே, ஆனாலும் எஸ்றாவே இவைகளை நிறைவாக்கினானென்று தெரிகிறது.

கவிதை நூற் பிரிவில் மிகப் பெரியபுத்தகம் சங்கீதங்கள். 5 பகுதிகளாக இது பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் அழகான ஒரு தேவ துதி பாடலுடன் முடிவடைகிறது. (41:13, 72:18,19, 89:52, 106:48 150ம் சங்கீதம்) அப்பகுதிகளாவன :

புத்தகப் பகுப்பு :

முதல் பகுதி	சங். 1-41
இரண்டாம் பகுதி	சங். 42-72
மூன்றாம் பகுதி	சங். 73-89
நான்காம் பகுதி	சங். 90-106
ஐந்தாம் பகுதி	சங். 107-150

இவைகளில் முதல் இரண்டு பகுதிகளும் சிறையிருப்பிற்கு முன் எழுதப்பட்டவைகளாகும்.

150 சங்கீதங்களில் 34 சங்கீதங்கள் மட்டுமே தலைப்புகள் இன்றி இருக்கின்றன. அவற்றில் அதிகமான சங்கீதங்கள் 3ம் மற்றும் 5ம் பகுதியிலும் காணப்படுகின்றன. சங்கீதங்களின் ஆசிரியர்கள் பலர். சங்கீதப் புத்தகத்தில் 150 சங்கீதங்களும் 2461 வசனங்களும் உள்ளன.

நீதிமொழிகள்

யோபு, நீதிமொழிகள் பிரசங்கி என்னும் மூன்று புஸ்தகங்களும் அறிவுணர்த்தும் (Wisdom Books) புஸ்தகங்களென எபிரெயரால் மதிக்கப்பட்டன.

இப்புஸ்தகத்தை எழுதினவர்கள் சாலொமோன்,(நீதி. 1:1), ஞானிகள் (நீதி. 22:17) எசேக்கியாவின் மனுஷர் (நீதி 25:1) ஆகூர் (நீதி. 30:1), லேமுவேல் (நீதி. 31:1) என்பவர்களெனக் குறித்துள்ளது.

எஸ்றா இதிலொரு பகுதியை எழுதத் தொடங்கினானென்றும், பின்பு எசேக்கியாவின் மனுஷர் நீதிமொழிகளைச் சேர்த்தெழுதினார்களென்றும் எண்ணப்படுகிறது. (நீதி. 25:1)

ஆசிரியர் : சாலொமோன்

காலம் : கி.மு. 715க்கும் 686க்கும் நடுவில்

புத்தகப் பகுப்பு :

1 முகவுரை (1:1-7)

2 ஞானத்தை பற்றிய பாடங்கள் (1:8-9:18)

3 சாலொமோனின் நீதி மொழிகள் (10:1 - 22:16)

4 ஞானியின் நீதி மொழிகள் (22:17 - 24:34)

5 சாலொமோனின் நீதி மொழிகள் (25-29 அதிகாரங்கள்)

6 ஆகூரின் வார்த்தைகள் (30ம் அதிகாரம்)

7 லேமுவேலின் வார்த்தைகள் (31ம் அதிகாரம்)

இப்புத்தகத்தில் 31 அதிகாரங்களும் 915 வசனங்களும் உள்ளன.

பிரசங்கி

"பிரசங்கி" என்பது பிரசங்கம் செய்கிறவனைக் குறிக்கும். இப்புஸ்தகத்திலுள்ளவை பிரசங்கியின் வாக்கியங்கள் என்பதிலிருந்து, அவனே இதனை ஆக்கியோன் என்பது தெளிவாகிறது.

ஆசிரியர் : சாலொமோன்

புத்தகப் பகுப்பு :

1 முகவுரை (1:1-3)

2 தேவனற்ற வாழ்க்கையின் வெறுமை (1:4 - 12:8)

3 முடிவுரை (12:9 - 14)

இப்புத்தகத்தில் 12 அதிகாரங்களும் 222 வசனாங்களும் உள்ளன.

உன்னதப்பாட்டு

தாம் தெரிந்து கொண்ட ஜனங்கள் மேல், தேவனுக்கிருந்த அன்பை உவமானப்படுத்திக்காட்டுகிற ஓர் புஸ்தகமென யூதர் இதை அங்கீகரிக்கிறார்கள். தீர்க்க தரிசனங்களில் உபயோகிக்கப்பட்ட பாஷைக்கிசைவாய், "என் நேசர்" என்பது கர்த்தரையும், "மணவாட்டி" என்பது இஸ்ரவேல் ஜனத்தையும் கருதுகிறது எனச் சாதிக்கிறார்கள்.

கிறிஸ்து மார்க்கம் ஆரம்பமாகி மூன்றாம் நூற்றாண்டில், ரோமாபுரியில் ஹிப்போலிடஸ் (Hippoletus) என்பவனும், பலஸ்தீனாவில், "ஒறிஜன்" (Origen) என்பவனும் இதில் சொல்லிய பதங்களை கிறிஸ்தவ சபைக்கு ஏற்றவையென, "கிறிஸ்துவை மணவாளன்" என்றும், சபையை "மணவாட்டி" என்றும் குறித்துள்ளார். கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்ற பரிசுத்தவான்கள் மணவாட்டியென்றும், பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் மணவாளனின் தோழரென்றும், இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் கன்னியரென்றும் திருஷ்டாந்தப் படுத்தி இப்புஸ்தகத்தில் காட்டியுள்ளது.

இது விவாகமுறையான, தூய்மையான அன்பைப் பற்றிய ஓர் பாட்டு என்று யூதர் இதைத் தங்களுடைய வேத புஸ்தகத்தில் சேர்த்துக்கொண்டு தங்கள் பண்டிகை நாட்களில் வாசிப்பது வழக்கம்.

ஆசிரியர் : சாலொமோன்

தேவன் என்ற சொல் இல்லாத இரண்டாம் புத்தகம்

ஆகும். நேசருக்கும் பிரியமானவளுக்கும் இடையிலான உறவின் நேசத்தின் கீதமே இப்புத்தகமாகும். இதை கிறிஸ்துவுக்கும் சபைக்கும் நிழலாக படிக்கலாம்.

புத்தகப் பகுப்பு :

1	முகவுரை	(1:1)
2	முதல் சந்திப்பு	(1:2 - 2:7)
3	இரண்டாம் சந்திப்பு	(2:8 - 3:5)
4	மூன்றாம் சந்திப்பு	(3:6-5:1)
5	நான்காம் சந்திப்பு	(5:2 - 6:3)
6	ஐந்தாம் சந்திப்பு	(6:4 - 8:4)
7	முடிவுரை	(8:5-14)

இப்புத்தகத்தில் 8 அதிகாரங்களும் 117 வசனங்களும் உள்ளன.

தீர்க்கதரிசிகள்

இஸ்ரவேலரின் வரலாற்றில் அதன் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தவர்களே தீர்க்கதரிசிகள். மக்களின் ஆன்மீக பொருளாதார அரசியல் மற்றும் எல்லாத் துறைகளிலும் தீர்க்கதரிசிகளின் ஆதிக்கத்தை காண லாம். தங்களுக்குக் கிடைத்த தெய்வீக வெளிப்பாடுகளை எழுத்து வடிவமாகவோ பேச்சின் மூலமாகவோ, எடுத்துக் காட்டான வாழ்க்கையின் மூலமாகவோ மக்களுக்கு தேவனுடைய வார்த்தைகளை அறிவித்து வந்தனர். இத்தீர்க்கதரிசன நூல்களை பெரிய தீர்க்கதரிசிகளின் நூல்கள், சிறிய தீர்க்கதரிசிகளின் நூல்கள் என்று இரண்டாகப் பிரிக்கலாம். ஏசாயா, எரேமியா, எசேக்கி யேல், தானியேல் ஆகியோர் பெரிய தீர்க்கதரிசிகள் ஆவர். ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா ஆகியோர் சிறிய தீர்க்கதரிசிகள் ஆவர்.

இஸ்ரவேலரின் 300 வருட வரலாறு இத்தீர்க்க தரிசிகளின் காலமாகும். இஸ்ரவேலிலும், யூதேயாவிலும், சிறையிருப்பிலுமாக ஊழியம் செய்து கொண்டிருந்த இவர்களின் செய்திகளின் மூலமாக அக்கால மக்களின் ஆன்மீக, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் நமக்கு தெரிய வருகின்றது. தேவனிடத்தில் திரும்பி வருவதற்கான அழைப்பும் நியாயத் தீர்ப்பைப் பற்றிய முன்னறிவிப்பும் இவர்களுடைய செய்தியின் மையக் கருத்தாகும்.

தீர்க்கதரிசனங்களை விளக்கும் போது யார்? யாருக்கு? எப்போது? எதற்காக? இப்பகுதிகளில் சொல்லப் பட்டது என்பதைக் குறிப்பாக கவனிக்கவேண்டும்.

தீர்க்கதரிசிகளுடைய சேவகத்தின் பொருள்

(1) இஸ்ரவேல் கர்த்தரிடம் திரும்பாவிடில் தேவ தீர்ப்பு அவர்கள் மேல் வரும்.

(2) ஆகிலும், அவர்கள் முற்றாய் அழிக்கப்படாமல், ஒரு பகுதி மீந்திருப்பார்கள்.

(3) உலக இரட்சகர் அவர்களிலிருந்து தோன்றி, கடைசி நாட்களில் அவர்களைப் பெரிய ஜாதியாக்குவார்.

கால நிரூபண அட்டவணை

தீர்க்கதரிசிகளின் பெயரும் அவர்கள் தூதும்.

1. யோவேல். கி.மு. 837-800. கடைசி நாட்களில் இஸ்ரவேலர் சேர்க்கப்பட்டு, பரலோக ராஜ்யம் ஏற்படும்.

2. யோனா. கி.மு. 825-782. இஸ்ரவேலின் விரோதிகள் மேலும் தேவன் கிருபையாயிருந்து அவர்களையும் இரட்சிப்பார்.

3. ஆமோஸ். கி.மு. 779-743. இஸ்ரவேல் மேல் தேவ தண்டனை வரும். பின்பு இரட்சிப்படைவார்கள்.

4. ஓசியா. கி.மு. 762-725. இஸ்ரவேல் தம்மிடம் திரும்ப வேண்டுமென்று தேவன் ஆவலாயிருக்கிறார்.

5. ஏசாயா. கி.மு. 758-698. இஸ்ரவேலை ஒடுக்குவோர் மேல்வரும் தண்டனை, மேசியாவின் வருகை, இஸ்ரவேல் பெறப்போகிற மகிமை.

6. மீகா. கி.மு. 740-695. ஜாதிகள் மேல் வரப்போகிற தேவதீர்ப்பு, பெத்லகேமில் பிறக்கப்போகிறவரால் வரும் சிலாக்கியங்கள்.

7. நாகூம். கி.மு. 663-630. நினிவேயின் பாவத்தினிமித்தம் வரப்போகிற தேவ தண்டனை.

8. செப்பனியா. கி.மு. 640-610. இஸ்ரவேலின் பின்வாங்கலினிமித்தம் கர்த்தருடைய பயங்கரநாள் வரும்.

9. எரேமியா. கி.மு. 627-585. எருசலேம் பிடிக்கப்பட்டு, ஜனங்கள் சிறை போவார்கள். திரும்பச் சேர்க்கப்பட்டு, ராஜ்யம் ஏற்படும்.

10. ஆபகூக். கி.மு. 608-598. இஸ்ரவேலின் கொடுமை யினிமித்தம், கல்தேயரால் அழிக்கப்படுவார்களென்றும், பின்பு அவர்களும் அழிந்து போவார்களென்றும் சொல்லியுள்ளது.

11. தானியேல். கி.மு. 604-534. இவ்வுலக ராஜ்யங் களைப்பற்றியும், அவைகள் அழிந்து போய், அழிவில்லாத ராஜ்யம் ஏற்படும் என்றும் கூறியுள்ளது.

12. எசேக்கியேல். கி.மு. 592-572. சிறைபோன இஸ்ரவேலுக்கு ஆறுதல் கூறி, ஜாதிகள் மேல் தேவ தண்டனை வரும் என்றும், பிற்காலங்களில் இஸ்ரவேலர் சீரடைவார்களென்றும் குறித்துள்ளது.

13. ஒபதியா. கி.மு. 486-583. ஏதோமின் மேல் தேவ தண்டனை வந்து முற்றாய் அழிந்து போகும்.

14. ஆகாய். கி.மு. 520. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேலரைத் தேவாலயம் கட்டும்படி ஏவி, எழுப்பினது.

15. சகரியா. கி.மு. 520-518. எருசலேமுக்குத் திரும்பி வந்த இஸ்ரவேலருக்கு ஆறுதல் கூறி, வரப்போகிற மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் விவரித்துள்ளன.

16. மல்கியா. கி.மு. 450-400. மேசியாவின் முதலாம், இரண்டாம் வருகை, முன்னறிவிப்போர் இருவரின் தோற்றம், வரப்போகிற கர்த்தருடைய நாள் ஆகியவைக் குறித்துள்ளன.

பெரிய தீர்க்கதரிசிகள் - ஏசாயா

ஏசாயா என்பதன் பொருள் "கர்த்தரின் இரட்சிப்பு" ஏசாயா நாலு பிரதான தீர்க்கதரிசிகளில் விசேஷித்தவன். ஆமோத்சின் குமாரன் (ஏசா. 1:1; 37:2)ல் உசியா ராஜாவின் கடைசி வருஷத்தில் ஏசாயாவுக்கு அழைப்பு (கி.மு. 756) வந்தது. ஏசாயா தனக்கு தேவ தரிசனம் உண்டாகி, ஊழியத்துக்கு அழைக்கப்பட்டதைக் குறிக்கிறான். (ஏசா. 6:1-13) அதுமுதல் எசேக்கியா ராஜா காலம் வரை ஏறக் குறைய நாற்பது வருஷம் தீர்க்கதரிசனம் உரைத்தான். ஓசியா, மீகா தீர்க்கதரிசிகளும் இவன் காலத்திலிருந்த வர்கள். இவன் அதிகமாய் எருசலேமிலிருந்தான். ஏசாயா விவாகம் செய்து, இரண்டு பிள்ளைகளிருந்தன. (ஏசா. 8:1-4). அவர்களுக்கு அடையாளப் பெயர்கள் இருந்தன.

ஆசிரியர் : ஏசாயா

இவர் எசேக்கியாவின் போதகராக இருந்தார். உசியாவின் மரணம் முதல் மனாசேயின் ஆட்சி காலம் வரை ஏசாயா ஊழியம் செய்தார். மனாசேயின் காலத்தில் வாளால் அறுப்புண்டு இரத்த சாட்சியாக மரித்தாரென நம்பப்படுகிறது.

காலம்: 1 முதல் 39 வரையிலுள்ள அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் ஏசாயாவின் வாழ்நாள் காலத்திலேயே நிகழ்ந்தவைகள் ஆகும். கி.மு.701 முதல் 681க்கும் இடையில் இது எழுதப்பட்டது.

புத்தகப் பகுப்பு :

1 நியாயத் தீர்ப்பின் செய்திகள் (1-39 அதிகாரங்கள்)

2 இளைப்பாறுதலின் செய்திகள் (40-66 அதிகாரங்கள்)

இப்புத்தகத்தில் 66 அதிகாரங்களும் 1292 வசனங்களும் உள்ளன.

எரேமியா

எரேமியா என்பது "தேவன் நியமிக்கிறார்" என்று பொருள்படும்.

ஆசிரியர் : எரேமியா

எழுத்தர் : பாரூக்

காலம் : கி.மு. 627

ஏசாயா தீர்க்கதரிசியின் ஊழிய காலம் முடிந்து நூறு வருடங்களுக்கு பின்னரே எரேமியா ஊழியத்திற்கு வருகிறார்.

கி.மு. 640ல் எரேமியா தன் ஊழியத்தை ஆரம்பிக்கிறார். ஆபகூக், செப்பனியா, தானியேல், எசேக்கியேல் ஆகியோர் எரேமியாவின் சமகாலத்தவர்கள் ஆவர்.

புத்தகப் பகுப்பு :

1 தீர்க்கதரிசியின் அழைப்பு (அதிகாரம் 1)

2 யூதேயாவுக்கான தேவனுடைய செய்திகள் (2-35 அதிகாரங்கள்)

3 தீர்க்கதரிசி அனுபவித்த பாடுகள் (36 - 38 அதிகாரங்கள்)

4 எருசலேமின் வீழ்ச்சியும் அதைத் தொடர்ந்த நிகழ்வுகளும் (39- 45 அதிகாரங்கள்)

5 புறஜாதி நாடுகளுக்கான தேவனுடைய செய்திகள் (அதி. 46 -51)

6 முடிவு (52 அதிகாரம்)

இப்புத்தகத்தில் 52 அதிகாரங்களும் 1364 வசனங்களும் உள்ளன.

புலம்பல்

இந்தப் புஸ்தகம் ஐந்து அதிகாரங்களுடையது. அவைகளில் மூன்று, நேபுகாத் நேச்சார் கி.மு. 586-ல் எருசலேமை அழித்ததைக் குறித்த புலம்பற் பாட்டுகள், எரேமியா அங்கேயிருந்து, எருசலேம் சங்கரிக்கப் பட்டதையும், அதிலிருந்த பரிசுத்த பாத்திரங்கள் பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டதையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்தப் பிரகாரம் எருசலேம் அழிக்கப்பட்ட போது, எரேமியா ஒரு குகைக்குள் புகுந்து, அங்கிருந்து அழுது கொண்டு, இந்தப் புலம்பல்களைப் பாடினானென்று சொல்லப்படுகிறது. (அந்தக் குகை கொல்கொதாவுக்கு அருகில் இருந்ததாம்). இதினிமித்தம் கண்ணீர் விட்டு அழுகிற தீர்க்கதரிசி" யென்ற பெயர் இவனுக்கு வழங்கிற்று.

இந்தப் புஸ்தகத்தை யூதர்கள் தங்கள் ஜெப ஆலயங் களில் இன்று வரையும் ஒவ்வொரு வருஷமும் நான்காம் மாதம் ஒன்பதாம் திகதியில் வாசிப்பது வழக்கம். (எரே. 52:6)

ஆசிரியர் : எரேமியா

காலம் : கி.மு. 575க்கு முன்.

எருசேலம் நகரம், தேவாலயம் மற்றும் மக்களின் அழிவைப் பற்றி எழுதப்பட்ட புலம்பலின் பாடலே இப்புத்தகம்.

புத்தகப் பகுப்பு :

1 எருசலேமின் துன்பமும், வெறுமையும்(அதிகாரம் 1)

2 தமது ஜனத்திற்கு எதிரான
தேவனுடைய கோபம் (அதிகாரம் 2)

3 அழிவிற்கான காரணம் (அதிகாரம் 3)

4 சீயோனின் முன் நிலையும்,
பின் நிலையும் (அதிகாரம் 4)

5 மனஸ்தாபம் (அதிகாரம் 5)

இப்புத்தகத்தில் 5 அதிகாரங்களும் 154 வசனங்களும் உள்ளன.

எசேக்கியேல்

எசேக்கியேல் (கர்த்தர் பலப்படுத்துகிறார்)

இவன் பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவன். சாதோக்கின் சந்ததியான பூசி யென்னும் ஆசாரியனுடைய குமாரன் (எசே. 1:3)

நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்கு கி.மு. 597-ல் சிறை கொண்டு போனவர்களில் ஒருவன். (11 இரா. 24: 10-16)

கேபார் நதியருகே தெலாபீப் நாட்டிலே தங்கியிருந்த சிறையாக்கப்பட்ட யூதருக்குள் ஏறக்குறைய 20 வருஷமாக இவன் ஊழியஞ் செய்தான். (எசே. 3:15-17).

எசேக்கியேலுக்கு ஒரு வீடிருந்தது. மனைவி யுமிருந்தாள். (எசே. 3:24; 8:1; 24:18).

அவனொரு தீர்க்கதரிசியாய் மாத்திரமல்ல; ஒரு போதகனுமாயிருந்தான். (எசே. 33:6-16)

எசேக்கியேல் ஏழு விசை "கர்த்தருடைய கரம் என்மேல் பலமாக இருந்தது" என்று (எசே. 1:3; 3:14, 22:8: 1:33: 22:37; 1:40: 1) லும், வேறு இடங்களில், "கர்த்தருடைய வார்த்தை எனக்குண்டாகி" என்றும் குறிக்கிறான்.

எசேக்கியேல், தானியேல், அப்போஸ்தலனாகிய யோவான் என்பவர்களைப் போல் பிற தேசங்களி லிருந்து, காட்சிகளாலும், தரிசனங்களாலும் வெளிப்படுத்தல் பெற்று, தீர்க்கதரிசனம் உரைத்தான்.

ஆசிரியர் : எசேக்கியேல்

காலம் : கி.மு. 593க்கும் 557க்கும் நடுவில்.

புத்தகப் பகுப்பு :

1 இஸ்ரவேலருக்கான
தேவனுடைய செய்தி (1-24 அதிகாரங்கள்)

2 புறஜாதியாருக்கான
தேவனுடைய செய்தி (25-32 அதிகாரங்கள்)

3 இஸ்ரவேலருக்கான
ஆறுதலின் செய்தி (33-48 அதிகாரங்கள்)

இப்புத்தகத்தில் 48 அதிகாரங்களும் 1273 வசனங்களும் உள்ளன.

தானியேல்

பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவன். சத்திய வேதத்தில் இவன் மாத்திரம் "நீ மிகவும் பிரியமானவன்" எனப்படுகிறான். (தானி. 9:22-23).

யோயாக்கீம் ராஜாவின் நாட்களில், நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடித்தபோது, ராஜ குடும்பத்தைச் சேர்ந்த சௌந்தரியமான நான்கு வாலிபரை பாபிலோனுக்குக் கொண்டு போனான். அவர்களில் தானியேல் ஒருவன். இவன் அங்கே கல்தேய கல்வியில் பயிற்றப்பட்டபின், ராஜ அரமனையில் உத்தியோகம் செய்தான்.

பாபிலோனிய ராஜ்யம் எழுபது வருஷமாக நிலை நின்றது. தானியேல் அதன் துவக்க முதல் அழிவு மட்டும் அங்கேயிருந்தான்.

தானியேல் ஊழியஞ் செய்த ராஜாக்களாவன:-

நேபோ பிலாசர்	கி.மு. 625 - 604
நேபுகாத்நேச்சார்	கி.மு. 606 - 561
ஏவில் மெரோதாக்	கி.மு. 561 - 560
நேரித்தில் சார்	கி.மு. 559 - 536
லாபஸ் மாதுக்	கி.மு. 536
நேபோ நிதாஸ்	கி.மு. 555-536
பெல்ஷாத்சார்	

ஆகவே, தானியேல் நேபுகாத்நேச்சாரின் முதலாம் வருஷம் தொடங்கி, பாபிலோன் ராஜ்யத்தின் வீழ்ச்சியின் பின்பு, பெர்சிய ராஜ்ய காலத்திலும், பெர்சிய ராஜாவாகிய கோரேசின் மூன்றாம் வருஷம் வரை, அதாவது, கி.மு. 606-534 வரை ஊழியஞ் செய்தான். இஸ்ரவேல் சிறை

போன காலம் தொடங்கி, அவர்கள் திரும்பிப்போய், இரண்டு வருஷமாகு மட்டும் உயிரோடிருந்தான்.

இந்தப் புஸ்தகத்தில் மூன்று முக்கியமான தீர்க்கதரிசினங்களுண்டு. ஒன்று, இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகை, அதுநிறைவேறிற்று. (தானி. 9:24; மத். 1:25). மற்றது, நான்கு உலக ராஜ்யங்கள் ஒன்றன் பின்னொன்று வருமென்பது, அதுவும் நிறைவேறிற்று. அவைகளின் பின் அழியாத பரலோக ராஜ்யம் ஏற்படுத்தப் படுமென்றது. இனிமேல் நிறைவேற வேண்டியது.

ஆசிரியர் : தானியேல்

காலம் : கி.மு. 530க்கு முன்.

புத்தகப் பகுப்பு :

1 தானியேல் பாபிலோனில் (1:1-6:28)

2 தானியேலின் தரிசனங்கள் (7-12 அதிகாரங்கள்)

இப்புத்தகத்தில் 12 அதிகாரங்களும் 357 வசனங்களும் உள்ளன.

சிறிய தீர்க்கதரிசிகள் - ஓசியா

ஓசியா வட ராஜ்யத்தின் தீர்க்கதரிசி. ஓசியா என்பதன் அர்த்தம் "இரட்சிப்பு". இஸ்ரவேலின் பத்துக் கோத்திரங்கள் பிரிந்து, வட ராஜ்யமான போதே, யெரொபெயாமின் கீழ் பொற்கன்றுகுட்டி வணக்கம் தொடங்கிற்று. ஏறக் குறைய 200 வருஷத்துக்குப்பின், ஓசியா தன்தீர்க்க தரிசன ஊழியத்தைத் துவங்கின வேளையில், இஸ்ரவேலர் தேவனை விட்டு அதிகத் தூரமாகியிருந்தார்கள்.

அவர்கள் சோரம் போனதற்கு அடையாளமாக, ஒரு சோர ஸ்திரீயைச் சேர்த்துக்கொள்ளும்படி கர்த்தர் ஓசியாவுக்குச் சொன்னபடி அவன் செய்தான். பிற்பாடு, பிள்ளைகள் பிறந்த போது, அவர்களுக்கு அடையாளப் பெயர்கள் கொடுக்கப்பட்டன. ஒரு பிள்ளையின் பெயர் லோருகாமா, "இஸ்ரவேல் ராஜ்யம் ஒழிந்து போகும்; தேவன் இரக்கம் செய்யார்" என்பது அதன் பொருள். மற்றப் பிள்ளையின் பெயர் லோகம்மி. அர்த்தம் "அவர்கள் தேவனுடைய ஜனமாயிருப்பதில்லை". ஆகிலும் அந்த நாட்களில் இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாம் யெரொபெயாமின் கீழ் சிறப்படைந்திருந்தது.

கர்த்தருடைய பார்வையில், ஜனங்களில் இருந்த பாவங்களைக் குறித்து ஓசியா பேசுகிறான். தேசத்தில் உண்மையில்லை. தேவனைப் பற்றும் அறிவுமில்லை. பொய் சொல்லி, கொலை செய்து, திருடி, விபசாரம் பண்ணி, ஜனங்கள் மிஞ்சிப் போகிறார்கள். இதினிமித்தம் தேசம் புலம்பும் என்கிறான் (ஓசி. 4:1-3)

ஜனங்கள் கர்த்தரிடம் திரும்பும்படி வாதாடுகிறான். "கர்த்தர் நீதியை வருஷிக்கு மட்டும் அவரைத் தேடுங்கள்; அவரிடம் திரும்புங்கள். தயவையும் நியாயத்தையும் கைக் கொண்டு, இடைவிடாமல் தேவனை நம்பிக் கொண்டிருங் கள்" என்கிறான். (ஓசி. 10:12; 12:6)

கர்த்தரிடம் திரும்பினால், அவர் இரக்கங் காட்டுவார். "எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்?" ...என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது" என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஓசி. 11:8)

ஓசியாவின் வேண்டுதலுக்கும் தூண்டுதலுக்கும் ஜனங்கள் இணங்கவில்லை, மனதைக் கடினப்படுத்திக் கொண்டார்கள்.எப்படியிருந்தாலும் கடைசி நாட்களில் தேவன் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவார். மனப் பூர்வமாய் சிநேகிப்பார். "இஸ்ரவேல் லீலிப் புஷ்பம் போல் மலருவான்... அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்பு வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றான் . (ஓசி. 14:3-7) "அக்காலத்தில் நீ என்னை ஆண்டவன் என்று சொல்லாமல், "என் புருஷன்" என்று சொல்லுவாய். (ஓசி. 2:16)

பிற்பாடு ஓசியாவின் நாட்களிலேயே இஸ்ரவேல் ராஜ்யம் முடிவடைந்தது. ஜனங்கள் சிறைப்பட்டு, ஆசீரியாவுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். (II இரா. 17:6; 18:9-11)

ஆசிரியர் : ஓசியா

காலம் : கி.மு. 750க்கும் 725க்கும் நடுவில்.

இந்நூலின் செய்தி : இஸ்ரவேலரின் விக்கிரக ஆராதனைக்கு விரோதமான (எதிரான) தேவனுடைய கடுமையான எச்சரிப்பு.

புத்தகப் பகுப்பு :

1 ஓசியாவின் குடும்ப வரலாறு (1:1 - 3:5)

2 இஸ்ரவேலரின் உண்மையற்ற நிலை (4:1-13:16)

3 இஸ்ரவேலரின் மனஸ்தாபப்படுதலும் தேவனிடமாய் திரும்புதலும் (14:1-9)

இப்புத்தகத்தில் 14 அதிகாரங்களும் 197 வசனங்களும் உள்ளன.

யோவேல்

"யோவேல்" என்பதன் அர்த்தம் "கர்த்தர் தேவன்" இவன் யூதா தேசத்து தீர்க்கதரிசி. சிறைபோன காலத்துக்கு முன் ஊழியம் செய்தான். "பெத்துவேலின் குமாரன்" என்பதே இவனைப் பற்றிக் குறித்துள்ளது.

இவன் அமத்சியா அல்லது உசியா ராஜாவின் நாட்களில் தீர்க்கதரிசனம் உரைத்தான். யோனா, ஆமோஸ், ஓசியா என்னும் தீர்க்கதரிசிகளும் இவன் காலத்தில் இருந்தார்கள்.

ஆசிரியர் : யோவேல்

காலம் : கி.மு. 830

புத்தகப் பகுப்பு :

1	முகவுரை	(1:1)
2	கர்த்தருடைய நாள்	(1:2 - 2:17)
3	யூதேயாவின் இரட்சிப்பு	(2:18 - 3:21)

இப்புத்தகத்தில் 3 அதிகாரங்களும் 73 வசனங்களும் உள்ளன.

ஆமோஸ்

ஆமோஸ் என்பதன் பொருள் "கர்த்தர் தாங்குகிறார்".

இவன் பெத்லகேமுக்குத் தெற்கேயிருந்த தெக்கோவா ஊரான். ஆடு மேய்ப்பனாயிருந்தவன். தீர்க்கதரிசன ஊழியத்துக்கு அழைக்கப்பட்டு, யூதாவிலிருந்து பத்துக் கோத்திரத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தைகளைக் கூறினான்.

ஆசிரியர் : ஆமோஸ்

காலம் : கி.மு. 760க்கும் 750க்கு நடுவில்

புத்தகப் பகுப்பு :

1 புறஜாதியாரின் நாடுகளுக்கு எதிரான தேவனுடைய அறிவிப்புகள் (1:1 - 2:16)

2 இஸ்ரவேலருக்கான தேவனுடைய ஆலோசனை (3 : 1 - 5:17)

3 சிறையிருப்பைப் பற்றிய முன்றிவிப்பு (5 : 18 - 6:14)

4 நியாயத்தீர்ப்பைக் குறித்த பரலோக தரிசனங்கள் (7 :1 - 9:10)

5 இஸ்ரவேலின் எதிர்கால நம்பிக்கை (9 : 11 - 15)

இப்புத்தகத்தில் 9 அதிகாரங்களும் 146 வசனங்களும் உள்ளன.

ஒபதியா

ஒபதியா என்பதன் பொருள் "கர்த்தரின் ஊழியன்". இவன் யூதாவிலிருந்தவன். இவனுக்குக் கிடைத்த தரிசனம் ஏதோமின் அழிவைக் குறித்தது.

ஏதோமியர் ஏசாவின் சந்ததியார். ஆனாலும், எப்போதும் யூதருக்கு விரோதமாயிருந்தார்கள். எருசலேம் பாபிலோனியரால் அழிக்கப்பட்டபோது, இவர்கள் அவர்களுக்கு உதவியாயிருந்தது மாத்திரமல்ல, அதினிமித்தம் சந்தோஷித்துக் களிகூர்ந்தார்கள். (புல. 4:21-22) அதற்குப் பிரதிபலனாக, இவர்கள் மேலும் தேவ தண்டனை வருமென்று ஒபதியா கூறுகிறான். "உன் சகோதரன் யாக்கோபுக்கு நீ செய்த கொடுமையினிமித்தம், நீ முற்றிலும் சங்கரிக்கப்பட்டுப் போவாய்" (ஒப. 1:10 ; 15-16) அவ்விதமே எருசலேம் சுட்டெரிக்கப்பட்டு, நாலு வருஷத்துக்குள், இவர்கள் உதவி செய்த பாபிலோனியர் தாமே ஏதோமையும் அழித்தார்கள். (கி.மு. 582) எருசலேம் அழிக்கப்பட்டதோடு இவர்களுடைய சரித்திரம் முடிவடைந்தது. மீந்திருந்தவர்கள் யூதேயாவின் தென்பாகத்தில் 400 வருஷக் காலமாயிருந்து, இஸ்ரவேலருக்கு விரோதிகளாயிருந்தார்கள். கி.மு. 126-ல் யோவான் ஏற்கானு என்பவன் அவர்களைக் கீழ்ப்படுத்தினான். அதன்பின் யூதரோடு சேர்ந்து கலந்து கொண்டார்கள்.

கி.மு. 63-ல் ரோமர் பலஸ்தீனாவைக் கைப்பற்றின போது, ஏதோமியனாகிய ஏரோதை, யூதாவை ஆளும்படி ஏற்படுத்தினார்கள்.

ஏதோமியரின் தேசமாகிய இது மேயாவுக்கு வரப்போகிற அழிவைப் பற்றி ஏசாயாவும் கூறினான். (ஏசா. 34:5-10)

ஆசிரியர் : ஒபதியா

காலம் : கி.மு. 587 - 586.

புத்தகப் பகுப்பு:

1. ஏதோமை பற்றிய தீர்க்க தரிசனம்
(10-14 வரையுள்ள வசனங்கள்)

2. கர்த்தருடைய (15-21 வரையுள்ள வசனங்கள்)

ஒரு அதிகாரங்கொண்ட இப்புஸ்தகத்தில் 21 வசனங்கள் உள்ளன.

யோனா

அதன் பொருள் புறா. இவன் செபுலோன் கோத்திரத்து அமித்தாவின் குமாரன். வட ராஜ்யத்தான். இரண்டாம் யெரொபெயாமின் நாட்களில் தீர்க்க தரிசன ஊழியஞ் செய்தான். யெரொபெயாம் இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்ப சேர்த்துக் கொள்வதற்கு இவன் உதவி செய்தான். (11 இரா. 14:25)

இப்புஸ்தகத்தின் நோக்கம், அக்காலத்திலிருந்த எண்ணத்தின்படி, தேவன் இஸ்ரவேலருக்காக மாத்திரம் கிரியை செய்கிறார் என்பது தப்பிதமென்றும், அவர் புற ஜாதியார் மேலும் பிரியமாயிருந்து, கிருபை செய்கிறாரென்றும் காட்டுவதாகும்.

ஆசிரியர் : யோனா

காலம் : கி.மு. 790-798க்கு இடையில்

புத்தகப் பகுப்பு :

1	யோனா ஓடிப் போகுதல்	(அதி. 1:1-17)
2	யோனாவின் ஜெபம்	(2:1-10)
3	யோனாவின் பிரசங்கம்	(3:1-10)
4	யோனா கற்றுக்கொண்ட பாடம்	(4:1-11)

இப்புத்தகத்தில் அதிகாரங்கள் 4 வசனங்கள் 48 உள்ளன.

மீகா

மீகா ஒரு தீர்க்கதரிசி. யூதாவிலுள்ள மொரேசா ஊரான். யூதா ராஜாக்களாகிய யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பர்களின் நாட்களிலும், இஸ்ரவேல் ராஜாக்களாகிய பெக்கா, ஓசியா என்பவர்களின் நாட்களிலும் தீர்க்கதரிசனம் உரைத்தான். (மீகா. 1:1; எரே. 26:18). இவனுடைய நாட்களில் வடராஜ்யத்தில் ஓசியாவும், தென்ராஜ்யத்தில் ஏசாயாவும் இருந்தார்கள்.

இவனைப் பற்றியும், இவனுக்குக் கிடைத்த அழைப்பைப் பற்றியும் வேறொன்றும் சொல்லப்படவில்லை. இவன் எருசலேம், சமாரியா என்னும் இரண்டு தலை நகரங்கள் மேல் வரப்போகிற தேவ தீர்ப்பை வற்புறுத்திக் கூறினான். ஜனங்களுடைய பாகால் வணக்கம், பொருளாசை, கொடுமையான செய்கைகள், ஆகியவற்றைக் குறித்துக் கண்டித்தான். (மீகா. 2:1-3; 3:1-4)

ஆசிரியர் : மீகா

காலம் : கி.மு. 739க்கும் 687க்கும் இடையில்

புத்தகப் பகுப்பு :

1	முகவுரை	(1:1)
2	இஸ்ரவேலின் மேலும், யூதேயாவின் மேலும் வரப்போகிற நியாயத்தீர்ப்பு	(1:2-3:12)
3	இஸ்ரவேல் மற்றும் யூதேயாவின் நம்பிக்கை	(4:1-5:15)
4	இஸ்ரவேலருக்கு எதிரான கர்த்தரின் கண்டனம்	(6:1-16)
5	தேவனுடைய செயல்	(7:1-20)

இப்புத்தகத்தில் 7 அதிகாரங்களும் 105 வசனங்களும் உள்ளன.

நாகூம்

நாகூம் என்பதன் பொருள் "தேற்றுகிறவன்" இவன் எல்கோசா ஊரான். (நாகூ. 1:1) கப்பர் நாகூம் என்பது நாகூமின் ஊர் என்ற கருத்துள்ளது.

இவனுக்கு அசீரியாவின் தலைநகரமாகிய நினிவே யைப் பற்றித் தரிசனம் கிடைத்தது.யோனாவுக்கும் இதற்கு 150

வருஷத்துக்கு முன் நினிவேயைக் குறித்துள்ள தூது கிடைத்தது. அது இரக்கமுள்ள தூது. ஆனால் நாகூமுக் குக் கிடைத்த தூது, தேவ தண்டனைக்கடுத்தது. தேவன் என்ன முறையில் ஜனங்களை நடத்துகிறாரென்பது இதில் விளங்குகிறது. முதலாவது இரக்கம், பின்பு தண்டனை.

செப்பனியாவும் நினிவேக்கு விரோதமாய் தீர்க்க தரிசனம் உரைத்தான். (செப். 2:13-15)

யோனா நினிவேக்குப் போய் பிரசங்கம் பண்ணி, 50 வருஷத்துக்குள், அசீரியர் இஸ்ரவேலரை அழித்துப் போட்டார்கள். அதன் பின்பும் 100 வருஷமாக நினிவே செழிப்பாயிருந்தது.

நாகூமின் நாட்களில் இஸ்ரவேலர்அசீரியரால் கொடுமையாய் நடத்தப்பட்டார்கள். இஸ்ரவேலரைத் தேற்றும்படி, நாகூம் ஆறுதல் சொல்லுகிறான்.

நினிவே 1100 வருஷங்களாக பலத்த ராஜ்யமா யிருந்தது. ஜனங்களுடைய துஷ்ட நடத்தையும், கொடூரக் கிரியைகளும் அதிகரித்தது. நாகூம், தேவ தண்டனை வரக் காலமாயிற்று என்று சொல்லி, அவர்கள் மேல் வரப் போகிற அழிவைக் குறித்து முன்னறிவிக்கிறான்.

ஆபகூக்

ஆபகூக் என்பதன் பொருள் "தழுவுதல்".

இவன் சிறிய தீர்க்கதரிசிகளில் எட்டாம் ஆள். இவனைப் பற்றிய காரியங்கள் திட்டமாய்ச் சொல்லப்படவில்லை.

இவன் யோவாகாஸ், யோயாக்கீம் என்பவர்களின் நாட்களில் தீர்க்கதரிசனம் உரைத்தான். எரேமியாவும் அந்நாட்களில் இருந்தான். எருசலேமை நூறு வருஷக் காலமாய் பயமுறுத்திக் கொண்டிருந்த நினிவே, நாகூம் தீர்க்கதரிசி முன்னறிவித்த பிரகாரம், பாழாய்ப் போயிற்று. கல்தேயர் அசீரியாவைக் கீழ்ப்படுத்தின பின், யூதேயா தேசத்தையும் கைப்பற்றி, ஜனங்களை சிறை கொண்டு போயிருந்தார்கள். இது யூதா செய்த தீமைகளுக்காக அவர்கள்மேல் விழுந்த தேவ தண்டனையென்று ஆபகூக்குக்குத் தெரிந்தது. •

ஆசிரியர் : ஆபகூக்

காலம் : கி.மு. 650க்கு முன்.

புத்தகப் பகுப்பு :

1	முகவுரை	(1:1)
2	ஆபகூக்கின் முதல் கேள்வி	(1:2-4)
3	தேவனுடைய பதில்	(1:5-11)
4	ஆபகூக்கின் இரண்டாவது கேள்வி	(1:12-2:1)
5	தேவனுடைய பதில்	(2:2-20)
6	ஆபகூக்கின் ஜெபம்	(3:1-29)

இப்புத்தகத்தில் 3 அதிகாரங்கள் 56 வசனங்கள் உள்ளன.

செப்பனியா

செப்பனியா என்பதன் பொருள் "கர்த்தர் காக்கிறார்". இந்தத் தீர்க்கதரிசி ராஜ வம்சத்தவன். யூதா ராஜாவாகிய எசேக்கியாவின் சந்ததியான்.

இவன் யோசியா ராஜாவின் நாட்களில் தன் ஊழியத்தைத் துவங்கின பொழுது, யோசியா சிறு வயதுள்ளவனாயிருந்த தினால், சீர்திருத்தங்கல் செய்யத் தொடங்கவில்லை.

ஆசிரியர் : செப்பனியா

காலம் : கி.மு. 640க்கும் 609க்கும் இடையில்.

புத்தகப் பகுப்பு :

1 முகவுரை (1:1-3)

2 யூதேயாவின் மேலும் புறஜாதியாரின் மேலும் வரவிருக்கும் தேவனுடைய நியாயத் தீர்ப்பு (1:4-3:8)

3 மீந்திருப்போரின் மீட்பு (3:9-20)

இப்புத்தகத்தில் 3 அதிகாரங்களும் 53 வசனங்களும் உள்ளன.

ஆகாய்

ஆகாய் என்பதன் பொருள், "மகிழ்ச்சி". இஸ்ரவேலர் பாபிலோனில் சிறையிருந்த நாட்களில், இவன் பிறந்து, பின்பு செருபாபேலோடு எருசலேமுக்குப் போனான்.

அங்கே தேவாலயம் கட்டப்படத் தொடங்கித் தடைப்பட்ட போது, இவன் தீர்க்கதரிசனம் உரைத்தான். சிறையிருப்புக்குப்பின் தோன்றின முதற் தீர்க்கதரிசி இவனே. கோரேஸ் கி.மு. 538-ல் இஸ்ரவேலர் திரும்பிப் போகலாமென்ற கட்டளை பிறப்பித்தபோது, இவன் செருபாபேலோடு புறப்பட்டுப்போனான். எருசலேமுக்கு வந்தவுடனே, பலிபீடம் கட்டி, பலி செலுத்தி, ஆலயங் கட்டுகிறதற்கு அஸ்திபாரமும் போட்டார்கள். சமாரியர் வந்து, அந்த வேலையில் உதவி செய்யக் கேட்டபோது, யூதர் சம்மதிக்க வில்லை. அப்பொழுது, வேலையைத் தடைப் படுத்தும்படி அர்தசஷ்டாவுக்கு அறிவித்தார்கள். அவனுடைய கட்டளையினிமித்தம், கட்டுமான வேலை பதினாறு வருஷம் நிறுத்தப்பட்டது. (எஸ்றா 4:5, 24) ஜனங்கள் ஏற்ற காலம் இன்னும் வரவில்லையென்று, தங்களுக்கு மச்சுபாவப்பட்ட வீடுகளைக் கட்டத் தொடங்கினார்கள். (ஆகா. 1:4). பின்பு ஆகாயும் சகரியாவும் ஜனங்களைத் தைரியப்படுத்தி, ஆலய வேலையைச் செய்து முடிக்கும்படி ஏவினார்கள். அப்படியே வேலை செய்ய ஆரம்பித்து நாலு வருஷத்தில் முடித்தார்கள் எஸ்றா 5-ம், 6-ம் அதிகாரங்களில் இதைக் குறித்து விஸ்தரித்துள்ளது.

ஆசிரியர் : ஆகாய்

காலம் : கி.மு. 520.

புத்தகப் பகுப்பு :

1 முதலாம் தூது (ஆலயப் பணிக்கான அழைப்பு) (1:1-11)

2 செருபாபேலும் ஜனங்களும் (1:12-15)

3 இரண்டாம் தூது (ஆலயத்தின் மகிமை) (2:1-9)

4 மூன்றாம் தூது (ஜனங்களின் சுத்கரிப்பு) (2:10-19)

5 நான்காம் தூது (செருபாபேலுக்கான வாக்குத்தத்தம்) (2:20-23)

இப்புத்தகத்தில் 2 அதிகாரங்கள் 38 வசனங்களும் உள்ளன.

சகரியா

சகரியா என்பதன் பொருள் "கர்த்தர் நினைவு கூறு கிறார்" ஆகாய் என்பவனைப் போல் இவனும் சிறையிருப் புக் காலத்தில் பிறந்து, செருபாபேலோடு எருசலேமுக்குப் போனான்.

எருசலேமுக்குத் திரும்பிப் போன யூதர் தேவாலயம் கட்டத் தொடங்கி, வேலை தடைபட்டதினிமித்தம் அதைரியப் பட்டு, அவரவர் வீடுகளைக் கட்ட ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது, சகரியாவுக்குத் தரிசனங்கள் கிடைத்ததி மினித்தம், அவன் ஜனங்களை ஏவி, ஆலய வேலையைச் செய்யும்படிச் சொன்னான். (சக. 1:6; 3:3; எஸ்றா. 3:2-10)

சகரியா சொன்ன போதனைகள் அவனுக்குத் தரிசனங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டன.

ஆசிரியர் : சகரியா

காலம் : கி.மு. 520க்கும் 480க்கும் மத்தியில்.

புத்தகப் பகுப்பு :

1 முகவுரை (1:1-6)

2 எட்டு தரிசனங்கள் (1:7-6:8)

3 யோசுவா முடிசூட்டப்படுதல் (6:9-15)

4 உபவாசமும் வாக்குத்தத்தங்களும் (7:1-8:23)

5 முதலாம் தீர்க்கதரிசனம்
(மேசியா வருதலும்
புறக்கணிக்கப்படுதலும் (9-11 அதிகாரங்கள்)

6 இரண்டாம் தீர்க்கதரிசனம்
(மேசியாவின் வருகையும்
வரவேற்கப்படுதலும்)
(12-14 அதிகாரங்கள்)

இப்புத்தகத்தில் 14 அதிகாரங்கள் 211 வசனங்கள் உள்ளன.)

மல்கியா

மல்கியா என்பதன் பொருள். "என் தூதன்". இந்தப் பெயர் ஒரு பொதுப் பெயராய் அல்லது இவனுடைய சொந்தப் பெயராயிருக்கலாம்.

கி.மு. 536-ல் இஸ்ரவேலரில் ஒரு கூட்டம் திரும்பி, எருசலேமுக்குப் போனார்கள். ஆகாய், சகரியா, என்பவர்களின் ஏவுதலின்படி தேவாலயம் கி.மு. 520-516ல் கட்டி முடிந்தது. அறுபது வருஷத்துக்குப் பின்பு, கி.மு. 457-ல் எஸ்றா வந்து சீர்திருத்தங்கள் செய்தான். பதின் மூன்று வருஷத்துக்குப் பிறகு, கி.மு. 444-ல்

நெகேமியா வந்து பட்டணத்து அலங்கங்களைக் கட்டினான்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்து 100 வருஷங் களுக்குப் பின் மல்கியா தோன்றுகிறான். சிறையிருப்பின் பயனாக ஜனங்கள் விக்கிர காராதனையை முற்றிலும் விட்டு விட்டனர். ஆனால், நெகேமியா, எஸ்றா என்பவர் களால் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் அற்றுப் போயின. ஜனங்கள் திரும்பவும் பழைய ஜீவியத்தைத் தொடங்கி விட்டார்கள். தேவனின் உண்மையான வணக்கத்துக்குப் பதிலாக, தப்பிதமான கொள்கை, கோட்பாடுகள் வழங்கின.

தமது குமாரனுடைய பிறப்புக்காக தேவன் தெரிந் தெடுத்து, ஆயத்தப்படுத்தி வந்த ஜாதி, துன்மார்க்க வழக்கங்களாலும், அந்நிய ஜாதிப் பெண்களை விவாகம் செய்ததாலும், சீர்கெட்ட நிலைக்கு வந்தது.

இப்படிப்பட்ட விவாக சம்பந்தங்கள் கர்த்தர் பார்வையில் அருவருப்பானதென்று தீர்க்கதரிசி கூறுகிறான். ஏனெனில், இவ்வித விவாகஞ் செய்வதற்காக தங்கள் சொந்த மனைவிகளைத் தள்ளி விட்டார்கள். இந்தச் செய்கைகள் யூதர், அஞ்ஞான பழக்க வழக்கங்கட் குட்படக் காரணமாயிற்று. ஆகவே, அப்படிப்பட்ட ஸ்திரீகளைத் தள்ளிவிடும்படி எஸ்றா சொல்லுகிறான். (எஸ்றா 10:10-12; மல். 2:11-16)

எபிரெயருடைய விவிலிய நூலின் கடைசிப் புஸ்தகத்தில் "நீங்கள் தேடுகிற ஆண்டவர் இதோ, வருகிறார்" (மல். 3:1) என்று மேசியாவின் வருகையைக் குறித்துத் தீர்க்கதரிசன வார்த்தையாய்ச் சொன்னபின், 400 வருஷக் காலமாய் அமைதியாயிருந்ததும், அதன்பின், இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிய செய்தியோடு புதிய ஏற்பாடு ஆரம்பித்ததும், கர்த்தருடைய ஒழுங்கின்படியே நடந்ததென்பது கவனிக்கத்தகும். "இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே, நான் உங்களிடத்திற்கு எலியாத்தீர்க்க தரிசியை அனுப்புகிறேன்" என்று கர்த்தர் சொல்லுகிறாரென்றதோடு இந்தப் புஸ்தகம் முடிகிறது. (மல். 4:5)

ஆசிரியர் : மல்கியா

காலம் : கி.மு. 430.

புத்தகப் பகுப்பு :

1 முகவுரை (1:1)

2 தேவனுடைய உடன்படிக்கையின் அன்பு (1:2-5)

3 இஸ்ரவேலின் உண்மையற்ற தன்மை
கண்டிக்கப்படுதல் (1:6-2:16)

4 கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (2:17-4:6)

இப்புத்தகத்தில் 4 அதிகாரங்கள் 55 வசனங்கள் உள்ளன.

இரண்டு ஏற்பாடுகளின் ஒப்புமை

பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என இவ்விரண்டு ஏற்பாடுகளுக்குமிடையில் சம்பந்தமுண்டு, அதைப் பின்வருமாறு குறிக்கலாம்.

பழைய ஏற்பாடு	புதிய ஏற்பாடு
நியாயப் பிரமாணம்	சுவிசேஷம்
அஸ்திபாரம்	கட்டடம்
தீர்க்கதரிசனம்	நிறைவேறுதல்
வாக்குத் தத்தம்	செய்து முடித்தல்
பிரச்சனை	விடுவித்தல்
துவக்கம்	முடிவு.

இடையே நடந்த சம்பவங்கள்

பழைய ஏற்பாட்டுக் காலம் முடிந்து, புதிய ஏற்பாட்டுக்காலம் தொடங்கும் முன்நடந்த சம்பவங்கள். (கி.மு. 399–கி.பி.4)

1. மகா அலெக்சந்தரின் ஆளுகை அவன். கி.மு. 306-ல் மரித்த பின், தானியேலில் குறித்துள்ள நாலு ராஜ்யங்கள் எழும்பின.

2. கி.மு. 285-175, பலஸ்தீனா எகிப்து ராஜாக்களாலும், சீரியராலும் ஆளப்பட்டது.

3. கி.மு. 175-ல் அந்தியோகு எப்பிபேனிஸ் (Antiochus Epiphanus) என்பவனால் யூதர் ஒடுக்கப்பட்டது.

4. கி.மு. 167 மக்கெபெயரின் காலம்.

5. கி.மு. 63, பொம்பி என்பவனால் எருசலேம் கைப்பற்றப்பட்டது.

6. கி.மு. 40, ஏரோது யூதருடைய ராஜாவாக ஏற்படுத்தப்பட்டது.

7. கி.மு. 17-ஏரோது தேவாலயம் கட்டினது.

8. கி.மு. 4- இயேசு பிறந்தது.

பலஸ்தீனாவின் நிலை

பழைய ஏற்பாடு காலத்திலிருந்து புதிய ஏற்பாடு காலம் வரை - 400 வருஷம் பலஸ்தீனாவின் நிலை

யூதேயா, பெர்சியா ராஜ்யத்துக்குக் கீழ், கி.மு. 430-332 வரை இருந்தது.

கிரேக்க அரசாட்சிக்குக் கீழ், கி.மு. 331-167 வரை இருந்தது. மகா அலெக்சாந்தர் கி.மு. 332-ல் எருசலேமைக் கைப்பற்றின போது, அதற்கொரு மோசமும் செய்யாதது மட்டுமல்ல, யூதரையும் பட்சமாய் நடத்தினான். அவன் கி.மு. 323-ல் மரித்தபின், எருசலேம் முதலாவது சீரியாவுக்குக் கீழிருந்து, பின்பு கி.மு. 198 வரை எகிப்தின் ஆளுகைக்குட்பட்டிருந்தது.

எகிப்து ராஜாக்களாகிய பித்தொலோமியரின் நாட்களில், யூதர் எகிப்திலே குடியேறி, ஜெப ஆலயங்களையும் கட்டினார்கள். அலெக்சாந்திரியா ஒரு யூத நாடாயிருந்தது.

கி.மு. 198-ல் சீரியர் பலஸ்தீனாவைக் கைப்பற்றின பின், அது சீரிய ராஜாக்களுக்குக் கீழாயிற்று. அந்தியோகு எப்பி பேனேஸ் (Antiochus Epiphanes) (கி.மு. 175-164) என்பவன் யூதரைக் கொடுமையாய் நடத்தி, எருசலேமைப் பாழாக்கி, தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தி, மார்க்கத்தை மறுத்து விடும்படி பலவந்தம் பண்ணி, பலவகையாய் யூதரைத் துன்புறுத்தினான். இதனிமித்தம் யூதர் கலகம் பண்ணினார்கள். அவர்களுடைய ஆசாரியனாகிய மத்ததியாஸ் (Matathias) எழும்பி, எருசலேமை மீட்டுக் கொண்டான். (கி.மு. 165) அவன் சந்ததியாராகிய மக்கபேயர் தேவலயத்தைச்

சுத்திகரித்து, வேறு சீர்திருத்தங்கள் செய்தார்கள். கி.மு. 63 வரை யூதர் சுயாதீனம் பெற்றிருந்தார்கள்.

கி.மு. 63-ல் ரோமர் பலஸ்தீனாவைக் கீழ்ப்படுத்தி, இதுமேயனாகிய அந்திப்பேற்றர் (Antipatar) என்பவனை யூதேயாவின் அதிபதியாக்கினார்கள். அவன் மகனாகிய ஏரோது கி.மு. 37- கி.பி. 3 வரை யூதேயாவின் ராஜாவாயிருந்தான். அவன் யூதருக்காகத் தேவாலயத் தைத் திரும்பக் கட்டின போதிலும், அவர்களைக் கொடூரமாய் நடத்தினான். இயேசு பிறந்த நாட்களில், எருசலேமில் பிள்ளைகளெல்லாரையும் கொல்லுவித்ததும் அவனே. (மத். 2:16).

அக்காலத்தில் நடந்த முக்கிய சம்பவங்கள்

கி.மு. 399-கி.பி. 4 உலகபிரசித்தமான கல்விமான்க ளாகிய சாக்ரடீஸ் (Socrates), அரிஸ்டாட்டில் (Aristotle), டெமாஸ்தனஸ் (Demosthenes), மகா அலெக்சந்தர் (Alexander the Great), பிளாட்டோ (Plato) என்பவர்களிருந்தார்கள்.

கி.மு. 306-ல் மகா அலெக்சந்தர் மரித்த போது, ராஜ்யம் நான்காகப் பிரிந்தது. தானியேலும் இதைக் குறித்து தரிசனம் கண்டு எழுதியிருந்தான்.

கி.மு. 285-ல் பலஸ்தீனா, எகிப்து, சீரியா ராஜ்யங் களுக்குக் கீழ்ப்பட்டிருந்தது. அக்காலத்தில் Septuagint எனப்படும் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பு 70 பேரால் எழுதப்பட்டது.

கி.மு. 175-அந்தியோகு எப்பிபேனஸ் என்பவனால் யூதர் துன்புறுத்தப்பட்டார்கள்.

கி.மு. 170-மக்கபேயர் எருசலேமை விடுவித்தார்கள்.

கி.மு. 100-ஜுலியஸ் சீசர் என்பவன் பிறந்தான்.

கி.மு. 63-பொம்பி என்பவன் எருசலேமைக் கைப்பற்றினான்.

கி.மு. 44-ஜுலியஸ் சீசர் கொல்லப்பட்டான்.

கி.மு. 40- ஏரோது யூதருடைய ராஜாவானான்.

கி.மு. 17-ஏரோது தேவாலயத்தைக் கட்டினான்.

கி.மு. 4-இயேசு பிறந்தார்.

தள்ளுபடியாகமம்

"அப்போகிரிப்பா" என்ற கிரேக்க வார்த்தையின் பொருள் மறைவானது என்பதாகும். இதனை தள்ளுபடி ஆகமம் என தமிழில் அழைக்கின்றனர். இதில் பதினான்கு புத்தகங்கள் அடங்கும்

அவையாவன:

1. 1 எஸ்ட்ராஸ்
2. 11 எஸ்ட்ராஸ்
3. தோபித்து
4. ஜீயூதித்து
5. எஸ்தரின் பிற்சேர்க்கை
6. சாலொமோனின் ஞானம்
7. சீராக்கின் ஞானம்
8. பாரூக்கு
9. இளைஞர் மூவரின் பாடல்
10. சூசன்னாவின் வரலாறு
11. பேல் தெய்வமும் அரக்கப் பாம்பும்
12. மனாசேயின் ஜெபம்
13. I மக்கபேயர்
14. II மக்கபேயர்

பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்குமிடையில், கத்தோலிக்க வேதாகமத்தில் பதினான்கு புஸ்தகங்க ளுள்ளன. இவைகள் எபிரேயருடைய புஸ்தகத்திலிருக்க வில்லை.

பின்பு அதை எழுபது பேர் கிரேக்கில் மொழி பெயர்த்த போது, (Septuagint) இந்தப் புஸ்தகங்களும் சேர்க்கப் பட்டன.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், வேதாகமம் லத்தீன் (Latin) பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டபோதும், இந்தப் புஸ்தகங்கள் சேர்க்கப்பட்டன.

மார்ட்டின் லூதர் (Martin Luther) நாட்களில் மார்க்க சீர்திருத்தம் உண்டானபோது, இப்புஸ்தகங்கள் தேவ வார்த்தையல்ல வென்று தீர்மானித்துத் தள்ளப்பட்டன. ஆகையால் "தள்ளுபடியாகமம்" என்று பெயர் வழங்கிற்று.

(உபா 4:2; நீதி 30:6; வெளி 22:18,19) ஆகிய வசனங்களை வாசித்துப் பார்த்து அறிந்து கொள்ள வேண்டும்.

தார்க்கும்

எபிரெய பழைய ஏற்பாடு

இது எபிரெய பாஷையில் எழுதப்பட்டு, தார்க்கும் என்று சொல்லப்பட்டது. அரேமியா (Aramaea) பாஷை சீரியாவில் வழங்கின பாஷை, இது எபிரெய பாஷைக்குச் சமான முள்ளதாய் இருந்ததால், இஸ்ரவேலர் சிறையிருப் பிலிருந்து வந்தபின், அதைப் பழகிக் கொண்டார்கள். இயேசுவின் நாட்களிலும் இந்தப் பாஷையே பலஸ்தீனா வில் உபயோகிக்கப்பட்டது.

யூதருடைய சிரேஷ்டசபை

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், யூதருக்குள் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சங்கம். இது இயேசுவின் நாட்களிலுமிருந்தது. எழுபது அங்கத்தவர்களுள்ளது. அதிகமாய் ஆசாரியரும் சதுசேயரும் அதில் சேர்ந்திருந்தார்கள். பிரதான ஆசாரியன் அதன் தலைவன். இந்தச் சபைக்கு, யூதருடைய தேசத்துக்கும், சமயத்துக்குமுரிய காரியங்களை நியாயத்தீர்ப்புச் செய்ய அதிகாரமிருந்தது.

யூதருடைய ஜெப ஆலயம்

சிறையிருப்புக் காலத்தில், தேவாலயம் இல்லாததினிமித்தம், சிதறியிருந்த யூதர் தாங்களிருந்த இடங்களில் மார்க்க ஆராதனைக்காக ஏற்படுத்தின கட்டடம். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பும், புற தேசங்களில் யூதர் கூடி இருந்த இடங்களிலும் இவ்வித ஜெய ஆலயங்கள் உண்டாயின.

வேதபாரகர்

ஆரம்பத்திலிருந்து இந்தக் கட்சியார் வேத புஸ்தகத்தைப் படித்து, ஆராய்ந்து, பார்த்தெழுதினவர்கள். அவர்களுக்கு வேத அறிவு இருந்ததினால், நியாய சாஸ்திரிகள் எனப்பட்டனர். (லூக். 10:25; 11:46) வேதத்தைக் குறித்து இவர்கள் கொடுத்த தீர்ப்புகள் பாரம்பரியங்களென மதிக்கப்பட்டன.

கால நிருபண ஒழுங்கு

புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்கள்

யாக்கோபு	கி.பி. 45
மாற்கு	கி.பி .50
I, II தெசலோனிக்கேயர்	கி.பி. 51-53
I, II கொரிந்தியர்	கி.பி. 55-57
கலாத்தியர்	கி.பி. 58
ரோமர்	கி.பி. 59
மத்தேயு	கி.பி. 60
லூக்கா	கி.பி .62
எபேசியர்	கி.பி .62
கொலோசேயர்	கி.பி. 63
பிலேமோன்	கி.பி .62
பிலிப்பியர்	கி.பி. 64
I, II பேதுரு	கி.பி .64-67*
அப்போஸ்தலர்	கி.பி .65-80
எபிரெயர்	கி.பி. 66
யூதா	கி.பி. 66
I தீமோத்தேயு	கி.பி. 66
தீத்து	கி.பி. 66
II தீமோத்தேயு	கி.பி .66
வெளிப்படுத்தல்	கி.பி. 96
யோவான் சுவிசேஷம்	கி.பி. 96
I, II, III யோவான் நிருபங்கள்	கி.பி. 95-98

இயேசுவின் ஜீவியம்

ஆரம்பம் : முப்பது வருஷம். லூக். 1-2:52
மத். 1-2 : 23; யோவா. 1:1-18

ஊழியம் : 3½ வருஷம்
துவக்கம்: மாற். 1:1-13; லூக். 3:1-4: 13;
மத். 3:1-4:11; யோவா. 1:19, 2:12.
யூதேயாவில்: யோவா. 2:13 ; 4:42
கலிலேயாவில்:
மத் 12-14; யோவா. 4:14; 5:47;
லூக். 6:12; 19: 17; 12:15; 15:20; 6:1-71;
மாற். 7:24, 9:50; லூக். 9:18-50;
மத். 15:21; 18:35; யோவா .7:1; 8:59.
பெரெயாவில்: மாற். 10:1-52; லூக். 9:51;
லூக். 19:28; மத் 19:1-20; 34; யோவா.
9:1-12; 11

கடைசி
நாட்கள் : மாற். 11:1-15; 47.
லூக். 19:29-23; 56; மத். 21:1-27;69;
யோவா. 12:12-19; 42.
உயிர்த்தெழுந்தபின்: மாற். 16:1-20;
லூக். 23:56-24: 53; மத். 28:1-30;
யோவா. 20: 1-21:13

சுவிசேஷங்கள்

இவைகள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையையும், போதனைகளையும் வெளிப்படுத்துகின்றன. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய இந்நான்கு சுவிசேஷங்களும் ஒருபோதும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பதில்லை.

மாறாக ஒன்றோடொன்று இணைந்தே உள்ளன. ஒவ்வொரு சுவிசேஷமும் இயேசுகிறிஸ்துவினுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பாகங்களையும் வெளிப்படுத்துகின்றன. இவை பல்வேறுபட்ட மக்கள் கூட்டங்களுக்காக எழுதப்பட்டவை. சுவிசேஷங்களைப் படிக்கும்போது யாருக்காக இவை எழுதப்பட்டன என்பதைக்கூட நாம் கவனிக்க வேண்டியதாய் இருக்கிறது.

புதிய ஏற்பாட்டையும் நான்காகப் பிரிக்கலாம்

1. சுவிசேஷங்கள் (மத்தேயு முதல் யோவான் வரை)
2. வரலாற்றுப் புத்தகம் (அப்போஸ்தலருடைய நடபடிகள்)
3. நிருபங்கள் (ரோமர் முதல் யூதா வரை)
4. தீர்க்கதரிசன புத்தகம் (வெளிப்படுத்தின விசேஷம்)

மத்தேயு எழுதின சுவிசேஷம்

மத்தேயு என்பதன் அர்த்தம், "கர்த்தரின் கொடை", அல்பேயுவின் குமாரனாகிய லேவி. (மாற். 2:14; லூக். 5:27) பின்பு அப்போஸ்தலனும் சுவிசேஷகனுமானான்.

இயேசு நடந்துபோகும்போது, ஆயத் துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயுவைக் கண்டு, "எனக்குப் பின் சென்று வா". எனவே, அவன் எழுந்து பின் சென்றான்.

அப்பொழுது, அவன் தன் வீட்டிலே ஒரு பெரிய விருந்து பண்ணினான். (மாற். 2:15; லூக். 5:29) இதைப்பற்றி மத்தேயு தானே தன் சுவிசேஷத்தில் குறியாதிருப்பதில், அவனுடைய தாழ்மை விளங்குகிறது.

இச்சுவிசேஷத்தை முதலாவது எபிரெய பாஷையில் எழுதி, பின்பு கி.பி. 60-ல் கிரேக்கு பாஷையில் வெளியிட்டதாகத் தெரிகிறது. மத்தேயு யூதருக்கென்று தன் சுவிசேஷத்தை எழுதினதினிமித்தம், அவர்களுடைய ஆகமத்திலிருந்தே

இயேசுவின் தேவத்துவத்தையும், ராஜத்துவத்தையும் எடுத்துக்காட்டியிருக்கிறான். இயேசு உலகத்துக்கு வந்த காலத்தில், அவரைப்பற்றி பழைய ஏற்பாட்டில் சொல்லப் பட்டவைகளை யூதர் தப்பிதமாய் விளங்கி, இயேசு வரும்போது, தங்களுக்கு இவ்வுலக மேன்மையும், ராஜரீக முதன்மையும் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தனர். அவர் வந்தபோது, தமது ராஜ்யம் இவ்வுலகத்துக்குரிய தல்ல, ஆவிக்குரியதென்று சொல்லவே, அவரை விரோ தித்து, கடைசியில் சிலுவையிலறைந்து கொன்றார்கள்.

யூதர் செய்த தப்பிதத்தை உணர்த்தவும், இயேசு தீர்க்கதரிசனங்களில் கூறப்பட்ட மேசியா என்பதைக் காட்டவும், மத்தேயு இச்சுவிசேஷத்தை எழுதினான்.

ஆசிரியர் : ஆயக்காரனாக இருந்த மத்தேயு : 12 அப்போஸ்தலர்களில் ஒருவராகவும் இருந்தார்.

காலம் : கி.பி.65க்கும் கி.பி. 70க்கும் நடுவில்

நோக்கம் : இயேசுகிறிஸ்துவே மேசியா என்று யூதர்களுக்கு வெளிப்படுத்துவதே இப்புத்தகத்தின் நோக்கமாகும்.

புத்தகப் பகுப்பு :

1 இயேசுவின் பிறப்பும், ஆரம்ப நாட்களும் (1:1 - 2:28)

2 இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பம் (3:1 - 4:11)

3 கலிலேயாவில் இயேசுவின் ஊழியம் (4:12 - 18:35)

4 யூதேயாவிலே இயேசுவின் ஊழியம் (19:1 - 20:34)

5 எருசலேமில் ஊழியம் (21:1 - 25:46)

6 இயேசுவின் பாடுகள் (26:1 - 27:66)

7 இயேசுவின் உயிர்த்தெழுதலும் சீஷர்கள் அனுப்பப்படுதலும் (28:1 - 28:20)

இப்புத்தகத்தில் 28 அதிகாரங்களும், 1071 வசனங்களும் உள்ளன. பத்தொன்பது பழைய ஏற்பாட்டு மேற்கோள் களும் உள்ளன.

மாற்கு எழுதின சுவிசேஷம்

எருசலேமிலிருந்த ஒரு கிறிஸ்தவ ஸ்திரீயாகிய மரியாள் என்பவளின் மகன். இவன் யோவான் மாற்கு எனப்பட்டான். பர்னபாவுக்கு மருமகன் முறையானவன். (கொலோ. 4:10) பவுலின் முதலாம் பிராயணத்தில் இவனும் பர்னபாவும் கூடப் போனார்கள். (அப். 12:12). ஆனால் மாற்கு பெர்கே மட்டும் போய்த் திரும்பி விட்டான். இதினிமித்தம் இரண்டாம் பிரயாணத்தில், பவுல் இவனைக் கூட்டிக் கொண்டு போக சம்மதியாததால், பவுலும் பர்னபாவும் ஊழிய வேலையில் பிரிந்து போக நேரிட்டது. பர்னபா மாற்குவை தனக்கு உதவியாகத் தெரிந்து கொண்டு, சீப்புரு தீவுக்குப் போனான். (அப். 15:36-40).

பின், மாற்கு பவுலோடு ஒப்புரவாகி, கொலோசேய சபைக்கு அனுப்பப்பட்டான். (கொலோ. 4:10)

இயேசு கெத்செமெனேத் தோட்டத்தில் பிடிக்கப்பட்டுப் போகையில், அவர் பின்னே போனவனும், தன் போர்வையைப் போட்டுவிட்டு ஓடின வாலிபனும், இந்த மாற்கு என்று தெரிகிறது.

நான்கு சுவிசேஷங்களில் இதுவே முதலில் எழுதப்பட்டது. மாற்கு இச்சுவிசேஷத்தை ரோமாபுரியி லிருந்து ரோமருக்கென்றெழுதினான். ரோமாபுரி, பாபிலோனென்று (1 பேது. 5:13)-ல் குறித்துள்ளது.

ஆசிரியர் : மாற்கு (யோவான் என்னும் மறுபெயர் கொண்டவர்)

காலம் : கி.பி.50க்கும் கி.பி. 60க்கும் நடுவில்

நோக்கம் : புறஜாதியாருக்கு இயேசுகிறிஸ்துவை

மனிதகுமாரனாக அறிமுகப்படுத்துதல் அல்லது வெளிப்படுத்துதல் மற்றும் விசுவாசிகளுக்கு பாடுகளால் பூரணரான கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுதல்.

புத்தகப் பகுப்பு :

1 இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பம் (1:1 - 1:13)

2 கலிலேயாவில் இயேசுவின் ஊழியம் (1:14 - 6:29)

3 இதர பகுதிகளில் ஊழியங்கள் (6:30 - 9:32)

4 கலிலேயாவில் இயேசுவின் கடைசி ஊழியங்கள் (9:33 - 9:50)

5 யூதேயாவில் ஊழியம் (10:1 - 10:52)

6 பாடுகள் (11:1 - 15:47)

7 உயிர்த்தெழுதலும், அனுப்புதலும் (16:1 - 16:20)

இந்நூலில் 16 அதிகாரங்கள், 678 வசனங்கள், 4 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

லூக்கா எழுதின சுவிசேஷம்

"பிரியமான வைத்தியனாகிய லூக்கா" என்றும், "என் உடன் வேலையாள்" என்றும் பவுல் இவனைக் குறித்துச் சொல்லுகிறான். (கொலோ. 4:14; II தீமோ. 4:11; பிலே. 24)

லூக்கா மூன்றாம் சுவிசேஷத்தையும், அப்போஸ்தலர் நடபடிகளையும் எழுதினான். இவைகளில் தன் பெயரை அவன் சொல்லவில்லை.

(லூக். 1:2) லிருந்து, லூக்கா இயேசுவின் ஊழியத்தைக் கண்ணாலே காணவில்லை என்று தெரிகிறது.

பவுல், (கொலோ. 4:14) ல் லூக்காவை விருத்தசேதனம் பெற்றவர்களோடு சேர்த்தெழுதாமல், புறஜாதியாரான

எப்பாப்பிரா, தேமா, இவர்களோடு சேர்த்தபடியால், இவனும் ஒரு புற ஜாதியான் என்று எண்ண வேண்டும்.

துரோவா பட்டணத்தில் பவுல் இவனை முதன் முதல் சந்தித்ததாக (அப். 16:10) ல் "நாங்கள்" என்று சொல்லியிருக்கிறதிலிருந்து தெரியவருகிறது. இவன் ஒரு கிரேக்கனும், கல்விமானுமாயிருந்தான். (லூக். 1:1-4)

இவன் பிறந்த ஊர் திட்டமாகத் தெரியாத போதிலும், அந்தியோகியாவில் பிறந்தானென்று சொல்லப்படுகிறது. பவுல் ரோமாபுரியில் சிறைப்பட்டிருந்த பொழுது, கொலோசெயருக்கும், பிலேமோனுக்கும் எழுதின நிருபங்களில், இவனைப் பற்றியும் குறித்திருக்கிற படியால், இவனும் அவனோடிருந்ததாகத் தெரிகிறது.

பவுல் இரண்டாம் முறை சிறைச்சாலையிலிருந்த போதும், லூக்கா அவனோடிருந்ததாக கி.பி. 64-ல் எழுதப்பட்ட (II தீமோ 4:11) லிருந்து அறியலாம். ஆகவே,

லூக்கா அவனுடைய கடைசி நேரம் வரை கிட்டத்தட்ட ஒன்பது வருஷக் காலம் பவுலோடு இருந்ததாகத் தெரிகிறது.

இதன்பின், லூக்கா தேவ ஊழியஞ் செய்து வந்தானென்றும், கடைசியில் கிரேக்க தேசத்தில், 84 வயதில் மரித்தான் என்றும் சொல்லப்படுகிறது.

லூக்கா பவுலோடும், மற்ற ஊழியக்காரரோடும் நெருக்கப்பட்டிருந்ததினாலும், எருசலேம், செசரியா முதலிய இடங்களுக்கு இவனும் போன படியாலும், இயேசுவைக் குறித்தும், முதற் சீஷருடைய செய்கைகளைக் குறித்தும் இவனுக்கு நன்றாக அறியக் கூடியதாக இருந்தது. அவனே (லூக். 1:2) ல் "நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகள், ஆரம்ப முதல் கண்ணாரக் கண்டு, வசனத்தைப் போதித்தவர்களிடம் பெற்ற சரித்திரம்" என்று சொல்லுகிறான்.

பவுல் செசரியாவில் காவலிலிருந்த நாட்களில் லூக்கா தன் சுவிசேஷத்தையும், பவுல் ரோமாபுரியிலிருக்கையில், அப்போஸ்தலர் நடபடிகளையும், லூக்கா எழுதினதாகத் தெரிகிறது.

லூக்கா இச்சுவிசேஷத்தை எழுதினது தெயோப்பிலுவுக்கு என்று குறித்திருந்தும், மற்றவர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும் படியே எழுதியுள்ளான்.

கிறிஸ்துவினால் வரும் இரட்சிப்பு சகல மனுஷ ஜாதியாருக்குமுரியதென்பதைக் காட்டும்படி, அவருடைய வம்ச வரலாற்றை மத்தேயு சொன்னதுபோல் ஆபிரகாமிலிருந்தல்ல, ஆதாமில் இருந்தே குறித்துள்ளான். மேலும்,

அவர் ஊழியஞ் செய்த காலத்தில் புற ஜாதியாருக்குக் கொடுத்த போதனைகளும், செய்த அற்புதங்களும் இச்சுவிசேஷத்தில் முக்கியமாய் விவரிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் : பவுலின் நண்பனும், உடன் ஊழியனுமான வைத்தியனாகிய லூக்கா.

காலம் : கி.பி.70க்கும் கி.பி, 80க்கும் நடுவில்

நோக்கம் : இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை ஒழுங்குபடுத்தி அவரை தேவகுமாரனாக புற ஜாதிகளுக்கு வெளிப்படுத்துவது.

புத்தகப் பகுப்பு :

1	முகவுரை	(1:1 - 1:4)
2	இயேசுவின் பிறப்பு	(1:5 - 2:52)
3	ஊழியத்திற்கான ஆயத்தம்	(3:1 - 4:13)
4	கலிலேயாவில் ஊழியம்	(4:14 - 9:9)
5	கலிலேயாவிற்கு வெளியே ஊழியங்கள்	(9:10 - 9:50)
6	யூதேயாவில் ஊழியங்கள்	(9:51 - 13:21)
7	யோர்தான் சமவெளியில் ஊழியங்கள்	(13:22 - 19:27)
8	இறுதி நாட்கள்	(19:28 - 24:53)

இதில் 24 அதிகாரங்கள், 1151 வசனங்கள், 6 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

யோவான் எழுதின சுவிசேஷம்

பவுல் மனுஷ ஜாதியாரை யூதர், கிரேக்கர், தேவனுடைய சபை என மூன்று பிரிவாகக் குறித்திருக்கிறான். (1 கொரி. 10:32, 33) மத்தேயு யூதருக்கென்றும், மாற்கு, லூக்கா,

புற ஜாதியாருக்கென்றும் தங்கள் சுவிசேஷங்களை எழுதினார்கள். தேவ சபைக்கென்று யோவான் எழுதுகிறான்.

யோவான் இச்சுவிசேஷத்தை தன் கடைசி நாட்களில், எபேசுவிலிருந்து கிரேக்க பாஷையில், எல்லா விசுவாசிகளுக்கும் வேண்டிய ஆவிக்குரிய தேவைகளைப் பற்றி எழுதியுள்ளான்.

இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷனாகிய யோவானே இதை எழுதினான் என அவனே சொல்லுகிறான் .(யோவா. 21:24) இதை எழுதின நோக்கத்தையும் அவனே குறிக்கிறான். "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து, அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோவா. 20:31)

இயேசு தேவனுடைய குமாரனென்ற நிலையைக் காட்டும்படி எழுதினபடியால், யோவான் அவருடைய வம்ச வரலாறு, பிறப்பு, பிள்ளைப் பிராயம், வளர்ச்சி, ஞானஸ்நானம், பிசாசினால் சோதிக்கப்பட்டது, கெத்செமெனேயில் வியாகுலமடைந்தது ஆகியவைகளைக் குறித்து ஒன்றும் குறிக்கவில்லை.

இன்னும் மற்ற சுவிசேஷகரால் குறிக்கப்படாத விஷயங்களாகிய மறுபடி பிறப்பது, ஜீவ தண்ணீர், ஜீவ அப்பம், நல்ல மேய்ப்பன், உலக ஒளி, என்பவைகளைப் பற்றி, அவர் செய்த பிரசங்கங்களும், அவர் சீஷரோடு

கடைசியாய்ப் பேசின பேச்சுகளும், அவர் ஜெபமும், யோவானால் மாத்திரம் எழுதப்பட்டுள்ளன.

ஆசிரியர் : யோவான் (அப்போஸ்தலர்களில் ஒருவர்)

காலம் : கி.பி.50க்கும் கி.பி. 60க்கும் நடுவில்

நோக்கம் : இயேசு கிறிஸ்துவைத் தேவனாக வெளிப் படுத்துவது.

புத்தகப் பகுப்பு :

1	முகவுரை	(1:1 - 1:18)
2	இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பம்	(1:19 - 1:51)
3	இயேசுவின் பகிரங்க ஊழியம்	(2:1 - 11:57)
4	பாடுகளின் வாரம்	(12:1 - 19:42)
5	உயிர்தெழுதலும் சீடர்களை அனுப்புதலும்	(20:1 - 21:25)

இச்சுவிசேஷத்தில் 21 அதிகாரங்கள், 878 வசனங்கள், 6 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

அப்போஸ்தலருடைய நடபடிகள்

இந்தப் புஸ்தகம் பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள் என்று சொல்லத்தகும்.

சுவிசேஷத்தை எழுதின, "பிரியமான வைத்தியனாகிய" லூக்காவே இதையும் எழுதினான். சுவிசேஷத்தில் கர்த்தர் மனுஷரின் இரட்சிப்புக்காக செய்தவைகளைப் பற்றியும், "நடபடிகளில்" பரிசுத்த ஆவியினால் தொடர்ச்சியாய்ச் செய்தவைகளைப் பற்றியும், லூக்கா குறிக்கிறான்.

கிறிஸ்தவ சபை தொடங்கின நாட்களின் சரித்திரமே, இப்புஸ்தகத்தில் முக்கியமாய் காணப்படுகிறது.

இப்புஸ்தகத்தில் சுவிசேஷங்களுக்கும் நிருபங் களுக்கு மிடையில் வருவதற்குப் பல நியாயங்களுண்டு. இது சுவிசேஷங்களுக்குத் தொடர்ச்சியாயும், நிருபங் களுக்குத் தொடக்கமாயும் இருக்கின்றது. அத்தோடு கிறிஸ்தவ மார்க்க ஆரம்பத்தைக் குறித்து அறிவது நமக்கு அதிக அவசியமானது. கி.பி.30 முதல் சுவிசேஷம் எருசலேமி லிருந்து ரோமாபுரிக்குப் போனது எப்படி என்பதை இதில் காணலாம். இதைவிட யூதரிலிருந்து தொடங்கின இந்த மார்க்கம் படிப்படியாக புறஜாதி யாருக்குள் பரம்பினதைக் குறித்து இப்புஸ்தகமே வெளி யிடுகிறது. ஆசியாவில் உற்பத்தியான மார்க்கம், சில வருஷங்களுக்குள் ஐரோப்பிய சீர்திருத்தத்துக்கு இசை வானதெப்படி? ரோம சுதந்திரம் பெற்ற யூதனாகிய பவுல் என்பவனாலே இவைகள் நடைபெற்றன. இவைகளை விவரித்து எழுதினவன் புற ஜாதியானான லூக்கா. ஆகவே, உலகம் முழுவதும் கிறிஸ்தவ மார்க்கம் பரம்பின விதத்தை இப்புஸ்தகம் குறிக்கிறது.

ஆசிரியர் : மருத்துவனாகிய லூக்கா

காலம் : கி.பி.63

நோக்கம் : திருச்சபை வளர்ச்சி

புத்தகப் பகுப்பு :

1 பாலஸ்தீனாவில் திருச்சபை வளர்ச்சி (1:1 - 12:25)

2 அந்தியோகியாவிலிருந்து
ரோமாபுரிவரை திருச்சபை வளர்ச்சி (13:1 - 28:30)

இந்நூலில் 28 அதிகாரங்கள், 1007 வசனங்கள், 15 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

நிருபங்கள்

சத்திய வேதத்தில் 21 நிருபங்களுண்டு. இவைகளில் பதின்மூன்று அப்போஸ்தலனாகிய பவுல் என்பவனால் எழுதப்பட்டது.

பவுல் தர்ஷீஸ் தேசத்து யூதன். தொடக்கத்தில் சவுல் என்பது இவனுடைய பெயர். பென்யமீன் கோத்திரத்தான். ஒரு பரிசேயன். தர்ஷீஸ் கல்லூரியில் கல்வி பயின்றபின், எருசலேமில் கமாலியேல் என்னும் வித்துவானிடம் கற்றான். (அப்: 22:3).

ஸ்தேவானைக் கல்லெறிந்தவர்களின் வஸ்திரங்களைப் பவுல் பாதுகாத்தான் என்பதே இவனைக் குறித்து வேதாகமத்தில் முதன் முதல் குறித்துள்ளது. (அப். 7:58).

அதன்பின் பவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதற்காகத் தமஸ்குவுக்குப் போனான். வழியிலே இவனுக்கு தேவதரிசனங்கிடைத்து, குணப்பட்டு, அனனியா என்பவனால் ஜெபிக்கப்பட்டு, தமஸ்கு சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டான். (அப். 9:1-25)

பவுல் மூன்று சுவிசேஷ பிரயாணங்களில் சென்று எருசலேமிலிருந்து அந்தியோகியாவுக்கும், சீப்புரு தீவு வழியாய் துருக்கி, ஆசியாவுக்கும் போனான். ஐரோப்பாவுக்கும் போனதாகத் தெரிகிறது.

இவனுடைய பிரயாணங்களில் கூடப் போனவர்கள் பர்னபா, யோவான் என்னும் மாற்கு, சீலா, லூக்கா என்பவர்கள்.

இவனோடு கூட தீமோத்தேயுவும், தீத்துவும், ஊழியம் செய்தார்கள். சீப்புரு தீவுக்குப் போன பின்னரே சவுல்

எண்ணப்பட்ட இவன் பவுல் என்ற ரோம பெயரால் அழைக்கப்பட்டான். (அப். 13:9,13).

அநேக சகைபளுக்கும், கிட்டிய சிநேகிதருக்கும் நிருபங்கள் எழுதினான். அவைகளில் பதின்மூன்று புதிய ஏற்பாட்டைச் சேர்ந்தவை.

இவன் தைரியமாய் இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்ததினிமித்தம் யூதரால் அதிகம் துன்புறுத்தப்பட்டான். அநேகம் தடவைகளில் பிடிக்கப்பட்டு, காவலில் வைக்கப்பட்டான். பல நியாயாதிபதிகள் முன் விசாரிக்கப்பட்டான். அகிரிப்பா ராஜாவும், தேசாதிபதிகளாகிய பேலிக்ஸ், பெஸ்து என்பவர்களும் இவனை நியாயம் விசாரித்தார்கள். (அப். 24-26). கடைசியில் பவுல் ராயனுக்கு அபயமிட்டான். (அப். 25:10-12). ரோமாபுரிக்கு ராயனிடம் போனபின் விசாரித்தவைகள் (அப். 27-28) ல் விவரிக்கப்பட்டுள்ளன.

ரோமாபுரியில் இரண்டு வருஷங்கள் ஒரு வாடகை வீட்டிலிருந்து சிநேகிதரை ஏற்றுக் கொண்டு, அவனைக் காண வந்தவர்களுக்குப் பிரசங்கித்தான். ஒரு போர்ச் சேவகன் அவனோடிருந்தான். (அப். 28:16).

அந்நாட்களில் எபேசு, கொலோசே சபையாருக்கும், பிலேமோனுக்கும் நிருபங்களை எழுதினான். (எபே. 3:1; கொலோ. 4:3; பிலே. 1)

கடைசியில் கி.பி. 67-ம் வருஷம் நேரோ (Nero) ராயன் நாட்களில் இரத்த சாட்சியாய் மரித்தான்.

பவுல் வேறு நிருபங்களாகிய ரோமர், கொரிந்தியர், கலாத்தியர், பிலிப்பியர், தீமோத்தேயு, தீத்து என்பவற்றையும் எழுதினான்.

ரோமருக்கு எழுதின நிருபம்

உலகத்துக்குச் சுவிசேஷத்தை வியாக்கியானம் பண்ணுவதற்காக தேவன் பவுலைத் தெரிந்தார். ரோமருக்கெழுதின நிருபத்தில் அது பூரணமாய் விவரித்துரைத்துள்ளது.

பவுல் இந்த நிருபத்தை எழுதி, மூன்று வருஷங்கள் சென்றபின், ரோமாபுரிக்குப் போனான். அங்கிருந்த சபை பெந்தெகோஸ்தே நாளில் எருசலேமுக்குப் போயிருந்த ரோமரால் ஆரம்பித்திருக்கலாம். (அப். 2:10). அதன்பின் இருபத்தெட்டு (28) வருஷ காலமாக வேறிடங்களிலிருந்து பவுலால் குணப்பட்டவர்களுங் கூட ரோமாபுரியில் போயிருந்தார்கள்.

கிறிஸ்து மார்க்கம் யூதரிலிருந்து தொடங்கினபடியால், புற ஜாதியார் கிறிஸ்தவர்களாகும்போது, யூத சடங்காசாரங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்று ஒரு பிரச்சனை அக்காலத்தில் ஆரம்பமாயிற்று. அப்படிப் பட்டவர்கள் விருத்தசேதனம் பெற வேண்டுமென்று யூதத்தலைவர் பிடிவாதமாய் நின்றார்கள்.

ஆனால், பவுல், தேவனுக்கு முன் நீதிமானாகிறது. மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்வதினாலல்ல, கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினாலே அப்படி ஆக வேண்டும் என்று கூறினான்.

பவுல் ரோமருக்கு எழுதின நிருபம் அவனுடைய ஆறாவது நிருபமாயிருந்தும், வேதாகமத்தில் அதற்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிருபம் வேத சாஸ்திரத்துக் கிசைந்ததாயும், ஒழுங்காயும், கிரமமாயும்

எழுதியிருக்கிறதினால் அப்படிச் செய்யப்பட்டதெனத் தெரிகிறது.

தம் மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தில் பவுல் கொரிந்துவிலிருந்து இதை எழுதினான். அங்கிருந்து எருசலேமுக்குப் போன வேளையில், உண்டான கலகத்தில் பவுல் காக்கப்பட்டு, பின்பு ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டான்.

பவுல் கிரேக்க பாஷையில் இதை எழுதினான். லத்தீன், ரோமாபுரியில் உத்தியோகஸ்தருக்கடுத்த பாஷையாயிருந்தும், கிரேக்க ஜனங்களுக்குள் அதிகமாய் வழங்கிற்று.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி.57

மூன்றாவது மிஷனரிப் பயணத்தின்போது இது எழுதப்பட்டது.

புத்தகப் பகுப்பு :

1	முகவுரை	(1:1 - 1:15)
2	நீதிமானாக்கப்படுதலின் அவசியம்	(1:16 - 3:20)
3	நீதிமானாக்கப்படுதல் விசுவாசமார்க்கத்தால் மட்டும்	(3:21 - 4:25)
4	நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்குரிய பதவிகள்	(5:1 - 8:39)
5	நீதிமானாக்கப்படுதல் - இஸ்ரவேலரைப் பொருத்தமட்டில்	(9:1 - 11:36)

6 [illegible] - [illegible]
[illegible] ([illegible] - [illegible])

7 [illegible] ([illegible] - [illegible])

[illegible] 10 [illegible], 4,33 [illegible]. 38 [illegible].

கொரிந்து

கிரேக்க தேசத்திலுள்ள பிரதான பட்டணம். கி.மு. 46ல் அகுஸ்து ராயன் (Augustus Caesar) அதைத் திரும்பக் கட்டி எழுப்பி, அகாயா நாட்டின் தலைநகரமாக்கினான்.

கி.பி. 50-ல் பவுல் தன் இரண்டாம் பிரயாணத்தில். மக்கெதோனியாவிலிருந்து கொரிந்துவுக்குப் போய், யூதராகிய ஆக்கில்லா, பிரிஸ்கில்லா என்பவர்களுடன் தங்கியிருந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான். அவர்கள் வீட்டில் ஒரு சபை உண்டாயிற்று. அந்நாட்களில் சீலாவும் தீமோத்தேயும் மக்கெதோனியாவிலிருந்து அவ்விடம் போனார்கள். (1 தெச. 3:6). பவுல் தேவ ஆலயத்தில் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் நாட்களில், யூதரால் விரோத முண்டானபோது, அத்தேசத்தானாகிய யுஸ்து என்பவனின் வீட்டிலிருந்து, பிரசங்கித்தான். அநேக ஜனங்களும், ஜெப ஆலயத் தலைவனான கிறிஸ்புவும், ஞானஸ்நானம் பெற்றார்கள். (1 கொரி. 1:14,15).

இராத்திரியில் கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி, அவனைத் தைரியப்படுத்தினார். அவன் ஒரு வருஷமும் ஆறுமாதமும் தங்கியிருந்து, உபதேசம் பண்ணினான். (அப். 18:9-11).

யூதர்கள் பவுலைப் பிடித்து, கல்லியோன் அதிபதி முன் கொண்டு போன போது, அவன் விசாரணைப் பண்ணாம லிருந்தான் .(அப். 18:12-17).

பவுல் அங்கே பதினெட்டு மாதங்களாய்த் தங்கி யிருந்து, ஊழியஞ் செய்தபின் புறப்பட்டுப் போனான்.

கொரிந்தியருக்கு எழுதின நிருபங்கள்

அநேக நாள் சென்றபின் பவுல் எபேசு பட்டணத்துக்குப் போனான். (அப். 18:1-19). அங்கேயிருக்கும் போது, பவுலுக்கு மனவருத்தம் உண்டாக்கத்தக்க காரியங்கள் கொரிந்து சபையில் நடைபெறுகிறதாக ஒரு கடிதம் வந்தது. (1 கொரி. 7:1) அந்தச் சபையைச் சேர்ந்தவர்கள் நாலு பகுதியாய்ப் பிரிந்து கொண்டார்கள். ஒரு பகுதியார் பவுலையும், இன்னொரு பகுதி பேதுருவையும், மூன்றாம் பகுதி அப்பொல்லோவையும் மீதியானவர்கள் கிறிஸ்துவையும் பின்பற்றுகிறவர்களாகச் சொல்லிக் கொண்டார்கள், என்றும் அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

அத்தோடு, சபையைச் சேர்ந்த சிலர் துன்மார்க்க நடையுள்ளவர்களென்றும், தேவ ஆராதனைதப்பிதமான விதமாய் நடத்தப்படுகிறதென்றும், உயிர்த்தெழுதலைப் பற்றித் தவறான கொள்கைகளிருக்கிறதென்றும், செய்தி கள் பவுலுக்குக் கிடைத்தது. இன்னும் இராப்போஜன ஆராதனை ஒழுங்காக நடத்தப்படவில்லையென்றும், இராப்போஜனத்தோடு விக்கிரகங்களுக்குப் படைத்தவை களைப் புசித்தார்களென்றும் பவுலுக்கு அறிவிக்கப்பட்டது.

உடனே, பவுல் இந்தத் தப்பிதங்களைக் கண்டித்து, குறைகளைத் திருத்தும் நோக்கத்தோடு, இந்த முதலாம் நிருபத்தை எழுதினான். அதில் தப்பிதங்களை வெளியாய்ச் சொல்லி, கொடுக்க வேண்டிய தண்டனைகளை விவரித்து, வேண்டிய புத்திமதிகளைக் கூறி, எல்லாவற்றையும்

தெளிவாய் வரைந்திருக்கிறான்.

இந்த நிருபத்தை அனுப்பினபின் அதில் சொல்லப் பட்டவைகளை கொரிந்து சபையார் எவ்விதமாய் ஏற்றுக் கொள்வார்களென்று பவுலுக்கு மனதில் குழப்ப முண்டா யிற்று. எழுதின நிருபத்துக்கு மறுமொழி கிடைப்பதற்கு முன்னால், பவுல் மக்கெதோனியாவுக்குப் போய், தீத்துவை அங்கே சந்தித்தான். அவனிடமிருந்து தன்னுடைய நிருபத்தை கொரிந்து சபையார் மரியாதையாய் ஏற்றுக் கொண்டார்களென்றும், பவுல் சொன்னபடி நடந்தார்க ளென்றும் கேள்விப்பட்டு, அவன் சந்தோஷப்பட்டு, இரண்டாம் நிருபத்தை மக்கெதோனியா விலிருந்து கி.பி. 57-ல் எழுதினான்.

இந்த நிருபத்திலும் சபையிலுள்ள தப்பிதங்கள் முற்றாய்ச் சரிப்பட வேண்டுமென்று திரும்பவும் எழுதி, தான் இப்படி எழுதுவது அவர்களில் தனக்கிருக்கிற அன்பினி மித்தமே என்றும், திரும்பத் தான் அவர்களிடம் போகுமுன் எல்லாம் திருத்தமாக வேண்டும் என்றும் சொல்லுகிறான்.

தான் அவர்களெல்லாரிலும் அன்பாயிருக்கிறதைக் காட்டும் நோக்கமாய், பாவஞ் செய்த அந்த மனுஷனுக்கு மன்னித்து, திரும்பவும் அவனைச் சபையில் சேர்த்துக் கொள்ளும்படிச் சொல்லுகிறான்.

மேலும், பவுல் தன்னுடைய அழைப்பைப் பற்றியும், அப்போஸ்தல அதிகாரத்தைப் பற்றியும் கூறிய பின், தேவ ஆசீர்வாதம் சொல்லி, இந்த நிருபத்தை முடிக்கின்றான்.

I கொரிந்தியர்

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 55

புத்தகப் பகுப்பு :

1.	முகவுரை	(1:1 - 1:9)
2	சபையில் பிரச்சனைகள்	(1:10 - 6:20)
3	விவாகத்தைப் பற்றி வழிகாட்டும் யோசனைகள்	(7:1 - 7:40)
4	நடைமுறை வாழ்க்கைக்கான அறிவுரைகள்	(8:1 - 11:1)
5	ஆராதனை தொடர்பான கட்டளைகள்	(11:2 - 11:34)
6	ஆவிக்குரிய வரங்கள்	(12:1 - 12:31)
7	அன்பே பெரியது	(13:1 - 13:13)
8	சபை நடவடிக்கை	(14:1 - 14:40)
9	உயிர்த்தெழுதல் தொடர்பான போதனைகள்	(15:1 - 15:58)
10	முடிவுரை - (நடைமுறை தகுதி)	(16:1 - 16:24)

இந்நிருபத்தில் 16 அதிகாரங்கள், 437 வசனங்கள், 9 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

௨ கொரிந்தியர்

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 55

புத்தகப் பகுப்பு :

1 பவுல் தனது அழைப்பையும்,
ஊழியங்களையும் பற்றி விவரித்தல் (1:1 - 7:16)

2 கொடுத்தலைப் பற்றிய போதனை (8:1 - 9:15)

3 பவுலின் அப்போஸ்தல பதவியைப்
பற்றிய தர்க்கம் (10:1 - 13:14)

இந்நிருபத்தில் 13 அதிகாரங்கள், 257 வசனங்கள், 7 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

கலாத்தியர்

சின்ன ஆசியாவின் ஒரு பகுதி. கி.மு. 278-ல் கலாத்தியர் என்னும் ஒரு ஜாதி கருங்கடலுக்கப்பாலிருந்து வந்து, இந்தப் பகுதியில் குடியேறினார்கள். ரோமருடைய அரசாட்சிக் காலத்தில் இவர்களுக்குச் சுயாதீனமிருந்தது. பிற்பாடு புதிய ஏற்பாட்டு நாட்களில், ரோமருடைய ஆளுகைக்குட்பட்டார்கள். இக்கோனியா, லீஸ்திரா, தெர்பை என்னும் பட்டணங்கள் இவர்களுக்குரியவை.

கலாத்தியருக்கு எழுதின நிருபம்

புதிய ஏற்பாட்டு நாட்களில் கலாத்தியா ரோமருடைய அரசாட்சிக்குக் கீழிருந்த ஒரு நாடு. தெர்பை, லீஸ்திரா, இக்கோனியா, பிரிகியா முதலிய பட்டணங்கள் இதைச் சேர்ந்தவைகள்.

பவுல் கி.பி. 45-48-ல் இவ்விடங்களில் பிரசங்கம் பண்ணினதால், சபைகள் ஏற்பட்டன. பின்பு, தன் இரண்டாம், மூன்றாம் சுவிசேஷப் பிரயாணங்களிலும் இந்தச் சபைகளைச் சந்தித்தான். (அப். 16:1-6; 18:23).

அங்கிருந்த கிறிஸ்தவர்கள் விக்கிரகாராதனைக்கார ராயிருந்து, சுவிசேஷத்தைக் கேட்டு, குணப்பட்டார்கள். யூதமார்க்க சடங்காசாரங்களைப் பற்றி, அறியாதிருந் தார்கள். சில யூத சமயத் தலைவர் அவர்களிடம் போய்,

இரட்சிக்கப் படுவதற்கு யூத மார்க்க ஆசாரங்களைக் கைக் கொள்ள வேண்டுமெனவே, அதையும் ஏற்றுக் கொண்டார்கள். அதனால் கிறிஸ்து மார்க்கத்தை யூதருடைய கட்டுப்பாடுகளிலிருந்து, விடுவிப்பதே பவுலுடைய நோக்கமாயிருந்தது.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 51க்கும் 53க்கும் நடுவில்

புத்தகப் பகுப்பு :

1 முகவுரை (1:1 - 1:9)

2 பவுல் தனது அப்போஸ்தல பதவியை வெளிப்படுத்துதல் (1:10 - 2:21)

3 விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுதல் (3:1 - 4:31)

4 நீதிமானாக்கப்படுதல் - அனுதின வாழ்க்கையில் (5:1 - 6:10)

5 முடிவுரை (6:11 - 6:18)

இந்நூலில் 6 அதிகாரங்கள், 149 வசனங்கள், 4 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

எபேசு

இது துருக்கி, ஆசியாவிலுள்ள ஓர் முக்கிய பட்டணம். கி.மு. 133 தொடங்கி, இது ரோம ஆதீனத்துக்குள்ளா யிருந்தது. அநேக விசேஷக் கட்டடங்களிருந்தன பெயர் பெற்ற தியானாள் (Diana) கோவில் கி.மு. 365-ல் கட்டப் பட்டு, உலகத்திலுள்ள அதிசயங்களில் ஒன்றாயிருந்தது. தியானாளைப் பூச்சக்கரம் சேவித்ததாகச் சொல்லி யுள்ளது. (அப். 19:27).

அநேகம் யூதரும் அங்கே இருந்தார்கள். கிறிஸ்து மார்க்கமும், ஆக்கில்லா, பிரிஸ்கில்லா என்பவர்களால் கொண்டு போகப்பட்டது. பவுல் இரண்டாம் பிரயாணத் திலே, அங்கே போய் சில நாட்கள் மாத்திரம் இருந்தான். (அப். 18:19-21) மூன்றாம் பிரயாணத்தில் இரண்டு வருஷம் தங்கியிருந்தான். (அப். 19:8-10) அநேக விரோதிகள் அவனை எதிர்த்து நின்றார்கள்.

"எபேசுவிலே துஷ்ட மிருகங்களுடனே போராடினேன்" என்கிறான். (1 கொரி. 15:32) பவுல் போனபின், தீமோத்தேயு அங்கே சுவிசேஷ ஊழியஞ் செய்தான்.

பின்பு, யோவான் அப்போஸ்தலன், அப்பகுதிகளி லிருந்த ஏழு சபைகளுக்குக் தலைவனாயிருந்தான். அதன்பின், இப்பட்டணம் கி.பி.14-ம் நூற்றாண்டில் துருக்கியரால் முற்றாய் பாழாக்கப்பட்டது.

கொலோசேயருக்கு எழுதின நிருபத்துக்கும், இதற்கும் முக்கிய ஒப்பனையுண்டு. பவுல், கொலோசேயர், பிலேமோன் நிருபங்களை எழுதிய பின், சபைகளுக்குப் பொதுவான நிருபம் ஒன்று எழுத விரும்பி, இதை

எழுதியதாகத் தெரிகிறது. இதில், "எபேசியருக்கென்று" குறித்திருக்கவில்லை என்று சொல்லுகிறார்கள்.

கிறிஸ்துவினால் சபைக்கு வரக்கூடிய மகிமையைக் கூறுவது சபைக்குள்ள கடமையென்றும், சபையானது ஐக்கியம், ஒற்றுமை, அன்பு, பரிசுத்தம், ஆகிய இவைகளில் வளர வேண்டும் என்றும் பரிசுத்த பவுல் வற்புறுத்தி எழுதியிருக்கிறான்.

எபேசியருக்கு எழுதின நிருபம்

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியில் காவலி லிருந்த நாட்களில் எழுதின நான்கு நிருபங்களில் ஒன்று இது. எபேசியருக்கெழுதின நிருபம் எனக் குறித்திருந்தும், ஆசியாவிலுள்ள மற்ற சபைகளுக்கென்றும் பவுல் எழுதினதாகத் தெரிகிறது.

பவுல் தன் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் எபேசுவுக்குப் போய், சில நாள் தங்கியிருந்து பிரசங்கித் தான். மறுபடி மூன்றாம் பிரயாணத்தில் அங்கே

போய், இரண்டு வருஷம் சபையாரோடு தங்கியிருந்து, சுவிசேஷ ஊழியம் செய்ததினால், அநேகர் குணப்பட்டார் கள். அதினிமித்தம் தியானாள் கோவிலின் சொரூபத்தை வெள்ளியினால் செய்து, விற்பனை செய்ததட்டாரின் தொழில் நஷ்டப்பட்டது. அப்பொழுது தெமேத்திரியு என்பவனும் அவனைச் சேர்ந்தவர்களும் கலகம் உண்டாக்கினதினிமித்தம், பவுல் அவ்விடத்தை விட்டுப் போக நேர்ந்தது. (1-ம் அதி.) கிருபையும், சமாதானமும் உண்டாவதாக என்று சொல்லி, பவுல் இந்த நிருபத்தைத் துவக்குகிறான்.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 60

புத்தகப் பகுப்பு :

1	முன்னுரை	(1:1, 2)
2	கிறிஸ்துவின் மகிமை	(1:3 - 1:14)
3	பவுலின் ஜெபம்	(1:15 - 1:23)
4	தேவனுடைய திட்டத்தை நோக்கிய படிகள்	(2:1 - 3:21)
5	தேவனுடைய நோக்கம் - நடைமுறை வாழ்க்கையில்	(4:1 - 6:20)
6	முடிவுரை	(6:21 - 6:24)

இந்நிருபத்தில் 6 அதிகாரங்கள், 155 வசனங்கள், 3 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

பிலிப்பி பட்டணம்

மக்கெதோனியாவின் பிலிப்பு என்பவன் இப்பட்டணத்தை கி.மு. 360-ல் கைப்பற்றி, சீர்ப்படுத்தி, அரணித்தான். பொற்சுரங்கங்கள் அங்கேயிருந்ததால், பொற்காசுகள் அதிகமாய் வழங்கிற்று.

கி.மு. 168-ல் ரோமர் இதைத் தங்கள் வசமாக்கினார்கள். கி.மு. 31-ல் நடந்த யுத்தத்தில், ஒக்றேவியன் (Octavian) என்பவன் அந்தோனி, கிளியோபத்திரா என்பவர்களைத் தோற்கடித்து, இப்பட்டணத்தைக் கைப்பற்றினான். அதன்பின் அது நாகரீகத்தில் பேர் பெற்றது. பிலிப்பி பட்டணவாசியின் உரிமை, மேன்மையாயிருந்தது. பவுலும் தன் நிருபத்தில், "பிலிப்பியரே!" என்று குறிக்கிறான். (பிலி. 4:15)

பவுல் அவ்விடம் போய், பிரசங்கித்த நாட்களில் கலகம் உண்டாகி, காவலில் போடப்பட்டு, விடுதலைப் பெற்று, புறப்பட்டுபோனபின், திரும்பவும் அங்கே போயிருந்ததாகத் தெரிகிறது. (அப். 20:1; 6:1 தீமோ. 1:3,4)

பிலிப்பியருக்கு எழுதின நிருபம்

ரோமாபுரியில் காவலிலிருந்த நாட்களில் இந்த நிருபத்தை எழுதினான். சிலர், அவன் எபேசுவில் காவலிலிருந்து எழுதினான் என்று எண்ணுகிறார்கள்.

பவுல் தனது இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் சீலாவோடு துரோவாவுக்குப் போயிருக்கும்போது, ஒரு தரிசனம் கண்டான். மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்து, தன்னை மக்கெதோனியாவுக்கு வந்து உதவி செய்யும்படிக் கேட்டதாக இருந்தது; உடனே புறப்பட்டு, பிலிப்பி பட்டணத்துக்கு வந்து, அங்கே சில நாட்கள் தங்கியிருந்தார்கள். (அப். 16:9-12).

அந்நாட்களில், லீதியாளும், சிறைச்சாலைக்காரனும் குணப்பட்டார்கள். ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டது. இதுவே ஐரோப்பாவில் முதல் முதல் உண்டான சபை.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 60

புத்தகப் பகுப்பு :

1	வாழ்த்துரை	(1:1, 2)
2	துதியும், ஜெபமும்	(1:3 - 1:11)
3	பவுலின் தனிப்பட்ட விஷயங்கள்	(1:12 - 1:26)
4	புத்திமதிகள்	(1:27 - 2:18)
5	சுவிசேஷத்தின் பங்காளிகள்	(2:19 - 2:30)
6	எச்சரிப்புகள்	(3:1 - 4:1)
7	இறுதியான புத்திமதிகளும் முடிவுரைகளும்	(4:2 - 4:23)

இந்நிருபத்தில் 4 அதிகாரங்கள், 104 வசனங்கள், 1 பழைய ஏற்பாட்டு மேற்கோள் உள்ளன.

கொலோசெயருக்கு எழுதின நிருபம்

கொலோசே சின்ன ஆசியாவிலுள்ள பிரிகியாவிலிருந்த ஒரு பூர்வீகப் பட்டணம்.

பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமுக்குப் போயிருந்த இப்பட்டணத்து ஜனங்களின் முயற்சியால் ஒரு சபை கொலோசேயில் ஏற்பட்டது (அப். 2:10). பவுல் கொலோசேக்குப் போனதாகத் தெரியவில்லை.

ரோமாபுரியில் பவுல் காவலிலிருக்கும் போது, இச்சபையில் ஊழியஞ் செய்து கொண்டிருந்த எப்பாப்ரோதீத்து அவனைக் காணப் போய், சபையாருக்குள்ளிருந்த தப்பிதமான கொள்கை, போதனை ஆகியவைகளைப்பற்றிச் சொன்னான். தப்பான போதனையுள்ள போதகர்கள் அங்கே போய், பொய்யான சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததாக அறிவித்தான். சிருஷ்டிப்பு வேலையிலும், மீட்பு விஷயத்திலும், தேவ தூதரும் பங்கெடுத்தார்களென்றும், அவர்களும் வணக்கத்துக்குப் பாத்திரமென்றும், அப்போதகர்கள் போதித்ததாகக் கூறினான். இதைக் கேட்டுப் பவுல் இந்த நிருபத்தை எழுதினான்.

இந்நிருபம் எபேசியர், பிலேமோன் என்பவர்களுக்கெழுதிய நிருபங்களோடு தீகிக்கு, ஒநேசிமு என்பவர்களின் கையில் கொடுத்து அனுப்பப்பட்டது.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 60

புத்தகப் பகுப்பு :

1 வாழ்த்துரை (1:1 - 1:14)

2 கிறிஸ்துவின் மேன்மை (1:15 - 1:23)

3 சபைக்கான பவுலின் பாடுகள் (1:24 - 2:7)

4 கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனமும் தவறான போதனைகளுக்கு எதிரான எச்சரிப்பும் (2:8 - 2:23)

5 பரிசுத்த ஜீவியத்திற்கான பிரமாணங்கள் (3:1 - 4:6)

6 முடிவுரை (4:7 - 4:18)

இந்நிருபத்தில் 4 அதிகாரங்கள், 95 வசனங்கள் உள்ளன.

தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபம்

தெசலோனிக்கே பவுலுடைய நாட்களில் மக்கெதோனியாவின் தலைநகரம். தற்காலத்தில் அது துருக்கியைச் சேர்ந்த "சலோனிக்கா".

மகா அலெக்சாந்தரின் சகோதரியாகிய, "தெசலோனிக்கா" என்பவளின் பேர் இந்தப் பட்டணத்துக்கு கி.மு. 315-ல் கொடுக்கப்பட்டது, ரோமர் இந்தப் பட்டணத்தை மக்கேதோனியாயாவின் தலைநகரமாக்கினார்கள். அங்கே யூதருடைய ஜெப ஆலயம் இருந்ததினால், அநேக யூதர் இருந்தாகத் தெரிகிறது. (அப். 17:1)

விசுவாசியாத யூதர்கள் பவுலுக்கும் சீலாவுக்கும் விரோதமாய் அமளியுண்டாக்கி, யாசோனுடைய வீட்டை வளைந்து கொண்டார்கள். யாசோனும் மற்றவர்களும் ஜாமீன் கொடுத்து, பவுலையும், சீலாவையும் விடுதலை பண்ணி, பெரோயாவுக்கு அனுப்பி விட்டார்கள். (அப். 17:2-10)

பவுல் தெசலோனிக்கே சபைக்கு இரண்டு நிருபங்களை எழுதினான். அவன் எழுதின நிருபங்களெல்லாவற்றிலும் இதுவே முதலாவது எழுதப்பட்டது.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 51

புத்தகப் பகுப்பு :

1	வாழ்த்துரை	(1:1 - 1:9)
2	அப்போஸ்தல பதவியின் தர்க்கம்	(2:1 - 3:13)
3	சபைக்கான புத்திமதிகள்	(4:1 - 5:22)
4	முடிவுரை	(5:23 - 5:28)

இந்நிருபத்தில் 5 அதிகாரங்கள், 89 வசனங்கள் உள்ளன.

தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டாம் நிருபம்

முதலாம் நிருபம் எழுதி, சில மாதங்களின் பின், இதையும் கொரிந்துவிலிருந்து பவுல் எழுதினான்.

தெசலோனிக்கே சபையின் திருத்தத்திற்காக இன்னும் சில காரியங்களைக் குறித்து எழுத பவுல் ஏவப்பட்டான்.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 51

புத்தகப் பகுப்பு :

1 முன்னுரை (1:1 - 1:12)

2 உபதேசங்கள் (2:1 - 2:17)

3 கட்டளைகளும், முடிவுரையும் (3:1 - 3:18)

இந்நிருபத்தில் 3 அதிகாரங்கள், 47 வசனங்கள் உள்ளன.

தீமோத்தேயு

தீமோத்தேயு, லீஸ்திரா ஊரானாகிய ஒரு வாலிப கிறிஸ்தவன். (அப். 16:1). இவன் தாய் ஒரு யூத ஸ்திரீ, தகப்பன் கிரேக்கன். பவுல் தன்னுடைய முதலாம் பிரயாணத்தில் அங்கே போன வேளையில், இவர்களுடைய வீட்டில் தங்கியிருந்தான். அப்பொழுது இவனுக்கு வயது 16. சிறு வயது முதல் இவனுடைய பாட்டி லோவிசாளிடத்திலும், தாய் ஐனிக்கேயாளிடத்திலும் மார்க்க விஷயங்களில் போதிக்கப்பட்டவன். (IIதீமோ. 1:5) மூப்பராகிய சங்கத்தார் இவன்மேல் கைகளை வைத்து, இவனை தேவ ஊழியத்துக்கு ஒப்புக் கொடுத்தார்கள். (1 தீமோ. 4:14) இவனுடைய தகப்பன் கிரேக்கனாயிருந்தபடியால், யூதரைச் சம்மதமாக்கும்படி, பவுல் இவனுக்கு விருத்தசேதனம் பண்ணினான். (அப். 16:3)

பவுல், இவனை முதலாவது கொரிந்துவுக்கு அனுப்பினான். (1 கொரி. 4:17) பின்பு, எபேசு பட்டணம் போய், ஊழியஞ் செய்யும்படி ஒழுங்கு செய்தான். (1 தீமோ. 1:4) இவைகளைவிட, தீமோத்தேயு, ஆசியா, மக்கெதோனியா, கிரேக்கு முதலிய தேசங்களிலுள்ள சபைகளிலும் ஊழியஞ் செய்ததாக பவுல் எழுதின நிருபங்களிலிருந்து தெரிய வருகிறது. (ரோம. 16:21; II கொரி. 1:1; பிலி. 1:1;பிலே. 1) பவுல் தன் மரணம் சமீபிப்பதை அறிந்தபோது, தீமோத்தேயுவை வரவழைத்தான். (II தீமோ. 4:9-21).

தீமோத்தேயுவும் காவலில் வைக்கப்பட்டு, விடுதலை பெற்றதாகத் தெரிகிறது. (எபி. 13:23).

பிலிப்பி பட்டணத்துக்குப் பவுல் போன இரண்டு தடவைகளிலும், தீமோத்தேயு அவனோடு கூடப் போனான். (அப். 16:1 ; 17:14 ; II கொரி. 1:1) பின்பு, ஊழியத்தில் அவனுடைய உத்தம குணத்தை அறிந்திருக்கிறீர்களென்று பவுல் பிலிப்பியருக்கு எழுதுகிறான். (பிலி. 2:22).

பவுல் மரித்தபின், இவன் அநேக வருஷங்களாக எபேசு சபையில் கண்காணியாயிருந்து, கடைசியாக இரத்த சாட்சியாக மரித்தானென்று சொல்லப்படுகிறது.

தீமோத்தேயுக்கு எழுதின நிருபங்கள்

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டு நிருபங்களும், தீத்துவுக்கு எழுதிய நிருபமும் "மேய்ப்பருக்குரிய நிருபங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

முதல் நிருபத்தை, தீமோத்தேயு எபேசிவிலிருக்கும் போது, பவுல் மக்கெதோனியாவிலிருந்து எழுதுகிறான். (1 தீமோ. 1:3) ரோமாபுரியில் காவலிலிருந்து, பவுல் தன் கடைசி வார்த்தைகளை இரண்டாம் நிருபத்தில், தீமோத்தேயுவுக்கு எழுதினான்.

இம்மூன்று நிருபங்களிலும், முக்கியமாகச் சபையின் ஒழுங்குகளைப் பற்றியும், மூப்பருக்கும், போதகர்களுக்கும் இருக்க வேண்டிய தகுதி, இலட்சணங்கள் முதலியவைகளைப் பற்றியும் குறித்துள்ளன.

ஃ **தீமோத்தேயு**

தொடக்கத்தில் கிறிஸ்தவ சபைகளை அப்போஸ்தலர் நடத்தி வந்தார்கள். வர வர சபைகள் அதிகரித்த போது, அவைகளின் ஒழுங்கு, விசுவாசம், பிரமாணம், திருத்தம் ஆகியவைகளைக் கவனிக்கிறதற்கு வேறே ஆட்களை நியமிக்க வேண்டியதாயிற்று, அவர்களுக்கு வேண்டிய வெளிப்பாடுகளும் தேவையாயிற்று. அப்படிப்பட்ட போதனை, 1 தீமோத்தேயுவிலும், தீத்துவிலும் கொடுக்கப் பட்டுள்ளது. "தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்" என்று பவுல் சொல்லுகிறான். (1 தீமோ. 3:15)

I, II தீமோத்தேயுவும், தீத்துவும் போதக நிருபங்கள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. சபைப் போதகர்களுக்கு அவசியமான ஆலோசனைகள் இதில் பெரும்பான்மையாகக் காணப்படுவதே இதன் காரணம்.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 63க்கும் கி.பி. 65க்கும் இடையில்

புத்தகப் பகுப்பு :

1 முன்னுரையும், வாழ்த்துக்களும் (1:1,2)

2 கள்ளப் போதகர்களுக்கு எதிரான எச்சரிப்பு (1:3 - 1:11)

3 பவுலின் வாழ்க்கையில் வெளிப்பட்ட
தேவ கிருபை (1:12 - 1:17)

4 கட்டளையின் நோக்கம் (1:18 - 1:20)

5 சபை நடத்துவது தொடர்பான போதனை (2:1 - 3:16)

6 கள்ளப் போதகர்களுக்கு எதிராக
நடந்துகொள்ளும் விதம் (4:1 - 4:16)

7 சபை மக்களிடத்தில்
நடந்துகொள்ளும் விதம் (5:1 - 6:2)

8 இதர விஷயங்கள் (6:3 - 6:19)

9 முடிவுரை (6:20 - 6:22)

இந்நிருபத்தில் 6 அதிகாரங்கள், 113 வசனங்கள் உள்ளன.

பவுல், மனதை உருக்கத்தக்கதான இந்தக் கடிதத்தை, தான் இரத்த சாட்சியாக மரிக்கு முன், பிரியமுள்ள குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறான். (II தீமோ. 4:6-8).

இந்த நிருபமும், II பேதுரு, II, III யோவான் நிருபங்களும், கடைசி நாட்களில் உண்டாகும் சமய நிலைத் தவறுதல் காலத்தில், தேவனுடைய உண்மையான ஊழியர் நடந்து கொள்ள வேண்டிய மாதிரியையும், கொடுக்க வேண்டிய சாட்சிகளையும் குறிக்கின்றன

.அக்காலத்திலேயே, சபைகளின் பின் வாங்குதல் ஆரம்பித்துவிடாது. "ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும் என்னை விட்டு விலகினார்கள்" என்று பவுல் கூறுகிறான். (II, தீமோ. 1:15)

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 63க்கும் கி.பி. 65க்கும் இடையில்

புத்தகப் பகுப்பு :

1 முன்னுரை (1:1 - 1:4)

2 தீமோத்தேயுவைக் குறித்த பவுலின் கரிசனை (1:5 - 1:14)

3 பவுலின் நிலைமை (1:15 - 1:18)

4 தீமோத்தேயுவிற்கான சிறப்பான ஆலோசனைகள் (2:1 - 2:26)

5 கடைசிக் காலத்தைப் பற்றிய முன்னறிவிப்பு (3:1 - 3:17)

6 பவுலின் இறுதி வார்த்தைகள் (4:1 - 4:8)

7 முடிவுரையும், வாழ்த்துக்களும் (4:9 - 4:22)

இந்த நிருபத்தில் 4 அதிகாரங்கள், 83 வசனங்கள் உள்ளன.

தீத்து

தீத்து ஒரு கிரேக்க கிறிஸ்தவன். பவுல், இவன் உத்தம குமாரனென்கிறபடியால், இவனுடைய குணப்படுத்தலுக்குப் பவுல் காரணமாயிருக்கலாம். (தீத். 1:1)

புறமதத்திலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் அடைய வேண்டுமோ, என்பதைத் தீர்மானிக்கும்படி, பவுலும் மற்றவர்களும் அந்தியோகியாவிலிருந்து எருசலேமுக்குப் போகும்போது, தீத்துவும் அவர்களோடு கூடப் போனான். (அப். 15:2) அங்கே சபையார் கூடி, அப்படிச் செய்வது அவசிய மில்லையென்று தீர்மானித்துக் கொண்டார்கள். ஆகவே, தீத்துவும் விருத்தசேதனம் பெறவில்லை. (கலா. 2:1-3)

இதன்பின், கொரிந்து சபையிலிருந்த குறைகளைச் சரிபடுத்தும்படி பவுல் இவனை அனுப்பினான். (II கொரி. 7:13) தீத்து கொரிந்துவுக்குப் போய், திரும்பி வரத்தாமதித்ததினால், பவுல் துரோவா பட்டணத்திலிருந்து மக்கெதோனியாவுக்குப் போய், அங்கே அவனைச் சந்தித்து, கொரிந்துச் சபையின் செய்திகளைக் கேட்டறிந்து, சந்தோஷப்பட்டான். (II கொரி. 7:6-7)

கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தை, பவுல் தீத்து கையில் கொடுத்தனுப்பினான். (II கொரி. 8:16-18) கிரேத்தாவுக்குப் போன சமயத்தில், பவுல் தீத்துவை அங்குள்ள குறைவுகளை நிவர்த்தி செய்யும்படி விட்டுப் போனான். (தீத். 1:5) பின்பு, இவைகளைப் பற்றி ஒரு நிருபம் எழுதினான். (தீத். 1:6; 3:11) பவுல் இரண்டாம் முறை காவலில் வைக்கப்பட்டபோது, இவனும் அவனோடு கூட இருந்தான்.

பின்பு, இவன் தல்மாத்தியா நாட்டிற்குப் போயிருந்தான். (II தீமோ. 4:10)

தீத்து, பவுலின் விசேஷ நம்பிக்கையுள்ள ஒரு உதவிக்காரன். (IIகொரி. 8:23).

பவுல் மரித்தபின், தீத்து கிரேத்தா சபையின் கண்காணியாயிருந்து, அங்கே மரித்ததாகத் தெரிகிறது.

தீத்துவுக்கு எழுதின நிருபம்

இரண்டாம் முறைக் காவலில் வைக்கப்படுமுன், பவுல் மக்கெதோனியாவுக்குப் பிரயாணமாய்ப் போகும்போது, நிக்கபோலியாவிலிருந்து கி.பி .67-ல் இந்த நிருபத்தை கிரேத்தா தீவிலிருந்த தீத்துவுக்கு எழுதினான். இதில் அநேக புத்திமதிகள் கொடுக்கப்பட்டன. அவையாவன:-

மூப்பரில் காணப்பட வேண்டிய இலட்சணங்கள், கிரேத்தா தீவின் பொய்ப் பிரசங்கிமார், கிறிஸ்தவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், கிறிஸ்தவ போதனை, எச்சரிப்புகள் என்பவைகளே.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 63க்கும் கி.பி. 65க்கும் இடையில்

புத்தகப் பகுப்பு :

1	வாழ்த்துரை	(1:1 - 1:4)
2	மூப்பர்களைப் பற்றிய போதனை	(1:5 - 1:9)
3	தவறான போதகர்களைப் பற்றிய எச்சரிக்கை	(1:10 - 1:16)
4	சபையைப் பற்றிய போதனை	(2:1 - 2:15)
5	விசுவாசிகளின் பொறுப்புகள்	(3:1 - 3:8)
6	ஆவிக்குரிய கடமைகள்	(3:9 - 3:11)
7	முடிவுரை	(3:12 - 3:15)

இந்நிருபத்தில் 3 அதிகாரங்கள், 46 வசனங்கள் உள்ளன.

பிலேமோனுக்கு எழுதின நிருபம்

பிலேமோன் கொலோசே பட்டணத்துக் கிறிஸ்தவன். பவுல் இவனைக் குணப்படுத்தியிருக்கலாம்.

இவன் காணி, பூமியுள்ள செல்வாக்கானவன், அவனுடைய வீட்டில் சபை கூடினதாகத் தெரிகிறது. ஒநேசிமு பிலேமோனின் அடிமை. அவன் தன் எஜமானுடைய பணத்தைக் களவெடுத்துக் கொண்டு, ரோமாபுரிக்குப் போனான். பவுல் அங்கே காவலில் இருக்கும்போது, ஒநேசிமு பவுலைக் கண்டுபிடித்து, அவனிடம் போயிருந்த போது, கிறிஸ்தவனானான்.

பவுல் அவனைத் தனக்கு உதவியாக வைத்திருக்க விரும்பியும், அது சரியல்ல என்றெண்ணி, ஒரு நிருபம் எழுதி, ஒநேசிமு மூலம் பிலேமோனுக்கு அனுப்பினான். அதில், அவனை ஒரு அடிமை போலல்ல ; ஒரு சகோதரன் போல் ஏற்றுக்கொள்ளும் படி கேட்கிறான்.

இந்த நிருபம் ஒன்றே, பவுல் தனி ஆளுக்கெழுதின வைகளில் மீந்திருந்தது. இதில் ஒநேசிமு எடுத்த பணத்துக்கு பவுல், தான் உத்தரவாதியென்று, "அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும்" என்கிறான். (பிலே 18)

ஒநேசிமுவை விடுதலைப் பண்ணுமென்றெழுதாமல், அவனைச் சகோதரனைப் போல ஏற்றுக் கொள்ளும் என்றே பவுல் கேட்கிறான்.

இரட்சிப்பின் விதை, இந்திருபத்தில் காணப்படுகிறது. ஒநேசிமு, தான் களவெடுத்த பணத்தைக் கொடுக்க இயலாதிருக்கையில், பவுல் அதை ஏற்றுக்கொண்டது, அவன் விடுதலை பெறுவதற்கு ஏற்றதாயிருந்தது.

அவ்விதமே, பாவியாகிய மனுஷனின் பாவக் கடனைக் கிறிஸ்து கொடுத்துத் தீர்த்ததால், அவன் விடுதலை பெறக்கூடும்.

ஒநேசிமு பின்பு பெரோயா சபையின் தலைவனாயிருந்தானெனச் சொல்லப்படுகிறது.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 60

புத்தகப் பகுப்பு :

1 வாழ்த்துரை (வ 1 - 3)

2 நன்றியும் ஜெபமும் (வ 4 - 7)

3 ஒநேசிமுவிற்கான பரிந்துரை (வ 8 - 21)

4 வாழ்த்தும் ஆசீர்வாதமும் (வ 22 - 25)

இந்நிருபத்தில் ஒரு அதிகாரம் கொண்ட 25 வசனங்கள் உள்ளன.

எபிரெயருக்கு எழுதின நிருபம்

ஆக்கியோன் - இது யாரால் எழுதப்பட்டதென்று குறிக்கப்படவில்லை. பவுல், லூக்கா, அப்பொல்லோ, பர்னபா என்பவர்களில் ஒருவன் எழுதியிருப்பானென்பது உத்தேசம். எழுதின காலமும் நிச்சயிக்கக்கூடாதது. ஆனால், எருசலேமின் அழிவைப் பற்றிக் குறித்திராத தினால், கி.பி. 70க்கு முன் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இதன் நோக்கம் வேதாகமத்தில் மற்ற எந்தப் பகுதி களிலும் பார்க்க, கிரியையினால் இரட்சிப்படையலா மென்ற லேவியரின் பிரமாணத்தை, யூதக் கிறிஸ்தவர்கள் முற் றாய் விட்டுவிட வேண்டுமென்பதே, இயேசு கிறிஸ்துவின் பிராயச் சித்தப்பலியின் மேல் விசுவாசம் வைப்பதினா லேயே, இரட்சிப்பு வருமென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவர்களாயிருந்த இந்த யூதர், இயேசு கிறிஸ்து வில் நம்பிக்கை வைத்தும், மோசேயின் பிரமாணத் தையும் கைக்கொள்ள வேண்டுமென்று எண்ணினார்கள். விசுவாசிகளாயிருந்த யூதர் நியாயப் பிரமாணத்துக்காக வைராக்கியமாயிருந்த காரியம், அப்போஸ்தலர் நாட்களி லேயே தொடங்கிற்று, யாக்கோபு அதைக் குறித்துப் பவுலுக்குச் சொன்னான். (அப். 21: 20 - 21)

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல் என்று பொதுவாக நம்பப்படுகிறது

காலம் : கி.பி. 70க்கு முன்

புத்தகப் பகுப்பு :

1. முன்னுரை தேவனுடைய மேன்மையும் இறுதியுமான வெளிப்பாடு (1:1 - 1:4)
2. இயேசுகிறிஸ்துவின் மேன்மை (1:5 - 7:28)
3. கிறிஸ்துவின் ஊழியம் (பழைய ஏற்பாட்டு ஆசாரியனோடு உள்ள தொடர்பில்) (8:1 - 10:39)
4. விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டியதின் அவசியம் (11:1 - 12:29)
5. முடிவுரை (13:1-13:25)

இந்நிருபத்தில் 13 அதிகாரங்கள், 303 வசனங்கள், 28 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

யாக்கோபு எழுதின பொதுவான நிருபம்

யாக்கோபு இயேசுவின் சகோதரரில் ஒருவன். அவர் மேசியா என்பதை இவன் ஏற்றுக் கொள்ளாதிருந்தும், அவர் உயிர்த்தெழுந்தபின் விசுவாசியாகி, கிறிஸ்தவ மார்க்கத்தைத் தாபரித்து, எருசலேம் சபைக்குத் தலைவனாயிருந்தான். (அப். 21:17,18; கலா. 1:19). கடைசியாக இரத்தச் சாட்சியாக மரித்தானென்று சொல்லப் படுகிறது.

இந்த நிருபம் குறித்த சபைக்கென்றல்ல, கிறிஸ்தவர்களுக்குப் பொதுவாய் எழுதப்பட்டு, பொதுவான நிருபம் எனப்படுகிறது. ஆனாலும், சிதறியிருந்த யூதக் கிறிஸ்தவர்களையே நோக்கியது. இவர்கள் விசுவாசியாத யூதர்களாலும், மற்றவர்களாலும் துன்புறுத்தப்பட்டார்கள். அப்படித் துன்புறுத்தல் வரும்போது, அது அவர்கள் விசுவாசத்தைச் சோதிக்க வருகிறதென்றறிந்து, பொறுமையோடு சகிக்க வேண்டுமென்று யாக்கோபு குறிக்கிறான்.

ஆசிரியர் : இயேசு கிறிஸ்துவின் சகோதரனாகிய யாக்கோபு

காலம் : கி.பி. 50

புத்தகப் பகுப்பு :

1. வாழ்த்துரை (1:1)
2. சோதனைகள் (1:2-1:18)
3. மெய் பக்தி (1:19-2:13)
4. மெய் விசுவாசம் (2:14-2:26)
5. மெய் வாழ்க்கை (3:1-3:12)
6. மெய் ஞானம் (3:13-3:18)
7. மெய் மனந்திரும்புதல் (4:1-4:12)
8. மெய் அடைக்கலம் (4:13-4:17)
9. மெய் நம்பிக்கை (5:1-5:11)
10. மெய் சாட்சி (5:12)
11. மெய் குணமாகுதல் (5:13-5:18)
12. மெய் ஊழியம் (5:19,20)

இந்நிருபத்தில் 5 அதிகாரங்கள், 108 வசனங்கள், 2 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

பேதுரு

பேதுரு என்றால் "கல்" என்று அர்த்தம். இவன் யோனாவின் மகன். அந்திரேயாவின் சகோதரன். யோவான் ஸ்நானகனின் சீஷனாயிருந்து, பின்பு இயேசுவின் சீஷனானான்.

முதலாவது, பெத்சாயிதாவில் மீன் பிடிகாரனாயிருந்து, பின்பு கப்பர்நகூமிலும் அந்தத் தொழில் செய்தான். (மத். 8:5, 14 ; யோவா. 1:44)

இயேசு அவனுக்குக் "கேபா" எனப் பெயரிட்டார். (யோவா. 1:42). அவன் பலவித பெலவீனமுள்ளவனும், நாணலைப் போல அசையும் சுபாவம் உள்ளவனாயிருந்தும், "நீ கேபா என்னப்படுவாய்" என்று கர்த்தர் சொன்னது, அவனில் தாம் உருவாக்கப் போகும் கல்லின் சுபாவத்தை வெளிப்படுத்துகிறது.

அவன் சிமியோன், சீமோன், சீமோன் பேதுரு, யோனாவின் மகனாகிய சீமோன் என்றும் அழைக்கப்பட்டான்.

கலிலேயாவில் ஊழியஞ் செய்த நாட்களிலேயே இயேசு அவனை அப்போஸ்தல ஊழியத்துக்கழைத்தார். (மத். 4:18,19)

பொதுவாய் இவனுடைய பெயர் அந்திரேயாவின் பெயரோடு சேர்த்துக் குறித்துள்ளது. (மத். 10:2).

பேதுரு அவசரமான குணமுள்ளவனும், அன்பு மாறாதவனும், முதன்மை தேடினவனும், வழக்கமாகப் பன்னிருவருக்காகப் பேசினவனுமாயிருந்தான்.

பிலிப்புச் செசரியாவில், இயேசு அவனுடைய மனதை அறியும்படி கேட்ட கேள்விக்கு மறு உத்தரவு கொடுத்தான். (மத். 16:13-17).

அவனும் யாக்கோபு, யோவான் என்பவர்களோடு, இயேசு மறுரூபமான வேளையில் கூட இருந்தான். (மத். 17:1-8)

தன் கால்களைக் கழுவாதபடி இயேசுவைத் தடை செய்யப் பார்த்தான். (யோவா. 13 : 6-8) இயேசுவைப் பிடித்தபோது, மல்குஸ் என்பவனின் வலது காதை வெட்டினான். (யோவா. 18:10)

இயேசு கடலின் மேல் நடந்த சமயத்தில், பேதுருவும் அப்படிச் செய்யத் துணிந்தான். (மத் 14:25-31)

இயேசு விசாரணை செய்யப்பட்ட தருணத்தில், பேதுரு அவரை மூன்று தரம் மறுதலித்தான். இயேசு இதைக் குறித்து அவனுக்கு முன்னறிவித்திருந்தார். (மத். 26:33-35; 69-75).

இயேசு உயிர்த்தெழுந்தபின்பு, பேதுரு அற்புதங்கள் செய்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான். பெந்தெகொஸ்தே நாளில் பலமான பிரசங்கம் செய்தான். (அப். 2:14-38).

ஏரோது, அகிரிப்பா, பேதுருவைக் காவலில் வைத்தபோது, தேவதூதனால் விடுவிக்கப்பட்டான். (அப். 12:1-17).

கடைசி நாட்களில் பேதுரு ரோமாபுரிக்குப் போன வேளையில், நேரோ ராயனால் சிலுவையிலறையப் பட்டான். பேதுருவின் வேண்டுதலின்படி, தலைகீழாய் சிலுவையிலறையப்பட்டான் என்று தெரிகிறது. கி.பி. 68.

மாற்கு தன் சுவிசேஷத்தை எழுதுவதற்குப் பேதுருவிடம் உதவி பெற்றான்.

பேதுரு இரண்டு நிருபங்கள் எழுதினான். மேலும் இவனைப் பற்றி வேதாகமத்தில் குறித்துள்ள சில சம்பவங்களாவன:-

இவனுடைய மாமியார் சுகமடைந்தது. (மத். 8:14) அனனியா, சப்பீராள் என்பவர்கள் இவனால் கண்டிக்கப் பட்டது. (அப். 5:1-11) கொர்நேலியு வீட்டில் இவன் செய்தவை. (அப். 10:34-48). இவனுக்குக் கிடைத்த தரிசனம். (அப். 10:11-16).

பேதுரு எழுதின பொதுவான முதலாம் நிருபம்

பேதுரு இந்நிருபத்தை ரோமாபுரியிலிருந்து எழுதினான். இது ஆசியாவில் சிதறியிருந்த யூதருக்கும் புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கும் எழுதப்பட்டது. அந்நாட்களில் நேரோ ராயன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினான். கி.பி. 64-67 கிறிஸ்தவர்கள் அக்கிரமக்காரரென்று சொல்லி, புறஜாதியார் அவர்களுக்கு விரோதமாய்ப் பேசினார்கள். (1 பேது. 2:12)

அவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும் உண்டாகும்படி, பேதுரு இந்நிருபத்தை வரைகிறான்.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய சீமோன் பேதுரு

காலம் : கி.பி. 67 - கி.பி. 68

புத்தகப் பகுப்பு:

1. வாழ்த்துரை (1:1,2)
2. துதி (1:3-1:12)
3. பரிசுத்தத்திற்கான அழைப்பு (1:13-2:12)
4. அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிதல் (2:3-3:7)
5. பல்வேறு பொறுப்புகளும், கடமைகளும் (3:8-5:11)
6. இந்நிருபத்தின் நோக்கமும் முடிவுரையும் (5:12-5:14)

இந்நிருபத்தில் 5 அதிகாரங்கள், 105 வசனங்கள், 5 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

பேதுரு எழுதின பொதுவான இரண்டாம் நிருபம்

முதலாம் நிருபம் எழுதினவர்களுக்கே பேதுரு இதையும் ரோமாபுரியிலிருந்து தான் மரிக்கிறதற்கு சமீபத்தில் எழுதினான். (II பேது. 3:1) "என் கூடாரத்தை விட்டுப் போவது சீக்கிரத்தில் நேரிடும்" என்கிறான் (II பேது. 1:13).

"சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையா யிருங்கள்" (II பேது. 1:10) இதுவே பேதுருவின் எச்சரிக்கை. இதற்கு இடையில்

பேதுருவின் முதலாம், இரண்டாம் நிருபங்களுக் கிடையிலுள்ள வித்தியாசம்

முதலாம் நிருபத்தில் நம்பிக்கை, இரண்டாவதில் அறிவு என்பவை முக்கிய விஷயங்கள்.

முதலாம் பேதுரு துன்புறுத்தல் அநுபவிக்கிற கிறிஸ்தவர்கள் இயேசு அடைந்த பாடுகளைத் தங்களுக்கு முன் மாதிரியாக வைக்க வேண்டுமென்பது.

இரண்டாவது விசுவாசிகள் பொய்ப் போதனைகளால் ஏமாற்றப்படாமல், இயேசு இரண்டாந்தரம் வருவதை எதிர்பார்த்து, அதற்கு ஆயத்தமாக வேண்டும்.

இவ்விரண்டு நிருபங்களிலும், ஜலப்பிரளயத்தைப் பற்றியவை, சிலபேர் மாத்திரம் இரட்சிப்படைவது, தேவனுடைய நீடிய பொறுமை, வேத வாக்கியங்களின் உண்மை ஆகியவைகளைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளன. (1 பேது. 3:20; II பேது. 2:5)

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய சீமோன் பேதுரு

காலம் : கி.பி. 67 - கி.பி. 68

புத்தகப் பகுப்பு:

1. முன்னுரை (1:1,2)

2. கிருபையில் வளருதல் (1:3-1:11)

3. சத்தியத்தின் மேலுள்ள ஆதாரம் (1:12-1:21)

4. கள்ளப் போதகருக்கு எதிரான எச்சரிப்பு (2:1-2:22)

5. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (3:1-3:18)

இந்நிருபத்தில் 3 அதிகாரங்கள், 61 வசனங்கள் உள்ளன.

அப்போஸ்தலனாகிய யோவான்

அப்போஸ்தலனாகிய யோவான் செபதேயுவின் மகன். யாக்கோபின் சகோதரன். (மாற். 1:19) இவனுடைய தாய் சலோமே இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரி. (மத். 27:56; மாற். 15:40)

செபதேயுவுக்கு கூலியாட்கள் இருந்தார்கள். (மாற். 1:20) சலோமே தன் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ் செய்தாள். (லூக். 8:3) இவைகளிலிருந்து அவர்கள் செல்வாக்குள்ளவர்கள் எனத் தெரிகிறது.

யோவான் ஸ்நானகன் சொன்னதைக் கேட்டு, இயேசுவுக்குப் பின் சென்ற சீஷர் இருவரில் இவனும் ஒருவன். (யோவா. 1:35-37).

யாக்கோபும், யோவானும் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கையில், இயேசு அவர்களை அழைத்தவுடனே, அவருக்குப் பின் சென்றார்கள். (மாற். 1:19-20) பின்பு, அவர்களை அப்போஸ்தலராக்கினார். (மத். 10:2)

இவ்விருவரும் இடி முழக்க மக்கள் என்று அர்த்தங் கொள்ளும் "பொவனெர்கேஸ்" என்று பெயரிடப் பட்டார்கள். (மாற். 3:17)

யோவான் எவ்வளவு காலம் அங்கே இருந்தான்? எப்பொழுது அவ்விடத்திலிருந்து போனான்? எங்கே போனான் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. ஆகிலும், அவன் எபேசு விலிருந்தானென்றும், அங்கிருந்து பத்மு தீவுக்கு அனுப்பப்பட்டானென்றும், தெரிகிறது. வெளிப்

படுத்தல் புஸ்தகமும், நிருபங்கள் மூன்றும் சுவிசேஷமும், யோவானால் எழுதப்பட்டுள்ளன.

பிற்காலத்தில், இவன் எபேசு சபையில் ஒரு மூப்பனா யிருந்து, ஊழியஞ் செய்ததாகச் சொல்லுகிறார்கள். மேலும், இவன் ரோமராயனாகிய திராஜன் (Trajan) (கி.பி. 98-117) அரசாண்ட போது, இருந்தானென்றும் தெரிகிறது. வயோதிப நாட்களில் இவனைக் கிறிஸ்தவ ஆராதனைக் குக் கொண்டு போனார்கள் என்றும், அத்தருணங்களில் இவன்; "என் சிறு பிள்ளைகளே ! ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்று சபையாருக்குச் சொல்வது வழக்கம் என்றும் சொல்லப்படுகிறது.

முதல் அப்போஸ்தலரில், யோவான் மாத்திரம் இயற்கை யான மரணடைந்ததாகத் தெரிய வருகிறது.

யோவான் எழுதிய முதலாம் நிருபம்

இந்நிருபத்தில் 21 தடவைகளில் இயேசு தேவனுடைய குமாரன் என்று குறித்துள்ளது. ஆகவே, இயேசுவின் தெய்வீகமும், தேவனுக்கும் இயேசுவிக்குமிடையிலுள்ள சம்பந்தமும் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய யோவான்

காலம் : கி.பி. 85

புத்தகப் பகுப்பு:

1. முன்னுரை (கிறிஸ்து பிறப்பின் மெய்மை) (1:1-1:4)
2. கிறிஸ்தவ வாழ்க்கையும் பிதா குமாரனோடு உள்ள ஐக்கியமும் (1:5-2:28)
3. கிறிஸ்தவ வாழ்க்கையும், தெய்வீக சுவிகார புத்திர அனுபவமும் (2:29-4:6)
4. கிறிஸ்தவ வாழ்க்கையும், கிறிஸ்துவுக்கு ஒப்பான வாழ்க்கையும் (4:7-5:12)
5. முடிவுரை (5:13-5:21)

இந்நிருபத்தில் 5 அதிகாரங்கள், 105 வசனங்கள் உள்ளன.

யோவான் எழுதின இரண்டாம் நிருபம்

இந்நிருபத்தை மூப்பனாகிய யோவான் எபேசுவிலிருந்து தெரிந்து கொள்ளப்பட்ட ஓர் அம்மாளுக்கும், அவளுடைய பிள்ளைகளுக்கும் எழுதுகிறான்.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய யோவான்

காலம் : கி.பி. 85க்கும் கி.பி. 95க்கும் இடையில்

புத்தகப் பகுப்பு

1. வாழ்த்துரை (வ 1-3)
2. பாராட்டு (வ 4)
3. ஆலோசனைகளும் எச்சரிப்புகளும் (வ 5-11)
4. முடிவுரை (வ 12,13)

இந்நிருபத்தில் ஒரு அதிகாரம் கொண்ட 13 வசனங்கள் உள்ளன.

யோவான் எழுதின மூன்றாம் நிருபம்

கிறிஸ்தவ சத்தியமே இந்த நிருபத்தின் முக்கிய விஷயம். தொடக்கதிலும், முடிவிலும் யோவான் இதைப் பற்றிக் குறிக்கிறான். (III யோவா. 3,12)

அக்காலத்தில் ஒரு சபைக்குத் தலைவனாயிருந்த தியாத்திரேப்பு என்பவனுக்கு யோவான் ஒரு நிருபம் எழுதியும், அவன் அதைக் கவனிக்கவில்லை. அது மாத்திர மல்ல; யோவான் அனுப்பின ஆட்களையும் அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களை ஆசரித்த வர்களையும் சபையிலிருந்து நீக்கிப்போட்டான்.

ஆனபடியால், அச்சபையிலிருந்த காயு என்பவனுக்கு இந்தக் கடிதத்தை யோவான், ஒரு அப்போஸ்தலன் போலல்ல, ஒரு மூப்பன் எழுதுவதுபோல் எழுதுகிறான். காயு என்று பெயருள்ள மூன்று பேர் புதிய ஏற்பாட்டில் காணப்படு கிறார்கள். ஆனால் இந்தக் காயு பவுல் குணப்படுத்தின வனும், அவன் வீட்டில் சபைகூடினது என்று குறிக்கப்பட்ட வனுமானவன். (11 கொரி. 1:14,15; ரோம. 16:23) யோவான் இவனை நான்குமுறை "பிரியமா னவளே" என்றழைக் கிறான். (III யோவா. 1,2,5,11)

அவன் உண்மையாய்த் தேவனைப் பின்பற்றுகிறவர் களுக்கு உதவி செய்து, அவர்களை ஏற்றுக் கொள்வதற் காக அவனை மெச்சிப் பேசுகிறான்.

தெமேத்திரியு என்பவனிடம் இக்கடிதத்தைக் கொடுத் தனுப்பினதாகத் தெரிகிறது. இவனைப் பற்றி யோவான் புகழ்ந்து எழுதுகிறான். "சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்ற வன்" (III யோவா. 12) என்பதில் சத்தியம், ஒரு ஆள்போல் வழங்கியுள்ளது.

இரண்டாம் நிருபத்தில், சமயநிலைத் தவறுதல் காலத்தில், ஒரு விசுவாசி நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பற்றியும், மூன்றாவதில், அப்படிப்பட்ட காலத்தில் விசுவாசிக்கு இருக்கும் உத்தரவாதத்தையும் குறிக்கிறான்.

இந்நிருபத்தில்:-

1. காயு திடப்படுத்தப்படுகிறான். (III யோவான். 5-6)

2. தியோத்திரேப்பு தண்டனைக்குட்படுத்தப்படுகிறான். (III யோவா. 9-10)

3. தெமேத்திரியு புகழப்படுகிறான். (III யோவா. 11-12)

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய யோவான்

காலம் : கி.பி. 85க்கும் 95க்கும் இடையில்

புத்தகப் பகுப்பு :

1. வாழ்த்துரை (வ 1,2)
2. பாராட்டு (வ 3-8)
3. கடிந்துகொள்ளுதல் (வ 9,10)
4. ஊக்குவித்தல் (வ 11)
5. முன்மாதிரி (வ 12)
6. முடிவுரை (வ 13-14)

இந்நிருபத்தில் ஒரு அதிகாரம் கொண்ட 14 வசனங்கள் உள்ளன.

யூதா எழுதின பொதுவான நிருபம்

இவன் இயேசுவின் சகோதரரில் ஒருவன். (மத். 13:55; மாற். 6:3) உயிர்த்தெழுந்த பின்னரே, இவன் இயேசு மேசியாவென்று அறிக்கையிட்டான்.

யூதா பொதுவான இரட்சிப்பைக் குறித்து எழுத யோசித்து, எழுதத் தொடங்கி, அந்நாட்களில் எழும்பின வேத புரட்டரைப் பற்றி எழுத ஏவப்பட்டான்.

ஆசிரியர் : இயேசு கிறிஸ்துவின் சகோதரனாகிய யூதா

காலம் : கி.பி. 65க்கும் கி.பி. 80க்கும் இடையில்

புத்தகப் பகுப்பு :

1. வாழ்த்துரை (வ 1,2)
2. நிருபத்தின் நோக்கம் (வ 3,4)
3. கள்ளப் போதகருக்கு எதிரான எச்சரிப்பு (வ 5-16)
4. விசுவாசிகளுக்கான புத்திமதி (வ 17-23)
5. முடிவுரை (வ 24,25)

இந்நிருபத்தில் ஒரு அதிகாரம் கொண்ட 25 வசனங்களும், 1 பழைய ஏற்பாட்டு மேற்கோளும் உள்ளன.

யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்

இப்புஸ்தகம், "வெளிப்படுத்தல்" என்பதிலிருந்து, இது ஒரு தீர்க்கதரிசன புஸ்தகம் எனத் தெரிகிறது.

தேவன் இதிலுள்ளவைகளை, இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்து, அவர் தமது தூதன் மூலம் யோவானுக்கு வெளிப்படுத்தி, அவன் எழுதுகிறான். (வெளி.1:1)

இந்த யோவான் இயேசுவுக்கு அன்பான சீஷனாயிருந்த அப்போஸ்தலனானவன்.

ரோம ராயனாகிய டொமிஷியன் (Domitian) என்பவன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தின நாட்களில், இந்த யோவான் பத்மு தீவுக்கு அனுப்பப்பட்டிருந்தான். அங்கே இந்தத் தரிசனம் அவனுக்குக் கிடைத்தது. அடுத்த வருஷம், கி.பி. 96-ல் அவன் விடுதலையாகி எபேசுவுக்குப் போயிருக்கும்போது, இப்புஸ்தகத்தை எழுதினான்.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய யோவான்

காலம் : கி.பி. 95

புத்தகப் பகுப்பு:

1. முன்னுரை (1:1-1:8)
2. இயேசுவின் நிலைமை (1:19,20)
3. ஏழு சபைகளுக்கான தூதுகள் (2:1-3:22)
4. பரலோக சிங்காசனம் (4:1-4:11)
5. ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்ட புத்தகம் (5:1-5:5)
6. அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியானவர் (5:6-5:14)
7. ஏழு முத்திரைகள் (6:1-8:1)
8. ஏழு எக்காளங்கள் (8:2-11:19)
9. பல்வேறு நிகழ்வுகள் (12:1-14:20)
10. ஏழு கோபகலசங்கள் (15:1-16:21)
11. மகா பாபிலோன் (17:1-19:5)
12. ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம் (19:6-19:10)
13. கிறிஸ்து திரும்பி வருதல் (19:11-19:21)
14. ஆயிர வருட அரசாட்சி (20:1-20:6)
15. சாத்தானின் முடிவு (20:7-20:10)
16. வெள்ளை சிங்காசனம் (20:11-20:15)
17. புதிய வானமும் புதிய பூமியும் (புதிய எருசலேம்) (21:1-22:5)

இப்புத்தகத்தில் 22 அதிகாரங்கள், 404 வசனங்கள் உள்ளன.

இரண்டு புத்தகங்களின் ஒப்புமை

ஆதியாகமத்தோடு வெளிப்படுத்தின விசேஷத்தை ஒத்துப் பார்க்கையில், பின்வரும் காரியங்கள் கவனிக்கப்படத் தக்கவை.

ஆதியாகமம்	வெளிப்படுத்தல்
பூமியும் வானமும் உண்டாயின.	புதிய வானமும் புதிய பூமியும் காணப்பட்டன.
பரதீசு இழந்தது.	பரதீசு கிடைத்தது.
மரங்களும்,	ஜீவ விருட்சமும்,
ஆறுகளும்	ஜீவ தண்ணீரும்
ஆதாமும்,	தேவாட்டுக் குட்டியும்,
ஏவாளும்	மணவாட்டியும்
சாத்தான் ஜெயித்தான்	சாத்தான் தோற்றான்.
வாசல் பூட்டப்பட்டது.	வாசல் திறக்கப்பட்டது.
மரணம் வந்தது	மரணம் இல்லாதது
இரவு இருந்தது	இரவு இல்லாதது

சொல் அறிமுகம் - பரிசேயர்

பாபிலோன் சிறையிருப்பைத் தொடர்ந்து தேவனுடைய வசனத்திற்கு முதலிடம் கொடுத்து வாழ்கிற ஒரு சிறிய கூட்ட யூதர்கள் உருவானார்கள். "ஹாசிடிம்" (உண்மையுள்ள மக்கள்) என்ற பெயரில் இவர்கள் முதலில் அறியப்பட்டனர். இவர்களிலிருந்துதான் பரிசேயர் என்ற குழு உருவானது. பரிசேயன் என்ற சொல்லுக்கு "வேறுபட்டவன்" என்று பொருள். இவர்கள் பாவத்திலிருந்தும், பொதுமக்களிலிருந்தும் வேறுபட்டவர்களாக தேவனுடைய வசனத்திற்கு எழுத்தின்படியே கீழ்ப்படிவதற்காகத் தங்களைத் தனிமைப் படுத்திக் கொண்டவர்கள். பரிசேயர்களின் வாழ்க்கை முறைகளின்படி சீகேம் பரிசேயர், இடறிவிழுகின்ற பரிசேயர். இரத்தம் சிந்துகின்ற பரிசேயர், கவசம் அணிகின்ற பரிசேயர், விசாரப்படுகிற பரிசேயர், பயப்படுகிற பரிசேயர், அன்புகூருகிற பரிசேயர் என்று ஏழு குழுக்களாக இவர்கள் பிரிக்கப்பட்டு இருந்தனர் என யுதர்களின் "தல்மூதுகள்" கூறுகின்றன. ஆவியின் அழிவின்மை, தூதர்களின் ஆள்த்தன்மை, மரித்தோரின் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை இவர்கள் விசுவாசிக்கிறவர்களாக இருந்தனர். மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கு உடையவர்களாக இவர்கள் விளங்கினர்.

சதுசேயர்

இவர்களுடைய துவக்கத்தைப் பற்றி அறுதியிட்டுக் கூறுவது இயலாது. எனினும் கி.மு. 144 முதல் இவர்களை வரலாற்றில் காணலாம். பழைய ஏற்பாட்டு ஆசாரியனாக இருந்த 'சாதுக்' என்பவனின் பரம்பரையில் வந்தவர்கள் இவர்கள். இவர்களில் பெரும்பகுதியினர் செல்வந்தர்களும் ஆசாரிய குடும்பத்தைச் சார்ந்தவர்களுமாய் இருந்தனர். அரசியல் துறையில் இவர்களின் செல்வாக்கு தாக்கம் மிக அதிகமாக இருந்தது. உயிர்த்தெழுதல், தூதர்கள், பிசாசுகள், நியாயத்தீர்ப்பு, பாரம்பரியங்கள் ஆகியவற்றில் இவர்கள் நம்பிக்கையில்லாதவர்களாய் இருந்தனர். கி.பி.70க்கு பின் இவர்களைப் பற்றிய எந்தவித குறிப்பும் வரலாற்றில் கிடைக்கவில்லை.

செலோத்தியர் (தீவிரவாதிகள்)

யூத சட்டங்களிலும் கர்த்தருடைய பணிகளிலும் அதிக தீவிரமும், வைராக்கியமும் உள்ளவர்களாய் இவர்கள் இருந்தனர். ரோமப் பேரரசைக் கவிழ்த்துவிட்டு தாவீதின் சிங்காசனத்தை மீண்டும் ஸ்தாபிப்பதற்காகத் தொடர்ச்சி யான புரட்சிகளையும் போர்களையும் நடத்திக் கொண்டி ருந்தவர்கள் இவர்கள், இவர்கள் எப்பொழுதுமே ரோம பேரரசிற்கு சிம்ம சொப்பனமாக விளங்கினர். விருத்த சேதனமற்ற புறஜாதியாருக்கு தேவனுடைய மக்களான இஸ்ரவேலரை ஆட்சிசெய்ய யாதொரு உரிமையும் இல்லை என்று இவர்கள் ஆணித்தரமாக நம்பியிருந்தது மட்டுமல்ல. அதையே மக்களுக்குப் போதித்தும் வந்தனர்.

சமாரியர்

கி.மு. 722ல் சமாரியாவின் வீழ்ச்சிக்குப்பின் அசீரிய சிறையிருப்பிற்குக் கொண்டு செல்லப்பட்ட இஸ்ரவேலருக்குப் பதிலாக சமாரியாவில் குடியேற்றப்பட்டவர்களே இவர்கள். புறஜாதியாரும் அங்கே சமாரியாவில் எஞ்சியிருந்த இஸ்ரவேலரும் கலப்பு விவாகம் செய்து கொண்டதின் விளைவாக உருவான மக்கள் கூட்டமே சமாரியர். யூதர்கள் இவர்களை தேவனுடைய ஜனமாக அங்கீகரிக்கவோ அல்லது இவர்களோடு எவ்விதத் தொடர்புமோ வைத்திருக்கவில்லை. பழைய ஏற்பாட்டின் முதல் 5 புத்தகங்களை மட்டும் தேவ வசனமாக ஏற்றுக் கொண்டிருந்த இவர்கள் "கெர்சிம்" மலையில் தேவாலயத்தைக் கட்டி ஆராதனை செய்து வந்தனர். யூதர்கள் எருசலேமில் ஆலயம் கட்டி ஆராதித்து வந்தனர். யூதர்களால் வெறுக்கப்பட்ட ஒரு கூட்டமே சமாரியர்.

எப்பிக்கூரியர்

கி.மு. 341 முதல் கி.மு. 270 வரை அத்தேனே பட்டணத்தில் வாழ்ந்திருந்த ஒரு தத்துவ ஞானியைப் பின்பற்றியவர்களே இவர்கள். "எப்பிகூரல்" (இன்பம் அனுபவிப்பதே சொர்க்கம்) என்பதே இவர்களது தத்துவம். பூமிக்குரிய வாழ்க்கைக்கும் வாழ்க்கையின் சுகபோகங்களுக்கும் அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து, தேவனைப் பின்னால் எறிந்துவிட்டு வாழ்ந்தவர்களே இவர்கள். புசிப்போம், குடிப்போம், இன்பமாயிருப்போம் என்ற கொள்கைக்கு முதலிடம் கொடுத்து வாழ்ந்தவர்கள் (அப். 17:18ல் இவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்)

ஸ்டோயிக்கர்

அத்தேனேயிலுள்ள "ஸ்டோயிக்கா" நகரத்தில் வாழ்ந் திருந்த "செனோ" (கி.மு. 335 முதல் கி.மு. 253 வரை) என்ற தத்துவ ஞானிதான் இந்த கொள்கையின் தோற்று விப்பாளர். பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் இயக்கு கின்ற சக்தியை "லோகாஸ்" என்றும், இயற்கையின் விதிமுறைகளுக்கேற்ப வாழ்ந்தால் மனுஷீகமான எல்லா துக்கங்களிலிருந்தும் விடுதலை அடையலாம் என்றும் இவர்கள் கற்பித்து வந்தனர் (அப். 17:18ல் இவர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது).

சனகெரீப் சங்கம்

பழைய ஏற்பாட்டு காலத்தில் யூதர்களின் சமூக, சமய மற்றும் சகல காரியங்களையும் இயக்கிக் கொண்டிருந்தது இந்த "சனகெரீப்" சங்கமே ஆகும். 71 அங்கத்தினர் களைக் கொண்ட இச்சங்கத்தில் ஒரு மகா பிரதான ஆசாரியனும், 24 ஆசாரியர்களும், 24 மூப்பர்களும், 22 நியாயசாஸ்திரிகளும் இருந்தனர். இயேசு கிறிஸ்து வின் காலத்தில் எருசலேமிலிருந்த தேவாலயத்தின் தென்புறத்தில் இருந்த ஒரு அறையில்தான் இவர்கள் கூடிவந்தனர். மரண தண்டனையைத் தவிர மற்ற எல்லாத் தண்டனைகளையும் வழங்கக்கூடிய அனுமதி இவர் களுக்கு இருந்தது. இச்சங்கத்தின் சார்பில் ஏதாவது தீர்மானம் எடுக்க வேண்டுமானால் குறைந்தது 23 பேராவது கூடியிருக்க வேண்டும். கி.பி. 70க்குப் பின் இச்சங்கம் தன் மதிப்பை இழந்துவிட்டது.

ஜெப ஆலயம் (சினகாக்)

பழைய ஏற்பாட்டில் ஜெப ஆலயங்களைப் பற்றிய எவ்வித குறிப்பும் இல்லை. பாபிலோன் சிறையிருப்பை தொடர்ந்து தான் ஜெப ஆலயங்கள் உருவாயின. 10 யூத ஆண்கள் இருந்தால் ஒரு ஜெப ஆலயத்தை ஆரம்பிக்க அனுமதி இருந்தது. புதிய ஏற்பாட்டில் ஜெப ஆலயங் களைப் பற்றி அதிகம் காணலாம். நியாயப்பிரமாணத் தைக் கற்பதற்கும் ஆராதனை செய்வதற்கும் கட்டப்பட்ட ஜெப ஆலயங்களில் பலிகள் செலுத்த அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை. ஜெப ஆலயங்களில் பெண்களுக் கென தனி இருப்பிடங்கள் திரைச்சீலைக்குப் பின்னால் ஒழுங்குபடுத்தப்பட்டு இருந்தன. இந்த ஜெப ஆலயங்கள் நீதிமன்றங்களாகவும் செயல்பட்டுவந்தன..

நியாய சாஸ்திரிகள்

மோசேயின் நியாயப்பிரமாணத்தை நகல் எடுப்பதற்காகவும், கற்பதற்காகவும், கற்பிப்பதற்காகவும், வியாக்கியானம் செய்வதற்காகவும் பிரித்தெடுக்கப்பட்டிருந்த ஒரு சிறப்பான கூட்டமே இவர்கள். இயேசு கிறிஸ்துவின் காலத்தில் நியாயசாஸ்திரிகள் மக்களிடையே சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர்.

அர்த்தமு தேவி (தியானாள்)

சின்ன ஆசியாவிலுள்ள எபேசு நகரத்தில் அர்த்தமு தேவியினுடைய கோவில் இருந்தது. ஜீயல்ஸிற்கும் லெக்டோவிற்கும் மகளாகப் பிறந்த தியானாள் தேவதையாக வணங்கப்பட்டு வந்தாள். அசாதாரண உயரமும், சுற்றளவும் கொண்ட 100 தூண்களின் மேல் இத்தேவதையின் கோவில் கட்டப்பட்டு இருந்தது.

அளவுகள்

1. நீள அளவுகள்

நீள அளவுகளை முழம், கையளவு, சாண், விரற்கடை அளவு என்று பழைய ஏற்பாடு பிரித்துக் கூறுகின்றனது.

முழம் - 0.5 மீட்டர்
சாண் - 23 சென்டி மீட்டர்
கையளவு - 8 சென்டி மீட்டர்

புதிய ஏற்பாட்டில் முழம் 45 சென்டி மீட்டராகக் கணக்கிடப்படுகிறது. (அப். 27:28)

2. தூர அளவுகள்

பழைய ஏற்பாட்டில் நீண்ட தூரம் என்பது சாதாரண அளவில் நிர்ணயிக்கப்படவில்லை. 3 நாள் தூரம் (ஆதி. 30:36), 7 நாள் தூரம் என்றுதான் குறிப்பிடப்படுகின்றன.

புதிய ஏற்பாட்டில் நாழிகை என்பது 202.50 மீட்டர் தூரமாகும். ஓய்வுநாள் தூரம் என்பது 2000 முழத்திற்குச் சற்றே குறைவானதாகும்.

3. முகத்தல் அளவுகள்

பாத்திரங்கள் மூலம் அளக்கின்ற அளவை இவை குறிக்கின்றன.

* 1 ஓமர் (ஹயர்) - *10 எப்பா (220 லிட்டர்)
*1 எப்பா - *10 ஓமர் (22 லிட்டர்)
*1 செயா - 6 கப் (7.3 லிட்டர்)
* 2 ஓபர் - 2 லிட்டர்
* 1 கப் - 1 லிட்டர்

4. திரவ அளவுகள்

* பெத்	-	22 லிட்டர்
* ஹின்	-	1/6 பெத் (4 லிட்டர்)
* லோக்	-	1/73 ஹின் (0.3 லிட்டர்)

5. எடை அளவுகள்

* 1 தாலந்து	-	60 மினா (மானே) 34 கி.கிராம்
* 1 மினா	-	50 சேக்கல் (0.6 கி.கிராம்)
* 1 சேக்கல்	-	2 பெக்கா (11.5 கிராம்)
* 1 பெக்கா	-	10 கேரா (5.5 கிராம்)
* 1 கேரா	-	0.6 கிராம்

எபிரெயர் கால அட்டவணை

	எபிரெயம்	ஆங்கிலம்
1.	ஆபிப் (நிசான்)	மார்ச்–ஏப்ரல்
2.	சீன்	ஏப்ரல் - மே
3.	சீவான்	மே - ஜூன்
4.	தம்மூஸ்	ஜூன் - ஜூலை
5.	அப்	ஜூலை - ஆகஸ்ட்
6.	ஏலூல்	ஆகஸ்ட் - செப்டம்பர்
7.	ஏதானிம்	செப்டம்பர் - அக்டோபர்
8.	பூல்	அக்டோபர் - நவம்பர்
9.	கிஸ்லேவ்	நவம்பர் - டிசம்பர்
10.	தோபேத்	டிசம்பர் - ஜனவரி
11.	செபாத்	ஜனவரி - பெப்ரவரி
12.	ஆதார்	பெப்ரவரி – மார்ச்

மூன்று வருடம் கூடும்போது 13–வது மாதமாக ஆதார் 2 என்றொரு மாதம் கூடுதலாக காலெண்டரில் சேர்க்கப் பட்டிருக்கிறது.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மாத அட்டவணை

	ஆங்கிலம்	தமிழ்
1.	ஜனவரி	மார்கழி - தை
2.	பிப்ரவரி	தை - மாசி
3.	மார்ச்	மாசி - பங்குனி
4.	ஏப்ரல்	பங்குனி - சித்திரை
5.	மே	சித்திரை - வைகாசி
6.	ஜூன்	வைகாசி - ஆனி
7.	ஜூலை	ஆனி - ஆடி
8.	ஆகஸ்ட்	ஆடி - ஆவணி
9.	செப்டம்பர்	ஆவணி - புரட்டாசி
10.	அக்டோபர்	புரட்டாசி - ஐப்பசி
11.	நவம்பர்	ஐப்பசி - கார்த்திகை
12.	டிசம்பர்	கார்த்திகை - மார்கழி

சத்தியமுத்தீ

பண்டிதர்கள், பொதுவாக தீயை மூன்றாக பிரித்து உள்ளனர்.

1. காருகபத்தியம் - தலைமுறை தலைமுறையாக நிரந்தரமாக உள்ளது.

2. தட்சிணாக்கினீயம் - முந்தின தீயிலிருந்து பற்றிக் கொண்டு, வீட்டிலே எரிய வேண்டியது.

3. ஆகவனீயம் - வீட்டிலிருந்து வெளியே எடுத்துச் சென்று எரிய வேண்டியது.

வேதாகமத்தை ஆராயும்போது, இந்த முத்தீ தேவனையும், வசனத்தையும், மனிதனையும், ரட்சிப்பையும், சபையையும், சீஷனையும், வருகையையும் குறிக்கின்றது.

காருகபத்தியம் பிதாவாகிய நித்திய தீயையும், தட்சிணாக்கினீயம் இயேசுவாகிய சுவிஷேசத்தீயையும், ஆகவனீயம் பரிசுத்தாவியானவரின் ஊழியத்தீயையும் குறிக்கின்றது.

இந்த முத்தீ நமது ஆவி, ஆத்துமா, சரீரத்தில்; தனிப்பட்ட, குடும்ப, ஊழிய வாழ்க்கையில், எரிய வேண்டிய இரகசியங்களைத் தொடர்ந்து படிக்கலாம். நீங்கள் எரிய விரும்புகிறீர்களா?

பழைய ஏற்பாடு வெளிச்சத்தில் ஆரம்பிக்கின்றது. (ஆதி. 1:3)

புதிய ஏற்பாடு வெளிச்சத்தில் முடிவடைகிறது. (வெளி.22:5)

வேதாகம கணிதத்தின் ஏழுபடிகள்

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனா யிருந்தது. (யோவா. 1:1)

1. தேவன் வார்த்தையாக இருக்கிறார். (யோவா 1:1; 1 யோவா 1:1)

2. தேவன் எல்லாவற்றையும் வார்த்தையாகிய கிறிஸ்துவைக் கொண்டு செயல்படுத்துகிறார். (எபி. 1:2,3; எபி 11:3)

3. வார்த்தையாகிய கிறிஸ்துவின் மூலம் ஆக்கல், காத்தல், அழித்தல் நடைபெறுகின்றது. (எபி. 1:3; 11 பேது. 3:5-7)

4. ஆக்கல், காத்தல், அழித்தல் தேவ ஞானத்தினால் சிருஷ்டிக்கப்படுகிறது. (நீதி. 3:19,20; நீதி 8:1, 27-29)

5. தேவ ஞானம் என்பது வேத கணிதமாயிருக்கிறது. (யோபு 28:12, 23-28)

6. வேத கணிதம் மூன்று சாட்சிகளின் வழியாக இயங்குகிறது (II கொரி. 13:1; யாத். 20:11)

7. மூன்று சாட்சிகள் என்பது மூன்றாக பிரிந்து ஏழாக பெருகுகின்றது. (ஆதி. 2:2,3; யோபு. 1:2,3)

தேவன் வார்த்தையாக இருக்கிறார்.அவர் வார்த்தையாகிய கிறிஸ்துவின்மூலம் எல்லாவற்றையும் செய்கிறார். அவர் மூலமாகவே ஆக்கல், காத்தல், அழித்தல் நடைபெறுகிறது. அவைகள் தேவ ஞானத்தில் செயல்படுகின்றது. தேவ ஞானம் என்பது வேத கணிதமாகும். அவை மூன்று சாட்சியின் வழியாக இயங்குகிறது. தேவ கணிதம் என்பது மூன்றாக பிரிந்து ஏழாக பெருகுவதாகும்.

நடமாடும் வேதாகமம் - ஏழு படிகள்

1. ஆத்துமாவில் வேதம்

(சங். 37:31, சங். 119:44,77)

அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை. (சங். 37:31).

2. ஆவியில் வேதம் (மல் 2:6,7; சங் 119:103,172)

சத்தியவேதம் அவன் வாயில் இருந்தது; அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை; அவன் என்னோடே சமாதானமும் யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்து, அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான். மல் 2:6

3. சரீரத்தில் வேதம்

(சங். 149:8, சங். 119:48,100).

அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். (சங். 149:8).

4. தனிப்பட்ட வாழ்க்கையில் வேதம்

(சங். 19:7, 119:92).

அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். (சங். 119:72).

5. குடும்ப வாழ்க்கையில் வேதம்

(சங் 78:5; 89:30-32).

அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார். (சங். 78:5).

6. வேலை வாழ்க்கையில் வேதம்

(ஆதி 39:9; சங் 119:36, 69)

இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத் தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான். (ஆதி 39:9, நீதி .62:23;)

7. ஊழிய வாழ்க்கையில் வேதம்

(சங் 94:13; 119:136; நீதி 6:23)

சிட்சித்து, உம்முடைய வேதத்தைக் கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்.94:13;)

நாம் நடமாடும் வேதமாக மாற இவ் ஏழு நிலை(படி)களிலும், வேதத்தைக் கைக்கொண்டு நாம் ஜீவிக்கும் பொழுது, எந்த சூழ்நிலையிலும் நம்முடைய நடைகளாகிய கிரியைகள் பிசகாமல், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நம்மை நிறுத்தும் என்பது உறுதி.

தேவசித்தம் - ஏழு படிகள்

1.தேவன் முன்னறிந்தார்

தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்போனவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார். (ரோ.8:29, ரோ. 11:2, 1 பேது 1:2)

2. தேவன் முன்குறித்தார்

(ரோ.8:29,30; எபே.1:6,12)

3. தேவன் அழைத்துமிருக்கிறார்

(ரோ.8:30; 1 பேது.1:15; 1 தெச 2:11)

4. தேவன் நீதிமான்களாக்கியுமிருக்கிறார்.

(ரோ 8:30; 1 கொரி 6:11; தீத் 3:6)

எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்து மிருக்கிறார்;

எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியு மிருக்கிறார்,

எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப் படுத்தியுமிருக்கிறார். (ரோ. 8:30).

5. தெரிந்து கொண்டார்

(ரோ. 8:33; வெளி. 17;14; 1 பேது.1:2)

தேவன் தெரிந்து கொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டு கிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்கு கிறவர். (ரோ. 8:33)

6. உண்மையுள்ளவர்கள்

(வெளி. 17:14; 1 தீமோ 3:11; 1 பேது. 5:12)

இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். என்றான். (வெளி. 17:14)

7. மகிமைப்படுத்தியுமிருக்கிறார்

(ரோ 8:30; 1 தெச.2:11; பிலி 4:19)

எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். (ரோ. 8:30)

தேவனுடைய சித்தத்தின்படி தேவன் நம்மை பரலோகத்திலே முன்னறிந்திருக்கிறார். தாயின் கர்ப்பத்தில் முன்குறித்திருக்கிறார். ஏற்ற வேளையிலே அழைத்துமிருக்கிறார். தமது குமாரனுடைய இரத்தத்தினாலே நம்முடைய குற்றங்களை நீக்கி நீதிமான்களாக்கியுமிருக்கிறார். தேவன் தம்முடைய வேலைக்காக தெரிந்து கொள்கிறார், அந்த வேலையில் உண்மையுள்ளவர் களை மகிமைபடுத்தியுமிருக்கிறார்.

ஆத்துமாவில் - ஏழு படிகள்

1. உணர்வுகள்

(1 இரா. 3:12; உபா. 32:28; எரே 4:22)

உன் வார்த்தைகளின்படி செய்தேன், ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை. (1 இரா. 3:12)

2. எண்ணங்கள் (நீதி 19:21; ஓசி 8:12, சக 11:5)

மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும். (நீதி.19:21)

3. நினைவுகள் (ஆதி 6:5; எரே 6:19; எசே 11:2)

மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்ற மெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, (ஆதி 6:5)

4. சிந்தனைகள்

(லூக். 5:22; மத் 12:25; லூக். 2:34)

இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிற தென்ன? (லூக். 5:22)

5. யோசனைகள் (எஸ்றா 7:27; எரே 9:17; 7:24)

எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தை அலங்கரிக்க, இப்படிப்பட்ட யோசனையை ராஜாவின் இருதயத்தில் அருளி, ராஜாவுக்கும் அவருடைய மந்திரிமார்களுக்கும் ராஜாவின் கைக்குள்ளான பலத்த எல்லா மகாப்பிரபுக்களுக்கும் முன்பாக எனக்குத் தயவு கிடைக்கப்பண்ணின எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். (எஸ்றா. 7:27).

6. சித்தம்

(II பேதுரு. 1:21; எஸ்றா. 5:17; யோசு 24:10)

தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (II பேது. 1:21)

7. இருதயம் (சங் 24:4; மத் 5:8; மத் 9:4)

கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக் கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே. (சங் 24:4)

தேவன் மனிதனின் ஆத்துமாவின் ஏழு வித நிலைகளை வைத்திருக்கிறார். அந்த ஆத்துமாவில் உணர்வுள்ளது. அவை எண்ணங்களாக மாறுகிறது, எண்ணங்கள் நினைவாக மாறுகிறது. நினைவுகள் சிந்தனைகளாக மாறுகிறது. சிந்தனைகள் யோசனையாக மாறுகிறது. யோசனைகள் சித்தமாக மாறுகிறது. சித்தம் முடிவு இருதயமாக மாறுகின்றது. ஆக ஏழு படிகள் ஆத்துமாவில் மறைந்திருக்கின்றதை வேதம் வெளிப்படுத்துகிறது.

ஆவியின் - ஏழுபடிகள்

1. வாய் (சங். 10:7; சங். 106:33; 1 சாமு. 1:12).

அவன் வாய் சபிப்பினாலும் கபடத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது; அவன் நாவின்கீழ் தீவினையும் அக்கிரமமும் உண்டு. (சங்.10:7).

2. நாவு. (நீதி 15:4; யோபு 27:3; 2 சாமு 23:2)

ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும். (நீதி 15:4)

3. மூச்சு (சங் 102:5; அப் 7:34; யாத் 2:24)

என் பெருமூச்சின் சத்தத்தினால், என் எலும்புகள் என் மாம்சத்தோடு ஒட்டிக்கொள்ளுகிறது. (சங் 102:5)

4. பேச்சு (1 கொரி 2:5; யோபு 19:18; யோசு 6:10)

என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற் குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தி னாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது. (1கொரி 2:5)

5. பிராணன் (சங். 31:10; யோபு 7:7; ஆதி 19:19)

என் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வருஷங்கள் தவிப்பினாலும் கழிந்து போயிற்று; என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்து போயிற்று. (சங் 31:10)

6. ஆவி (யோபு 7:11; மல் 2:16; ஆதி 45:27)

ஆகையால் நான் என் வாயை அடக்காமல், என் ஆவியின் வேதனையினால் பேசி, என் ஆத்துமத்தின் கசப்பினால் அங்கலாய்ப்பேன். (யோபு. 7:11)

7. எலும்பு (எசே. 37:5; பிர 11:5, ஆதி. 50: 25)

கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி, இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப் பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள். (எசே 37:5)

தேவன் மனிதனின், ஆவியில் ஏழுவித நிலைகளை வைத்திருக்கிறார். அந்த ஆவியில் வாயின் வார்த்தை களுள்ளது. அவை நான வாகவும், மூச்சாகவுமுள்ளது. மூச்சு பேச்சை வெளிப்படுத்துகிறது, பேச்சு பிராணனோடு, ஆவியோடும் எலும்புகளில் இருக்கிறது. வேதத்தில் ஆவியின் ஏழுபடிகளை குறித்து விளக்கமாக வருகின்றது.

1. அவயவங்கள்

(யோபு 18:13; யோபு 17:7; சங். 139:16)

அது அவன் அங்கத்தின் பலத்தைப் பட்சிக்கும்; பயங்கரமான மரணமே அவன் அவயவங்களைப் பட்சிக்கும். (யோபு 18:13).

2. கரங்கள் (ஏசா 29:23; மத். 15:2; மத் 17:22)

அவன் என் கரங்களின் செயலாகிய தன் பிள்ளை களை தன் நடுவிலே காணும்போது, என் நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவார்கள்; யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரிசுத்தப்படுத்தி, இஸ்ரவேலின் தேவனுக்குப் பயப்படுவார்கள். (ஏசா. 29:23)

3. கிரியைகள் (எபி. 2:7; லூக். 1:22; மத். 16:27)

அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும் அவனுடைய பாதங் களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான். (எபி. 2:7)

4. செய்கை (ரூத். 2:12; மத். 7:23; லூக். 1:22)

உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்த ருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான். (ரூத். 2:12)

5. நடத்தை

(1 பேது.1:18; யோவா. 10:3; 1 தீமோ 3:4)

உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், (1பேது. 1:18)

6. இரத்தம்

(ஆதி 9:4; மத் 16:17; எபி. 12:24).

மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டாம். (ஆதி 9:4)

7. மாமிசம் (சரீரம்)

(லேவி 17:14; யோபு 7:5; சங். 136:25)

சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது; இரத்தம் ஜீவனுக்குச் சமானம்; ஆகையால் எந்த மாம்சத்தின் இரத்தத்தையும் புசிக்கவேண்டாம்; சகல மாம்சத்தின் உயிரும் அதின் இரத்தந்தானே; அதைப் புசிக்கிற எவனும் அறுப்புண்டுபோவான் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன். (லேவி. 17:14)

தேவன் மனிதனின் சரீரத்தில் ஏழுவித நிலைகளை வைத்துள்ளார். அவை தலைமுதல் உள்ளங்கால் வரையுள்ள அவயவங்கள். அதிலிருந்து கரங்கள் அதிக கிரியைகளை வெளிப்படுத்துகின்றது. அவை செய்கை யாகவும், நடத்தையாகவும் வெளிப்படுகின்றது. அவை மனித இரத்தத்தின் மாமிச சுபாவமாக வெளிப்படுகின்றது. இவையே சரீரத்தின் ஏழுவித படிகளாகும்.

சத்திய தேவன்

1. பிதா சத்தியம்

(ஏசா. 65:16; யோவா. 7:28; 1 யோவா5:20)

அதினாலே பூமியிலே தன்னை ஆசீர்வதிக்கிறவன் சத்திய தேவனுக்குள் தன்னை ஆசீர்வதிப்பான்; பூமியிலே ஆணையிடுகிறவன் சத்திய தேவன் பேரில் ஆணையிடுவான்; முந்தின இடுக்கண்கள் மறக்கப்பட்டு, அவைகள் என் கண்களுக்கு மறைந்து போயின. (ஏசா.65:16).

2. குமாரன் சத்தியம்

(யோவா 14:6; 1 யோவா 5:20; மத்.22:16)

அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவா. 14:6)

3. பரிசுத்த ஆவியானவர் சத்தியம்

(யோவா 16:13; யோவா 14:17; 1 யோ 5:6)

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை, நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோவா. 16:13).

தேவன் ஒருவரேயென்று வேதம் தெளிவுபடுத்துகின்றது. தெய்வீகத்திற்கு, மூன்று சாட்சிகள் வருகிறது. அவையாவன பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு, பரிசுத்த ஆவியானவராகிய தேவன், இம்மூன்று சாட்சிகளுமே ஒரே தேவனைக் குறிக்கிறது.

சத்தியவேதம்

1. எழுத்துக்கள் சத்தியம்

(தானி 10:21; யோவா 7:15; ரோம 2:27)

சத்திய எழுத்திலே கண்டிருக்கிறதை நான் உனக்குத் தெரிவிப்பேன்; உங்கள் அதிபதியாகிய மிகாவேலைத் தவிர என்னோடேகூட அவர்களுக்கு விரோதமாய்ப் பலங் கொள்ளுகிற வேறொருவரும் இல்லை. (தானி.10:21)

2. வார்த்தைகள் சத்தியம்

(2 சாமு 7:28; மத் 4:4; மாற் 10:24)

இப்போதும் கர்த்தராகிய ஆண்டவரே, நீரே தேவன்; உம்முடைய வார்த்தைகள் சத்தியம்; தேவரீர் உமது அடியானுக்கு இந்த நல்விசேஷங்களை வாக்குத்தத்தம் பண்ணினீர். (2 சாமு 7:28).

3. வசனம் சமூலம் சத்தியம்

(யோவா17:17; சங் 119:160, 142)

உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்த மாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். (யோவா.17:17)

தேவன் சத்தியமாயிருக்கிறார். தேவனுடைய வேதத்தி லுள்ள எழுத்துக்கள் சத்தியமும், எழுத்துக்கள் சேர்ந்த வார்த்தைகள் சத்தியமும், வார்த்தைகள் சேர்ந்த வசனங்கள் சத்தியமுமாயிருக்கிறது.

கூட்டுதல், குறைத்தல், புரட்டுதல்

1. தேவ வசனத்தைக் கூட்டுதல்.

(ஆதி 2:17; ஆதி 3: 1,3)

ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றான். (ஆதி 3:3)

2. தேவ வசனத்தைக் குறைத்தல்

(ஆதி.2:16; ஆதி3:1,2)

ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து, நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். (ஆதி 3:2)

3.தேவ வசனத்தைப் புரட்டுதல்

(ஆதி 2:9,17; ஆதி 3:3)

ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். (ஆதி. 3:3)

ஆதி தாயாகிய ஏவாள் தேவ வசனத்தை கூட்டி, குறைத்து, புரட்டினாள். தேவ வசனத்தை கூட்டுதல், குறைத்தல், புரட்டுதல் என்பது தேவனுக்கு விரோதமான குற்றமாகும். வேத வசனத்தைக் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் கூட்டுவார் என்று வேதம் தெளிவாக கூறி நம்மை எச்சரிக்கிறது.

தேடுதலின் இரகசியங்கள்

1. தேவனைத் தேடுகிற உணர்வு

(சங்.14:2; சங். 53:2; ரோம. 3:11)

தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார். (சங். 14:2)

2. வேதத்தைத் தேடி வாசியுங்கள்

(ஏசா 34:16; யோவா 1:1; மத் 4:4)

கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். (ஏசா. 34:16)

3. தேடுகிறவர்களை அவர் கைவிடுகிறதில்லை

(சங் 9:10; சங் 22:26; சங் 34:10)

கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள். (சங் 9:10)

தேவனுடைய வார்த்தையிலே அவரை தேடி வாசிக்க வேண்டும். இவ்விதமாக அவரைத் தேடுகிறவர்களை தேவன் கைவிடுகிறதுமில்லை.

ஆராய்தலின் இரகசியங்கள்

1. கர்த்தர் ஆராய்ந்து அறிகின்றார். (சங்.139:1,2)

கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். (சங் 139:1)

2. வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் (யோவா 5:39; அப். 17:11)

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. (யோவா. 5:39)

3. ஆராய்ச்சி செய்வதினால் நற்குணசாலிகளாவோம். (அப் 17:11; 1 கொரி 2:15)

அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள். (அப். 17:11)

வேத வசனத்தை ஆராய்ந்து அறிய வேண்டும். கர்த்தர் மனிதனை ஆராய்ந்து அறிகின்றார். நாம் வேதத்தை ஆராய்ந்து அறியும் பொழுது தேவனை அறிந்து நற்குணசாலிகளாயிருப்போம்.

1. வேதத்தில் பிரியமாயிருக்க வேண்டும்
(சங். 1:1,2; சங். 119:40, 97).

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங். 1:2)

2. வேதத்தை தியானம் செய்ய வேண்டும்
(சங். 1:2; சங். 119:78, 99)

அகங்காரிகள் என்னைப் பொய்களினுல் கெடுக்கப் பார்த்த படியால் வெட்கப்பட்டுப் போவார்களாக. நானோ உமது கட்டளைகளைத் தியானிப்பேன். (சங். 119:78)

3. இருதயத்தில் அக்கினி (பாக்கியவான்)
(சங் 1:3; சங் 39:3; லூக். 24:32)

என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது; அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன். (சங் 39:3)

வேதத்தை பிரியமுள்ள இருதயத்தோடு தியானம் செய்து படிக்க வேண்டும். தியானம் இருதயத்தில் அக்கினியை மூளச் செய்யும். அக்கினி இருதயத்திலுள்ள தீமைகள்ள எரித்து நன்மையாக மாற்றும்.

வார்த்தை ஆராய்ச்சி - சந்தோஷம்

1. சாதாரண அர்த்தம் : நீ போய், உன் ஆகாரத்தைச் சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சரசத்தை மனமகிழ்ச்சியுடன் குடி; தேவன் உன் கிரியைகளை அங்கீகாரம் பண்ணியிருக்கிறார். பிர. 9:7

2. ஆவிக்குரிய அர்த்தம் : என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன். யோவா.15:11

3. இரகசிய அர்த்தம் : அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். லூக். 15:7

சந்தோஷம் என்ற வார்த்தைக்குள் மறைந்து காணப்படும் மூன்றுவித அர்த்தங்களை ஆராய்ந்து அறிய வேண்டும்.

1. சரீர சம்பந்தமான ஆகாரம் மனதிற்கு சந்தோஷத்தைத் தரும்.

2. இயேசு (வார்த்தை) இருதயத்தில் சந்தோஷத்தைத் தருகிறார்.

3. பாவியின் மனந்திரும்புதலினால் பரலோகத்திலே நித்திய சந்தோஷத்தை உண்டாக்குகின்றது.

வசன ஆராய்ச்சி

அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. (யோவா. 12:3)

1. மைய குறியீட்டு வார்த்தை : நளதம் (தைலம்)

2. மைய பொருள்கள் : அ. விலையேறப்பெற்ற
   ஆ. களங்கமில்லாத
   இ. பரிமளம்
   ஈ. கொண்டு வந்து
   உ. பூசி
   ஊ. துடைத்தாள்
   எ. நிறைந்தது.

3. மைய பாத்திரங்கள் : அ. மரியாள், தன், தலைமயிரால்
   ஆ. இயேசுவின், பாதங்கள், அவருடைய

ஒரு வசனத்தை திறக்க மைய குறியீட்டு வார்த்தை முக்கியம். நளதம் எப்படிப்பட்டது? அதனை எப்படி உபயோகிக்க வேண்டும்? என்பதனை மையபொருள் வெளிப்படுத்துகின்றது. மரியாள், இயேசு மைய பாத்திரங்கள், மரியாள் தைலம் பூசி இயேசுவின் மரண வாசனையை வெளிப்படுத்தினாள்.

அதிகார ஆராய்ச்சி

சங்கீதம் 16ம் அதிகாரம்

1. மைய வார்த்தை : சுதந்தரம் (3 முறை)
   5,5,6 ல் வசனங்கள்

2. மைய வசனம் : அ. ஆகையால் என் இருதயம் பூரித்தது
   ஆ. என் மகிமை களிகூர்ந்தது
   இ. என் மாம்சமும் நம்பிக்கை யோடே தங்கியிருக்கும்
   9ம் வசனம்

3. மைய செய்தி : சத்திய தேவனாகிய கர்த்தரே நம்முடைய சுதந்தரமுமா யிருக்கிறார்.

அதிகார ஆராய்ச்சியை மூன்று பிரிவாக செய்ய வேண்டும்.

1. பொருளுள்ள ஒரு மைய வார்த்தை மூன்றுமுறை வரும். 2. அதிகாரத்திலுள்ள ஒரு வசனம் மைய வசனமாகத் தெரிந்தெடுத்து அதனை மூன்று கருப்பொருளாக பிரிக்க வேண்டும். கண்டுபிடித்த மைய வார்த்தையை தேவனோடு இணைத்து, தியானித்து, 3. மைய செய்தியினை எழுத வேண்டும்.

சத்திய மனிதனின் - சத்திய ஆத்துமா

1. சத்தியத்தைத் தேடுகிற உணர்வு.

(எரே. 5:1,3; சங்.15:2)

நியாயஞ்செய்கிற மனுஷனைக் கண்டு பிடிப்பீர்களோ என்றும், சத்தியத்தைத் தேடுகிறவன் உண்டோ என்றும், எருசலேமின் தெருக்களிலே திரிந்துபார்த்து, விசாரித்து, அதின் வீதிகளிலே தேடுங்கள்; காண்பீர்களானால் அதற்கு மன்னிப்புத் தருவேன். (எரே. 5:1)

2. சத்தியத்தை தியானிக்கிற யோசனை

(ஏசா 38:18, சங்.119 : 97, 148)

பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது; குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தைத் தியானிப்பதில்லை. (ஏசா. 38:18)

3. சத்தியத்தை சிநேகிக்கிற இருதயம்

(சக 8:19, சங். 119: 97, 165)

உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன். நாள் முழுதும் அது என் தியானம். (சங் 119: 97).

சத்தியமாகிய தேவனைத் தேடுகின்ற உணர்வு, தியானிக்கின்ற யோசனை, சிநேகிக்கிற இருதயம் நமக்குத் தேவை. இவைகளை நாம் செய்யும் பொழுது நம்முடைய ஆத்துமா சத்திய ஆத்துமாவாகும்.

1. சத்திய வாய் (நீதி. 12:17,19 சங். 119:43)

சத்தியவாசகன் நீதியை வெளிப்படுத்துவான், பொய்ச் சாட்கிக்காரனோ வஞ்சகத்தை வெளிப்படுத்துவான். (நீதி. 12:17)

2. சத்திய நாவு (ஏசா. 59:3,4; சங். 15:2)

உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே. (சங்.15:2)

3. சத்திய வார்த்தை (நீதி. 22:20; அப். 26:25)

அதற்கு அவன்: கனம்பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன். (அப். 26:25).

சத்திய ஆவியை அடைய வாயிலே, நாவிலே சத்தியம் காணப்படவேண்டும். நாம் அனுதினமும் சத்திய வாசக னாக விளங்க வேண்டும். வாயின் வார்த்தைகள் சத்திய மாயிருக்க வேண்டும்.

சத்திய மனிதனின் - சத்திய சரீரம்

1. சத்திய கைகள் (ஏசா. 26:2; எபே. 4:15)

சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள். (ஏசா. 26:2)

2. சத்திய அரை (எபே. 6:14; ஏசா. 11:5)

சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்கவசத்தைத் தரித்தவர்களாயும், (எபே. 6:14)

3. சத்திய கால்கள்

(சங். 25:5,10; 3 யோவா. 1:4)

உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன். (சங். 25:5)

சத்திய வேத வசனங்களைக் கைக்கொண்டு நடக்கிற கைகள், கால்கள் நமக்கு வேண்டும். மேலும் சரீரத்தின் தீமைக்கு எதிர்த்து போராடி வாழ சத்தியத்தை அரையிலே கட்டிகொள்ள வேண்டும்.

தெய்வீகத்தின் இரகசியங்கள்

1. பிதாவாகிய தேவன்

(யோவா. 6:57; யாக். 1:17; யோ.17:25)

ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினது போலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். (யோவா. 6:57)

2. குமாரனாகிய தேவன்

(1 யோ. 4:15; லூக். 5:24; லூக் 18:37)

இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான். (1 யோ. 4:15)

3. பரிசுத்த ஆவியானவராகிய தேவன்

(எபி. 12:9; யோ. 14:16; எபி. 9:14)

அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்கிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டு மல்லவா? (எபி. 12:9)

தேவன் ஒருவரேயென்று வேதம் தெளிவுபடுத்து கின்றது. அந்த தேவனுடைய தெய்வீகத்திற்கு, மூன்று சாட்சிகள் உண்டு. அவையாவன பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு, பரிசுத்த ஆவியானவராகிய தேவன். இம்மூன்று சாட்சிகளுமே ஒரே தேவனையே குறிக்கிறது.

தேவதூதர்களின் இரகசியங்கள்

1. கேரூபீன்கள், சேராபீன்கள், நான்கு மிருக ஜீவன்கள் (ஏசா. 6:2; எசே. 10:1; வெளி 4:6)

சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைக ளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால் களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து, (ஏசா. 6:2)

2. இருபத்து நான்கு மூப்பர்கள் (வெளி. 4:10; வெளி 5:8; யாத். 19:7)

இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து; வெளி 4:10

3. ஆயிரமாயிரமான தேவதூதர்கள், பரமசேனை (வெளி. 5:11; எபி. 12:22; ஆதி 32:2)

பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்; அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிர மாகவுமிருந்தது. (வெளி. 5:11)

தேவதூதர்களைக் குறித்து வேதத்தில் மூன்று விதத்தில் கூறுகிறது. 1. கேரூபீன்கள், சேராபீன்கள், நான்கு மிருக ஜீவன்கள் என்றும், 2. இருபத்து நான்கு மூப்பர்கள் என்றும், 3. ஆயிரமாயிரமான தேவதூதர்கள், பரம சேனைகள் என்றும் இவையே தேவனுடைய தேவதூதர் களின் கூட்டமாக உள்ளது

பிசாசைக்குறித்த இரகசியங்கள்

1. வலுசர்ப்பம்

(எசே. 28:14; ஏசா 14:11-14; ஆதி 3:1)

நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்: அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய். (எசே. 28:14)

2. அந்திக் கிறிஸ்து

(1 யோவா 4:2; 1 தெச. 2:4; 1 யோவா 2:18)

தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. (1 யோவா. 4:2)

3. கள்ளத்தீர்க்கதரிசி

(மத் 7:15; வெளி. 19:20; வெளி. 20:10)

கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.(மத் 7:15)

பிசாசுவத்தைக் குறித்து மூன்றாக வேதம் கூறுகிறது. அவைகள் வலுசர்ப்பம் இவன் பிதாவாகிய தேவனுக்கு விரோதமாக செயல்படுகிறவன்.

அந்தக் கிறிஸ்து இவன் குமாரனாகிய தேவனுக்கு விரோதமாக செயல்படுகிறவன்.

கள்ளத்தீர்க்கதரிசி இவன் பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கு விரோதமாக செயல்படுகிறவன். ஆகவே தெய்வீகத்திற்கு விரோதமாக செயல்படுவதால் பிசாசு யென்றழைக்கப்படுகின்றன்.

மனிதனின் இரகசியங்கள்

1. மண்ணை எடுத்து மனிதனுடைய சரீரத்தை சிருஷ்டித்தார். (ஆதி. 2:7; லேவி. 17:11; நீதி. 5:11)

தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணி னினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். (ஆதி 2:7)

2. மண்ணில் தண்ணீரைக் கலந்து ஆத்துமாவைச் சிருஷ்டித்தார். (ஆதி 2:6; நீதி 20:5; ஏசா. 58:11).

அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியெல்லாம் நனைத்தது. (ஆதி 2:6)

3. மண் உருவத்தின் நாசியில் ஜீவசுவாசத்தை ஊதி மனிதனுடைய ஆவியைச் சிருஷ்டித்தார். (எரே. 18:4; ஆதி 2:7; எசே. 37: 9,10)

குயவன் வனைந்து கொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான். (எரே. 18:4)

தேவன் மனிதனை உண்டாக்குகையில் அவர்களை மண்ணாகிய (அக்கினி), தண்ணீராகிய (மூடுபனி) ஜீவசுவாசமாகிய (காற்று) இவைகளைக் கொண்டு மனிதனின் ஆவி, ஆத்துமா, சரீரம் உண்டாக்கப்பட்டது.

குற்றத்தின் இரகசியங்கள்

1. ஆதிப்பெற்றோரின் மீறுதல்

(ஓசி. 6:7; யோபு 31:33; ஆதி 3:2)

அவர்களோ ஆதாமைப்போல் உடன்படிக்கையை மீறி, அங்கே எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணி னார்கள். (ஓசி. 6:7)

2. ஆதி பெற்றோரின் அக்கிரமம்

(யோபு. 31:33; ஆதி 2:15; ஆதி. 3:2)

நான் ஆதாமைப்போல என் மீறுதல்களை மூடி, என் அக்கிரமத்தை என் மடியிலே ஒளித்துவைத்தேனோ? (யோபு 31:33)

3. ஆதி பெற்றோரின் பாவம்

(ஏசா. 43:27; ரோ 5:12; ஆதி 2:9)

உன் ஆதி தகப்பன் பாவஞ்செய்தான்; உனக்கு முன்னின்று பேசுகிறவர்களும் எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணினார்கள். (ஏசா. 43:27)

தேவன் மனிதனை உண்டாக்குகையில் அவனை குற்றமற்ற வனாக உண்டாக்கினார். ஆனால் பிசாசின் வார்த்தைக்கு (பொய்க்கு) உட்பட்டு மனிதன் குற்றமுள்ளவ னானான். ஆதி பெற்றோர் பாவம் மட்டும் செய்யவில்லை. அவர்கள் மீறுதல், அக்கிரமம், பாவம் மூன்றும் அவர்க ளுடைய ஆத்துமா, ஆவி, சரீரத்தில் உண்டானது. இவை மூன்றும் தான் குற்றமென்று வேதம் தெளிவுபடுத்துகிறது. (யாத் 34:7)

இயேசுவின் முதல் வருகையின் இரகசியங்கள்

1. இயேசுவின் பிறப்பிலே வார்த்தை இரத்தமாக மாறியது. (1 யோவா. 5:6; யோவா. 1:1,14; 1 தீமோ 3:16)

இயேசு கிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர். (1 யோவா: 5:6)

2. இயேசுவின் பிறப்பிலே வார்த்தை ஜலம், ஆத்துமாவாக மாறியது (1 யோவா 5:6; யோபு 14:9; மத் 20:34)

தண்ணீரின் வாசனையினால் அது துளிர்த்து, இளமரம் போலக் கிளைவிடும். (யோபு 14:9)

3. இயேசுவின் பிறப்பிலே வார்த்தை காற்றாக, ஆவியாக மாறியது.

(மத் 1:18; லூக். 1:35; யோவா 8:23)

இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. (மத் 1:18)

மனிதரின் குற்றத்தை நீக்க இரண்டாயிரம் வருடங் களுக்கு முன்னதாக தேவன் மனுஷ குமாரனை இப்பூமிக்கு அனுப்பினார். அவருடைய பிறப்பில் வார்த்தை

இரத்தமாக, மாம்சமாக மாறியது. வார்த்தை நன்னீராக (ஜலம்) ஆத்துமாவாக மாறியது. வார்த்தை காற்றாக (சூக்ஷ) ஆவியாக மாறியது. இயேசுவின் பிறப்பில் இம்மூன்றும் மரியாளின் வயிற்றில் கருவாக, சிசுவாக உண்டானது.

1. பொதுவான இரட்சிப்பு

(யூதா 3; அப் 4:12; லூக் 1:77)

பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக் குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது. (யூதா. 3)

2. பூரண இரட்சிப்பு

(ஏசா 33:6; மத் 24:13; யூதா 22)

பூரணரட்சிப்பும் ஞானமும் அறிவும் உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும்; கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம். (ஏசா. 33:6)

3. நித்திய இரட்சிப்பு

(எபி. 9:28; 1 பேது. 1:5; எபே 1:14)

கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். (எபி. 9:28)

ஒருவன் இயேசுவிடம் வரும்பொழுது, அவரை விசுவாசிக்கும் பொழுது அவனுடைய கடந்த கால குற்றமாகிய அக்கிரமம், மீறுதல், பாவங்கள் நீங்கி, அவைகளிலிருந்து மன்னிக்கப்படுகிறான். பாவ தண்டனை

யிலிருந்து இரட்சித்தல் இது பொதுவான இரட்சிப்பு, தொடர்ந்து கிறிஸ்துவுக்குள் வளரும்பொழுது அவன் இவ்வுலகத்தில் இருக்கிறபடியினால் பல போராட்டங்கள், பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது. அவைகளிலிருந்து இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருந்த (பாவ வல்லமையி லிருந்து) இரட்சிப்பு இதுவே பூரண இரட்சிப்பாகும். இயேசுவின் இரண்டாம் வருகையில் நமக்கு கொடுக்கிற இரட்சிப்பு, எதிர்கால (அ) நித்திய இரட்சிப்பாகும். பாவ உலகத்திலிருந்து நம்மை இரட்சித்தல்.

சீஷனைக் குறித்த இரகசியங்கள்

1. சீஷன் வெறுக்க வேண்டும்.

(மத் 16:24; லூக். 14:26; லூக். 14:33)

அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத்.16:24)

2. சீஷன் தன் சிலுவையை அனுதினமும் எடுக்க வேண்டும்.

(லூக். 9:23; ரோம 9:1; பிலி. 1:20)

பின்பு அவர் எல்லாரையும் நோக்கி ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். (லூக். 9:23)

3. சீஷன் அன்பாயிருக்க வேண்டும்.

(யோவா 13:35; யோவா. 15:9; யோவா 8:31)

நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார். (யோவா 13:35)

ஒருவன் கிறிஸ்துவிடத்தில் வரும்பொழுது, அவன் விசுவாசியாகி பின்பு சீஷனாக மாறுகிறான். சீஷன் இயேசுவுக்கு சீஷனாக மூன்று தகுதிகள் உள்ளது. தன்னைத்தான் வெறுக்க வேண்டும். தன் சிலுவையை அனுதினமும் எடுக்க வேண்டும். தேவனிடத்தில், அவருடைய வார்த்தையில் அன்பாயிருக்க வேண்டும். இவைகளே சீஷனின் தகுதியாகும். இப்படி செய்கிறவனே சீஷன்.

1. சீஷர்கள் கிறிஸ்தவர்கள் என அழைக்கப் பட்டனர்

(அப். 11:26; அப் 20:30; அப். 21:16)

அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று. (அப். 11:26)

2. சாட்சியின் கிறிஸ்தவனாயிருத்தல்

(அப். 26:28; அப் 24:24,25)

அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான். (அப். 26:28)

3. பாடுபடுகிற கிறிஸ்தவனாயிருத்தல்

(1 பேது. 4:16; ரோ. 8:17; பிலி 1 : 29)

ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக் கடவன் (1 பேது. 4:16)

சீஷர்களின் கூட்டத்தை சபையாக வேதம் கூறுகிறது. அந்த சபையில் ஜனங்கள் இருந்தார்கள். அவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்று பேர் வழங்கிற்று. இவர்கள் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாகவும், மாதிரிகளாகவும் வாழ்ந்து பாடுகளையும் அனுபவித்தார்கள். இவர்களே கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டனர். பாடுபட நாம் ஆயத்தமா!

பரிசுத்த ஆவியானவரைக் குறித்த இரகசியங்கள்

1. பரிசுத்த ஆவியானவருடைய சமூகம் (சங் 51:11; 2 கொரி 3:17,18; 1 கொரி 12:11)

உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும். (சங். 51:11)

2. பரிசுத்த ஆவியானவருடைய ஆவி (ரோம. 8:26, 27; எபே 1:16; 1 கொரி 12:4)

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். (ரோ. 8:26)

3. பரிசுத்த ஆவியானவருடைய (சரீரம்) ஆள்தத்துவம் (ரோம. 8:16; எசே 8:3; அப் 13:11)

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார். (ரோ 8:16)

பரிசுத்த ஆவியானவரின் சமூகம் என்பது அவருடைய ஆத்துமாவை குறிக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் ஆவியென்பது அவருடைய வாயைக் குறிக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் சரீரம் அவருடைய ஆள்தத்துவத்தைக் குறிக்கிறது.

சபையைக் குறித்த இரகசியங்கள்

1. பரலோக சபை

(சங் 82:1; எபி 12:23; வெளி 11:19)

தேவ சபையிலே தேவன் எழுந்தருளியிருக்கிறார்; தேவர்களின் நடுவிலே அவர் நியாயம் விசாரிக்கிறார். (சங். 82:1)

2. பழைய ஏற்பாட்டு சபை

(அப் 7:38; சங் 1:5; சங் 22:25)

சீனாய் மலையில் தன்னுடனே பேசினதூதனோடும் நம்முடைய பிதாக்களோடும் கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே. (அப். 7:38)

3. புதிய ஏற்பாட்டு சபை

(எபே. 1:9; எபே 5:30; 1 பேது 2:5)

காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின் படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிற வைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று, (எபே. 1:9)

வேதத்தில் சபையைக் குறித்து மூன்றுவிதமாக நமக்கு போதிக்கிறது அவை பரலோக சபை, பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு சபையாக உள்ளது. இவை மூன்றும் வெவ்வேறு காலகட்டத்திலிருந்தாலும், வெவ்வேறு இடங்களிலிருந்தாலும் மூன்றுக்கும் ஒற்றுமையுள்ளது. இச்சபைகள் தேவனுடைய வார்த்தையை மையமாக வைத்தே செயல்படுகின்றது.

ஸ்நானத்தைக் குறித்த இரகசியங்கள்

1. பரிசுத்த ஆவியின் ஸ்நானம்

(மாற் 1:8; 1கொரி 10:2; யோபு. 8:2)

நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்; அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று பிரசங்கித்தான். (மாற். 1:8)

2. அக்கினியின் ஸ்நானம்

(மத் 3:11; லூக். 12:49, 50; எரே 23:29).

மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங் களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவரு டைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினி யினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். (மத் 3:11)

3. ஜலத்தின் ஸ்நானம் (லூக். 3:16; எபே. 5:26)

யோவான் எல்லாருக்கும் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தி னால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார். (லூக். 3:16).

ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள் வந்தபின் அவன் ஸ்நானம்பண்ணப்பட வேண்டும். அந்த ஸ்நானம் பரிசுத்த ஆவியின் (காற்று) ஸ்நானம் அக்கினியின் ஸ்நானம்,

ஜலத்தின் ஸ்நானம் பண்ணப்படவேண்டும். இவை நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் கிறிஸ்துவின் இரத்தம் (அக்கினி), தண்ணீர், காற்று (ஆவி) கல்வாரி சிலுவையில் சிந்தின இவை மூன்றினால் நமக்கு கிடைக்கிறது. இந்த ஸ்நாதனத்தை கிறிஸ்துவின் வார்த்தையின் மூலம் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அபிஷேகத்தைக் குறித்த இரகசியங்கள்

1. பரலோகத்தில் அபிஷேகம்

(எசே. 28:14; நீதி 8:23; எபி 1:9)

நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய். (எசே. 28:14)

2. பழைய ஏற்பாட்டில் அபிஷேகம்

(யாத் 30:30; 1 சாமு 15:17; 1 இரா. 19:16)

ஆரோனும் அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு. நீ அவர்களை அபிஷேகம் பண்ணி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக. (யாத் 30:30)

3. புதிய ஏற்பாட்டில் அபிஷேகம்

(2 கொரி 1:21; 1 யோவா 2:27)

உங்களோடே கூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. (2 கொரி 1:21)

அபிஷேகம் என்பது தேவன் குறிப்பிட்ட வேலையை, ஊழியத்தை செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தைக் கொடுப்பதாகும். அவை பரலோகத்தில் வேலையை செய்யவும், பழைய ஏற்பாட்டு வேலையை செய்யவும், புதிய ஏற்பாட்டு வேலையை செய்யவும் அபிஷேகம் பண்ணப்படுகிறது.

1. தேவ அப்பம் மறைக்கப்பட்டது

(மத். 2:13,14; ஓசி. 11:1, மீகா 5:2)

[illegible] (மத். 2:13)

2. தேவ அப்பம் ஆசீர்வதிக்கப்பட்டது

(மத். 3:16-17; மாற். 1:10,11)

அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத். 3:17)

3. தேவ அப்பம் பிட்கப்பட்டது

(யோவான் 19:18, 30, 34)

ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவிலே குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. (யோவான் 19:34)

இயேசுவே தேவ அப்பம். அவர் பெத்லகேமிலே பிறந்தார். பெத்லகேம் என்றால் 'அப்பத்தின் வீடு' என்று பொருள். அந்த வீட்டிலிருந்து பிறந்தார். அவரே அவர் ஞானஸ்நானம் பெற்று கரையேறின உடனே தேவனால் ஆசீர்வாதம் பெற்றார். ஊழியத்தில் ஆசீர்வாதம் காணப்பட்டது. அந்த தேவ அப்பம் கல்வாரி சிலுவையிலே பிட்கப்பட்டு நொறுக்கப்பட்டு நமக்காக கொடுக்கப்பட்டது. அந்த தேவ அப்பத்தை புசித்தால் நமக்கு ஜீவன் உண்டு.

ஜீவ தண்ணீரைக் குறித்த இரகசியங்கள்

1. ஜீவ ஊற்று (சங். 36:9; நீதி 13:14; எரே 2:12)

ஜீவ ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம். (சங். 36:9)

2. ஜீவ தண்ணீர்

(யோவா. 4:10; நீதி 10:11; நீதி. 10:32.)

இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக; நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார். (யோவா. 4:10)

3. ஜீவ நதி

(யோவா. 7:38; நீதி 16:22; யோபு 28:28)

வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். (யோவா. 7:38)

இயேசுவே ஜீவ ஊற்றாயிருக்கிறார். அந்த ஜீவ ஊற்றிலிருந்து ஜீவ தண்ணீர் புறப்படுகின்றது. அந்த ஜீவதண்ணீரிலிருந்து ஜீவ நதி புறப்படுகின்றது. இவை தேவனுடைய வார்த்தையை குறிக்கிறது. தேவனுடைய வார்த்தையை நாம் தேட, ஆராய, தியானிக்கும்போது நமக்குள் இவை மூன்றும் உண்டாகும்.

1. சுவிசேஷ ஒளி

(2கொரி 4:4; அப் 13:26; லூக் 2:30)

தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். (2 கொரி 4:4)

2. அறிவாகிய ஒளி (2 கொரி 4:6; கொலோ 1:10; 2 பேது 3:18; பிலி 3:8)

இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். (2 கொரி 4:6)

3. ஜீவ ஒளி

(யோ 8:12; ஏசா 10:17; 1 யோவா 1:5)

மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் என்றார். (யோவா 8:12)

இயேசுவே மெய்யான, எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாயிருக்கிறார். வேதத்தில் மூன்றுவித ஒளியைக் குறித்துள்ளது சுவிசேஷ ஒளி, அறிவாகிய ஒளி, ஜீவ ஒளியைக் குறித்து வருகின்றது. சுவிசேஷ ஒளி இயேசுவையும், அறிவாகிய ஒளி பரிசுத்த ஆவியான

வரையும், ஜீவ ஒளி பிதாவையும் குறிக்கிறது. இவ்வொளி நமக்குள் வர தேவனுடைய வார்த்தையாகிய ஒளியை நாம் தேட, தியானிக்க ஆராய வேண்டும்.

எலும்பைக் குறித்த இரகசியங்கள்

1. ஆதாமின் எலும்பு

(பிர 11:5; ஆதி 2:7; ஆதி 2:21-23)

ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறது போலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய். (பிர 11:5)

2. யோசேப்பின் எலும்பு

(ஆதி 50:25; யாத் 13:19; யோசு 24:32)

தேவன் உங்களைச் சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக என்றும் சொல்லி; யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக்கொண்டான். (ஆதி 50:25)

3. இயேசுவின் எலும்பு

(1 கொரி 15:45; யோவா 1:29; யோவா 19:33)

அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். (1கொரி 15:45)

தேவன் தம்முடைய சுவாசமாகிய காற்றினால் மனிதனின் எலும்பை உண்டாக்கினார். அந்த எலும்பில் பிசாசின் வார்த்தையினால் அவனுக்கு சுகமில்லை. இதை நீக்க யோசேப்பின் எலும்பை அடையாளமாக இயேசுவுக்கு மாதிரியாக பழைய ஏற்பாடு காட்டுகிறது. இயேசு கிறிஸ்துவின் விலாயெலும்பிலிருந்து புறப்பட்ட இரத்தம், தண்ணீர், ஆவி ஒப்புக் கொடுத்தலின் மூலமாக அப்பிரச்சனையை நீக்கி, இயேசுவாகிய எலும்பில் மணவாட்டி சபை எலும்பின் எலும்பும் மாமிசமாக இணைக்கப்பட்டிருக்கிறோம்.

கல்லைக் குறித்த இரகசியங்கள்:

1. கல்லான தூதன்

(எசே. 28:13, 14; சங் 23:1; சங் 82:1)

நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திர நீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக் கொண்டிருக்கிறது; நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேளவாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது. (எசே 28:13)

2. கல்லான மனிதன்

(சங். 8:5; எபி 2:7; ஆதி 2:7)

நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். (சங் 8:5)

3. கல்லான தெய்வம்

(ஏசா 28:16; சங் 118:22; 1 பேது 2:6)

ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப் பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான். (ஏசா. 28:16)

தேவதூதர்கள் கல்லினால் சிருஷ்டிக்கப்பட்டனர். அவர்களில் கேரூப்என்பவன் தீய சுபாவ கற்களால் தன்னை மூடிக் கொண்டிருக்கிறதாக (எசே 28:1) வேதம்

கூறுகிறது. மனிதன் மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டான். அவனுடைய இருதயம் சதையாயிருந்ததை பிசாசு மனிதனுடைய இருதயத்தை கல்லாகமாற்றினான். இதை போக்க இயேசு கிறிஸ்து விலையேறப்பெற்ற கல்லாக இவ்வுலகத்தில் வந்து, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்து மனிதனின் கல்லான இருதயத்தை (தீய சுபாவத்தை) எடுத்துப்போட்டு, சதையான இருதயமாக மாற்றினார்.

ஆசீர்வாதத்தைக் குறித்த இரகசியங்கள்

1. பழைய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள்

(ஆதி 49:25; லேவி. 26:4; உபா 33:13-15)

உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று. அவர் உனக்குத் துணையாயிருப்பார். சர்வ வல்லவராலே அப்படியாயிற்று, அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார். (ஆதி 49:25)

2. புதிய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள்

(எபே 1:3; அப். 3:26; ரோம 15:9)

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். (எபே. 1:3)

3. நித்திய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள்

(சங் 21:6; வெளி 2:27, 28, 7, 10)

அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்; அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர். (சங் 21:6)

சத்தியவேதம் ஆசீர்வாதத்தை மூன்றாக பிரித்துள்ளது. அவை சாதாரண உலகப்பிரகாரமான ஆசீர்வாதம், (பழைய ஏற்பாட்டு) ஆவிக்குரிய ஆசீர்வாதம், நித்திய ஆசீர்வாதங்களென்று தெளிவாக கூறுகிறது. பழைய

ஏற்பாட்டு ஆசிர்வாதங்கள் பார்க்கக்கூடியவை புதிய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள் பார்க்க முடியாதவை (நமக்குள் உண்டாகும்), நித்திய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள் நித்தியத்தில் ஜெயம் பெற்றவர்களுக்கு கொடுக்கப்படுபவை. இந்த மூன்று ஆசீர்வாதங்களையும் பெற கிறிஸ்துவின் வார்த்தையால் மாத்திரமே முடியும். இன்றே தேவனுடைய வார்த்தையை தேட, ஆராய, தியானிக்க ஆயத்தமா!

சோதனையைக் குறித்த இரகசியங்கள்

1. கண்களின் இச்சை

(1யோவா 2:16; மத் 5:28; மாற் 7:22)

ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் உலகத்திலுள்ள வைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். (1யோவா 2:16)

2. ஜீவனத்தின் பெருமை

(1 யோவா 2:16; மாற் 7:22; 1 பேது 4:3)

களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங் களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷன மும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். (மாற் 7:22)

3. மாம்சத்தின் இச்சை

(1 யோவா 2:16; ரோம 6:12; கலா 5:19)

ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற் குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. (ரோம 6:12.)

ஒருவன் கிறிஸ்துவுக்குள் வந்து அவரை விசுவாசிக்கும் பொழுதும், அவரில் நிலைத்திருக்கும் பொழுதும் அவன் ஆசீர்வதிக்கப்படுகின்றான். அசீர்வாதம் வந்தபின் அவன் மூன்றுவித சோதனைக்குட்படுகிறான். கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை, மாம்சத்தின் இச்சையாகும். தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப் படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன் தன் சுய இச்சையினாலேயே சோதிக்கப்படுகிறான். இந்த சோதனையை கிறிஸ்துவின் வசனத்தினால் நாம் ஜெயிக்க வேண்டும். (மத் 4:1-10; யாக். 1:13, 14; வெளி 12:11)

1. பாடுகள் (பிர 3:10; மத் 6:34; 1 பேது 5:10)

மனுபுத்திரர் பாடுபடும்படி தேவன் அவர்களுக்கு நியமித்த தொல்லையைக் கண்டேன். பிர 3:10

2. உபத்திரவம் (சங். 34:17; சங். 119:67,71)

நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார். சங் 34:17

3. துன்பம் (சங் 34:19, சங் 25:18, யோபு 19:22)

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். (சங் 34:19)

நாம் கிறிஸ்துவுக்குள் வளரும்போது பாடுகள், உபத்திரவங்கள், துன்பங்கள் நமக்கு உண்டாகும். வேதத்தில் கிறிஸ்து, சீஷர்கள், பரிசுத்தவான்களாகிய சபையார், அப்போஸ்தலர் போன்ற எல்லோரும் பாடுகள், உபத்திரவங்கள் துன்பங்கள் உண்டாயிருந்தன. இதற்கு இயேசு கிறிஸ்துவின் வாழ்வே நமக்கு முன்மாதிரியாக இருக்கிறது. இதற்கு நாம் விதிவிலக்கல்ல, பரம அழைத்தலின் பந்தய பொருளுக்காக இலக்கை நோக்கி தொடர்ந்து ஓட வேண்டியது அவசியம்.

கனிகளைக் குறித்த இரகசியங்கள்

1. ஆத்துமாவில் கனி (கலா 5:22; மத் 21:21; யோவா 16:22; 1 பேது. 3:4)

ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம். (கலா 5:22)

2. ஆவியில் கனி

(கலா 5:22,23; சங் 28:3; யாக் 1:19; கலா 6:1)

சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலா 5:23.)

3. சரீரத்தில் கனி (கலா 5:22, 23; 1 யோவா 2:23; எபே 4:32; 1 கொரி 9:25)

சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலா 5:23)

ஆவிக்குரிய மனிதர் என்று சொல்லிக்கொள்கிற ஒவ்வொருவரும் கனிக்கொடுக்க வேண்டியது அவசியமும், முக்கியமுமாயிருக்கிறது. அவன் கிறிஸ்துவின் வார்த்தை யில் நிலைத்திருந்து அவனுடைய ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் கனிக்கொடுக்க வேண்டும். மனிதனை மரத்தோடு ஒப்பிட்டு வேதம் கூறுகிறது. (மத் 3:10). மரமென்றால் கனியிருக்க வேண்டுமல்லவா! நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்று இயேசுவின் வசனம் எச்சரிக்கிறது.

1. ஆவி (1 தெச 5:23; 1 கொரி 6:11; யோரா 17:15)

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. (1 தெச 5:23)

2. ஆத்துமா (1 தெச 5:23; எபே 5:26; 1 பேது 1:5)

தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், (எபே 5:26)

3. சரீரம்
(1 தெச 5:23; 1 யோவா 1:7; 1 யோவா 5:17, 18)

அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். (1 யோவா. 1:7)

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னதாக நாம் ஆயத்தமாக வேண்டும். நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் இவை மூன்றும் கிறிஸ்துவின் வார்த்தை யாகிய இரத்தம், தண்ணீர், காற்றினால் கழுவப்பட்டு எப்பொழுதும் குற்றமற்றதாயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் ஆயத்தமாயிருக்க முடியும். குற்றமற்றவர்களாக இருக்க குறையற்ற வேத வசனத்தை தேட, ஆராய, தியானிக்க நாம் ஆயத்தமா? (சங் 19:7).

இயேசுவின் இரண்டாம் வருகை

1. **இயேசு பரலோகத்தை விட்டு வானத்தில் தரிசனமாவார். (1தெச 4:16; எபி 9:28)**

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடையே சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்து வுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். (1தெச. 4:16)

2. **பிரதான தூதனுடைய சத்தம், தேவ எக்காளம் (1 தெச 4:16; மத் 25:6; மத் 24:31)**

நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. (மத் 25:6)

3. **கிறிஸ்துவுக்குள் மரித்த, உயிரோடிருக்கிற வர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். (1 தெச. 4:17; 2 கொரி 3:18; 1 கொரி 15: 51,52)**

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். (1தெச 4:17)

இயேசுவின் இரண்டாம் வருகையில் அவர் பரலோகத் தைவிட்டு வானத்திலே தரிசனமாவார் என்று வேதம் கூறுகிறது. அவர் வருகையில் சத்தங்கள் உண்டாகும், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்த, உயிரோடிருக்கிற பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப் படுவார்கள். நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாயிருக் கிறோமா? ஆம் ஆயத்தமாகுவோம்.

1. மணவாளன், மணவாட்டி

(1 கொரி 15:20–23; 1 தெச 4:16,17)

அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப் படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 கொரி 15:23)

2. தோழிகள், தோழருக்கு அடையாளமானவர்கள், தோழர்கள் (மத் 25:6,8–11; வெளி 6:9–11; ரோம 11:26; வெளி 11:3,11; 7:4)

அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன். (வெளி. 6:9)

3. உலகபிரகாரமான நீதிமான்கள், பாவிகள்

(2 பேது 3:10,12; மத் 25:46; அப் 24:15; ரோம 2:14,15)

நீதிமான்கள் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த் தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறதுபோல, நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். (அப் 24:15)

மனிதன் தனது மரணத்துக்குப் பின்பு நியாயத்தீர்ப்பு பெறவேண்டியதாயிருக்கின்றது. நியாயந்தீர்க்கப்பட ஒவ்வொரு மனிதனும் உயிர்தெழவேண்டியுள்ளது. மனிதனுடைய உயிர்த்தெழுதலுக்கு வரிசைகள் உண்டு.

இந்த வரிசையில் முதற்பலன் இயேசு கிறிஸ்து. இரண்டாவதாக, கிறிஸ்துவுக்குள் மரித்த பரிசுத்தவான்களாகிய பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு மணவாட்டி சுவட்டத்தார். மூன்றாவதாக, கைவிடப்பட்டு உபத்திரவ காலத்தில் இரத்தசாட்சியாக மரிக்கின்ற பரிசுத்தவான்கள். நான்காவதாக, இஸ்ரவேலரின் மனந்திரும்புதலுக்காக ஊழியம் செய்கின்ற பழைய ஏற்பாட்டு இரத்தசாட்சிகளான தோழருக்கு அடையாளமானவர்கள் ஐந்தாவதாக இவர்களின் சாட்சி ஊழியத்தில் சுவிசேஷம் கேட்டு, மனந்திரும்பி இரத்த சாட்சிகளாக மரித்து உயிர்த்தெழுகின்ற இஸ்ரவேலராகிய மணவாளனுடைய தோழர்கள் ஆவர். ஆறாவதாக, உலக முடிவுக்குப் பின்பு உலக பிரகாரமான நீதிமான்களும் ஏழாவதாக, உலக பிரகாரமான பாவிகளும் உயிர்த்தெழுவார்கள். இவ்விதமாக ஏழுவரிசையாக மூன்று பிரிவுகளாக உயிர்த்தெழுதல்கள் நடைபெறும்.

1. ஆயத்தமில்லாத கன்னிகைகள்

(மத் 25:1, 7,8,10,11)

நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

அப்பொழுது, அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்.

புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள். (மத் 25:6-8)

2. தேவ வசனத்தினிமித்தம் சாட்சியின் ஜீவியம் (வெளி. 6:9; மத் 10:18)

அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன். (வெளி. 6:9)

3. உபத்திரவகால இரத்த சாட்சிகள்

(மத். 24:9; மத் 23; 30-32, வெளி 6:9)

அப்பொழுது உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களும் பகைக்கப்படுவீர்கள்.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பின்பு பூமியிலே பிசாசானவன் நேரடியாக தனது ஆளுகையைச் செய்வான். இந்த ஆளுகையின் காலங்களின் முதற்பகுதி உபத்திரவ காலம். கிறிஸ்துவின் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட ஆயத்தமில்லாத கன்னிகைகள், சீஷர்கள் அக்காலத்திலே காணப்படுவார்கள். உபத்திரவகாலத்திலே அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்காக சாட்சியாக வாழ்ந்து, இரத்த சாட்சியாக மரிப்பார்கள்.

மகா உபத்திரவகால இரகசியங்கள்

1. இஸ்ரவேலரின் இக்கட்டுக்காலம்

(எரே 30:7,8; மத். 24:21; தானி 12:1)

ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப் போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான். (எரே 30:7)

2. பழைய ஏற்பாட்டு இரத்த சாட்சிகள்

(சக 4:3,14; வெளி.11:3,4,7-11)

அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும் போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும். (வெளி. 11:7)

3. இஸ்ரவேலருடைய இரத்தசாட்சி

(வெளி. 7:14; ரோம 11:25-27)

அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். (வெளி 7:14.)

மகா உபத்திரவ காலம் இஸ்ரவேலருக்கு சம்பவிப்பதாகும். இது இஸ்ரவேலருக்கு இக்கட்டுக்காலமாகும். அப்பொழுது, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் சுவிசேஷத்தை சாட்சியாக அறிவித்து இரத்த சாட்சிகளாக மரிப்பார்கள், இஸ்ரவேலரும் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிப்பார்கள்.

ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

1. மனைவியின் ஆயத்தம்

(வெளி 19:7; வெளி 21:9; 1 பேது 3:5)

நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன். (வெளி. 19:7)

2. சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்

(வெளி. 19:8; மத் 22:12; எசே. 16:8–13)

சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. (வெளி. 19:8)

3. கலியாண விருந்து

(வெளி. 19:9; மத் 22:4, 9–12)

பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியான வரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான். (வெளி. 19:9)

ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாணத்திற்கு மனைவியாகிய நாம் ஆயத்தமாயிருக்க, நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் தேவனுடைய வார்த்தையினால் குற்றமற்றவர்களாக இருந்து கல்யாண வஸ்திரத்தை அணிந்தால்தான் கல்யாண விருந்துக்கு செல்ல நாம் தகுதியுள்ளவர்களாக இருக்க முடியும்.

மூன்றாவது உலக மகா யுத்தம்

1. பூமியில் அர்மெகிதோன் யுத்தம்

(வெளி 16:16; சக 14:1,4,5; அப் 1:11,12)

அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான். (வெளி. 16:16)

2. இயேசு கிறிஸ்து, பரிசுத்தவான்கள், பரம சேனை (வெளி. 17:14; வெளி 19:14-16; சக 14:3)

இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான். (வெளி. 17:14)

3. அந்திக்கிறிஸ்து, கள்ளத்தீர்க்கதரிசி, பூமியின் இராஜாக்கள். (வெளி. 17:8-13; வெளி. 19:18-21)

நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை, அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப் போகிறது. உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற் போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப் படுவார்கள். (வெளி. 17:8)

மூன்றாவது உலக மகாயுத்தம் பூமியில் அர்மெகிதோன் என்கிற இடத்தில் நடக்கும். அந்த யுத்தத்தில் இயேசு கிறிஸ்து, பரிசுத்தவான்கள், பரமசேனைகள், அந்திக் கிறிஸ்து, கள்ளத்தீர்க்கதரிசி, பூமியின் இராஜாக்களோடு யுத்தம் செய்து இவர்களை ஜெயிப்பார்கள். அந்திக் கிறிஸ்துவும், கள்ளத்தீர்க்கதரிசியும் அக்கினியும், கந்தகமும் எரிகிறகடலிலே பாங்கடைவார்கள். பூமியின் இராஜாக்கள் குதிரையின்மேல் ஏறினவருடைய பட்டயத்தினால் கொல்லப்படுவார்கள்.

1. ராஜாக்கள் (வெளி. 1:6; வெளி 20:4,6)

நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென். (வெளி 1:6)

2. ஆசாரியர்கள் (வெளி. 1:6; ரோ 15:15; எபி 9:6)

அப்படியிருந்தும், சகோதரரே, புறஜாதியாராகிய பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரியமான பலியாகும்படிக்கு, நான் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஆசாரியனாயிருந்து புறஜாதிகளுக்கு இயேசு கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாகும் பொருட்டு, (ரோ. 15:15)

3. பிரபுக்கள் (சங் 45:16; லூக். 19:12; சங் 47:9)

உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர். (சங். 45:16)

ஆயிரம்வருட அரசாட்சியில் பங்குபெற நாம் மூன்றாம் உலகமகாயுத்தத்தில் இயேசுவோடு இருந்து யுத்தம் செய்தவர்களாக இருந்தோமானால், நாம் ஆயிரவருட அரசாட்சியில் இருப்பது நிச்சயம் அந்த அரசாட்சியில் நாம் ராஜாக்களாக, ஆசாரியர்களாக, பிரபுக்களாக காணப்படுவோம். நாம் பூமியில் இயேசுவோடு கூட ஆயிரம் வருடம் அரசாளுவோம்.

கொம்பைக் குறித்த இரகசியங்கள்

1. ஆதாமின் கொம்பு

(ஆதி 1:28; சங் 8:6; எபி. 2:7)

பின்பு தேவன் அவர்களை நோக்கி; நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதி 1:28)

2. பிசாசின் கொம்பு

(யோவா 14:30; யோபு 9:24; சங் 75:10)

இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. (யோவா. 14:30)

3. நீதிமானின் கொம்பு

(சங் 75:10; லூக். 1:73–75; சங் 148:14)

துன்மார்க்கருடைய கொம்புகளையெல்லாம் வெட்டிப் போடுவேன்; நீதிமானுடைய கொம்புகளோ உயர்த்தப் படும். (சங் 75:10)

தேவன் மனிதனை உண்டாக்கி, அவனை பூமியில் உள்ளவைகளை ஆளும்படியாக வைத்திருந்தார். ஆனால் அந்த ஆளுகையை பிசாசு பறித்து தான் பூமியை ஆளுகிறவனாக மறைமுகமாகயிருந்து துன்மார்க்கர் கையிலே விட்டு, அவன் அதிபதியாக இருக்கிறான். இதை மாற்ற எதிர்காலத்தில் துன்மார்க்கருடைய கொம்பை

வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

1. ஆத்துமா – எண்ணங்கள்

(பிர. 3:17; பிர 11:9; யோவா 12:48)

சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க் கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன். (பிர 3:17)

2. ஆவி – வார்த்தைகள்

(மத் 12:36; ரோம 14:12; 2 கொரி 4:4)

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத். 12:36)

3. சரீரம் – கிரியைகள்

(பிர 3:17; பிர. 12:14; 1 பேது 1:17)

ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ் வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானா லும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். (பிர. 12:14)

வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் மனிதன் யாராக இருந்தாலும், நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டும். மனிதனின் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் உண்டாகும் எண்ணங்கள், வார்த்தைகள், கிரியைகளின்படி நியாயந் தீர்க்கப்படுவோம் என்று வேதம் கூறுகிறது. ஆதலால் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரங்களில் எப்பொழுதும் தேவனைக் குறித்த எண்ணங்கள், (தியானம்) அவருடைய நாமதனைத அறிக்கையிடுதல், அவருடைய கட்டளைகளை கைக்கொள்ளுதல் அவசியம்.

நியாயத்தீர்ப்பின் புத்தகங்கள்

1. ஜீவ புத்தகம் (வெளி 20:11,12; யாத் 32:32)

பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும், அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை.

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந் தார்கள்.

2. ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புத்தகம் (வெளி 21:27; வெளி 13:8; வெளி 20:12)

தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக் குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர் கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். (வெளி. 21:27)

3. ஞாபக புத்தகம்

(மல் 3:16; வெளி 20:12; யோவா 14:26)

அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோ டொருவர் பேசிக் கொள்வார்கள். கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவரு டைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப்

புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. (மல் 3:16)

நியாயத்தீர்ப்பின்போது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன என்று வேதம் தெளிவுபடுத்துகிறது. அந்த புஸ்தகங்கள் பிதாவுடைய ஜீவ புஸ்தகம், ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகம், பரிசுத்த ஆவியானவருடைய ஞாபக புஸ்தகமாகும். இப்புஸ்தகங்களின்படி நாம் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் நியாயந்தீர்க்கப்படுவோம். ஆதலால் நாம் வேத புஸ்தகமாக சத்திய வேதத்தை தேடுவது, ஆராய்வது, தியானிப்பது அவசியம்.

1. ஜீவ கிரீடம் (யாக் 1:12; வெளி 2:20; ரோம 16:10)

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். (யாக். 1:12)

2. மகிமையான கிரீடம்

(1 பேது. 5:4; 1 பேது 4:16; 1 பேது 5:9,10)

அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். (1 பேது 5:4)

3. நீதியின் கிரீடம்

(2 தீமோ 4:8; 1பேது 3:12; 1 யோவா 3:7)

இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். (2 தீமோ 4:8)

நாம் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு இவ்வுலகில் ஜெயம்பெற்ற ஜீவியம் ஜீவிக்கும்பொழுது நமக்கு நித்தியத்தில் ஜீவகிரீடம், மகிமையான கிரீடம், நீதியின் கிரீடம் கொடுக்கப்படும் என்பது நிச்சயம். ஜெயம்பெற்ற வாழ்க்கை வாழ, தேவ வசனத்தை நமக்குள் கொண்டுவர தேவ வசனத்தை தேட, தியானிக்க, ஆராய வேண்டும்.

1. அநாதி நித்திய பரலோகம்

(யோவா. 14:2; எபி 12:22; வெளி 11:19)

என்பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். (யோவா 14:2)

2. புதிய எருசலேமாகிய பரலோகம்

(வெளி 21:2,10; ஏசா 65:17)

யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப் பட்டிருந்தது. (வெளி 21:2)

3. நித்தியமான நரகலோகம்

(லூக். 16:24; நீதி 7:27; வெளி 19:20)

அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். (லூக். 16:24)

நித்தியத்தைக் குறித்து வேதத்தில் மூன்றாக பகுத்துள்ளது. அவை தேவன் இருக்கிற இடமாகிய பரலோகமும், அவருடைய சேனைகளாகிய மணவாள

மூன்று பரதீசைக் குறித்த இரகசியங்கள்

1. பரலோக பரதீசு

(எசே 28:13; ஆதி 13:10; யூதா 6)

நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பதுமராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது; நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேளவாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது. (எசே 28:13)

2. வானத்தில் பரதீசு (2கொரி 12:1-3)

மேன்மை பாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே; ஆகிலும் கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப் படுத்தல் களையும் சொல்லுகிறேன்.

கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன் தேவன் அறிவார்.

அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தை களைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன்.

(II கொரி 2: 1-3)

3. பாதாள பரதீசு

(லூக் 23:43; அப் 2:31; லூக் 16:22-26)

இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனே கூடப்பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (லூக் 23:43)

வேதத்திலே மூன்று வித பரதீசு உள்ளது. பரதீசு என்றால் தோட்டத்தை இளைப்பாறுகிற இடத்தைக் குறிக்கிறது. அவை பரலோகத்திலே பரதீசு, மூன்றாம் வானத்தில் பரதீசு, பாதாள பரதீசு என்று வேதம் தெளிவுபடுத்துகிறது. அங்கேயும் (பாதாள பரதீசு) தேற்றப்பட்டு, இளைப்பாறுகிறார்கள். (லூக். 16:25; தானி 12:13)

மூன்று இரவு மூன்று பகல்

இயேசுவின் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில்

1. பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்த நாள்

(மத் 12:40; யோவா 19:31; மத் 27:62-64)

யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார். (மத் 12:40)

2. பெரிய ஓய்வு நாள்

(யோவா 19:31; லேவி 16:31-34)

அந்த நாள் பெரிய ஓய்வு நாளுக்கு ஆயத்த நாளாயிருந்த படியினால், உடல்கள் அந்த ஓய்வு நாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும் படிக்கும், உடல்களை எடுத்துப் போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள். (யோவா 19:31)

3. கற்பனையின்படியே வாராந்தர ஓய்வுநாள் (யோவா 19:39,40; லூக் 23:55,56; மாற். 16:1,2,3,9)

திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும் பரிமளதைலங்களையும் ஆயத்தம்பண்ணி, கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள். (லூக். 23:56)

இயேசுகிறிஸ்து மனிதனுடைய குற்றங்களை தன் மீது ஏற்று பாவ நிவாரணபலியானார். அவர் தமது ஊழியத்தின் நாட்களில் தமது மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலுக்கு மிடையே மூன்று நாட்கள் உண்டு என்று சொன்னார். இயேசு தமக்கு தீர்மானிக்கப்பட்டபடியே பஸ்காவின் நாளில் சிலுவையில் அறையப்பட்டார். அந்த நாளின் மாலையில் யூத கணக்கின்படி பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்த நாள் ஆரம்பமானது. அந்த நாள் முடிவடைந்து பெரிய ஓய்வுநாள் அடுத்த மாலையிலே ஆரம்பமானது. அந்த நாளும் முடிவடைந்து அடுத்த மாலை வேளையில் கற்பனையின் படியே வாராந்திர ஓய்வுநாள் ஆரம்பமானது. அந்தநாளும் முடிவடைந்து அடுத்த நாளின் மாலை வேளையில் வாரத்தின் முதல் நாள் ஆரம்பமானது. அந்த நாளின் அதிகாலையில் மகதலேனா மரியாளுக்கு உயிர்த்தெழுந்து தரிசனமானார். ஆயத்தநாள், பெரிய ஓய்வுநாள், வாராந்திர ஓய்வுநாள் இந்த மூன்று நாட்களில் மூன்று பகல்கள் உண்டு இயேசு சொன்னது சத்தியம்.

1. யோனாவின் மரணம்

(யோனா 1:2-4,15; யோனா 2:3-6)

நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப்போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது என்றார்.

அப்பொழுது யோனா கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து, யோப்பாவுக்குப் போய், தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக்கண்டு, கூலிகொடுத்து, தான் கர்த்தருடைய சமூகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான். (யோனா 1:2,3)

2. யோனாவின் அடக்கம்

(யோனா 1:17; யோனா 2:7-9)

யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்றுநாள் இருந்தான். (யோனா 1:17)

3. யோனாவின் உயிர்த்தெழுதல் (யோனா 2:10; யோனா 3:1-4; யோனா 4:1-3)

கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது. (யோனா 2:10)

யோனா ஒரு தீர்க்கதரிசியாவான். அவன் தேவனுடைய வார்த்தையை கேளாதபடி, அவருடைய சமூகத்திற்கு விலகி தர்ஷீசுக்கு ஓடிப்போகிறான். கர்த்தருடைய வார்த்தையை கேளாத எந்த தீர்க்கதரிசியும் கொல்லப்பட

வேண்டும் என்று நியாப்பிரமாணத்திலுள்ளபடி யோனா மரிக்கவேண்டுவது தேவ சித்தமாகும். மூன்றுநாள் இரவும் பகலும் மீனின் வயிற்றை கல்லறையாக தேவன் ஆயத்தப் படுத்தி அதில் அவனுடைய சரீரம் வைக்கப்பட்டிருந்தது. பின்பு மூன்று நாள் கழித்து தேவன் மீனுக்கு கட்டளையிடு கிறார். மீன் யோனாவை கரையிலே கக்குகின்றது. யோனா உயிரோடே எழுந்து நினிவேக்கு செல்கிறான்.

பரலோகம் மூன்றாம் வானத்தில் இல்லை

1. பூமி (ஒலிவமலை) (அப் 1:9-12; மத் 28:16)

பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தாங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். (மத் 28:16)

2. வானங்கள் வழியாக (மூன்று வானங்கள்) (எபி. 4:14; 2 கொரி 12:2; எபே 4:10)

வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவ குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம். (எபி 4:14)

3. பரலோகங்கள் (லூக் 24:51 மாற். 16:19; எபேசு 4:8-10)

இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். (மாற் 16:19)

இயேசு பூமியின் ஒலிவமலையிலிருந்து, எடுத்துக் கொள்ளப்படும் பொழுது அவர் வானங்களின் வழியாக பரலோகத்திற்குப் போனதாக வேதம் கூறுகிறது. வானங்கள் என்றால் மூன்று வானங்கள் இருப்பதாக வேதம் தெளிவுபடுத்துகிறது. மூன்று வானங்களையும் கடந்து, அவர் பரலோகம் சென்றிருக்கிறார். ஆகவே பரலோகம் வானத்தில் இல்லை என்பது சத்தியமாகும்.

தீபாவளியைக் (தீபாளி) குறித்த இரகசியங்கள்

1. பரலோக (சத்திய) தீபாவளி

(வெளி. 4:5; வெளி 5:5,6)

அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன; தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன. (வெளி. 4:5)

2. பழைய ஏற்பாடு (சத்திய) தீபாவளி

(யாத் 27:20; யாத் 25:31, 37; நீதி 20:27)

குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் படி இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னிடத்தில் கொண்டுவரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடுவாயாக. (யாத். 27:20)

3. புதிய ஏற்பாடு (சத்திய) தீபாவளி

(வெளி 1:12, 20; வெளி 2:1; யோவா 1:1,14,9)

என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும் ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்.

தீபாவளி என்கிற வார்த்தை தவறான உச்சரிப்பு. "தீபாளி" என்பது தான் சரியான வார்த்தையாகும். தீபாளி என்றால் தீபங்களின் வரிசையாகும். பரலோக சபையில் தீபங்களின் வரிசையுள்ளது. பழைய ஏற்பாடு சபையில் (ஆசரிப்பு கூடாரம்) தீபங்களின் வரிசையுள்ளது. புதிய

ஏற்பாட்டு சபையிலும் தீபங்களின் வரிசையுள்ளது. நாம் ஒவ்வொருவரும் தீபங்களாக மாற மெய்யான ஒளியாகி இயேசுவினிடத்தில் வரவேண்டும். அவர் எந்த மனுஷனை யும் பிரகாசிப்பிக்கிற ஒளியாயிருக்கிறார். வேத வசனமாகிய தீபத்தை நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் ஏற்ற வேண்டும். அதற்கு வேதத்தை தேட, ஆராய, தியானிக்க வேண்டும்.இதுவே சத்திய தீபாவளி.

பக்ரீத்தைக் குறித்த இரகசியங்கள்

1. பரலோகத்திலே பக்ரீத்

(வெளி. 5:6; எபி. 9:23; வெளி 19:13)

அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம். (வெளி. 5:6)

2. பழைய ஏற்பாட்டு பக்ரீத் (ஆதி 22:2,3,7,8,13)

ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்; அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப் பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான். (ஆதி 22:13)

3. புதிய ஏற்பாட்டு பக்ரீத்

(யோவா 1:29, 36; ஏசா 53:6,7)

மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு : இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. (யோவா 1:29)

முஸ்லீம் சகோதரர்கள் பக்ரீத் பண்டிகையை வருடம் தோறும் கொண்டாடுவது வழக்கம். அந்த பண்டிகையின் நோக்கம் இப்ராகிம் (ஆபிரகாம்) என்பவர் தம்முடைய

மகனை பலியாக கொண்டுபோய் இறைவனுக்கு பலி கொடுப்பதற்கு அடையாளமாய் அப்பண்டிகையை கொண்டாடுகிறார்கள். உண்மையான பக்ரீத் என்பது பிதாவாகிய தேவன் தம்முடைய சொந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். இவ்வுலகத்தாரின் குற்றத்திற்காக அவர் குற்றமற்றவராக வந்து, ஜீவித்து பாவமில்லாத பரிசுத்தராக வாழ்ந்தார். இப்ராஹிம் (ஆபிரகாம்) தன்னுடைய குமாரனுக்கு பதிலாக ஒரு ஆட்டு கடாவை அடித்து இறைவனுக்கு பலி செலுத்தினான். தேவ ஆட்டுகுட்டியாக வந்த அவர் (இயேசு) கல்வாரி சிலுவையிலே பலிகொடுக்கப்பட்டார். அவருடைய இரத்தத்தின் மூலமாக எல்லோருக்கும் பாவ மன்னிப்பாகிய மீட்பு உண்டு என்பது சத்தியம். இதுவே (உண்மையான) சத்திய பக்ரீத் ஆகும்.

1. பிறப்பிலே நாமங்கள்

(ஏசா 7:14; யோவா 4:25; மத் 1:12)

ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ. ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள். (ஏசா 7:14)

2. பிறப்பிலே ஆராதனைகள்

(லூக். 2:11, 12, 14, 20; மத் 2:2; எபி. 1:6)

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். (லூக். 2:14)

3. பிறப்பிலே காணிக்கைகள் (மத் 2:11; யோவா 19:39; சங் 141:2; சங் 72:10,15)

அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையை யும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்க மாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத் தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கை யாக வைத்தார்கள். (மத் 2:11)

கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து பழைய ஏற்பாட்டிலே தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டுள்ளது. அதில் அவருடைய நாமங்கள் வந்துள்ளன. அவை இம்மானுவேல். அவருடைய பிறப்பில் மூன்று பிரிவினர் அவரை

ஆராதிக்கிறார்கள், சாஸ்திரிகள், பரமசேனைகள், மேய்ப் பர்கள். அவருடைய பிறப்பில் மூன்றுவித காணிக்கைகள் வைக்கப்படுகின்றது. பொன், வெள்ளைப் போளம், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் இயேசுவை உலக மீட்பராக, இரட்சகராக வெளிப்படுத்துகிறது. தூபவர்க்கம் இயேசுவை பிரதான ஆசாரியராக வெளிப்படுத்துகிறது (பொன் இயேசுவை ராஜாதி ராஜாவாக வெளிப்படுத்துகிறது). இயேசு பாவத்திலும், அக்கிரமத்திலும், மீறுதலிலும் உள்ள மனிதர்களை இரட்சிக்கும்படி இவ்வுலகத்தில் வந்தார் (பிறந்தார்) என்பது சத்தியம்.

கிறிஸ்மஸ் என்ற வார்த்தை முழு வேதாகமத்திலும் இல்லை. ஆதிசபையிலே கிறிஸ்துவின் பிறந்தநாளைக் கொண்டாடவும் கட்டளை இல்லை. யூதர்களுடைய வேதத்திலும் ஆதாரம் இல்லை. சரித்திரத்தில் முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளிலும் கிறிஸ்துவின் பிறப்பு பண்டிகையாகக் கொண்டாடப்பட்டதாக ஆதாரங்கள் இல்லை. மூன்றாம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் மன்னன் காலத்தில் பழங்கால ரோமனியர் விவசாய கடவுளான சனி தெய்வமாகிய சாட்டர்னாலியா என்ற தெய்வத்தை, டிசம்பர் 17 முதல் 24 வரை குளிர்காலம் முடிவடைந்து கோடை ஆரம்பமானதை பண்டிகையாக கொண்டாடினர். மேலும் டிசம்பர் 25ல் நீனூஸ் என்னும் சூரிய தேவதையின் பிறந்த நாளையும் கொண்டாடினர். அந்த நாள் சூரியன் கடக ரேகையில் சுற்ற ஆரம்பித்து மகர ரேகைக்கு மீண்டும் திரும்ப ஆரம்பிக்கிற நாள். சீரியர் மித்ராஸ் என்னும் சூரியக் கடவுளையும் வணங்கி வந்தனர்.

இவைகளிலே பெண்களுக்கு பண்டிகை கொண்டாட அனுமதி இல்லை. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் ஆண், பெண் வித்தியாசமில்லாமல் டிசம்பர் 25ஐ கி.பி. 218ல் கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாட அனுமதி பெற்று கொண்டாடினர். இவ்விதமே கிறிஸ்மஸ் பண்டிகை வந்தது. கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு இரட்சிப்பை அளிக்கிறது. அவருடைய நாமத்தை விசுவாசித்து இரட்சிக்கப் பட்டவர்களுக்குள் கிறிஸ்து உருவாக வேண்டும் அதாவது பிறக்க வேண்டும். கிறிஸ்மஸ் என்பது பாரம்பரிய பண்டிகை. கிறிஸ்துவின் பிறப்பு என்பது வேதாகம சத்தியம்.

ரோமன் கத்தோலிக்க நண்பர்களுக்கு

சிலைகளைப் பற்றி ஆண்டவர் கூறுகிறதாவது

இணைச்சட்டம் உபஆகமம் 4:2 12:32 (பக்கம் 271, 289)

திருவெளிப்பாடு 22:18, 19 (பக்கம் 496)

நான் உங்களுக்குக் கட்டளையிட்டுச் சொல்பவற்றோடு எதையும் சேர்க்கவும் வேண்டாம். அதிலிருந்து எதையும் நீக்கவும் வேண்டாம், கடைப்பிடிப்பதில் கவனமாய் இருங்கள்.

விடுதலைப்பயணம்:-

யாத்திராகமம் 20:23 (பக்கம் 115)

எனக்கு இணையாக வைக்க வெள்ளியாலான தெய்வங்களையும் பொன்னாலான தெய்வங்களையும், உங்களுக்கு நீங்கள் செய்துகொள்ள வேண்டாம்.

விடுதலைப்பயணம்:-

யாத்திராகமம் 20:4,5 (பக்கம் 114)

மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக் கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ, ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம்.

லேவியர் 26:1 (பக்கம் 191) 19:4 (பக்கம் 180)

நீங்கள் உங்களுக்கு எனச் சிலைகளையும், படிமங்களையும், கல் தூண்களையும் உருவாக்கிக்

கொள்ள வேண்டாம். வணங்குவதற்கெனக் கற்சிலைகளை நாட்டில் நாட்ட வேண்டாம்.

ஏசாயா 42:8 (பக்கம் 1059; 48:11 பக்கம் 912)

நானே ஆண்டவர் அது என் பெயர். என் மாட்சிமையைப் பிறருக்கோ என் புகழைச் சிலைகளுக்கோ விட்டுக் கொடேன். ஏசாயா 44:9 (பக்கம் 1063)

சிலை செதுக்குவோர் அனைவரும் வீணரே. அவர்கள் பெரிதாக மதிப்பவை பயனற்றவை. அவர்களின் சான்றுகள் பார்வையற்றவை; அறிவற்றவை எனவே அவர்கள் மானக்கேடு அடைவர். எதற்கும் உதவாத தெய்வச்சிலையை எவனாவது செதுக்குவானா? வார்ப்பானா? ஏசாயா 2:18 (பக்கம் 1005)

சிலைகள் அனைத்தும் ஒருங்கே ஒழிக்கப்படும்.

ஏசாயா 45:20 (பக்கம் 1066)

மரத்தால் செய்த தங்கள் சிலையைச் சுமந்து செல்வோருக்கும் விடுதலை வழங்காத தெய்வத்திடம் தொடர்ந்து மன்றாடுவோருக்கும் அறிவே இல்லை.

எரேமியா 10:14, 15 (பக்கம் 1118)

மனிதர் யாவரும் மூடர்கள், அறிவிலிகள், கொல்லர் எல்லாரும் தம் சிலைகளில் இகழ்ச்சியுற்றனர். அவர்களின் வார்ப்புப் படிவங்கள் பொய்யானவை. அவற்றுக்கு உயிர்மூச்சே இல்லை. அவை பயனற்றவை. ஏளனத்துக்குரிய வேலைப்பாடுகள், தம் தண்டனையின் காலத்தில் அவை அழியும்.

எரேமியா 51:52 (பக்கம் 1193)

ஆகவே நாட்கள் வருகின்றன என்கிறார் ஆண்டவர். நான் அதன் சிலைகளைத் தண்டிப்பேன். அந்நாடு முழுவதும் காயம்பட்டோர் குமுறியழுவார்.

ஏசாயா 45:16 (பக்கம் 1066)

சிலைகளைச் செய்வோர் அனைவரும் ஒருங்கே வெட்கி நாணுவர் அவர்கள் குழம்பித் தவித்தனர்.

ஒசேயா 14:8,9 (பக்கம் 1331)

இனிமேல் எப்ராயிமுக்குச் சிலைகள் எதற்கு? நானே அவனுக்குச் செவிசாய்த்து அக்கறை கொண்டுள்ளேன். ஞானம் நிறைந்தவன் எவனோ அவன் இவற்றை உணர்ந்து கொள்ளட்டும். பகுத்தறிவு உள்ளவன் எவனோ அவன் இவற்றை அறிந்து கொள்ளட்டும்.

மீக்கா 5:13 (பக்கம் 1368)

நீ செய்து வைத்திருக்கும் சிலைகளையும் படிமங்களையும் உடைத்தெறிவேன். உன் கைவினைப் பொருள்கள் முன் இனி நீ தலைவணங்கி நிற்க மாட்டாய்.

மீக்கா 1:7 (பக்கம் 1362)

அதன் செதுக்குப் படிமங்கள் எல்லாம் துகள் துகளாக நொறுக்கப்படும். அதன் பணயங்கள் எல்லாம் நெருப்பினால் சுட்டெரிக்கப்படும். அதன் சிலைகளை எல்லாம் உடைத்து கற்குவியல் ஆக்குவேன்.

அபக்கூக்கு 2:18, 19 (பக்கம் 1381)

சிற்பி செதுக்கிய சிலையாலும் வார்ப்பிடத்தில் வடித்தெடுத்த படிமத்தாலும் பயன் என்ன? அவை

பொய்களின் பிறப்பிடமே. ஆயினும் சிற்பி தான் செய்த ஊமைச் சிலைகளாகிய கைவேலைகளிலே நம்பிக்கை வைக்கிறான். மரக்கட்டையிடம் விழித்தெழும் என்றும் ஊமைக் கல்லிடம் எழுந்திரும் என்று சொல்லுகிறவனுக்கு ஐயோ கேடு அவை ஏதேனும் வெளிப்பாடு அருள முடியுமோ!

இணைச் சட்டம் உபாகமம் 14:1 (பக்கம் 290)

நீங்கள் உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் மக்கள் எனவே இறந்தவர்களுக்காக உங்கள் உடலைச் சிதைத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் தலை முடியை மழித்துக் கொள்ளவும் வேண்டாம்.

திருப்பாடல்கள் சங்கீதம் 88:5 (பக்கம் 887)

இறந்தோருள் ஒருவராகக் கைவிடப்பட்டேன். கொலையுண்டு கல்லறையில் கிடப்பவர் போலானேன். அவர்களை ஒரு போதும் நீர் நினைப்பதில்லை. அவர்கள் உமது பாதுகாப்பினின்று அகற்றப்பட்டார்கள்.

உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ (ஏசாயா 8:19.)

திருப்பாடல்கள் சங்கீதம் 88:10-12 (பக்கம் 887)

இறந்தோர்க்காகவா நீர் வியத்தகு செயல்கள் செய்வீர்? கீழுலகின் ஆவிகள் எழுந்து உம்மைப் புகழுமோ? கல்லறையில் உமது பேரன்பு எடுத்துரைக்கப் படுமோ?அழிவின் தலத்தில் உமது உண்மை அறிவிக்கப்படுமா? இருட்டினில் உம் அருஞ்செயல்கள் அறியப்படுமா? மறதி உலகில் உம் நீதி உணரப்படுமா?

திருப்பாடல்கள் சங்கீதம் 115:17, 18 (பக்கம் 913)

இறந்தோர் ஆண்டவரைப் புகழ்வதில்லை. மௌன உலகிற்குள் இறங்குவோர் எவருமே அவரைப் புகழ்வதில்லை. நாமோ ஆண்டவரை வாழ்த்துகின்றோம்.

திருப்பாடல்கள் சங்கீதம் 143:3 (பக்கம் 934)

இறந்து ஒழிந்தவர்களைப்போல என்னை இருட்டில் கிடக்கச் செய்தான்.

சபைஉரையாளர் சங்கத்திருவுரை ஆகமம் 9:5,6 (பக்கம் 987-988)

உயிருள்ளோர் தாம் இறப்பது திண்ணம் என்பதையாவது அறிவர். ஆனால் இறந்தோர் எதையும் அறியார். அவர்களுக்கு இனிமேல் பயன் எதுவும் கிடையாது. அவர்கள் அறவே மறக்கப்படுவார்கள். அவர்களுக்கு அன்பு, பகைமை, பொறுமை எதுவும் இல்லை. இப்பரந்த உலகில் நடக்கும் எதிலும் அவர்கள் பங்கெடுக்கப் போவதில்லை.

(வேதவசனம் இப்படிச் சொல்ல மரித்தவர்களுக்காக வேண்டுதல் செய்வதும், மரித்தவர்களை நமக்காக வேண்டுதல் செய்யுமாறு நாம் கேட்பதும் சரிதானா? வேத வசனத்துக்கு விரோதமான செயல்கள் அல்லவா. (வேதம் கூறுகிறது. ஞானவான் சிந்திக்கடவன்)

ஏசாயா 57:2 (பக்கம் 1082)

நேர்மையான வழிமுறையைப் பின்பற்றுவோர் தம் இறுதிப் படுக்கையில் இளைப்பாறுகின்றனர்.

ஏசாயா 38:18 (பக்கம் 1054)

பாதாளம் உம்மைப் போற்றிப் பாடாது; சாவு உம்மைப் புகழ்ந்து ஏத்தாது. பாதாளக் குழிக்குள் இறங்குவோர் நம்பிக்கைக்குரிய உம்மை நம்பியிருப்பதில்லை.

திருப்பாடல்கள் சங்கீதம் 6:5 (பக்கம் 815)

இறந்தபின் உம்மை நினைப்பவர் எவருமில்லை. பாதாளத்தில் உம்மைப் போற்றுபவர் யார்?

ஏசாயா 38:19 (பக்கம் 1054)

நான் இன்று உம்மைப் புகழ்வது போல வாழ்வோரே, வாழ்வோர் மட்டுமே உம்மைப் போற்றிப் பாடுவர்.

யோபு 14:10-12(பக்கம் 779)

மனிதர் மடிகின்றனர். மண்ணில் மறைகின்றனர். உயிர் போனபின் எங்கே அவர்கள்? மனிதர் படுப்பர். எழுந்திருக்க மாட்டார். வானங்கள் அழியும் வரை அவர்கள் எழுவதில்லை. அவர்கள் துயிலிலிருந்து எழுப்பப்படுவதில்லை.

1 தெசலோனிக்கர் 4:16, 17 (பக்கம் 385)

கட்டளை பிறக்க தலைமை வானதூதரின் குரல் ஒலிக்க, கடவுளுடைய எக்காளம் முழங்க ஆண்டவர் வானிலிருந்து இறங்கி வாருவார். அப்பொழுது கிறிஸ்து மீது நம்பிக்கைகொண்ட நிலையில் இறந்தவர்கள் முதலில் உயிர்த்தெழுவர். பின்னர் உயிரோடு எஞ்சி யிருக்கும் நாம் மேகங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டு எப்போதும் ஆண்டவரோடு இருப்போம்.

யோவான் 3:13 (புதிய ஏற்பாடு பக்கம் 169)

விண்ணகத்திலிருந்து இறங்கிவந்துள்ள மானிட மகனைத் தவிர வேறு எவரும் விண்ணகத்திற்கு ஏறிச் சென்றதில்லை.

மதத் தலைவரும் தலைவர்களும்.

ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு தம் சீஷர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷம் அறிவியுங்கள் என்று சொல்லிப் போனார். சீடர்கள் பிரசங்கித்தார்கள். விசுவாசிகள் பெருகினர். சபை ஏற்பட்டது. பேதுரு தலைவராக இருந்து செயல்பட்டார். கிறிஸ்து இயேசு சபைக்குத் தலைவராக இருந்தார். உலகில் தலைவர் பேதுரு. பேதுரு சென்றபின் பதிலாகத் தலைவர்கள் (போப்) வந்தனர். ஒரே உலகத்தலைவர் கி.பி. 250 வரை இருந்தனர். கி.பி. 250க்குக்குப் பின் மதக் குழுக்குள்ளிருந்த ஒற்றுமையானது சீர் கெட்டது. குருக்கள் ஒழுக்கம் தவறினர். வேத புத்தகத்தை விசுவாசிகளிடம் மறைத்தனர். எபிரெயு,கிரேக்க மொழியில் இருந்த வேதபுத்தகத்தை இலத்தீன் மொழியலாக்கி இலத்தீனை மையப்படுத்தினர். குருக்களிடம் பாவங்கள் பெருகின. இயேசுநாதர் சபைக்குத் தலைவராக இருப்பதை அகற்றினர். போப்புதான் எல்லாவற்றிற்கும் எல்லாமுமானவர் என்ற கொள்கையைக் கொண்டு வந்தனர். அவர் செய்வதெல்லாம் இயேசுவே செய்ததாகும் என நம்பும்படி செய்தனர். இயேசுநாதர் தலைவராக இல்லாததைக் கண்டு வேறு ஒரு ஆள் ஆதிமனிதனைக் கெடுத்தவன் சபைகுருக்களுக்குள் நுழைந்து வழிகாட்டினான். அவன் சொல்லைக் கேட்டுப் பலவிதமான துர் உபதேசங்களைச் சபையில் புகுத்தினர். வேத வசனத்துக்கு மாறாக கீழ்க்கண்ட கொள்கைகளைச் சபைக்குள் நுழைத்தனர்.

ரோமை சபையின் தலைநகராக்கினர். பேதுரு ரோமாபுரிக்குப் போய்ச் சபையை அங்கு நிறுவி அதைத் தலைநகராக்கினார் என்பதற்கு வேத வசனப்படியான ஆதாரங்களில்லை.

சத்தியத்துக்கு விரோதமான கொள்கைகள்

சபையில் நுழைக்கப்பட்ட விபரம் பின்வருமாறு

கி.பி. 250ல்	தெளித்தல் ஞானஸ்தானம்
கி.பி. 300ல்	சிலை வணக்கம்
கி.பி. 310ல்	செத்தவர்களுக்காக ஜெபித்தல்
கி.பி. 325ல்	குழந்தை ஞானஸ்நானம்
கி.பி. 363ல்	ஓய்வுநாள் மாற்றம்
கி.பி. 754ல்	முதல் முதல் பலிபூசை ஆரம்பம்
கி.பி. 755ல்	புனிதர்களது வணக்கம், தூதர்கள் வணக்கம்
கி.பி. 432ல்	மரியாள் வணக்கம்
கி.பி. 593ல்	உத்தரிக்கிற ஸ்தலம்
கி.பி. 600ல்	இலத்தீன் ஆராதனை
கி.பி. 606ல்	போப் உலகத் தலைவர்
கி.பி. 650ல்	மரியாளுக்குத் திருவிழா
கி.பி. 788-89ல்	சிலை, புனித பண்டங்கள் வணக்கம், சப்பரம் தூக்கல்
கி.பி. 973ல்	புனிதர் பட்டம் வழங்குதல்
கி.பி. 1003ல்	செத்தவர்களுக்குப் பூசை
கி.பி. 1074ல்	குருக்கள் விவாகம் செய்யக் கூடாது
கி.பி. 1076ல்	போப் தவறா வரம் பெற்றவர்

கி.பி. 1090ல்	ஜெபமாலை தோற்றம் பாவ மன்னிப்புச் சீட்டு
கி.பி. 1316ல்	மரியாள் என்றும் கன்னி
கி.பி. 1415ல்	நற்கருணையில் ரசம் நிறுத்தப்பட்டது
கி.பி. 1546ல்	பாரம்பரியம் தள்ளுபடியாகமம் வேதத்தில் இணைப்பு
கி.பி. 1854ல்	மரியாள் அமல உற்பவி
கி.பி. 1904ல்	மரியாள் மூலம் இரட்சிப்பு
கி.பி. 1907ல்	வேதபுத்தகத்தைப் படிக்கவோ ஆராயவோ கூடாது
கி.பி. 1925ல்	மரியாள் ஆத்ம சரீரத்துடன் மோட்சம் போனது
கி.பி. 1954ல்	மரியாள் பரலோக பூலோக ராக்கினி
கி.பி. 1968ல்	வேதம் படிக்க அனுமதி

இயேசுவே மத்தியஸ்தர் (பரிந்துபேசுகிறவர்)

யோபு 16:21; (பக்கம் 782)

ஒருவன் தன் நண்பனுக்காகப் பரிந்து பேசுகிறதுபோல அவர் மனிதர் சார்பாகக் கடவுளிடம் பரிந்து பேசுவார்.

1தீமோத்தேயு 2:5 (பக்கம் 393 புதிய ஏற்பாடு)

கடவுள் ஒருவரே. கடவுளுக்கும் மனிதருக்கும் இணைப்பாளரும் ஒருவரே. அவரே இயேசு கிறிஸ்து என்னும் மனிதர்.

எபிரெயர் 12:24 (பக்கம் 430)

புதியதோர் உடன்படிக்கையின் இணைப்பாளராகிய இயேசுவின் முன்னிலையிலும் நிற்கிறீர்கள். (இயேசு புதிய உடன்படிக்கையின் இணைப்பாளராக இருக்கிறவர்.

மரியாள் என்றும் கன்னி அமல உற்பவி

மரியாள் என்றும் கன்னியாக இருக்கவுமில்லை. அமல உற்பவியும் அல்லள். மரியாள் இயேசுவைப் பெற்றெடுக்கும் மட்டும் கன்னியாக இருந்தார். மத்தேயு 1:25 (பக்கம் 6) பின் மரியாளுக்குக் குழந்தைகள் இருந்தனர். மத்தேயு 13:55,56. (பக்கம் 29); மாற்கு 6:3. (பக்கம் 73); மாற்கு 15:40. (பக்கம் 98); யோவான் 7:3. (பக்கம் 178)

அமல உற்பவி

அமல உற்பவம் என்றால் புருஷனுடைய உறவின்றிப் பிறப்பதாகும். இயேசு அமல உற்பவமாய் ஆவியினால் பிறந்தார். மரியாவும் அமல உற்பவமாய்ப் பிறந்தார் என்பதற்கு வேத ஆதாரமில்லை. மரியாவுக்குத் தகப்பனும் தாயும் இருந்தனர். திருகுர்ஆனிலும் இதுபற்றிச் சொல்லப்பட்டுள்ளது. அமல உற்பவமாய்ப் பிறப்பதென் றால் முன்னாலேயே தீர்க்கதரிசனமாய்ச் சொல்லப்பட் டிருக்க வேண்டுமே. ஏசாயா தீர்க்கதரிசி சொல்லும்போது, இதோ ஒரு கன்னிப்பெண் கருத்தாங்கி ஒரு குமாரனைப் பெறுவாள். (ஏசாயா 7:14) பரிசுத்த ஆவி உன்மேல் வரும். உன்னதமானவரின் வல்லமை உம் மேல் நிழலிடும். ஆதலின் பிறக்கும் குழந்தை கடவுளுடைய மகன் எனப்படும். லூக்கா 1:35 (பக்கம் 103)

ஏசாயா 7:14,15 (பக்கம்)

இதோ கன்னிப் பெண் கருத்தாங்கி, ஒரு மகனைப் பெற்றெடுப்பாள் அவன் இம்மானுவேல் என்னும் பெயர் பெறுவான். தீமையை விலக்கி நன்மையைத் தெரிந்து கொள்ள அறியும்வரை அவர் வெண்ணெயும் தேனும் சாப்பிடுவார். இயேசுவைப் பற்றிப் பூலோகத்தில் சொல்லப்படுகிற மேன்மையைக் கண்டு கேட்க ஆசையாக உள்ளனர். 1பேதுரு 1:12 (பக்கம் 442) தேவதூதர்களால் செய்யக்கூடாத காரியத்தைச் செத்துப்போன எவராலும் செய்ய முடியாது.

வைதிக சமயங்களில் இருந்த சில குறைபாடுகளை எதிர்த்தும், சில முறைகளை மறுத்தும் தோற்றுவிக்கப் பட்டது சமண சமயம். இதைத் தோற்றுவித்தவர் வர்த்த மான மகாவீரர் என்பவர். கடவுள் நம்பிக்கை இல்லாதவர். படைப்போன் என்பவன் ஒருவன் இல்லை. ஒவ்வொருவனும் தன் முயற்சியால் உலகில் வெற்றியுடன் வாழலாம். நல்ல நம்பிக்கை, நல்ல அறிவு, நல்ல ஒழுக்கம் பூண்டு வாழவேண்டும். கொல்லாமை, புலால் உண்ணாமை வேண்டும். இத்தகையவன் ஞானநிலை அடைவான் என்பது இவரது கொள்கை. இவரது சீடர்கள் தங்களை முற்றும் துறந்தவர்கள் என்று சொல்லி நிர்வாணமாகச் சுற்றித் திரிந்ததால் மக்கள் வெறுப்புக் கொண்டனர். இம்மதம் அதிகம் பரவாமற் போயிற்று.

புத்த மதம்

வைதிக சமயத்தில் ஊன் வேள்வி முறை இருந்தது. வழிபாட்டு முறைகளும் கடைப்பிடிப்பதற்கு இயலாதபடி இருந்தது. இதற்கு எதிராகவே புத்த மதம் தோற்றுவிக்கப் பட்டது. சித்தார்த்தர் என்ற அரசிளங் குமாரர் இதைத் தோற்றுவித்தார். உலகில் நோய், மூப்பு, இறப்பு இருப்பது கண்டு பயந்து இவர் போதிமர நிழலில் இருந்து சிந்திக்கத் தொடங்கினார். ஒரு பெருவிளக்கம் இவருக்கு உண்டா யிற்று. அதனால் புத்தர் என்று பெயர் பெற்றார்.

ஆசையே துன்பத்திற்குக் காரணம். ஆசையை ஒழிக்க வேண்டும். கொல்லாமையைக் கடைபிடித்து எவ்வுயிருக்கும் தீங்கு செய்யக் கூடாது. மக்களிடையே வேறுபாடு கூடாது. சன்மார்க்க வாழ்வு மிக அவசியம். கடவுள் ஒருவர் இருந்தால் அதற்கு தக்க பலன் கிடைக்கும் எனப் போதித்தார். இவர் தமது 80ஆம் வயதில் மரணமானார்.

இவர் போதி மர நிழலில் சிந்தனை செய்து கொண்டிருக்கும் போது மக்கள் வந்து இவரிடம் நீர் கடவுளா? கடவுள் அவதாரமா? ெப்ரிய மகானா? யார் எனக் கேட்டனர். நான் கடவுளுமில்லை, அவதாரமு மில்லை, மகானுமில்லை உலகம் தோன்றி எட்டாயிரம் ஆண்டுகள் நிறைவேறும்போது மேசியா (இயேசு) என்ற பெயர்கொண்ட ஒருவர் உலகின் மத்திய இடத்தில் தோன்றுவார். அவரே உலகைப் பாவத்திலிருந்து மீட்பவர் என்று கூறினார்.

(ஆதாரம்-புத்த நூல்-திரிபிடகம்-திக்நிக்யா என்ற பகுதியிலிருந்து)

கிறிஸ்தவ மார்க்கம் - தோற்றம், விதம்

இயேசு கிறிஸ்து கிறிஸ்தவ மதத்தின் ஸ்தாபகர் இல்லையென்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அதை நிறுவவும் அவர் வரவில்லை. "பாவிகளை இரட்சிக்க இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் வந்தார்" என்று வேதம் சொல்லுகிறது. (1தீமோ. 1:15). பாவிகளை அவர்களது பாவங்களிலிருந்து மீட்டுப் பரலோகத்திற்கு வழிகாட்டவே வந்தார். ஆதியிலே அவர் அநாதியாய், வார்த்தையாய் இருந்தார். வேதம் சொல்லுகிறது: " ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தையானது மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்". (யோவான். 1:1, 14)

இந்த வார்த்தையான தேவன் "இயேசு" என்ற பெயரில் மனுஷனாய்ப் பிறப்பார் என்று நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே முன்னறிவிக்கப்பட்டுள்ளது. இதைப் போலவே வேறு எவர்பிறப்பும் முன்னறிவிக்கப் படவில்லை. அறிவிக்கப்பட்டபடியே பிறந்தார். இவரது இறப்பும் உயிர்ப்பும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. ரிக், சாம, புத்த வேதங்களும் இது பற்றிக் கூறுகிறது. இரத்தம் சிந்தி, மரித்து உயிர்க்கவே உலகத்திற்கு வந்தார். மரித்தார், உயிர்த்தார். 12 சீடர்களைத் தெரிந்து கொண்டார் 500க்கும் அதிகமான பேர்களுக்குத் தரிசனமானார். தமது சீடர்களுக்கும் தரிசனமாகி "நீங்கள் உலகமெங்கும் போய் எல்லா சிருஷ்டிகளுக்கும் என்னைப் பற்றிய நற்செய்தியை அறிவியுங்கள். மக்கள் கேட்டாலும் கேளாவிட்டாலும் போய் அறிவியுங்கள். என்னை

விசுவாசித்து என்னை ஏற்றுக்கொள்கிறவன் இரட்சிக்கப் படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்கு உட்படு வான். நானே வழி, சத்தியம், ஜீவன் என்னையல்லாமல் எவனும் பரலோகம் செல்ல முடியாது. மரித்தேன் ஆனாலும் சதாகாலமும் உயிரோடே இருக்கிறேன், என்னையல் லாமல் வேறே தெய்வம் இல்லை, எனக்கு முன்னும் இருந்ததில்லை. எனக்குப் பின்னும் இருக்கப் போவ தில்லை. நான் சிந்தின என் பரிசுத்த இரத்தமே பாவங்களை மன்னிக்க வல்லது. "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீங்கி நம்மைச் சுத்திகரிக்கிறது என்று வேதவாக்கியங்களும் சாட்சி கொடுக்கின்றன" என்று சொல்லி சீடர்களை அனுப்பிவிட்டுப் பரலோகம் சென்றி ருக்கிறார். அங்கு சென்று அவரை நம்பி தூயவாழ்வு வாழும் அவரது சீஷர்களுக்கு அநேக இருப்பிடங்களை ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறார். அங்கே இருந்து அவரது பிள்ளைகளை அவரிடம், அழைத்துப்போக ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அந்த நாள் யாருக்குமே தெரி யாது. அவரது சீஷர்கள் அவரது வருகையை எதிர்நோக்கி இருக்கிறார்கள். அந்த நாள் மிகவும் சமீபித்திருக்கிறது.

அவரது சீடர்கள் பல இடங்களுக்கும் சென்று அவரைப் பற்றிய நற்செய்தியை அறிவித்தார்கள். விசுவாசிகள் நாள்தோறும் பெருகிக்கொண்டே வந்தனர். சீடர்கள் அந்தி யோகியா என்ற இடத்தில் அநேக ஜனங்களுக்குப் போதித் துக் கொண்டிருக்கையில் சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்ற பெயர் முதன் முதலாக வழங்குவதாயிற்று. பிறகு கிறிஸ்தவ மதம் என்று கி.பி.60-ல் அழைக்கப்பட்டது.

இந்து மார்க்கம்

முதலில் 'இந்து' என்ற பதத்தின் பொருள் என்ன? அது எப்படி வந்தது? என்று அறிந்து கொள்ள வேண்டும்.

ஈரான் தேசப் பாகங்களிலிருந்து ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்து, சிந்து நதியின் செழிப்பைக் கண்டு, அதிசயித்து, அதை உச்சரிக்கத் தெரியாமல் 'சிந்துஸ்' என்றனர். கி.மு. 522ல் தரியூ என்ற பெர்சிய மன்னன் இண்டஸ் நதியின் பாகங்களையொட்டிய பகுதிகளைத் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தான். அவர்கள் 'சிந்து' என்ற பதத்தை 'இந்துஸ்' என்றனர். இஸ்லாமிய ஆதிக்கத்தின்போது இந்தியாவை இந்துஸ் தான் என வழங்கினர். இந்துஸ்தானத்தில் வசித்த மக்கள் இந்துக்கள் என அழைக்கப்பட்டனர். இந்து என்பது ஒரு மதத்தின் பெயராகக் கருதப்படவில்லை. (ஆதாரம் - மனோரமா, இயர் புக், 7-5 பக்கம். 225)

கி.மு. 484-465 ல் எழுதப்பட்ட "எஸ்தர்" என்ற ஒரு பகுதி பரிசுத்த வேதாகமத்தில் உள்ளது. அதில் பெர்சிய மன்னன் அகாஸ்வேரு என்பவன் இந்து தேசம் முதல் எத்தியோப்பியா தேசம் வரைக்குமுள்ள 127 நாடுகளையும் ஆண்டான் என உள்ளது. இதிலும் இந்து என்பது மதத்தைக் குறிப்பதாக இல்லை. இந்திய புராணங்களில் இந்து என்ற பெயரே இல்லை. பரதன் ஆண்டதால் பாரத நாடு என்று அழைக்கப்பட்டது. அதற்கு முன் என்ன பெயரால் அழைக்கப்பட்டதோ தெரியவில்லை.

இந்து முன்னனித் தலைவர் திரு. தேவதாஸ் அவர்கள் கூறும்போது இந்து என்ற சொல்லை நாம் மத அடிப்ப

டையில் பயன்படுத்தவில்லை என அவரே சொல்லியிருக்கிறார். ஆர். எஸ். எஸ் பற்றிய விளக்கம் (பக்கம் 8)

இந்து என்ற பெயரே வெளிநாட்டுப் பெயர், நாட்டின் மக்களைத் தங்களிடமிருந்து பிரித்துக் காட்டும்படிக்கு இப்பெயரை முகமதியர் கொடுத்தனர். சமஸ்கிருத வேதம் எதிலும் இப்பெயர் இல்லை. Dr. Ambadkar Writings & Speeches. Vol-1. Pub. Ednl. Dept. Govt. of Maharastra 1979 (page - 50)

இந்துக்கள் என்பவர் யார்?

ஆரியர்கள் வடமேற்குக் கணவாய் வழியாக நம் நாட்டிற்குள் நுழைந்தது போல் எழுத்துக் காலத்தில் இவர்கள் முதன் முதலில் சிந்துநதிப் பிரதேசத்தில் குடியேறி, பின் கங்கைநதி பாயும் பிரதேசத்தையும் கைப்பற்றி விந்தியமலைவரை வென்று, ஆரிய வர்க்கத்தை அமைத்துக் கொண்டனர். ஆரிய வர்க்கத்துக்கு இந்துஸ்தான் என்று பெயர். இந்துஸ்தான் என்பதற்கு இந்துக்கள் வசிக்குமிடம் என்று பொருள்.

ஆரியர்களுக்குத்தான் இந்துக்கள் என்று பெயர். இப்பெயர் பாரசீகர்களால் ஆரியர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்து என்ற பதம் பாரசீக மொழியைச் சேர்ந்தது. ஆரியர்களே இந்துக்கள். ஆதாரம் திருமந்திரம், திருமூலர், வரலாறு (பக்கம். 72)

இந்து மதம் பெயர் வந்த விதம்

இமயம் முதல் குமரிவரை வசித்துவந்த மக்கள் திராவிடர் எனப்பட்டனர். உலக மொழிகளில் சிறந்தவற்றில்

ஒன்றான தமிழ் மொழியையே பேசி வந்தனர். இயற்கையையே வணங்கி வந்தனர். சிலை வணக்கம் இருக்கவில்லை. எவ்வித வேத நூலோ, மதமோ இருந்தத தில்லை. தங்களுக்குள்ளே வேறுபாடின்றித் தனித்தனி பகுதிகளில் வசித்து வந்தனர். திராவிட ராஜ்யங்கள் என ராஜ்யங்களை அமைத்துக் கொள்ளவில்லை.

இந்நிலையில்தான் ஆரியர்கள் நம் நாட்டுக்குள் நுழைந்தனர். என்ன காரணத்தினாலேயோ திராவிடர் ஆரியர்களை எதிர்த்து அவர்களை வெளியேற்ற முடியா மற்போயிற்று. இந்தியாவின் வளமை கண்ட ஆரியர் பல இடங்களைப் பிடித்து தங்களுக்கு ஆரிய ராஜ்யங்களை அமைத்துக் கொண்டனர். இந்தியாவில் நிலைத்து வாழும்படிக்கு நான்கு வேதங்களை உருவாக்கினர். மிருக பலி செலுத்தி யாகம் செய்து மாமிசம் புசித்தனர். ஆரியர்களின் ஆதிபிதா ஆபிரகாம் என்பர் அபிரகாம் என்ற பெயர் மருவி பிரம் ஆனது. நாங்கள் பிரமனின் புத்திரர் ஆனதால் பிராமணர் என்று சொல்லிக் கொண்டனர். மிருக பலியையும் புலால் உண்பதையும் மக்கள் வெறுத்ததால் அதை நிறுத்தினர்.

இத்தகைய நிலையில் நாடு இருக்கையில் ஆங்கிலேய ஆட்சிக்குட்பட நேர்ந்தது. ஆங்கிலேயர்தான் 8ஆம் நூற்றாண்டில் இந்து மதம் என்ற பெயர் கொடுத்தனர்.

(மேலும் மகாத்மா காந்தி எழுதிய யங் இண்டியா வால்யும்-5 & இந்து மதம் பற்றி நேரு எழுதிய புத்தகங் களை வாசிக்கவும்.)

இந்து மத போதனை

இந்து மதம் பல தெய்வ வழிபாட்டைக் கூறுகிறது. ஆதலின் இதைத் தோற்றுவித்தவர் யார் எனக் கூற முடியாது. இந்து மார்க்கத்தில் பல பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றின் கொள்கையும் தம்முள் வேறுபட்டனவாக உள்ளன. ஒரு பிரிவில் பல பிறவிகள் உண்டென்றும் தெய்வம் பல அம்சங்களில் அவதாரம் எடுக்கிறார் என்றும் கூறப்படுகிறது. அடுத்தபிரிவு அதை முற்றும் மறுக்கிறது. சடங்குகள் செய்தல், பூஜை வைத்தல்,விரதமிருத்தல், புனித நீராடல், புனித யாத்திரைகள் போதல், தானதர்மம் செய்தல் போன்றவை பொதுவானவை. சிலை வணக்கம் செய்வாரும் உண்டு. இதை மறுப்பவரும் உண்டு. வேத நெறிப்படி ஒழுகினால் சிவலோகம் அல்லது வைகுண்டம் போகலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சிவலோகம் வைகுண்டம் எங்கே இருக்கிறது? எவ்வளவு நீளம், எவ்வளவு உயரம்,எவ்வளவு அகலம், எத்தனை வாசல்கள் எப்படிப்பட்ட விளக்கு அங்கே இருக்கும் என்று சொல்லப்படவில்லை. இதைக் கற்பனை செய்து சொல்ல முடியாது.

கீதை சொல்லும் போதனைகள்

தேவர், பிராமணர், குருமார், ஞானிகளைப் போற்று வதும் ஹேமத்தால் செய்யும் தவம் என்னப்படும்

(கீதை 17:14)

இக்காலத்து பிராமணர் எப்படி இருக்கிறார்கள். அவர்களைப் போற்றினால் தவம் செய்ததற்கு சமம் என்றால் எப்படி ஒத்துக்கொள்ள முடியும். பிராமணர் யார் என்று பார்த்தோமே.

எதிரிகளை எரிப்பவனே பிராமணன். சத்திரியவன், வைசியன், சூத்திரன் (கீதை. 18:40,)

இப்போதனையில் அன்பு எங்கே இருக்கிறது? சமண, புத்த, கிறிஸ்தவ மார்க்கங்கள் என்ன போதிக்கின்றன. பகைவனுக்கும் அருள்வாய் என்றும், எல்லாம் சிவமயம் என்றும் சொல்லப்பட்டுள்ளதே.

மூன்று வேதங்களை அறிந்து யாகங்களால் என்னைப் பூஜித்து, சோமபானம் செய்து பாவத்திலிருந்து விடுபட்டவர் சுவர்க்கத்தில் தேவபோதம் அனுபவிக்கின் றனர். புண்ணியம் தேய்ந்தபின் மண்ணுலகில் புகுகின் றனர். (கீதை. 9:20, 21.)

சுவர்க்கலோகம் சென்ற பின் மீண்டும் மண்ணுலகம் வரத் தேவையில்லையே எப்போதெல்லாம் அறம் அழிந்து மறம் மேலோங்குகிறதோ அப்போதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன். நல்லோரைக் காத்து, கெட்டவர்களை அழிக்கவே யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன். (கீதை . 4:7, 8.)

தற்காலத்தில் அறம் முற்றிலும் அழிந்து மறம் தலைவிரித்து ஆடுகிறது. கெட்டவர்கள் பெருகியே வருகின்றனர். நம் நாட்டில் படுகொலை பல செய்தவர்கள், பலவித தீமைகளைப் புரிந்தவர்கள், இலஞ்சம் வாங்கிய பெருங்குடி மக்கள்பற்றி தினமும் செய்தித் தாள்களில் படிக்கிறோம். அவதாரம் எடுத்துச் செயல்படுவதற்கு நல்ல காலக்கட்டம் வந்துள்ளது அல்லவா!

ஞானத்தால் பாவங்களைப் போக்குபவர் பின்பு பிறப்பதில்லை. (கீதை. 5:17 கீதை . 9:20, 21)ல் சுவர்க்கம் போனவர் புண்ணியம் தேய்ந்த பின் மண்ணுலகிற்கு வருகின்றனர் என்று உள்ளது. இரண்டிற்கும் ஏன் இந்த வேறுபாடு.

மகாபாரதம் எழுதிய பின் அதில் இடைச்செருகலாக இணைக்கப்பட்டது கீதை என ஆராய்ச்சியாளர் சிலரின் கருத்தாகும். (கீதையில் முன்னுரை)

கீதையிலுள்ள சில உபதேசங்கள்

(கீதை 3:24) ஜாதிக் கலப்பிற்கும் நானே கர்த்தாவாய் மக்களை கெடுத்தவன் ஆவேன்.

(கீதை 4:13) குணத்துக்கும் கர்மத்துக்கும் ஏற்ப நான்கு வருணங்களைப் படைத்தேன்.

(கீதை 1:43) குலநாசகர்கள் செய்யும் வர்ணக் கலப்பினால் ஜாதி குலதர்மங்கள் நிலைகுலைகிறது.

(கீதை 1:42) குலக் கலப்பினால் லத்தார்க்கும் அதை அழித்தார்க்கும் நரகம்தான்.

(கீதை 1:44) குலதர்மத்தை இழந்தவர்கள் நரகில் நெடிது வசிக்கின்றனர்.

திராவிட மக்களே கீதையில் கூறப்பட்டுள்ள இந்த உபதேசங்களைச் சிந்தித்துப் பாருங்கள். குலக்கலப்பு என்பது ஆதிமுதலே இருந்துள்ளது. ஆரியர் வந்தபின் குலப் பிரிவு அதிகமாகி இந்திய மக்களினம் கெட்டுவிட்டது. அறிவு வளரவளர குலப்பிரிவு மறைந்து எல்லோரும் ஓரினம் என்ற மனப்பான்மை ஓங்கி சமத்துவம் உலக மக்களிடையே நிலவி வருகிறது. இந்த நிலையில் கீதையின் போதனையைச் சிந்தித்துப் பாருங்கள் மக்களில் குலக்கலப்பு செய்தார்க்கு நரகம் என்றால் அறிவு மிக்க சான்றோர்கள் பலர் குலக் கலப்பு செய்துள்ளனர். நம் தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள், திரு. ஜவஹர்லால் நேரு, திரு. T. V. சுந்தரம் அய்யங்கார், டாக்டர் அம்பேத்கார், E. V. இராமசாமி பெரியவர், திரு. ராஜ கோபாலாச்சாரியார் இவர்களுக்கெல்லாம் நரகம்தானா?

பழம்பெரும் புலவர் பெருமக்கள் சொல்லிப்போன சில பாடல்களைப் பார்த்துச் சிந்திப்போம்.

தேடுவாய் புலத்தியனே நன்றாய்க் கேளு
தீங் கிடங்கைத் தேடாதே தெரியச் சொன்னேன்
பாடுவர்பதினெட்டுப் புராணங்கட்கு
பாரதமும் கட்டப்பா பரிகாசங்கள்
நாடதனில் பிராமணர்கள் பிழைக்கச் செய்த
நவக்கிரக கட்டப்பா நம்ப வேண்டாம்.

அகஸ்தியர் ஞானப்பாடல் 30. ல் 27 ஆம் பாடல்

நேமங்கள் நிட்டைகள்
வேதங்கள் ஆகம நீதிநெறி
ஓமங்கள் தர்ப்பணம் சக்தி
ஜெப மந்திர யோகநிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறுநிலை
பூசி நலமுடனே சாமங்கள் தோறும்
இவர் செய்யும் பூசைகள் கற்பனையே.

பட்டினத்தார் பாடல்

பாரப்பா நாலு வேதம்
நாலும் பாரு ஏய்ச்சலர்
வயிறு பிழைக்கச் செய்த மார்க்கம்

சிவவாக்கியர்

கண்டதை யெல்லாம் கடவுளென்று
கையெடுக்கும் கண்மூடித் தனமெல்லாம்
மண்மூடிப் போகட்டும்.

இராமலிங்க அடிகள்.

உலகில் பிறந்த முன்னோர்கள்
ஓதிய கலைகள் எல்லாம்
நிலையதாம் ஜோதி தன்னை
நிசமதாய்ச் சொல்லவில்லை
பலப்பல பேதமாய்ப் பங்கமாய்க் கூறு செய்தே
அலகைப்போல் பொய்யைப் பேசி
அருநரகில் அமிழ்ந்துபோனார்.

அவ்வை - தனிப்பாடல்

கறந்த பால் முலை புகா
கடைந்த வெண்ணெய் மோர் புகா
உடைந்த சங்கின் ஓசையும்
உயிர்களும் உட்புகா - வேரடியில்
உதிர்ந்த பூ மரம் புகாவெனில்
இறந்த மானிடர் இனிப் பிறப்பதெங்கே.

சிவவாக்கியர்

கலையுரைக் கற்பனையை
நிலையெனக் கொண்டாடும்
கண்மூடிப் பழக்க மெல்லாம்
மண்மூடிப் போக.

இராமலிங்க அடிகள்

கடவுளுக்குப் பெண்டேது பிள்ளையேது?
காமகுண லீலை முதலான தேது?
கடவுளுக்குப் பகடி சீட்டு தாய மேது?
காடுகளில் வேட்டைக்குத் திரிவதேது?
கடவுளுக்கு காமிகளின் தொழிலே யில்லை.

காருண்யத் தொழில் ஒன்றே கடவுள் பாரம்.

அகஸ்தியர் ஞானப்பாடல்

ஆதிமக்கள் தெய்வத்தைச் சிவம் என்றே அறிந்திருந் தனர். சிவம் என்றால் ஒளி, வெளிச்சம் என்று பொருள் 'ஆதிசிவம்' ஆதிமுதல் ஓயா ஒளியாக இருப்பவர் தெய்வம். பின்னால் வந்த புராணக்கதைகளைக் கட்டினவர்கள் 'சிவம்' என்பதில் 'ம்' ஐ எடுத்து விட்டு, 'ன்' அமைத்து சிவன் என ஒரு ஆள்தத்துவத்தை அமைத்து, அதற்கு மனைவி பிள்ளைகளையும் உருவாக்கி தெய்வக் குடும்பத்தை அமைத்தனர். அமைக்கப்பட்ட தெய்வங்கள் பெரும்பாலும் பிராமணர் வம்சத்தவரேயாவர். பிள்ளையார், முருகன் பிறந்த விதத்தை நாலைந்து வழிகளில் சொல்லப்பட்டுள் ளது. ஒரே ஆள் நாலைந்து விதங்களில் எப்படிப் பிறப்பார் - கற்பனையே.

இந்துப் புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறவர்களின் பிறப்பு அவர் செயல்கள் முதலியவற்றை அறிய தரும பரீட்சை, இந்துமதப் பண்டிகைகள் என்ற புத்தகங்களை வாசித்துப் பாருங்கள்.

இந்துக்கள் அல்லாமல் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளும் திராவிட இன்மக்களே சிந்தித்துப் பாருங்கள். ஒரே மெய் மார்க்கம், ஒரே மெய்த் தேவன் யாரென்று கேட்டு விசாரித்து அவரை நம்புங்கள். பாவம் தீர்ந்து பரலோகம் போகலாம்.

இஸ்லாம் மார்க்கம்

இஸ்லாம் மார்க்கம் தோற்றுவித்தவர்

இஸ்லாம் மதத்தை முகமது நபி தோற்றுவித்தார். இவர் சிறுவயதில் பெற்றோரை, இழந்தார். வாணிபத்தில் மிகவும் ஆர்வம் கொண்டவர். தமது 25ஆம் வயதில் தன்னைவிட 15 வயது மூத்தவரான கதீஜா என்ற சீமாட்டியை மணந்து 7 பிள்ளைகளைப் பெற்றார். பின் 17 பெண்களை மணந்தார். தமது 56ஆம் வயதில் 9 வயதுச் சிறுமியை மணந்தார். பிறருடைய மனைவிமாரைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டார். தமது 63ஆம் வயதில் மரணத்தைத் தழுவினார். (அ.வெ.நடராஜன் எழுதிய நபிகள் நாயகம் வாழ்க்கை வரலாறு)

இஸ்லாம் மார்க்கம் தோற்றுவிக்கக் காரணம்

முகமது நபிகள் காலத்திலிருந்தே அரபிய மக்கள் பல தெய்வங்களை வழிபட்டு வந்தனர். 360 கற்களை நாட்டி வணங்கினர். பல மனைவியரை மணந்தனர். ஒழுங்கான வாழ்க்கையின்றி இருந்தனர். இந்தச் சமுதாயத்தைச் சீர்திருத்தவேண்டி நபிகள் அவர்களுக்கு நல்லூரை கூறினார். மக்கள் கேட்கவில்லை. பின் மீண்டும் வந்து போதனை செய்தார். சில மக்கள் ஏற்றுக் கொண்டனர். அவர்களில் அதிகமான பேர் வணங்கி வந்த தெய்வத்தின் பெயர் அல்லாஹ் என்பதாகும். மற்ற எல்லாத் தெய்வங் களையும் நீங்கிவிட்டு அல்லாஹ் ஒருவரையே வணங்கும் படி செய்தார். 360 கற்களில் எல்லாவற்றையும் நீக்கிவிட்டு ஒரு கல்லை மட்டும் வைத்துக் கொள்ளச் செய்தார்.

(ஆதாரம் - தி ரிலிஜன்ஸ் ஆப் தி ஒர்ல்டு)

ஹிரா என்ற குகையில் இவர் சிந்தனை செய்து கொண்டிருக்கும்போது ஜிப்ரீல் என்ற தூதன் வந்து இறை வெளிப்பாட்டைத் தனக்கு வெளிப்படுத்தினதாகச் சொன்னார். அப்போதிருந்த யூத, கிறிஸ்தவச் சமயக் கருத்துக் களை ஒட்டியும் வெட்டியும், இவற்றில் இல்லாத கருத்துக் களையும் சேர்த்துக் குரானை ஓதினார். இவருடைய சீடர்கள் குரானில் அதிகமானவற்றை எழுதியுள்ளனர்.

இவரது பல மனைவிகளில் ஒருவரான ஆயிஷா என்பவர் சொன்னதாக அல்புகாரி 1:44ல் சொல்லப்பட்டிருப் பதைக் கவனியுங்கள். உனக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக் கும் காலங்களிலும் முகமது என் மடியில் சாய்ந்த வண்ணமாகவே குரானை ஓதுவார்.

இம்மார்க்கத்தின் போதனை

தெய்வம் ஒருவர்தான் உண்டு. அவர் அல்லா, சிலை வணக்கம் செய்யக்கூடாது. ஒரு நாளில் 5 முறை தொழுகை செய்ய வேண்டும். பல கடவுளை வழிபடுகிறவர் களை முஸ்லிம் ஆட்சிக்குட்படுத்த வேண்டும். மரணம், உயிர்ப்பு, நியாயத்தீர்ப்பு உண்டு. சன்மார்க்க ஜீவியம் வேண்டும். அவனவன் செய்த செயல்களுக்குத் தக்க பலன் கிடைக்கும். முகமது 22 மார்க்க யுத்தங்கள் செய்து அதன் மூலம் மதம் பரப்பினார்.

சன் மார்க்கமாய் நடப்பவனுக்கு மறு உலகில் புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட, யாரும் தீண்டிராத கண் அழகிகளை அவர்களுக்கு நான் திருமணம் செய்து வைப்பேன். மேலும் பச்சைப் பட்டாடை, தலையணைகள், பஞ்சு மெத்தைகள்,

மாடமாளிகை, சுகபோக வாழ்க்கை, பழரச பானங்கள், அழகிய கன்னிப்பெண்கள் யாவையும் அவர்களின் நன்மைக்குக் கூலியாகக் கொடுப்பேன் என அல்லா கூறுவதாக குரானில் எழுதப்பட்டுள்ளது. (குரான்-2:25, 44:54,55, 55:56, 56:10-38, 76:11-22, 88:1-14), இதுதான் குரான் கூறும் மோட்சம்.

மாமிச சரீரத்துடன் பரலோகம் போய் உணவு உண்பதும், பெண்களை மணந்து பிள்ளைகளை பெறுவது என்பதும் எப்படித் திண்ணமாகும். பரலோகிலே கொள்வனை கொடுப்பனை செய்வதெப்படி?

வேதாகமம் சொல்கிறது. பரலோக ராஜ்யத்தில் தேவனுடைய பிள்ளைகள் மாமிச சரீரம் இல்லாமல் ஆவிக்குரிய சரீரத்தில் வெண்ணாடை தரித்து தேவ தூதர்களைப்போல இரவும் பகலும் தேவாதி தேவனைத் துதித்துக் கொண்டே இருப்பர். அங்கே கவலை இல்லை. கண்ணீர் இல்லை, பசி இல்லை, தாகமில்லை, மனித சம்பந்த உறவு இல்லை, எங்கும் மகா பரிசுத்தம். ஒளிமய மான நாடு. அங்கே விளக்கே இல்லை. மரித்தேன் ஆனாலும் சதாகாலமும் உயிரோடிருக்கிறேன் என்று சொல்லும் இயேசுவே விளக்கு. அதற்கு 12 வாசல்கள் உண்டு. அது நம் இந்தியாவைப் போல 1½ மடங்கு நீள அகல உயரமாகும். எப்போதும் திறந்தே இருக்கும் ஏனெனில் அங்கே துன்மார்க்கர், பாவிகள், நாத்திகர், திருடர் போகவே முடியாது அங்கே அநேக வாசஸ்தலங்கள் உள்ளன. கடந்த 2 ஆயிரம் வருடங்களாக இயேசு தம்மை விசுவாசித்து பரிசுத்த வாழ்வு நடத்தி வரும் தம்

பிள்ளைகளுக்கு இதை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். தீடிரென ஒருநாள் வந்து அழைத்துப்போவார். இந்த விபரத்தை இயேசுவே தம் சீஷனுக்குக் காட்சி தந்து சொன்ன உண்மைகள்.

சில விளக்கங்கள்

ஆதியிலே தெய்வம் ஒருவனுக்கு ஒருத்திதான் என்ற அன்பின் அடிப்படையில் ஒரு மனுஷியையும் படைத்தார். பல மனைவியரை மணப்பது தேவ ஏற்பாட்டுக்கு விரோதமானது. அப்படியானால் படைப்பிலேயே பல பெண்களைப் படைத்திருப்பார் வேதாகமம் முழுவதிலும் ஒரே மனைவியை உடையவனாகவே ஒவ்வொருவனும் இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆதி காலத்தில் பல மனைவியரை மணந்ததை தேவன் மக்களின் மனக்டினத் தினிமித்தம் அனுமதித்தார். ஆனால் இன்ஜிலை (புதிய ஏற்பாட்டைப்) பெற்ற பிற்பாடு ஒரே மனைவி என்றமுறை வற்புறுத்தப்படுகிறது. ஒரு முஸ்லிம் 4 பெண்களை மணக்கலாம் என்று குரானில் சொல்லப்படுவது ஏன்?

இஸ்லாமியர் தங்களை இப்ராஹிம் என்பவரின் பிள்ளைகள் என்று சொல்கிறார்கள். அது உண்மைதான். அவர்கள் இப்ராஹிம் பிள்ளைகளானால் அவர் வணங்கி வந்த தெய்வத்தைத்தானே இவர்களும் வணங்க வேண்டும். இப்ராஹிம் வணங்கி வந்த தெய்வத்திற்குப் பல பெயர்கள் வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. அப்பெயர்களுள் அல்லா என்ற பெயர் இல்லையே!

காபிரியேல் என்னும் தூதன் தேவ சமுகத்தில் நிற்பவன். தேவ செய்திகளை மக்களுக்கு அறிவிப்பவன். பொய்யான செய்திகளை அவன் சொல்லவே மாட்டான். முகமதுவுக்கு இறை விளக்கங்களைத் தூதன் வெளிப் படுத்தினதாக குரான் சொல்லுகிறது. அப்படியானால் வேதாகமத்தில் சொல்லப்பட்ட சத்தியங்களுக்கு எதிராக இருப்பதேன்? தேவன் என்றென்றும் மாறாதவர். கிறிஸ்து வுக்கு 652 ஆண்டுகளுக்குப் பின்னால் எழுதப்பட்ட குரானிலும் சத்தியங்கள் மாறாமலே இருக்க வேண்டும் அல்லவா?

இயேசுகிறிஸ்து பிறந்து, மரித்து, உயிர்ப்பார் என்று வேதாகமத்தில் ஆதிமுதல் சொல்லப்பட்டுள்ளது. நாலா யிரம் ஆண்டுகளுக்கு முன்னேயிருந்த பல தீர்க்கத் தரிசிகள் இதை முன்னறிவித்துள்ளார்கள். அப்படியே இயேசு பிறந்து, மரித்து, உயிர்த்தார். இன்றும் அநேகருக் குத் தரிசனமாகிக் கொண்டிருக்கிறார். காபிரியேல் என்னும் தூதன் தானியேல் என்ற பக்தனிடம் மேசியா(இயேசு) மரித்து, உயிர்ப்பார் என்று அவர் பிறந்து, வாழ்ந்து, மரிப் பதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே சொல்லி யிருக்கிறான்.

பூமியின் சுழற்சியால் இரவு பகல் சரியளவு மாறி மாறி வருவதைக் கணக்கிட்ட பூகோள அறிஞர்கள் ஒரு சமயம் இரவு நேரம் 3 மணிக்கு அதிகமாக வருவதை ஆராய்ந் தனர். இயேசு கிறிஸ்து இறந்தபோது நடுப்பகல் இறந்த நேரம் முதல் 3 மணி நேரம் வரை உலகமுழுவதும்

இருளாக இருந்தது. அதனால் இரவு 3 மணி நேரம் அதிகரித்தது என்று கணக்கிட்டு அவர் இறந்தது உண்மையான நிகழ்ச்சி எனச் சான்று கூறியுள்ளனர். இப்படி இருக்க ஈசா நபி மரிக்கவில்லை என இஸ்லாமியரும் குரானும் எப்படிச் சொல்லலாம்?

"இன்னி முத்தவ பீக்க - குரான்" 3:55

இதற்குப் பலரும் கூறும் பொருள்

"ஈசாவே உன்னை நான் மரிக்கப்பண்ணுவேன். 3 மணி நேரம் மரித்து பின் எழுப்புவேன் என்று இறைவன் சொல்லி அப்படியே செய்தார்" என இப்னுஹமீத் கூறுகிறார். - ஆதாரம் ஜமியா அல்பயான் 3:289-292

ஈசா 3 மணி நேரம் மரித்தார். பின்பு உயிர்த்தார் வஹுராப் கூறுகிறார். ஈசா 7 மணி மணி நேரம் மரித்தார். பின்பு இறைவன் அவரை எழுப்பினார்.

அல்ரபியா இப்னு உன்ஸ்.

இயேசு பாவமில்லாத பரிசுத்தர் - குரான் 19:19

முகமது நபி பாவம் செய்தவர்

(குரான் 9:43, 23:118, 40:55, 48:2, 47:19, 110:3).

1933 செப்டம்பர் 16ல் வெளியான "The Light" என்ற இஸ்லாமிய பத்திரிக்கையில் வந்த செய்தி : இயேசுவுக்கு விரோதமாக ஒரு முஸ்லிம் ஒரு கணமும் நினைக்கக் கூடாது. அவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர். மீறுகிறவன் முஸ்லிம் இல்லை.

அல்லாவே ஈசாவைக் கொலை செய்யச் சதி செய்தான். சதி செய்தவர்களில் மிகச் சிறந்தவன் அல்லாவே (குரான் 3:54)

இயேசுவின் போதனைகளைப் பின்பற்றுகிறவனே உண்மையான முஸ்லிம் (குரான் 3:55)

இன்ஜிலையும் (புதிய ஏற்பாடு) தவ்ராத்தையும் அல்லாவே தந்தான். (குரான் 3:3, 5:68, 10:94)

அல்லாவே இதைத்தந்திருக்கும்போது ஏன் இயேசுவை இஸ்லாமியர் நம்புகிறதில்லை. ஈசா அல்லாவின் வாக்காக அதனால் உண்டானவராக இருக்கிறார். அவர்மீது நம்பிக்கை கொள்ளுங்கள். (குரான். 4:171).

வேதம் சொல்கிறது: ஆதியிலே தேவன் வார்த்தையாக இருந்தார். அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாக இருந்தது. அந்த வார்த்தை இயேசு என்ற பெயரில் மாம்சமாகி பூமியிலே வந்தார். மரித்து உயிர்த்தார். வேத வசனங்கள் இவ்வாறு தெளிவாகச் சொல்லும்போது அவர் இறக்கவில்லை உயிரோடே தேவன் ஈசாவை பரத்துக்கு அழைத்துக் கொண்டார். ஆனாலும் அவர் தேவனல்ல. மற்ற நபிகளைப் போல இவரும் ஒருவர் என்றால் எப்படிப் பொருந்தும்? ஈசா சாதாரண மனிதன் என்றால் ஒரு மனிதன் சாகாமல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாக எப்படி வாழ முடியும்?

ஈசா இறுதிக் காலத்துக்குரிய அத்தாட்சியாவார். இதில் சந்தேகம் வேண்டாம். இதுவே நேரான வழி. ஈசாவை நம்புங்கள். (குரான் 43:56-63.)

இயேசு பிறந்தபோது குழந்தை பேசினது நான் பிறந்த நாளிலும், இறக்கும் நாளிலும், உயிர்க்கும் நாளிலும் என் மீது சாந்தி நிலைத்திருக்கும். ஈசாவைப் பற்றிச் சந்தேகம் கொண்டவர்களுக்கு இதுவே உண்மையான சொல். (குரான் 19:27-34) இயேசு பிறந்தார், மரித்தார், உயிர்த் தார், ஈசா நபி (இயேசு) பரிசுத்த ஆவியினால் பிறந்தவர் (குரான் 21:91). பாவம் செய்யாத பரிசுத்தர் (குரான் 19:19, 33). மீண்டும் இவ்வுலகத்திற்குவர இருக்கிறார். (குரான் 3:36) எல்லா நபிகளும் பாவம் செய்தவர்கள். மனுஷ முறைப்படி பிறந்தவர்கள். மரித்துப் போனார்கள் பாமில் லாத இயேசு நமக்காக மரித்தும் உயிரோடிருக்கிறார்.

முன்னிருந்த நபிமார்களுடைய அடிச்சுவடுகளிலேயே மர்யமின் குமாரராகிய ஈசாவை அவருக்கு முன்னிருந்த தவ்ராத்தை உண்மைப்படுத்துகிறவராகச் செய்தோம். அவருக்கு நாம் இன்ஜிலையும் கொடுத்தோம். அதில் நேர் வழியும் ஒளியும் உண்டு. அது தனக்கு முன்னிருந்த தவ்ராத்தை உண்மைப் படுத்துவதாக உள்ளது. அது பக்தி யுள்ளவர்களுக்கு நேர் வழிகாட்டியாகவும், நல்லுப தேசமாகவும் உள்ளது. (குரான். 5:46)

கிறிஸ்து மார்க்கத்தின் அடிப்படைச் சத்தியம் இயேசு பிறந்து, மரித்து உயிர்த்ததில்தான் அடங்கியிருக்கிறது. இயேசு இரத்தம் சிந்தி மரிக்காவிட்டால் மனுகுலத்தின் பாவங்கள் மன்னிக்கப்படமாட்டாது. இரத்தம் சிந்தி, மரித்து, உயிர்க்கவே அவர் பிறந்தார். அவர் பிறக்கும் முன்னே நித்திய வார்த்தையாக இருந்தார். மரித்தேன் ஆனாலும் சதாகாலமும் உயிரோடிருக்கிறேன்.

இருக்கிறேன் என்பது என் பெயர்களுள் ஒன்று என்கிறார். ரிக், சாம வேதங்கள் இயேசு பிறந்து, மரித்து, உயிர்த்தார் என விளக்கமாக கூறும்போது, குரான் அதை மறுப்பதேன்.

இஸ்மவேல் வழி வந்த இஸ்லாமியர், முகமதியர் இன்றும் சத்தியத்தை அறியாமல் இருப்பது வருந்தத் தக்கது.

முகமது நபிகள் தமது மரணத் தருவாயில் இருக்கையில் அவரது மகள் பாத்திமா அவரிடம் போய் மோட்சம் போக வழி எதுவெனக் கேட்டாள். நான் எங்கே போகிறேன் என்று எனக்கே தெரியாது. உனக்கு எப்படிச் சொல்லுவேன் என்றார். (ஆதாரம் - பிஸ்காத்உல் மஸபி)

தான் போகிற இடம் தனக்கே தெரியவில்லை என்றால் பிறருக்கு எப்படி வழிகாட்ட முடியும்? உண்மைக் கிறிஸ் தவன் ஒருவனிடம் இக்கேள்வியைக் கேட்டால், "நான் இன்று மரித்தால் என் இயேசுவிடம் நிச்சயமாகப் போவேன்" என்ற தைரியமாகச் சொல்வானே.

மேற்கூறியுள்ள காரியங்களைப் பார்க்கும்போது காபிரியேல் தூதன் இப்படி தவறான செய்திகளைச் சொல்லியிருக்க மாட்டான் என்று நன்கு விளங்குகிறது. வேத புத்தகத்தில் ஆபிரகாம் ஈசாக்கைத்தான் பலியிட்டான் என்று சொல்லப்படுள்ளது. இது எழுதப்பட்ட மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பின் எழுதப்பட்டதுதான் குரான். இதில் இஸ்மவேலைப் பலியிட்டான் என்று எப்படி காபிரியேல் சொல்லியிருப்பான்?

குரான் அரபி மொழியில் இருப்பதால் எல்லா மக்களும் சத்தியத்தைப் புரிந்து படிக்க வாய்ப்பில்லை. பிற மொழிகளில் மொழிபெயர்த்தால் பொருள் மாறிவிடும். என்ற தப்பான கொள்கை இருந்தது. தற்போது பல மொழிகளில் மொழிபெயர்ப்பு இருக்கிறது. தமிழிலும் குரான் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. மக்கள் தெளிவாகப் படிக்க, புரிந்துகொள்ள நல்ல வாய்ப்புள்ளது. தமிழ் குரானை முகமதியர்கள் தெளிவாக வாசித்து வந்தால் ஈசா நபி யார் என்று தெளிவாகக் கண்டு கொள்வார்கள். ஈசா நபி அல்லாவின் வார்த்தையாக இருந்து வந்தவர். நாம் இன்ஜிலை அவருக்குக் கொடுத்தோம். அவர் சொல்லைக் கேட்டு நடந்து வாருங்கள் என்று அல்லா சொல்லியிருக்கும்போது அவரைப்பற்றிக் குரான் கூறும் கருத்துக்களை ஆராய்ந்து பார்த்தால் அவரே உலக இரட்சகர் என்று ஏற்றுக்கொள்ள முடியும். அதற்கு இப்ராஹிமின் தேவன் அருள்புரிவாராக! ஆமென்.

ஈசா (இயேசு) குரானிலும், பைபிளிலும்

அதிகாரம் – 1

குர் ஆன் சொல்கிறது

"இயேசு கிறிஸ்து திரும்ப வருவார்"

1. இயேசுவின் இரண்டாம் வருகை

டாக்டர். எம்.டி. அல்-ஹிலாலி, பி.எச்.டி புரபொசர், இஸ்லாமிய பல்கலைக் கழகம் மெதினா சொல்கிறார். "இங்கே வாசிப்பவர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன். அதாவது, இயேசு மரியாளின் மகன் உயிர்த்தெழுதலின் நாளுக்கு முன்பாக உலகத்திற்கு திரும்ப வருவார்". இதற்கு இரண்டு காரணங்களை டாக்டர். ஹிலாலி குறிப்பிடுகிறார்.

அ. குர்–ஆன்

★ "அவர் (இயேசு, மரியாளின் மகன்) வருகை நேரத்தின் அடையாளத்தை அறிந்திருக்கிறார் (உயிர்த் தெழுதலின் நாள்) (அதாவது, இயேசு பூமிக்கு இறங்குவது). ஆகவே, நிச்சயமாக நீங்கள் இதில் சந்தேகிக்க வேண்டாம். என்னையே பின்பற்றி நடவுங்கள் (அல்லாஹ்) (அதாவது, ஓ! மனித சமுதாயமே! அல்லாஹ்க்கு கீழ்ப்படியுங்கள். அவர் உங்களுக்கு என்ன கட்டளையிடு கிறாரோ அதன்படி செய்யுங்கள்.) இதுவே நேரான வழி".

(சுரா # 43 ஜுக்ருப் : 61)

★ "உங்களை ஷைத்தான் தடுத்துக் கெடுத்துவிட வேண்டாம். நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங் கமான விரோதியாயிருக்கின்றான்". (சுரா # 43 ஜுக்ருப் : 62)

"இயேசு தெளிவான அடையாளத்துடன் வந்து சொன்னது: "மெய்யாகவே ஞானத்தை நான் உங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருப்பவைகளில் சிலவற்றை உங்களுக்கு விவரித்துக் கூறுவேன். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து ¨ª Âz வழிப்படுங்கள்" (சுரா # 43, ஜுக்ருப்: 63)

அதாவது, இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியும்படி குர்ஆன் சொல்கிறது,

ஆ. ஹதீத் # 425, ஹதீத் # 657)

முஹம்மது சொன்னார் (அபு ஹீரைரா தெரிவித்தது) அல்லாஹ்-வுடைய அப்போஸ்தலர் உரைத்தது : "அவர் கரத்தில் என் ஆத்துமா உள்ளது, (இயேசு) மரியாளின் மகன் சீக்கிரம் உங்கள் மத்தியில் தோன்றுவார்; அதாவது ஒரு ஆளுகிறவராக (அப்போஸ்தலராக அல்ல)".

ஷாகித் அல் புஹாரி, பாகம். III
ஹதீத் # 425, பாகம் IV , ஹதீத் # 657

இஸ்லாமிய தேசத்தை வழிநடத்துகிறவராக, ஆளுகை செய்கிறவராக இயேசு கிறிஸ்து திரும்பவும் வருவார் என குர் ஆனில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக டாக்டர். ஹிலாலி சில காரணங்களை குறிப்பிட்டிருக்கிறார். கேள்வி என்னவென்றால்:

இயேசுவை மறுபடியும் இஸ்லாமிய தேசத்திற்கு வழி நடத்துபவராக, ஆளுகை செய்பவராக அல்லாஹ் அனுப்புவது ஏன்? அவருக்கு முன்பாக தோன்றின எத்தனையோ தீர்க்கதரிசியானவர்களில் அல்லது கிறிஸ்து

தோன்றியதற்கு பின்பு தன்னை தீர்க்கதரிசி என்று சொல்லிக்கொண்டவர்களில் அல்லாஹ்ற அனுப்பாதது ஏன்? ஏன் **இயேசு கிறிஸ்து**?

முதலவதாக : குர் ஆன் சொல்கிறது : **இயேசு கிறிஸ்து ஆள, நியாயந்தீர்க்க திரும்ப வருவார்.**

இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ வேற எந்த தீர்க்கதரிசியையும் மேற்கண்ட இரண்டு காரியங்களை நிறைவேற்ற குர்ஆனில் குறிப்பிடப்படவில்லை.

இரண்டாவதாக : குர் ஆன் கூறுகிறது : இயேசு கிறிஸ்து அல்லாஹ்றவுடைய வார்த்தையாக இருக்கிறார் (சுரா # 3 அலி -இம்ரான் :45)

தேவதூதன் சொன்னது இதோ! : ஓ மர்யமே! திண்ணமாக அல்லாஹ்ற உமக்கு **தனது வார்த்தையை தந்திருக்கிறான்?** அவருடைய நாமம் இயேசு கிறிஸ்து.

கேள்வி : எந்த ஒரு தீர்க்கதரிசியும் தன்னை அல்லாஹ்றவின் வார்த்தை என சொன்னதுண்டா?

மூன்றாவதாக : குர் ஆன் கூறுகிறது: இயேசு கிறிஸ்து அல்லாவின் ஆவியாயிருக்கிறார்.

"இயேசு கிறிஸ்து, மர்யத்தின் மகன், அல்லாஹ்றவின் அப்போஸ்தலன், அவருடைய (அல்லாஹ்ற) வார்த்தையை மர்யத்தின்மேல் நிழலிடப்பண்ணினார்; அவருடைய ஆவி அவரிடமிருந்து புறப்பட்டு சென்றது" (சுரா # 4 நிஸா 171)

கேள்வி : மற்ற எந்தவொரு தீர்க்கதரிசியும் தன்னை அல்லாஹ்வின் வார்த்தை மற்றும் ஆவி என்று கூறியதுண்டா?

நான்காவதாக : குர் ஆன் இயேசு கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பை போதிக்கின்றது.

மர்யம் சொன்னது : "என் இறைவனே! எந்த ஒரு மனிதருமே என்னைத் தீண்டாதிருக்கும்போது, எனக்கு எவ்வாறு சந்ததி ஏற்பட்டுவிடும்? (சூரா # 3 அலி-இம்ரான்:47)

கேள்வி: இந்த அசாதாரண பிறப்பிற்காக கிறிஸ்துவை தேர்ந்தெடுத்தது ஏன்?

அவருக்கு முன்போ அல்லது பின்போ இப்படிப்பட்ட நம்ப முடியாத, அதிசயமான பிறப்பின் வழி மற்றொருவருக்கும் இல்லாதது ஏன்? ஏன் கிறிஸ்து? ஏன் அல்லாஹ் இயற்கையான விதிமுறையில் குறுக்கிட்டு மாற்றி அமைத்தார்?

ஐந்தாவதாக : குர் ஆன் கூறுகிறது : அவர் தொட்டிலில் (குழந்தையாக) இருக்கும் பொழுது தன் நபித்துவத்தைப்பற்றி வாலிபத்திலும் மனிதர்களுடன் பேசுவார்" (சூரா # 3 அலி-இம்ரான்:46)

கேள்வி : மற்ற எந்தவொரு தீர்க்கதரிசியும் தன்னை நீதிமானாக கூறியதுண்டா?

ஆறாவதாக : குர் ஆன் கூறுகிறது : "இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது மக்களை சத்தியத்திற்கு (உண்மைக்கு) நேராக வழிநடத்துகிறவராகவும், வியத்தகு அதிசயங்களை செய்கிறவராகவும் மட்டுமல்ல செத்தவனையும் உயிர்ப்பித்தார்" (சுரா # 3 அலி-இம்ரான் 49)

இயேசு கிறிஸ்து மட்டுமே தீர்க்கதரிசி என நாம் கூற முடியுமா?

அதிகாரம் 2

இயேசு கிறிஸ்து என்பவர் யார்?

குர் ஆன் கூறுகிறது, "அல்லாஹ்ற-வுக்கு பயப்படுங்கள்; இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியுங்கள். (சுரா # 43 ஜுக்ருப்: 63)

நாம் அவருக்கு கீழ்ப்படிய இந்த இயேசு கிறிஸ்து யார்?

இயேசு கிறிஸ்து தேவனுடைய வார்த்தையாக இருக்கிறார். அவர் நமக்கு தேவனுடைய வெளிப்பாடாய் இருக்கிறார். (சுரா # 3 அலி-இம்ரான் : 45)

"வார்த்தை" என்பது மனதின் வெளிப்பாடாகும். தேவனுடைய சித்தம் ஆகும் என்று வெப்ஸ்டர் அகராதி கூறுகிறது. தேவனுடைய மனது தேவன் எப்படி இருக்கிறாரோ அப்படியே அவரை நமக்கு வெளிப்படுத்துகிறது. தேவனுடைய சித்தம் தேவனுடைய தேவை மற்றும் விருப்பத்தை நமக்கு அறிவிக்கிறது.

இயேசு-தேவனுடைய வெளிப்பாடாக நமக்கு இருக்கிறார். மேலும் அவர் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார், என்ன விரும்புகிறார் என நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இயேசு கிறிஸ்துவை யார் என்று இன்னும் நாம் நன்றாக புரிந்து கொள்ள அவர் புரிந்த அற்புதங்களையும் அவர் வாழ்க்கையை சுற்றி நடைபெற்ற சம்பவங்களையும் பைபிளிலும் - குர் ஆனிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குர்ஆன்	புதிய ஏற்பாடு (பைபிள்)
சுரா எண், பெயர், வசனம்	வேதாகம புத்தகம், அதிகாரம், வசனம்
சுரா #21 அல் அன்பியா : 91	மத் 1:20, 21
" தன் கற்பை காத்துக் கொண்ட (மர்யம் என்ப)வள் (யும், நீர் ஞாபகமூட்டும். அவளுடைய கர்ப்பத்தில், நம்முடைய ஆவிகளிலிருந்து (ஓர் ஆவியை) நாம் ஊதினோம். அவளையும் அவளுடைய குமாரனையும் உலகத்தாருக்கு ஓர் அத்தாட்சியாகவும் ஆக்கினோம்.	"தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது அவள் ஒரு குமாரனை பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றார்.

சுரா # 19 மர்யம் : 20,21	லூக் 1:30-32,34
மர்யம் கூறினாள்: எனக்கு எவ்வாறு சந்ததி ஏற்படும்? எம்மனிதனும் என்னைத் தீண்டியதில்லையே! நான் கெட்ட நடத்தையுள்ளவளு மல்லவவே!"	"தேவதூதன் அவளை நோக்கி மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; அதற்கு மரியாள் இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்.

இயேசு ஆசீர்வதிக்கப்படுதல்

சுரா #19 மர்யம் : 30,31

அவர் கூறியதாவது:
“நிச்சயமாக நான்,
அல்லாஹ்வுடைய ஓர்
அடிமை; அவர் எனக்கு
ஒரு வேதத்தைக் கொடுத்து
நபியாகவும் என்னை
ஆக்குவான்; நான்
எங்கிருந்தபோதிலும்,
அவன் என்னை மிக்க
பாக்கியவானாகவே
ஆக்குவான்

மத் 21:9

முன் நடப்பாரும் பின்
நடப்பாருமாகிய திரளான
ஜனங்கள்: தாவீதின்
குமாரனுக்கு ஓசன்னா!
கர்த்தரின் நாமத்தினாலே
வருகிறவர் ஸ்தோத்திரக்
கப்பட்டவர்,
உன்னதத்திலே
ஓசன்னா, என்று சொல்லி
ஆர்ப்பரித்தார்கள்.

இயேசு பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுதல்

சுரா # 2 பகறா:253

...மர்யமுடைய மகன் ஈஸாவுக்கு (இயேசு) நாம் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்து, "பரிசுத்த ஆவி" யைக் கொண்டு அவருக்கு உதவி செய்தோம்.

லூக்கா 4:1

இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு.

இயேசுவின் பாவமில்லாத தன்மை

சூரா # 19 மர்யம்:17.19

"நம்முடைய தூதரை அவரிடம் அனுப்பி வைத்தோம். அவர் சரியான ஒரு மனிதருடைய கோலத்தில் அவர் முன் தோன்றினார்; பரிசுத்தமான ஒரு மகனை உமக்களிக்கப்படும் என்பதை உமக்கு அறிவிப்பதற்காக நாம் உம் இறைவனால் அனுப்பப் பெற்ற ஒரு தூதன் என்றான்? "

எபிரெயர் 4:15, 7:28

"எல்லா விதத்திலும், நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவ மில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்; நியாயப் பிரமாணமானது பெலவீனமுள்ள மனுஷர்களைப் பிரதான ஆசாரியாாக ஏற்படுத்துகிறது; நியாயப் பிரமாணத்திற்கு பின்பு உண்டான ஆணையோடே என்றென்றைக்கும் பூரணரான குமாரனை ஏற்படுத்துகிறது".

சுரா # 2 பகறா : 87

"மர்யமுடைய மகன் ஈஸா வுக்கு (இயேசு) தெளிவான அத்தாட்சிகளை கொடுத்து, பரிசுத்த ஆவியைக் கொண்டும் அவரைப் பலப்படுத்தி வைத்தோம்".

சுரா # 29 அன்கபூத்:50

அன்றி, (நாங்கள் விரும்புகிற பிரகாரம்) சில அத்தாட்சிகள் அவருடைய இறைவனால் அவருக்கு அளிக்கப்பட வேண்டாமா?" என்று இவர்கள் கூறுகின்றனர். அதற்கு (நபியே) நீர் கூறும்: "அத்தாட்சிகளெல்லாம் அல்லாஹ்விடத்தில் தாம் இருக்கின்றன. நான் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவன்தான்".

யோவான் 3:2

நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங் களைச் செய்ய மாட்டான் என்றான்"

இயேசு வருங்காலத்தை அறிந்திருந்தார்

சுரா # 43 ஜுக்ருப்:61,63

நிச்சயமாக அவர் (இயேசு) வரவிருக்கும் விசாரணைக் காலத்துக்குரிய அத்தாட்சி யாவார். ஆகவே, நிச்சயமாக நீங்கள் இதில் சந்தேகிக்க வேண்டாம். என்னையே பின்பற்றி நடவுங்கள்; இதுவே நேரான வழி". "ஈஸா (இயேசு) (அத்தாட்சிகளில்) தெளிவான வைகளைக் கொண்டு வந்த பொழுது, அவர் சொன்னர்: மெய்யாகவே ஞானத்தை நான் உங்களுக்கு கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருப் பவைகளில் சிலவற்றை உங்களுக்கு விவரித்துக் கூறுவேன். ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து எனக்கு வழிப்படுங்கள்".

மத்தேயு 24:29-31

"அந்நாட்களின் உபத்திர வம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும் நட்சத்திரங்கள் வானத்தில் இருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் அப்பொழுது, மனுஷ குமாரனுடைய வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தில் மேகங்கள் மேல் வருகிறது, பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்; வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்".

சூரா # 39 ஜுமர் : 44	1 தீமோத்தேயு 2:5
(பின்னும் நபியே) நீர் கூறும் : "சிபாரிசுகள் யாவும் அல்லாஹ்வுக்கே உரியன. (ஆகவே, அவனுடைய அனுமதியின்றி, அவனிடத்தில் ஒருவரும் சிபாரிசு செய்ய முடியாது). வானங்கள், பூமியின் ஆட்சி (முழுவதும்) அவனுக்குரியதே (மறுமையில்) பின்னர் அவனிடமே நீங்கள் கொண்டு வரப்படுவீர்கள்".	"தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே".

தேவனுடைய வார்த்தையானவர்

சுரா #3

அல் இம்ரான் :45

"மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய (ஆகுக! என்ற) ஒரு சொல்லைக் கொண்டு உனக்கு (ஒரு மகவை அளிக்க) நன்மாராயங் கூறுகின்றான். அதன் பெயர் 'மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹ்' என்பதாகும்".

யோவான் 1:1,14

"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை, தேவனிடத்தி லிருந்தது, அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது"

சுரா #3 அலி இம்ரான். 55	பிலிப்பியர் 2:8
"அல்லாஹ் கூறும் பொழுது: "ஈஸாவே நிச்சயமாக நான் உம்மை (உம்முடைய ஆயுளைப்) பூர்த்தி செய்வேன். உம்மை என்னளவில் உயர்த்திக்கொள்வேன். நிராகரிப்போரின் அவதூற்றிலிருந்து உம்மைப் பரிசுத்தமாக்கி வைப்பேன். உம்மைப் பின்பற்றுவோரை, நிராகரிப்போர் மீது மறுமைநாள் வரையில் மேலாக்கியும் வைப்பேன்.	"அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரி-யந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும், கீழ்ப்-படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்".

இயேசுவின் உயிர்த்தெழுதல்

சூரா # 3
அல் இம்ரான் :55

"அல்லாஹ் கூறும்பொழுது: "ஈஸாவே நிச்சயமாக நான் உம்மை (உம்முடைய ஆயுளைப்), பூர்த்தி செய்வேன். உம்மை என்னளவில் உயர்த்திக் கொள்வேன்."

1 கொரிந்தியர் 15:3-5

"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்".

மரித்து உயிர்த்தப்பின் பரமேறினார்

சுரா # 3

அல் இம்ரான்:55

"...ஓ இயேசுவே! உம்மை என்னளவில் உயர்த்திக்கொள்வேன்"

எபேசியர் 1:19-20

"தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த நமது பலத்த சத்துவத்தின் வல்லமைப் படியே விசுவாசிக்கிறவர் களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், "எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும் கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும். எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்க தாக".

சூரா # 5

அல் மாயிதா:110

“பிறகு அல்லாஹ் (ஈஸாவை நோக்கி) கூறுவான்.....
“மர்யமுடைய மகன் ஈஸாவே! உம்மீதும், உம் தாய் மீதும் நான் புரிந்துள்ள என்னுடைய அருளை நீர் நினைத்துப்பாரும், பரிசுத்த ஆத்மாவைக் கொண்டு, உமக்கு உதவி புரிந்து, உம் தாயின் பரிசுத்த தன்மையைப் பற்றி நீர் தொட்டிற் குழந்தையாய் இருந்த சமயத்திலும், உம் தீர்க்கதரிசனத்தைப் பற்றி வாலிபத்திலும், உம்மை மனிதர்களிடத்தில் பேச செய்ததையும் நினைத்துப் பாரும். வேதத்தையும், ஞானத்தையும், தவ்றாத்-தையும், இன்ஜீலையும் நான் உமக்குக் கற்பித்ததையும் நினைத்துப் பாரும். அன்றி, நீர் என்

கொலோசெயர்1:16-17

“அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவை களும், பூலோகத்தி லுள்ளவைகளுமாகிய காணப்படுகின்றவை களும் காணப்படாதவை களுமான சகல வஸ்துக் களும், சிங்காசனங்க ளானாலும், கர்த்தத்து ணங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக் கென்றும் சிருஷ்டிக்கப் பட்டது; “அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது”

யோவான் 1:3,4

“சகலமும் அவர்மூலமாய் உண்டாயிற்று;

கட்டளைப்படி, களிமண்ணால் பட்சியின் உருவத்தைப்போல் செய்து, அதில் நீர் ஊதிய சமயத்தில், அஃது என் கட்டளையைக் கொண்டு பட்சியானதையும், பிறவிக் குருடனையும் வெண் குஷ்டரோகியையும், என் உதவியினால் நீர் சொஸ்தப்படுத்தியதையும் நினைத்துப்பாரும். நீர் என் அனுக்கிரகத்தைக் கொண்டு மரித்தோரைக் கல்லறையிலிருந்து உயிர் பெற்றுப் புறப்படச் செய்ததையும் நினைத்துப் பாரும்.

உண்டானதென்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது".

இயேசு கிறிஸ்து திரும்ப வருவார்

சுரா # 43 ஜக்ருப்: 61

"நிச்சயமாக அவர் (இயேசு) வரவிருக்கும் விசாரணைக் காலத்துகுரிய அத்தாட்சி யாவார். ஆகவே, நிச்சயமாக நீங்கள் இதில் சந்தேகிக்க வேண்டாம். என்னையே பின் பற்றி நடவுங்கள்; இதுவே நேரான வழி".

அப்போஸ்தலர் 1:10,11

"அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்துபார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்க-ளருகே நின்று: "கலிலேயராகிய மனுஷரே, நீங்க ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இயேசுவானர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.

இயேசு தீர்க்கதரிசியைக் காட்டிலும் மேலானவர்? (எபிரெயர் 1:4)

"இவர் தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்".

இயேசு ஆபிரகாமைக் காட்டிலும் மேலானவர்? (யோவான் 8:58)

"அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"

இயேசு தேவனிடம் சொன்னார்,"உலகம் உண்டாகிற தற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமை யினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" (யோவான் 17:5;)

இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறினார்: "நீங்கள் தாழ்விலிருந்துண்டானவர்கள், நான் உயர்விலிருந் துண்டானவன்; நீங்கள் இந்த உலகத்திலிருந்துண்டான வர்கள், நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல" (யோவான் 8:23)

மேற்கண்ட 14 குணாதிசயங்களும் மனிதனைக் காட்டிலும் இயேசுவில் நாம் காண்கிறோம் அல்லவா!

அதிகாரம் : 3

இயேசு ஏன் வந்தார்?

(தேவனுடைய மீட்டும் அன்பு)

சில தேவனுடைய தீர்க்கதரிசிகளைப் பார்க்கும்போது நோவா 950 வருடங்களும், ஆதாம் 930 வருடங்களும், ஆபிரகாம் 175 வருடங்களும், இஸ்மவேல் 137 வருடங்களும் வாழ்ந்தார்கள் என அறியலாம். எல்லோரும் நீண்ட கனியுள்ள வாழ்க்கை கண்டு கழித்தார்கள் எப்படியாயினும் இன்றைய காலத்தில் தோராய வயது 75-ஆக இருக்கிறது. 100 வயதுக்கு மேல் வாழ்வது என்பது மிகுந்த அரிதாகக் காணப்படுகிறது. (இந்த வயது சரிவுக்கு காரணமென்ன?

"பாவமே" காரணம் என்று ஆண்டவர் சொல்லுகிறார். (நீதிமொழிகள் 10:27). "தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது உனது ஆயுசு நாட்கள் பெருகும், வளமுள்ளதாய் இருக்கும்". (நீதிமொழிகள் 3:1,2) "ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின் தொடரக்கடவன். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" (1 பேதுரு. 3:10-12)

பாவம் என்றால் என்ன?

"மனிஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லாவற்றை யும் அவர் சீர்தூக்கிப்பார்க்கிறார். துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக்கொள்ளும்; தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான். அவன் புத்தியைக் கேளாததினால் மடிந்து, தன் மதிகேட்டின் மிகுதியினால் மயங்கிப்போவான். (நீதிமொழிகள் 5:21-23)

பாவத்திற்கு தேவனின் விளக்கம்:

1. தீய செயல்புரிய முழுமனதுடன் ஒப்புக்கொடுத்தல்: தவறான செயலுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தல், கட்டளைக்கு முரண்பாடானது.

"பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (1 யோவான் 3:4)

"ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத் தையும் தள்ளி விட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக் கடவோம்" (எபிரெயர் 12:1)

2. தவறான செயலுக்கு முழுமனதுடன் ஒப்புக் கொடுத்தல்: செய்யவேண்டியவற்றை அறிந்திருந்தும்

அதை செய்யாமல் இருப்பது. "ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்". (யாக்கோபு 4:17)

3. முரண்பாடான கருத்துக்கள் அல்லது அவநம்பிக்கை அல்லது சந்தேகத்தினுடைய தவறான மனப்பான்மை. "பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்". (யாக்கோபு 1:15)

"விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" (ரோமர் 14:23)

4. அநீதி அல்லது அநியாயம் என்ற தவறான நிலையில் இருப்பது:

"நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது". (1 யோவான் 1:8)

"அநீதியெல்லாம் பாவந்தான்" (1 யோவான் 5:17)

மனிதனுடைய நிலைமை – இரட்சகர் தேவை

மனிதன் தன்னைக் கெடுத்துக் கொண்டும், அழித்துக் கொண்டும், தண்டிக்கப்படவேண்டிய நிலைமையில் இருக்கிறான். "அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லோரும் வழி தப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை,

ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10-12). தேவன் பரிபூரணமாய் இருக்கிறார். ஆகவே, நம்முடைய தீயவைகளை அவர் நியாயந்தீர்ப்பார்.

மனிதன் முழுவதும் சீர்கெட்டவன், நீதிநெறியில் நெறி தவறியவன். "தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார் அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத் தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தி னாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர் களுமாய், வீம்புக்காரருமாய் பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லா தவர்களுமாய் இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப் பட்டவைகளை செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்". (ரோமர் 1:28-32)

மனிதன் விழுந்த நிலைமையிலும், பயன்பெறும் தகுதியை இழந்தவனாகவும், தேவனுடைய ஐக்கியத்தை விட்டு விலகினவனாகவும் இருக்கிறான்.

"உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாத படிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது." (ஏசாயா 59:2)

ரோமர் 3:23-ஆனது மனிதனின் நிலையைக் குறித்த தேவனுடைய விளக்கமாக உள்ளது (ஆவிக்குரிய மரணம்)

எல்லோரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர் களாகி" இது எல்லா மனிதர்களையும் குறிக்கிறது. ஏனென்றால் மனிதன் பாவியாயிருக்கிறான், அவனுக்கு ரட்சகர் தேவை. சிலர் அவனுக்காக சிலவற்றை செய்ய லாம். ஆனால் அவனை ரட்சிக்க தேவனால் மட்டுமே முடியும்.

பாவத்தின் சம்பளம் - மரணம்

"நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டும்: அதை நீ (ஆதாம்-ஏவாள்) புசிக்கும் நாளில் 'சாகவே சாவாய்' (ஆதியாகமம் 2:17; எசே 18:20

பதில் அளிக்காதபடி தேவன் நம்மை விட்டுவிட்டாரா? நம்பிக்கை இல்லாமல் அழிய நம்மை தேவன் விட்டு விட்டாரா? இல்லை! நம்மால் செய்யக்கூடிய அறிவுப் பூர்வமான பதிலை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார்.

தேவனுடைய பரிகாரம் – பாவமில்லாத இரத்தம்

தேவன் சொன்னார், "இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபிரெயர் 9:22) உதாரணமாக, ஆதாம் பாவம் செய்தான். பரிசுத்தமுள்ள தேவனுக்கும், பாவமுள்ள மனிதனுக்கும் இடையேயிருந்த ஐக்கியத்தைச் சரி செய்யும் படியாய் தேவன் ஒரு மிருக பலியை செலுத்தி வழியை ஏற்படுத்தினார்.

வருடத்திற்கு ஒருமுறை இஸ்லாமியர் ஆதா (கபீர்) பண்டிகை கொண்டாடுகின்றனர். இப்பண்டிகையில் ஒவ்வொரு இஸ்லாமிய குடும்பமும் ஒரு மிருகத்தை பலியிட வேண்டும். ஆபிரகாம் (இப்ராஹிம்) தன் மகனை பலியிட வேண்டிய இடத்தில், ஒரு இனம் மிருகத்தை (ஆட்டை) ஆண்டவர் அனுப்பினார் என்பதை ஞாபகத்தில் கொண்டு வருகின்றனர். இந்த சம்பவத்தின் மூலம் ஆண்டவர் நமக்கு பாவத்திற்கான பரிகாரத்தை காண்பிக்கிறார். ஆண்டவர் நமக்கு பலிக்கான முறைமையை மாற்று ஏற்பாட்டை போதிக்கிறார். பலியிடுதலில் இரத்தம் சிந்துதல் அவசியம் என்பதை காண்கிறோம். பாவத்தின் கிரயம் செலுத்தப்படுகிறது. கேள்வி என்னவென்றால், நம்முடைய தண்டனைக்கான கிரயத்தை நம்முடைய மரணத்தின்மூலம் செலுத்து கிறோமா அல்லது மாற்று ஏற்பாட்டை செலுத்துகிறோமோ? அல்லது ஆபிரகாம் மகனை பலியிட வேண்டிய இடத்தில் ஆண்டவர் ஒரு ஆட்டை அனுப்பி பலியிட்டதுபோல, ஆண்டவர் நமக்காக செலுத்திய கிரயத்தை அங்கீகரிக்கிறோமோ!

தேவன் நம்முடைய பாவத்திற்காகவும், சர்வலோக பாவத்திற்காகவும் பலியாக இயேசுவை அனுப்பினார். இயேசு மரணத்தின் தண்டனையிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி வந்தார். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (II கொரிந்தியர் 5:21)

"அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும் பாவங்களை ஒருக்காமலும் நிவர்த்தி செய்யக்கூடாத ஒரே வித பலிகளை அநேகந்தரம் செலுத்தி வருகிறவனாயும் நிற்பான். இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியை செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து; ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" (எபிரெயர் 10:11,12,14)

கர்த்தர் சொல்கிறது என்னவெற்றால்

1. **எல்லோரும் பாவிகளாயிருக்கிறோம்**
2. **பாவத்தின் சம்பளம் மரணம்**
3. **ஆண்டவர் பலியிடுதல் மூலமாக ஒரு பரிகாரத்தை ஏற்படுத்தியுள்ளார்.**
4. **இயேசுவை பலியிட்டதின் மூலம் சரியான பரிகாரத்தை ஏற்படுத்தியுள்ளார்.**

புதிய வாழ்வும், மன்னிப்பும் - நன்கொடை (கிருபை)

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல (எபேசியர் 2:8,9)

இந்த வசனம் நம்மை முடிவு எடுக்கும் இடத்திற்கு அழைத்து வந்திருக்கிறது. இந்த புதிய வாழ்வு - இயேசு இலவசமாக தருகிறார். இந்த இலவசம், இலவசமானால் இதற்காக நீங்கள் கிரியை செய்யவோ அல்லது கிரயம் செலுத்தவோ வேண்டாம். இதை சம்பாதிக்க நீங்கள் செய்ய வேண்டிய வேறு நல்ல காரியம் ஒன்றுமில்லை. அதை அப்படியே பெற்றுக்கொள்ளவேண்டும். இதை பெற்றுக் கொள்ள தகுதியில்லாத நமக்கு கிறிஸ்து மூலமாக ஆண்டவர் இலவசமாக தந்திருக்கிறார் என்பதை உணர வேண்டும். ரோமர் 10:9-13-ன் மூலமாக இந்த நன்கொடையை நாம் எப்படி பெற்றுக் கொள்ளவேண்டும் என போதிக்கிறது. "என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்; நீதியுண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்; அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது; ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" (ரோமர் 10:9-13)

இரட்சிக்கப்பட நான்கு காரியங்கள் மிகவும் அவசியமானது என தேவன் கூறுகிறார்:

1. இயேசு கிறிஸ்துவை உங்களிடம் எடுத்துக்கூற ஒருவர் தேவைப்படுகிறார்.

2. நீங்கள் கேட்பதற்கு விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

3. உங்களுடைய மரண ஆக்கினையை உங்களுக்கு பதிலாக இயேசு பெறும்படிக்கு தேவன் அவரை அனுப்பினார் என்பதே நீங்கள் விசுவாசிக்க வேண்டும்.

4. மேற்கண்ட விசுவாச அறிக்கையை செயல்படுத்தும் படி உன்னை இரட்சிக்க இயேசுவை கூப்பிடவேண்டும்.

"ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" (ரோமர் 10:13)

இந்த வசனம் நமக்கு தெரிவிப்பது என்னவென்றால், நம்மை இரட்சிக்கும்படி இயேசுவை நோக்கி கூப்பிடும் போது, அவர் அப்படியே செய்வார். கவனத்தில் கொள்ளுங்கள்! ஆண்டவர் உங்கள் இருதயத்தைப் பார்க்கிறார். கீழ்க்கண்ட ஜெபமானது ஒருவர் தன்னை இரட்சிக்கும்படி இயேசுவை எப்படி கூப்பிடவேண்டும் என ஆலோசனை தருகிறது.

"அருமையான இயேசுவே! என்னை இரட்சிக் கும்படி உம்மை கூப்பிடுகிறேன். இயேசு என் வாழ்க்கையின் இரட்சகராக இருக்க விரும்புகி

றேன். உம்மை மனவருத்தமடையவும், உம்மை விட்டு பிரியவும் காரணமாக இருந்த பாவத்தை அறிக்கையிடுகிறேன்.

உம்முடைய மரணம், உம்முடைய நன்கொடையான நித்திய வாழ்வு, சிலுவை மரணத்தின் மூலம் இயேசுவை உயிரோடு எழுப்பின உம்முடைய வல்லமையை நம்புகிறேன்.

இயேசு செய்து முடிந்தவற்றின் அடிப்படையில் இந்த விண்ணப்பத்தை உம்மிடத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

ஆமென்!

“(நபியே !) நாம் உமக்கு... அருட்செய்திருக்கும் இதில் (சிறிதும் சந்தேகங்கொள்ளாதீர்.) நீர் சந்தேகித்தால், உமக்கு முன்னர் அருளப்பெற்ற வேதங்களை ஓதுவோரிடம் நீர் கேட்டுப்பாரும். நிச்சயமாக உம் இறைவனிடமிருந்தே உண்மையான இவ்வேதம் உம்மிடம் வந்தது. ஆதலால், சந்தேகப்படுவோரில் நீரும் ஒருவராக ஆகிவிட வேண்டாம்”. (சுரா 10 யூனுஸ்: 94)

தெய்வம் ஒருவரே என்பதற்கான சான்றுகள்

★ "ஏக் ஓம்க்கரா" – சீக்கிய மத சுலோகம் (ஒரே கடவுள்)

★ "ஏக அநேகன் இறைவனடி வாழ்க"

– திருவாசகம்: சி.வ.5

★ "இறைவா இன்பத்து எமை இருத்திட வேண்டி பிறாவா முதல்வன் பிறந்தான்"

– போற்றிப்ஃறொடை–69

★ கடவுளோன் ஒருவனுண்டு வேதம் – ஒன்று பல தெய்வம் உண்டென்போர் தீ நரகிற்காளாவார் (அகத்தியர் ஞானப்பாடல்)

★ நால்வேதம் அறுசமயம் நடவடிக்கைவேறே – திட முடன் பலதேவர் உண்டென்போர் தீ நரகிற்காளாவார் (இடைக்காடர்)

★ எவ்வகைசேர் மதங்களிலே... தெய்வம் ஒன்றென்ற றிவீர்... கரிபிடித்த பெரியீர் – இராமலிங்க அடிகள்

★ மனுக்குலம் அனைத்திற்கும் இறைவன் ஒருவனே

– திருமூலர் 2104

★ கடவுள் ஒருவரே சிலைவணக்கம் கூடாது (யூதமதம்)

★ "தசாதிர் அல்லது அவெஸ்தா" பார்சிகளின் புனித நூல் – ஒரே தெய்வம்

★ "ஏகம், ஏவம் அத்விதயம்"

– சந்தக்யோ உபநிஷத் 6:2-1

(இறைவன் ஒருவனே இந்துமத பிரம்ம சூத்திரம்)

★ "நீ தெஸ்ய பிரதிம அஸ்தி" - யசூர் வேதம் 32:3 (உருவமற்ற ஒருவன்)

★ "அன்தாதம பரவிஸந்தி ஏ அசம்பூதி முபாசதே"

- யசூர் வேதம் 40:9

(இயற்கையையும் பொருள்களையும் வணங்குபவர் இருளில் மூழ்குவர்)

★ இறைவன் ஒருவனே

- திருகுர் ஆன் சுரா - அல்பகரா 2:255, 163

★ ஒரே தேவன் தான் இருக்கிறார்

- பைபிள் - யாத்திராகமம் 20:3,4, ஏசாயா43:10,11

★ ஒருவனென்றே தெய்வத்தை வணங்கிவேண்டும்

- அகத்தியர் ஞானப்பாடல் - 4

★ சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்

- அகத்தியர் ஞானப்பாடல் - 1

★ ஒன்றைப் பிடித்தார்க்கே உண்மை வசப்படும்

- இடைக்காடர் - 30

★ ஆதியென்ற மணிவிளக்கை அறியவேணும்

- இராமதேவர் சித்தர் -1

★ ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே - உலகனைத்தும் ஒன்றுமே அன்றும் இன்றும் ஒன்றுமே அநாதியானது ஒன்றுமே - சிவவாக்கியர் பாடல் 181

★ முத்திநாதனை மூவா முதல்வனை
ஏகநாதனை இணையடி இறைஞ்சுமின்

- பட்டினத்தார் பாடல் -70

★ ஆதிமுதல் ஆகிநின்ற அரி என்ற அட்சரத்தை

- பத்திரகிரியார் பாடல் - 154

★ எண்ணரிய புண்ணியங்கள் எல்லாம் - செய்வதும் ஏன்? ஏகன் அடிநெடுஞ்சமதில் எண்ணாவிடில்

- பாம்பாட்டிச் சித்தர் 107

★ ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு - மனமே உனக்கே உபதேசம் இதே

- பட்டினத்தார் பாடல் 108

தெய்வத்துக்கு இருக்க வேண்டிய சிறப்புத் தன்மைகள்

1. தெய்வம் அநாதியானவர்
   அதர்வவேதம் 11:5:17 உபநிஷத் 6:9
   (பைபிள் சங்கீதம் 41:13; ரோமர் 16:25)

2. ஆதியந்த மற்றவர்
   இடைக்காடர் செய்யுள் - 6
   (பைபிள் தானியேல் 4:34; வெளிப்படுத்தல் 1:8)

3. தன்னிகரற்றவர் உபநிஷத் 4:19
   (பைபிள் ஏசாயா 46:5-9)

4. காணக்கூடாதவர் :
   ஸ்வதேஸ்வதார உபநிஷத் 4:20; யசூர் வேத சுலோகம் 32:2 (பைபிள் யோவான் 1:18)

5. மகாபரிசுத்தர் (பாவ மாசற்றவர்):
   பாணினி 4:1:98; யசூர் வேதம் 40:8; குலர்வன தந்திரம் 13:38-50 (பைபிள் லேவி. 11:44, எபிரேயர் 7:26)

6. சர்வவியாபி:
   சிவவாக்கியா பாடல் 175: பட்டினத்தார் பாடல் 93, 118; இடைக்காடர் 28. (பைபிள் ஏசாயா 43:6; மீகா 7:8)

7. சர்வஞானி:
   பட்டினத்தார் பாடல் 30: சிவபோக சாரம் - 2, (பைபிள் ஏசாயா 31:2; 1 இராஜா .8:10)

8. சர்வவல்லவர்:
   உபநிஷத் 6:9; இடைக்காடர் 6-37 பாடல்கள்;
   (பைபிள்ஆதியாகமம் 17:1; யோபு 26:16)

9. என்றென்றும் இருக்கிறவர்:
திருமூல நாயனார் பாடல் - 1: இடைக்காடர் பாடல் -6, பைபிள் தானியேல் 6:26; (வெளி 4:10)

10. என்றென்றும் விழிப்புடையவர்:
குருகீதை 5:11; (பைபிள் தானியேல் 6:26; சங்கீதம் 121:4)

11. வேதங்களை நன்கறிந்தவர்:
முண்டகோப உபநிடதம் 1:2:12(பைபிள் ஓசியா 8:12)

12. பாவங்களைப் போக்குபவர்:
ஸ்வேத உபநிடதம் 6:5; (பைபிள் ஏசாயா 1:18; 1 யோவான் 1:7-9; எபிரேயர் 9:14)

13. ஒளிமயமானவர், ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவர்:
சிவம் - ஒளி- சைவசித்தாந்தம் (சிவனல்ல) (பைபிள் யோவான் 8:12; 1 தீமோ. 6:16)

14. மனுக்குலப் பாவங்களைப் போக்கப்பலியாகிறவர்:
சாண்டோக்கிய உபநிடதம் 3:16; 1 சத்பத பிரமாணம் (ரிக்) 1:3:4:15, (பைபிள் ரோமர் 5:8)

15. வார்த்தையாக இருந்தவர் (ஓம்):
சாமவேதம் - படைப்பிற்கு அடிப்படை வார்த்தை (பைபிள் யோவான் 1:1)

16. உருவமற்றவர்:
சைவ சித்தாந்தக் கொள்கை (உருவமற்றது) பாம்பாட்டிச் சித்தர் பாடல்-7; வால்மீகச் சித்தர் பாடல்-1; சுப்பிரமணிய சித்தர் பாடல்-1 (பைபிள் உபாகமம் 4:15)

தெய்வம் தம்மை கீழ்க்கண்ட விதத்தில் வெளிப் படுத்தியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

1. தெய்வம் தம்மை ஒளியாகவும்
2. உணவாகவும்
3. வாசலாகவும்
4. ஆயனாகவும்
5. வழியாகவும்
6. சத்தியமாகவும்
7. ஜீவனைக் கொடுப்பவராகவும்
8. உயிர்த்தெழுகிறவராகவும்
9. யாரையும் தாங்குகிறவராகவும் வெளிப்படுத்தியுள்ளார்.

86 ஆம் பாடலில் தெய்வத்தின் தன்மைகளாகக் குறிக்கப்பட்டுள்ளவை.

1. தெய்வம் மனிதனையும் தெய்வத்தையும் இணைப்பராகவும்
2. பாவத்திலிருந்து மனிதனை விடுவிப்பவராகவும்
3. உலகத்திற்கு மகிழ்ச்சியை அளிப்பவராகவும்
4. ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், நியாயந் தீர்த்தல் ஆகிய ஐந்து தன்மையுடைய வராகவும்
5. சகல பாவங்களையும் போக்குபவராகவும்
6. மனித ஆத்துமாக்களை இரட்சித்துப் பரலோகம் சேர்ப்பராகவும்
7. ஒரே தரம் அவதாரம் எடுத்து வருகிறவராகவும்
8. மனித துன்பங்களைத் தான் ஏற்றுக்கொண்டு அவனை மீட்கப் பலியாகிறவராகவும்
9. மெய்வழியைக் காட்டுகிறவராகவும்
10. தீமையை வெறுப்பவராகவும் இருக்க வேண்டும் என்பதாம்.

11:12ல் கூறப்பட்டுள்ள தன்மைகள்

தெய்வம் என்பவர் எல்லா வகையிலும் பரிசுத்தவான்; பிறரைப் பரிசுத்தப்படுத்துகிறவர்: கருணை வடிவன்; பாவிகளுக்குத் தமது வழியைத் தெரிவித்து அவர்களுக் காகத் தமது ஜீவனைத் தந்து பாவம் போக்குபவர்.

மனுக்குலப் பாவங்களைப் போக்க மனிதனைப் படைத்த தேவனே பலியாக வேண்டும் எனப் பிற வேதங்களும் கூறுகின்றன.

1. மக்களின் பாவங்கள் பலிமூலமே மன்னிக்கப்பட்டன
   - ரிக்வேதம்
2. யஜமானாகிய தெய்வமே பலியை நிறைவேற்றுவார்
   - ரிக் வேதம்
3. பலிமார்க்கம் மூலமே இவ்வுலகிற்கு விடுதலையுண்டு
   - ரிக்வேதம்
4. உண்மையான பலியே இரட்சிப்பளிக்கின்றது
   - தண்டிய மகா பிரமாணம்
5. பாவ உலகிலிருந்து சுவர்க்கம் போக ஆத்துமாவுக் காக தெய்வம் தாமே உண்மை பலியாவார்
   -சத்பத பிரமாணம் 1:13; 4:15
6. தன்னையே பலியாகத் தந்த தெய்வத்தாலன்றி ஆயிரமாயிரம் நற்பணிகள் செய்தாலும் பரமபதவி கிடையாது - ரிக்வேதம்
7. வார்த்தை மாம்சமானது - ரிக் வேதம்- பைபிள்

8. உலக மக்களை இரட்சிக்க இறைவன் தந்தையாக வும், குமாரனாகவும் ஆவியான சக்தியாகவும் வெளிப் பட்டு வானத்துக்கும் பூமிக்கும் நடுவே உபத்திரவப் பட்டு சபையை இரட்சிப்பார் - சாமவேதம் 41:3-7

9. விஸ்வ கர்மாவாகிய கடவுள் உலகில் சகல படைப்பு களையும் படைத்துவிட்டு முடிவில் தன்னையே பலியாக்குவார் - சாமவேதம் 41:3-7

(இந்த சுலோகங்கள் யாவும் குறிக்கும் தெய்வம் யார்? மெய்யுணர்வுடன் சிந்திக்கவும்)

1. **"ஓம் ஶ்ரீ பிரம்ம புத்ராய நமஹ"**
தேவ குமாரனாக இவ்வுலகில் வெளிப்பட்டவரே உம்மைப் போற்றுகிறேன்.

2. **"ஓம் ஶ்ரீ கன்னிசுத்தாயாய நமஹ"**
கன்னியின் வயிற்றில் பரிசுத்தமாய்ப் பிறந்தவரே உம்மைப் போற்றுகிறேன்.

3. **"ஓம் ஶ்ரீ உமத்தியாய நமஹ"**
பரிசுத்த ஆவியினால் பிறந்தவரே உம்மைப் போற்றுகிறேன்.

4. **"ஓம் ஶ்ரீ விதிர்ஷ்டாய நமஹ"**
விருத்தசேதனம் செய்து கொண்டவரே உம்மைப் போற்றுகிறேன்.

5. **"ஓம் ஶ்ரீ விருட்ச சூல அத்துராய நமஹ"**
சூலம் போன்ற மரத்தில் பலியானவரே உம்மைப் போற்றுகிறேன்.

6. **"ஓம் ஶ்ரீ பஞ்ச காயாய நமஹ"**
ஐந்து காயங்களை ஏற்றவரே உம்மைப் போற்றுகிறேன்.

7. **"ஓம் ஶ்ரீ ப்ரீம் ப்ருங்காய ஜெயா நமஹ"**
மரணத்தை வென்றவரே உம்மைப் போற்றுகிறேன்.

8. **"ஓம் ஶ்ரீ தக்ஷிணா மூர்த்தியே நமஹ"**
பிதாவின் அடியில் அமர்ந்திருப்பவரே உம்மைப் போற்றுகிறேன்.

9. **"ஓம் ஸ்ரீ தரித்திர நாராயணாய நமஹ"**
ஏழைக்கோலத்தில் மனிதனாய் உலகில் வெளிப் பட்டவரே உம்மைப் போற்றுகிறேன்.

10. **"சர்வ பாபபரிகார ரத்த புருஷனான மான சக்கம்"**
சர்வலோகத்தின் பாவத்தைப் போக்குவதற்காக தன் இரத்தத்தைச் சிந்தினவரே உம்மைப் போற்றுகிறேன்.

11. **"விக்ரக மனுரத்தம் நிர் ஜீவம் சர்வ ஷபஷா ஷனம்"**
விக்கிரகம் உண்மையற்றது. அதை வணங்குபவர் யாவரும் அழிவைக் காண்பர். விக்கிரக ஆராதனை தேவனுக்கு விரோதமான பகை.

இந்த சுலோகங்கள் யாவும் இயேசு கிறிஸ்துவைப் பற்றியே முன்னோடியாக கூறப்பட்டுள்ளது.

பலிமிருகத்தின் இலட்சணைங்கள்

1. பாவ நிவிர்த்திக்காகப் பலியிடப்படும் மிருகம் பழுதற்ற ஆண் ஆட்டுக்குட்டியாக இருக்க வேண்டும்.

   (இயேசு கிறிஸ்து சர்வலோககத்தின் பாவங்களைப் போக்கும் பழுதற்ற தேவ ஆட்டுக்குட்டி. பைபிள் - யோவான் 1:29,36)

2. முள்நிறைந்த பலகச்செடி அதன் தலையில் சுற்றி வைக்கப்பட வேண்டும்.

   (முட்களால் முடியைப் பின்னி இயேசுவின் தலைமேல் வைத்தார்கள். பைபிள் மத்தேயு 27:29)

3. பலி ஆட்டுக்குட்டி பலிபீடத்தின் தூணோடு கட்டப்பட வேண்டும்.

   (இயேசுவின் கண்களைக் கட்டினார்கள். (பைபிள் - லூக்கா 22:64)

4. அதன் நான்கு கால்களிலும் நன்றாக இரத்தம் வரும்படி ஆணிகளை அறைந்தார்கள்.

   (இயேசுவின் கைகளிலும் கால்களிலும் ஆணிகளை அறைந்தார்கள். பைபிள் மத்தேயு 27:38; லூக் 23:33)

5. அதை மூடியிருக்கும் துணியை நாலு பூசாரிகள் தங்களுக்குள் பாங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

   (இயேசுவின் வஸ்திரங்களை நான்கு போர்ச் சேவகர் தங்களுக்குள்ளே பாங்கிட்டுக் கொண்டார்கள். பைபிள் - யோவான் 19:23,24)

6. பலிக்குரிய ஆட்டுக்குட்டிக்குச் சாமச்செடியின் கசாயம் குடிக்கக் கொடுக்கப்படவேண்டும்.

(இயேசுவுக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள். பைபிள் - யோவான் 19:29)

7. பலி ஆட்டுக்குட்டியின் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படக்கூடாது.

(இயேசுவின் எலும்பு ஒன்றும் முறிக்கப்படவில்லை. பைபிள் - யோவான் 19:36)

8. அதன் மாமிசம் புசிக்கப்படவேண்டும்.

(இயேசுவே சொன்னார் : நானே வானத்திலிருந்து வந்த ஜீவ அப்பம். என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவனுண்டு. நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன். பைபிள் - யோவான் 6:54-55)

9. பலியிடப்பட்ட பிறகு பலி ஆட்டுக்குட்டி உயிர் பெற்றுவர வேண்டும்.

(இயேசு கிறிஸ்து மரித்த மூன்றாம் நாள் உயிரோடே எழுந்து பரலோகம் சென்றார். பைபிள்- லூக்கா 24:5-6)

பலதரப்பட்டவர்களின் சாட்சிகள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை

1. மாண்டாரை எழுப்புகின்ற மருந்தான தெய்வம்
மறைகளெல்லாம் போற்றுகின்ற மாசற்ற தெய்வம்

- இராமலிங்க அடிகள்

2. திருப்பணிகள் முடித்தவரும் செத்தும் சாகாதபேரில் ஒருவருமாய் அருள் பொருந்திய வேதத்திலே அவ்வை அறிந்து சொன்னாளே.

- ஞானப் பெண்ணே அவ்வை

3. பாவமில்லாத ஜோதியான தேவன் துன்பம் நிறைந்த உலகில் யாவரும் காண வந்தார்.

- திருவாய் மொழி - பரமகுரு

4. அரும்பரத் தொருபரன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமையை
சிறுமை என்றெண்ணி இகழாதே

- மாணிக்கவாசகர்

5. ஒழுக்கம் விழுப்பம் உயிரினும் ஓம் என்றுரைத்
திருந்தால்
கொழிக்குமோ தானேகுலவி நடந்து குவலயத்தீர்
ஒழுக்க வடிவாம் கிறிஸ்துவை உண்ணி
உளத்தொழுதால்
அழுக்கைக் கழுவும் ஒழுக்கம் அரும்பி அலர்ந்திடுமே

- அருள் வேட்டல் - திரு.வி.க.

6. தெய்வம் பரிசுத்த குருவாக உலகில் தோன்றித் தம்மை வெளிப்படுத்தின பெருமையை அறியாதவர் அவரை நம்மைப் போல மனிதர் என்பர்.

- திருமந்திரப்பாடல் ௭

7. சிலுவையில் குருதி சிந்தி சீவனை - விடுத்தாய்
பலியெனப் பிணையாய் நின்றாய்
பாவப் பழியெல்லாம் சுமந்து தீர்த்தாய்
இறைவா இரட்சை தந்தாய் - இடமும்
இரண்டிலையும் உனைப் போலுண்டோ
கும்பிட்டேன் போற்றி! போற்றி!

- ஆத்தான் பிள்ளை

8. மரணத்தை வென்றவனே மன்னவனே அன்புருவே
தரணி உய்யப் பிறந்தவரே தாவீதரசன் குலக்
கொழுந்தே
அரன் எனக்கு நீர் தாமே
அறிவெல்லாம் அமைந்தவரே

- சித்தானந்தப் பாரதியார்

9. வானங்களும் நெடுமேரு ஒருவனைக் மாநிலத்தை
ஒரு நொடியில் வகுத்தே
குணமான மனிதரையும் படைத்தபின் குவலயத்தில்
தானையுதித்து வந்து
சம்சாரம் ஒன்றில்லாமல் சன்னியாசி போலிருந்து
தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப் போட்டு அவன்றே
தாம் சென்றவரை அன்றேயாமே.

- அகஸ்திய ஞானப்பாடல்-27

10. கல்லதை வெள்ளியை செம்பை களிமண்ணால் மிதியிட்டுக் குயவன் உருவைக் காட்டிய கோலமும் கருதேன். வல்லிரும் புக்கால் வெண்கலத் தகட்டால் மற்றுமுள்ள பஞ்சலோகத்தால் வார்த்து அடித்து வைத்ததுமான வஞ்சிலைகளையும் மதியேன். செல்லரிக்காத மரத்தினைத் தெரிந்து சித்திர வேலைகள் செய்து சிறந்த பொம்மைகள் பற்பல படங்கள் சிந்தையிலும் கனவிலும் மதியேன் எல்லையால் எனக்கினி ஆகாது உமக்கு நான் அடிமை எந்தன் இயேசு நாயகனே.

- வேதநாயகம் பிள்ளை

11. தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது யூத நிலத்தினிலே
சத்திய வேதம் தரணியில் நிலைத்தது இயேசு
பிறந்ததினிலே
இத்தனை நாளும் மானிடர் வாழ்வது இயேசுவின்
வார்த்தையிலே
மறுபடியும் இயேசு மண்ணணிலே வருவது என்பது
சத்தியமே
எண்ணும் எழுத்தும் எல்லாம் அவரே இயேசுவை
நம்புவோமே.

பல சமயங்களில் பலர் என்னை இறவாக் காவியம் எழுதுங்கள் என்று வற்புறுத்தியதுண்டு. அந்த இறவாக்காவியம் இயேசு காவியம்தான் என நான் உறுதியாகக் கூற முடியும்.

இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழியில் இயற்ற வேண்டும் என்ற மகாகவி பாரதியின் கனவை நனவாக்கியுள்ளது இயேசு காவியம்.

- கவிஞர் கண்ணதாசன்

12. உலக மக்களை இரட்சிக்க இறைவன் தந்தையாக வும், குமாரனாகவும், ஆவியான சக்தியாகவும் வெளிப்பட்டு வானத்துக்கும் பூமிக்கும் நடுவே உபத்திரவப்பட்டு சபையை இரட்சிப்பார்.

- சாமவேதம் சுலோகம் 69:7

13. தன்னையே பலியாகத் தந்த தெய்வத்தாலன்றி ஆயிரமாயிரம் நற்பணிகள் செய்தாலும் பரமபதவி கிடையாது. - ரிக் வேதம்

14. ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாக இருந்தது. வார்த்தையாக இருந்த தெய்வம் (ஓம்) மக்களை இரட்சிக்க மனுஷ அவதாரத்தில் உலகிற்கு வந்தார் - ரிக்வேதம்

15. பாவ உலகிலிருந்து சுவர்க்கலோகம் போக ஆத்து மாவிற்காக யஜமானாகிய தெய்வமே பலியாவார்.

- அய் தெரிய பிராமண்யம்

16. விஸ்வகர்மாவாகிய கடவுள் உலகில் சகல படைப்பு களையும் படைத்துவிட்டு முடிவில் தன்னையே பலியாக்குவார். - சாமவேத சுலோகம் 41:3-7

17. பலிமார்க்கம் மூலமே இவ்வுலகிற்கு விடுதலையுண்டு.

- ரிக்வேதம்

18. மக்களின் பாவங்கள் பலிமூலமே மன்னிக்கப் படுகின்றன. -ரிக்வேதம்

19. குரு எல்லாவகையிலும் பரிசுத்தவான். பிறரைப் பரிசுத்தப்படுத்துகிறவன். - குருகீதை 111:12

20. உலக இறுதிநாளில் ஈஸா (இயேசு) மக்களை நியாயந்தீர்க்க வருவார்.

- திருகுர்ஆன் - சூரா 43:61

21. இயேசு பாவமில்லாத பரிசுத்தர் - திருகுர்ஆன் 19:19

22. உலகம் தோன்றி எட்டாயிரம் ஆண்டுகள் நிறைவேறும் போது மேசியா (இயேசு) என்னும் பெயர் கொண்டவர் தோன்றுவார். அவரே உலகை மீட்பவர்.

- புத்தமதநூல் - திரிபிடகம் - திக்நிகயா

23. குற்றமற்ற மனிதனாக, பகைவர்களுக்காகவும் எல்லாருடைய நலனுக்காகவும் தம்மையே நிகரற்ற பலியாக ஒப்புக் கொடுத்த இயேசுவே உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டியானவர். இதுவே மேன்மையான செயல்.

- மகாத்மா காந்தி

24. முதியோர் பாதுகாப்பு இல்லங்கள், செவிடர், குருடர், ஊமையர், சப்பாணிகள், குஷ்டரோகிகள் மற்றும் பல வியாதியஸ்தர்கள் மத்தியில் நீங்கள் சேவை செய்யக் காரணம் என்ன? என்று அன்னை தெரசாவிடம்

கேட்டனர். அதற்கு அவர் ஒவ்வொரு நோயாளியையும் நான் பார்க்கும்போது சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவின் அன்பு முகத்தையே நான் காண்கிறேன் என்று கூறினார்.

25. மயக்கமருந்தைக் கண்டுபிடித்தவரும், சிறந்த விஞ்ஞானியும் மருத்துவத்தின் தந்தையுமாகிய ஜேம்ஸ் சிம்சனிடம் உங்களது பெரிதான கண்டுபிடிப்பு எதுவெனக்கேட்டபோது அவர் சொன்னது: நான் ஒரு பாவி. இயேசு கிறிஸ்து என் இரட்சகர் என்பதையே என் கண்டுபிடிப்புகளில் பெரியதாகக் கருதுகிறேன் என்று கூறினார்.

26. இங்கர்சால் என்ற நாத்திகன் தனது நண்பன் லா லாலன்ஸை இயேசு கிறிஸ்து தேவனில்லை. உயிர்க்க வில்லை. சாதாரண மனிதன் என்று புத்தகம் எழுதச் சொன்னான். ஆராய்ச்சியில் மூழ்கிய நண்பன் இயேசு மெய்யான தெய்வம் உயிர்த்தார் என்று எழுதினான்.

27. இந்தியா என்னும் சோபிதமான விலைமதிப்பற்ற கிரீடத்தைச் சூடப்பாத்திரர் இயேசு கிறிஸ்து ஒருவரே. இந்தியா என்னும் மணிமகுடம், ஒரு நாள் அவருடையதாகி விடும். - கேஷப சந்திரசென்

28. மனிதன் சந்திரனில் நடந்தான் என்பதைக் காட்டிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் நடந்தார் என்பதே உன்னதமானது.

- ஜிம் இர்வின் - வானவெளிவீரன்

29. அப்பொல்லோ - 16-ல் சந்திரனுக்குச் சென்று வந்த சார்லஸ் - டியூக்கின் சாட்சி:

உலகத்தில் 10 ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தால் கூட சந்திரமண்டலத்தைப்போல ஒரு அனுபவத்தைப் பெற முடியாது. ஆனால் இந்தப் பூமியிலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு நடக்கின்ற நடையை சந்திரனில் நடந்ததைவிட மிகவும் உயர்ந்தது.

30. இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்த்தேன். எனக்குப் பதிலாக வாரினால் அடிபட்டு சிலுவையில் மரித்தார். அவரைப் பார்த்து அழுதேன். என் பாவங்கள் மன்னிக்கப்பட்டது. இந்த இரட்சகரைக் குறித்து சொல்லுவதையே என் கடமையாக கொண்டேன்.

- Y. ஜேம்ஸ் சிம்சன் - விஞ்ஞானி

மனிதன் மரித்தபின் போகக்கூடிய இடங்கள்

மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று நிலையிலிருக்கிறான். தன் பாவத்தினாலேயே மனிதன் மரணமடைகிறான். பாவத்திற்கு வரும் சம்பளம் மரணம் எனப் பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. மரணத்தைக் காணாதவன் எவனுமில்லை. மனிதன் மரித்தவுடன் அவனது ஆவி (உயிர் மூச்சு) அவனுக்கு உயிரைத் தந்த தேவனிடமே போகிறது. மரித்த மனிதனுடைய ஆவி உலகில் எங்கும் சுற்றித்திரியாது. பிசாசு என்பவன் மரித்தவர்களின் ஆவி வேஷத்தில் மக்களிடையே தீமைகளைப் புரிந்து வருகிறான். மனிதன் பிசாசாய் மாறுவதில்லை.

மரித்த மனிதனின் சரீரம் மண்ணிலே புதைக்கப் படுகிறது. தேவன் மனிதனை அவன் தேவகட்டளையை மீறினபோது, "நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" என்று சபித்தார். ஆகவே மரித்த மனிதனின் உடலைப் புதைக்கத்தான் வேண்டும். எரிக்கக் கூடாது என்று பரிசுத்த வேதம் கூறுகிறது.

மனிதனுக்குள் இருக்கும் ஆத்துமாவே மிகவும் முக்கியமானது. அழியாதது. ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் வித்தியாசமுண்டு. ஆவியென்பது மனிதன் இருக்குமட்டும் சுவாசத்தைத் தருவதாகும். ஆனால் ஆத்துமா மனிதனுக்குள் இருந்து சகலத்தையும் பகுத்தறியும் தன்மை கொண்டது. அதனால்தான் ஆத்தும ஞானம் என்கிறோம். மரித்தபின் ஆத்துமா இரண்டு இடங்களுக் குச் சென்று அங்கே உலகம் அழிந்து நியாயத்தீர்ப்பு செய்யும் நாள் மட்டும் தங்கியிருக்கும். மெய்யான தெய்வத்தை (இயேசுவை) அறிந்து, அவரை விசுவாசித்து அவரைப்

பின்பற்றி மரித்தவர்களின் ஆத்துமாக்கள் பரதீசு என்ற ஒளிமயமான இடத்தில் இளைப்பாற்றிக் கொண்டிருக்கும். மெய்யான தெய்வத்தைப் பற்றிக் கேட்காமலும், விசாரியாமலும், அவரை விசுவாசியாமலும் தங்கள் இஷ்டம்போல் ஜீவித்து மரித்தவர்களின் ஆத்துமாக்கள் பாதாளம் என்ற இருள்நிறைந்த இடத்தில் இருக்கும்.

ஒரு நாளுண்டு அந்த நாளில் தேவன் வானத்திலிருந்து அக்கினியையும் கந்தகத்தையும் பூமியில் அனுப்புவார். எல்லாம் வெந்து உருகிப்போகும். பின் கர்த்தரும் உலக இரட்சகரும், இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமான இயேசு கிறிஸ்துவாகிய மெய்த்தேவன் வெள்ளைச் சிங்காசனத்தில் வீற்றிருப்பார். மனுஷதோற்ற முதல் அந்த நாள் மட்டுமுள்ள மரித்த அனைத்து மக்களையும் கூட்டிச் சேர்ப்பார். அப்போது அவனவன் கிரியைக்குத்தக்கபடி மக்களைப் பிரித்து நித்திய மோட்சத்துக்கும் நித்திய நரகத்துக்கும் பிரித்து அனுப்புவார்- ஆமென்.

சமயங்களும், சமயப் பெரியார்களும், இறை பற்றுக் கொண்டவர்களும், உலகப் பெரியோர் களும், நாத்திகர்களும் கூறுகின்றதாவது:

இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைக் கவனமாக வாசித்து, நன்றாய்ச் சிந்தித்து ஏற்றுக் கொள்வீராயின் வரப்போகிற உலக அழிவுக்கும், அதின் பின் நடக்க இருக்கும் நியாயத்தீர்ப்புக்கும், நரக வேதனைக்கும் தப்பிக் கொள்ளலாம். நரக ஆக்கினைக்குத் தப்ப இதுதான் ஒரே வழி.

வேதங்கள் கூறுகின்ற இறைவனின் தன்மைகள்

வேதங்களை நன்கறிந்தவர்	:	முண்டகோப உபநிடதம் 1:2, 12;
கடவுளில் நிற்பவர்	:	எரே : 32:37 (பைபிள்)
கற்புள்ளவர்	:	பானினி: 4:1-98; யாத் : 15:11 (பைபிள்)
பிரம்மச்சாரி (திருமணமாகாதவர்)	:	அதர்வ வேதம் 11:5-17 சங்கீதம் 90:2; ஏசா : 40:28; ரோ:16:25 (பைபிள்)
நிர்மலன் (பாவமற்றவர்)	:	குலர்வண தந்திரம் : 13:38-50; எபி : 4:15; 7:26 (பைபிள்)

நிர்த்துவந்தன் (இருதன்மையற்றவர்)	:	சங் 102:27; மல்கி : 3:6 (பைபிள்)
திரி கலைஞர் (சர்வ ஞானி)	:	ஆதி : 17:1
அவர் சக்தன் (இச்சையற்றவர்)		
நித்யன் (என்றுமுள்ளவர்)	:	கு.கீ: 5:11; தானி : 6:26; யோ : 1:1 - 14 (பைபிள்)
நித்திய போதம் (என்றும் விழிப்புடையவர்)	:	கு.கீ: 5:11; சங் : 121:4

இயேசு கிறிஸ்துவுக்குரிய தன்மைகள்

"ருதஸ்யா நாஹ பத நாய அதிவிஸ்வாணி தூரிதர்"

– ரிக் வேதம்.

பொருள் : பலி மார்க்கம் மூலமாகவே உலகத்திற்குப் பாவத்திலிருந்து விடுதலை உண்டாகிறது.

":யக்ஞே கூஷி பித கல்மஷ ஹ"

– அய்தெரிய பிராம்மணியம்.

பொருள் : ஜனாங்களின் பாவங்கள் பலியின் மூலமாகவே மன்னிக்கப்படுகின்றன.

"பிரஜாபதி தேவிப்யம் ஆத்மனம்

யக்னம் க்ருதவாபிராயசித்த" – சாம வேதம் 69:7

பொருள் : உலக மக்களை உருவாக்கின சிருஷ்டி கர்த்தனாகிய புருஷன் மனிதனாக வந்து அவர்களுடைய குற்றத்திலிருந்து மீட்க தனது ஆத்துமா, ஆவி, சரீரத்தை சிலுவையிலே பலியாக தந்து மீட்டு இரட்சிப்பார். தன்னையே பிராயசித்த பலிப்பொருளாக தருவார்.

இதில் கூறப்பட்டபடி வார்த்தையாக (ஓம்) இருந்த தெய்வம் 'இயேசு' என்ற பெயரில் குமாரனாக உலகில் வெளிப்பட்டு சிலுவையில் பலியாகி மரித்து, உயிர்த்து சபையை (மக்களை) இரட்சித்தார். ஆதலின் பலி மார்க்கம் கிறிஸ்தவமே.

"யஜ்மான ஹுர்பசுஹு யஜ்மானா மேவா
ஸ்வர்க்க லோகம்"

- சாம வேதம் (அய்தெரிய பிரம்மாணியம்)

பொருள் : பாவ உலகிலிருந்து ஸ்வர்க்க லோகம் போக ஆத்மாவிற்காக யஜமானனாகிய தெய்வமே பலியாவார்.

"விஸ்வ கர்ம சர்வாணி பூதாநி ஜுஹுற
வாஞ்ச்ச காஹுஸ ஆத்மாந
மந்த்ததோ ஜுஹுற வாஞ்ச்ச ஹுாஸ"

- சாமவேதம் : 41: 3, 7.

பொருள் : விஸ்வ கர்மாவாகிய சிருஷ்டிகர்த்தர் உலகில் சகல படைப்புகளையும் படைத்து விட்டு முடிவில் தன்னைப் பலியாக்குவார்.

"கடவுள் பாப்னுதம்" (பாவங்களை அழிப்பவர்)

(ஸ்வேத உபநிடதம் 6 : 5)

"புருஷோபாவ யக்ஞுஹு"

- (சத்பதா பிராமணம் 1:13; 4:15)

பொருள் : புருஷனாகிய தெய்வமே பலியாவார்.

:ப்ரஜாபதி யக்ஞுஹு" - (சத்பதா பிராமணம் 1:13; 4:15)

பொருள் : உலக மக்களை உருவாக்கின புருஷ கடவுளே பலியாவார்.

"அய யக்ஞே புவஸைய நாபிஹ"

- ரிக் வேதம் : 1:165:35

பொருள் : உலகம் அசையாமல் நிற்பதற்குப் பலியே மூலகாரணம்.

"நன்ய மந்த அய நாய வித்யதே" - ரிக் வேதம்.

பொருள் : தன்னையே பலியாகத் தந்த தெய்வத்தாலன்றி ஆயிரமாயிரம் நற்பணிகள் செய்தாலும் பரம பதவி கிடையாது.

"தெய்வம் என்பவர் எல்லா வகையிலும் பரிசுத்தவான். பிறரைப் பரிசுத்தப்படுத்துகிறவர். கருணைவடிவன்; பாவிகளுக்குத் தன் வழியைத் தெரிவித்து அவர்களுக்காகத் தன் ஜீவனைத் தந்து பாவம் போக்குபவர்" குரு கீதை : 11:12.

இயேசு கிறிஸ்துவே

இதில் குறிப்பிட்டபடியான தெய்வம்

கைவல்ய நவநீதத்தில் 86ஆம் பாடலில் சொல்லப்பட்டுள்ளதைக் கவனித்துப்பாருங்கள்.

தெய்வம் மனிதனையும், தெய்வத்தையும் இணைப்பவராக இருக்க வேண்டும். பாவத்திலிருந்து மனிதனை விடுவிப்பவராகவும், உலகிற்கு மகிழ்ச்சியை அளிப்பவராகவும், ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல் நியாயந்தீர்த்தல் என்ற ஐந்து தன்மைகளை உடைய வராகவும், சகல பாவங்களை அறுப்பவராகவும், மனித ஆத்துமாக்களை இரட்சித்துப் பரலோகம் சேர்ப்பவராகவும், ஒரே தரம் அவதாரம் எடுத்து வருபவராகவும், மனிதத் துன்பங்களைத் தான் ஏற்றுக் கொண்டு அவனை மீட்கப் பலியாகிறவராகவும், மெய்வழியைக் காட்டுகிறவராகவும், தீமையை வெறுப்பவராகவும் இருக்க வேண்டும்.

(இத்தன்மைகள் யாவும் கர்த்தராகிய 'இயேசுக் கிறிஸ்துவுக்கு' மட்டுமே உள்ளன.)

பரிசுத்த வேதம் (பைபிள்) கூறுகிறது

ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து; அந்த வார்த்தை தேவனாக இருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே (இயேசு) வாசம் பண்ணினார். (யோவான் :1:1,14)

இந்த சுலோகத்தின்படி நாதமாயிருந்து, விந்துவாகி, எழுத்தாகி, சொரூபமாகி (இயேசு என்ற பெயரில்) உலகில் பிறந்து மனுக்குலத்தினுடைய உள்ளத்தில் வாசம் பண்ணிய தெய்வம் இயேசுவே.

மரணம் :

சாமவேதத்தில் இச்சொல்லுக்கு தெய்வத்தின் சரீரத்தில் தோய்த்துக் கொள்ளுதல் என்று பொருள். (சாம வேதம் 165-ஆம் காண்டம் சுலோகம் : 10) இதன்படி இயேசு கிறிஸ்து தன் சரீரத்தை விசுவாசிகளுக்கு உணவாகக் கொடுத்திருக்கிறார்.

வார்த்தை (ஓம்) அழியாதது. அது படைப்பில் அடிப்படைக் கொள்கையானது - (ரிக் வேதம் : 10:1:25.)

வார்த்தையாக இருந்த தெய்வம் இயேசு என்ற பெயரில் மனிதனாகி சிலுவையில் மனிதனுக்காகப் பலியாகி உயிர்த்தார். ஆதலின் வார்த்தையாக இருக்கிற இவர் என்றும் ஜீவிக்கிறவர்.

முகமதிய மார்க்கம் கூறும் சான்றுகள்

மனிதனாய்ப் பிறந்தவருள் பாவமே செய்யாதவர் ஈசா நபி (இயேசு) ஒருவரே. அவர் பரிசுத்தர். பாவமின்றி பரிசுத்த ஆவியினால் கன்னிவயிற்றில் பிறந்தவர். பல அற்புதங்களைச் செய்துள்ளார். சாவைக் காணாதபடி பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். அங்கிருந்து மீண்டும் உலகத்தை நியாயந்தீர்க்க வர இருக்கிறார். அவரது போதனையைப் பின்பற்றுபவரே உண்மையான முஸ்லீம் - குர் ஆன் சுரா : 3:22-58; 4:157-159.

மர்யமே நீ பரிசுத்த மகனைப் பெறுவாய் (அரபியில் இதற்கு குலாமன் ஸக்கியான் என்பதாகும்.) அதாவது பாவமல்லாத பரிசுத்தர் என்று பொருள். (பெய்தாவி) - (மஸிபி புத்தகம்-1, அதிகாரம்-3, பகுதி - 1)

பூகாரி முஸ்லீம் கூறுவது

மர்யத்தையும் அவள் பெற்ற இயேசுவையும் தவிர ஆதாமிடம் பிறந்த அனைவருமே சாத்தானால் தொடப்பட்டவர் (பாவம் செய்தவர்). உலகை நியாயந்தீர்க்க பரலோகத்திலிருந்து மீண்டும் பூலோகத்திற்கு இயேசு வர இருக்கிறார்.

1933, செப்டம்பர் 16-ஆம் நாள் வெளியான "தி லைட்" என்ற இஸ்லாமியப் பத்திரிக்கை கூறுகிறது.

இயேசுவுக்கு விரோதமாக ஒரு முஸ்லீம் ஒரு கணமும் நினைக்கக் கூடாது. அவர் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர். மீறுகிறவன் முஸ்லீம் இல்லை.

முகம்மதலி கூறுவது :

மன்னுயிரின் மாசகலப் பாழ் சிலுவையிலேறி வஞ்சகரை மன்னித்து, செங்குருதி சிந்தி தன்னுயிரை மன்பதைக்கே ஈந்த அருள் தெய்வம் தரணியில் மூன்றாம் நாள் சாவை வென்ற தெய்வம்.

சீக்கில் (கிரந்தசாஹிப்) என்ற சீன நூல் கூறுவது:

நற்பண்புகள் வாய்ந்த ஒருவர் காலம் வரும்போது தோன்றுவார்; யாவற்றையும் புதுப்பிப்பார், உலகம் முழுவதற்கும் குருவாக இருப்பார்; வாடிய பயிர் மழையை நாடி இருப்பது போல மக்கள் ஒரு இரட்சகரை நோக்கிக் கொண்டுள்ளனர்.

இந்து பக்தர்கள் சொல்கிற சான்றுகள்

மேலைநாட்டினர் வணங்கும் இயேசுவே உண்மை யான தெய்வம். அவரை நான் வணங்குகிறேன். மோட்சம் போக விரும்பினால், இயேசுவை வணங்கி அவரிடமே போக வேண்டும். உங்கள் எண்ணத்தால் எண்ணுகிற எந்தக் கடவுளைக் காட்டிலும் மிக உயர்ந்த நிலையில் இருப்பவர் 'இயேசு' ஒருவரே. நாமும் அவரையே வணங்க வேண்டும். இயேசுவை ஒரு மனிதர் என்று சொல்கிற வர்கள் தெய்வ நிந்தனை என்ற குற்றம் புரிந்தவர் களாவார்கள்.

(விவேகானந்தர் - ஞானதீபம் - சுடர் 7, பக்கம் 270.)

கிறிஸ்துவானவர் தொட்டவுடனே மனித ஆத்மா மாற்றமடைகிறது. கிறிஸ்துவைப் போல அவன் மாறு கிறான். வாழ்க்கை புனிதமாகிவிடுகிறது.

(விவேகானந்தர் - ஞானதீபம் - சுடர் 4, பக்கம் 500)

எத்திசையில் செல்வது என்று முடிவெடுக்க முடியாத சந்தர்ப்பாங்கள் எனக்கு அநேகம் உண்டாயின. அப்பொழு தெல்லாம் நான் பரிசுத்த வேதாகமத்தை நோக்கியே திரும்பியிருக்கிறேன். புதிய ஏற்பாடு கூறும் வார்த்தையி லிருந்து என்னுடைய சூழ்நிலைக்கு தேவையான பெலனை நான் பெற்றுக் கொண்டேன்.

(மகாத்மா காந்தி)

மகாத்மா காந்தி வாலிபனாக இருந்தபோது நான்கு சுவிசேஷங்களை நன்கு படித்தார். இயேசுவின் அன்பு அவரை நெருக்கி ஏவினது. இந்தியா இயேசுவை ஏற்றுக் கொண்டால் ஜாதி ஒழியும், நன்மைகள் பிறக்கும் என எண்ணி இங்கிலாந்தில் ஒரு ஆலயம் சென்றார். இந்தியன் என இவரை ஏற்க மறுத்தனர். உள்ளே அனுமதிக்க வில்லை. இதுவே இந்தியா முழுவதும் இயேசுவை ஏற்றுக் கொள்ள தடையாக இருந்தது.

மனிதன் எப்படியும் பாவம் செய்கிறான். பின்பு பாவத்திலிருந்து விடுதலையடைய பலப்பல துறைகளில் முயற்சி செய்கிறான். அவற்றுள் என் உள்ளம் கவர்ந்தது கிறிஸ்து பெருமான் கூறியதேயாகும்.

(தமிழ்த்தென்றல் திரு. வி. க.)

(கிறிஸ்து அருள்வேட்டல் பக்கம் 3)

"மரணத்தை வென்றவனே
மன்னவனே அன்புருவே
தரணி உய்யப் பிறந்தவரே
தாவீதின் குலக்கொழுந்தே
அரண் எனக்கு நீர்தாமே
அறிவெல்லாம் அமைந்தவரே"

(சுப்பிரமணிய பாரதியார்)

மத உண்மைகளைப்பற்றி எனது நீண்ட நாள் ஆராய்ச்சியின் பலன் யாதெனில் மற்ற எல்லாப் போதகர்களையும்விட இயேசுநாதருடைய போதகங்கள் நன்னடத்தைக்கு உதவுவனவாகும். பகுத்தறிவு படைத்த மக்களுக்குப் போதுவனவாகவும் உள்ளன.

(இராஜாராம் மோகன்ராய்)

"சிலுவையில் குருதி சிந்தி சீவனை விடுத்தாய்
பலியெனப் பிணையாய் நின்றாய்
பாவப் பழியெல்லாம் சுமந்து தீர்த்தாய்
இலவச இரட்சை ஈந்தாய் இகம்பரம்
இரண்டிலேயும் குலதெய்வம்
உன்னைப் போலுண்டோ, கும்பிட்டேன்.
போற்றி! போற்றி!"

(ஆழ்வார் பிள்ளை)

"மாண்டாரை எழுப்புகின்ற
மருந்தான தெய்வம்
மறைகளெல்லாம் போற்றுகின்ற
மாசற்ற தெய்வம்"

(இராமலிங்க அடிகள்)

"மலரைப் பறிக்கிலென் மாலைபுனைந்திலென்
மந்திரத்தின் ஒலியைப் பெருக்கிலென்
ஓவெனப் பாக்களை ஓதிவென்
சிலுவையும் ஆணியும் செந்நீரும்
சேர்ந்த திருவுருவம் பொலியும் உள்ளத்தினில்
பொன்றிடும் பாவப் பொருப்புகளே"

(தாயுமானவர்)

"அரும்பரத் தொருபரன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமையை
சிறுமை யென்றெண்ணி இகழாதே"

(மாணிக்கவாசகர்)

"எம்மதமும் சம்மதம் என்று ஏமாந்து போகாமல்
மெய்மதத்தான் இன்னதென்று மேவுவது
எக்காலம்?"

(பத்ருகிரியார்)

மேலைநாட்டுப் பெரியார்கள் கூற்று :

உலகத் தலைவர்களும், அரசியல்வாதிகளும், மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டவர்கள் கிறிஸ்தவ அப்போஸ்தலர்களும், தீர்க்கத்தரிசிகளும் தேவனால்

அனுப்பப்பட்டவர்கள். அவர்களின் சுவிசேஷத்தை உலகின் எந்தச் சக்தியாலும் அழிக்கவே முடியாது.

(சர் ஐசக் நியூட்டன்)

பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும் எந்தவொரு இனத்தையும் சரீரத்திலோ, சிந்தனையிலோ அவர்களை அடிமைத்தனத்திற்கு உட்படுத்தவே முடியாது.

(ஹோரேஸ் கிரிலி)

மனித வர்க்கத்திற்கு தேவன் அளித்துள்ள மகா உன்னத பரிசு 'பரிசுத்த வேதாகமம்".

(ஆபிரகாம் லிங்கன்)

இத்தாலி தேசத்தை விடுவிக்கக்கூடிய பீரங்கி 'பரிசுத்த வேதாகமமே'.

(கரிபால்டி)

பரிசுத்த வேதாகமம் ஒரு புத்தகம் அல்ல. அது தன்னை எதிர்க்கிறவர்களையெல்லாம் வெற்றிகொள்ளக் கூடிய உயிரோட்டமுள்ள ஒரு படைப்பு வரலாற்று ஏட்டைப் புரட்டினால் அங்கே நாம் காண்பது அடைப்புக் குறிகள். இந்த அடைப்புக் குறிகளுக்குள்ளே எல்லாருடைய வாழ்க்கையும் அடங்கியுள்ளது. (உ-ம்.) அலெக்ஸாண்டர் (கி.மு. 356-323). ஜுலியஸ் சீஸர் (கி.மு. 100 - 44). ஆனால் இயேசு ஒருவருக்குத்தான் அடைப்புக் குறியில்லை.

(நெப்போலியன் போனபார்ட்)

பரிசுத்த வேதாகமத்தைக் கவனமாய் வாசித்துப் பின்பற்றினால் பரிசுத்த வேதாகமம் உங்களைச் சிறந்த குடிமகனாகவும், சிறந்த தகப்பனாகவும், சிறந்த கணவனாகவும் மாற்றும்.

(அமெரிக்க ஜனாதிபதி - தாமஸ் ஜெபர்ஸன்)

உலகத்திலுள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குப் பரிசுத்த வேதாகமத்தின் இரண்டு அட்டைகளுக்குள்ளே தீர்வுகள் உள்ளன. நாம் அதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவ்வளவே.

(அமெரிக்க ஜனாதிபதி றொனால்டு ரீகன்)

பைபிளும் இயற்கையும் கடவுளின் சொல்லால் உருவானவை. பைபிள் மனிதக் கற்பனையினால் அல்ல, பரிசுத்த ஆவியானவரால் எழுதப்பட்டது.

(கலிலியோ)

மேல்திசையில் பரிசுத்தமான ஒருவர் தோன்றுவார். உலக அரசியலை நடத்தாமலே சமாதானத்தை நாட்டுவார். வாயினால் சொல்லாமலே விசுவாசத்தை ஏற்படுத்துவார்; அவர் நாமத்தை அறியார்கள். அவரே மெய்யான தெய்வம்.

(கன்பூசியஸ்)

விஞ்ஞானத்தில் மனிதர்களால் கண்டுபிடிக்கப் படுகின்ற எல்லா கண்டு பிடிப்புகளுமே பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள உண்மைகளை நிரூபிப்பதற்காகவே கண்டுபிடிக்கப்படுவதுபோல நான் உணருகிறேன்.

(ஹெர்ஷல்)

பரிசுத்த வேதாகமத்தைக் கரங்களில் பெற்றுள்ள எந்தவொரு மனிதனுக்கும் அவன் என்ன செய்யவேண்டு மென்பதை எந்தவொரு அரசனும் சொல்லத் தேவை யில்லை என்ற தீர்மானத்துடன்தான் அமெரிக்க தேசம் உருவானது.

(ஜி அய்யன் டெய்லர்)

மனிதர் சிலர் பரிசுத்த வேதாகமத்தை மறுப்பதற்குக் காரணம் அதில் குறை இருப்பதினால் அல்ல, பரிசுத்த வேதாகமம் அவர்களில் இருக்கும் குறைகளைக் காண்பித்துவிடுவதே காரணம்.

(யாரோ ஒருவர் சொன்னது)

பரிசுத்த வேதாகமத்தை அறிந்த எவனும் கல்வி யறிவு இல்லாதவனும் அல்லன்; பரிசுத்த வேதாகமத்தை அறியாத எந்த மனிதனும் ஞானியும் அல்லன்.

(சாமுவேல் சாட்விக்)

உலகத்தில் சிறந்த புத்தகங்களெல்லாம் உயிர் பெற்று ஒரு மாநாட்டிற்கு அழைக்கப்படுமென்றால், பரிசுத்த வேதாகமம் அந்த மாநாட்டின் அரங்கத்திற்குள் நுழைந்த வுடனே எல்லாப் புத்தகங்களும் பரிசுத்த வேதாகமத்தின் முன் பெலிஸ்தரின் தெய்வங்களை ஆண்டவரின் உடன் படிக்கைப் பெட்டிக்குமுன் தாகோன் கோவிலிலே விழுந்தது போல விழும்.

(சர் ஐசக் நியூட்டன்)

உலக ஐ.நா. சபையில் பேசப்பட்ட நிகழ்ச்சி :

சமீபத்தில் நடந்த கூட்டத்தில் பலரும் பல கேள்விகளைக் கேட்டனர். அதில் ஒருவர் கேட்ட கேள்வி 'மூன்றாம் உலகப்போர் நடக்கவிருக்கிறதே, அதில் ஏராளமான அழிவு ஏற்படும். கொடிய பஞ்சம் வரும் பஞ்சகாலத்தில் மக்களுக்கு உணவளிக்க என்ன ஏற்பாடு செய்யப் போகிறீர்கள்?'

தலைவர் சொன்ன பதில் : இதைச் சமாளிக்க எவராலும் முடியாது. ஆனால் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு 5 அப்பம் கொண்டு 5 ஆயிரம் பேரைப் போஷித்த 'இயேசு கிறிஸ்து' வால் மட்டும் முடியும் என்றார். கூட்டத்தில் மாபெரும் அமைதி உண்டாயிற்று.

- மிக்கேல் கார்பெர்ட்ஸ்சேவ், முன்னால் ரஷ்ய அதிபர்

கி.பி. 1865–ல் நடந்த முக்கிய நிகழ்ச்சி :

கி.பி. 1865–ல் அனைத்து நாட்டு விஞ்ஞானிகள் 617 பேர் ஒன்று கூடி கிறிஸ்தவ வேதபுத்தகம் உண்மை மட்டுமல்ல; விஞ்ஞானத்துக்கும் ஒத்துள்ளது என்று முழுவதுமாக நம்புகிறோம் என எழுதப்பட்ட அவர்களது கையெழுத்துப் பிரதிகள் ஆக்ஸ் போர்டு பால்டியன் நூல் நிலையத்தில் உள்ளது.

நாத்திகர் கூற்று :

கிறிஸ்துவின் உபதேசங்களால் நரபலி, சிலை வணக்கம் ஒழிந்தது. கடலில் கப்பல் உடைந்து கரைசேர வேண்டுமானால் கிறிஸ்துவின் போதனையைத்தவிர

வேறில்லை கிறிஸ்துவின் போதனையினால் ஒழுக்கக்கேடு, சிசுகொலை மறைந்தது.

(சார்லஸ் டார்வின்)

ஐயோ! நான் எழுதிய நூல் அச்சிடப்படாதிருந்தால் நலமாயிருக்குமே; தேவ ஏற்பாட்டிற்கு மீறி எழுதினேன்; ஆ! இயேசுவே!

(டார்வின்)

நான் தேவனாலும், மனிதராலும் கைவிடப்பட்டேன். நரகத்துக்கே போவேன்.

(வால்டேயர் - சாகும்போது)

நான் எழுதிய "பகுத்தறிவின் காலம்" என்ற நூல் பிரசுரிக்கப்படாதிருந்தால் அதற்கு ஈடாக உலகங்களையே தருவேன். இயேசுவே உதவி செய்யும். நரகத்துக்கே நான் செல்வேன்.

(டாம்பேயின் - சாகும்போது)

ஆயிரம் ஆண்டுகள் அக்கினியில் உபாதைகளைச் சகித்து இயேசுவின் கிருபையைப் பெற்றால் நலமாக இருக்கும். கோடி ஆண்டுகளானாலும் என் வேதனைக்கு முடிவிராது. நரகத்திற்கே செல்வேன்.

(சர். பிரான்சிஸ் நியூபோர்ட்)

அநேகருக்கு அவர்களால் புரிந்துகொள்ளமுடியாத வேத வசனங்கள் அவர்களுக்குப் பிரச்சினையாய் இருக்கிறது. எனக்கோ நான் புரிந்துகொண்ட வேத வசனங்கள் என்னை உறுத்துகிற பெரிய பிரச்சனையாய் இருக்கிறது.

(சார்லஸ் டிவைன்)

புலவர் பெருமக்களின் சாட்சிகள்

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி"

தெய்வம் தன்னுயிரைக் கொடுத்து
மன்னுயிரைக் காப்பார்

இராமலிங்க அடிகள்

திருப்பணிகள் முடித்தவரும் செத்தும் சாகாதபேரில்
ஒருவருமாய்
அருள் பொருந்திய வேதத்திலே
அவ்வை அறிந்து சொன்னாளே

ஞானப்பெண்ணே அவ்வை

வேதமும் கடந்து நின்ற விமலா
ஓர் குமாரன் தன்னை நீ தரல் வேண்டும்
நின்பார் நின்னையே நிகர்க்க

பழம்பெரும் பாடல் ஒன்று

பாவமில்லாத ஜோதியான தேவன்
துன்பம் நிறைந்த உலகில்
யாவரும் காண வந்தார்

திருவாய்மொழி - பரமகுரு

தனக்குத்தானே மனிதனாகிய
தெய்வம் - இயேசு

தணிகைப்புராணம் - திருமூலர்

அன்பே உருவான தெய்வம்
உலகில் வந்து மனுக் குலத்தை
தூய்மை செய்வான்

அனுபூதிப்பாடல் - திருமந்திரம் 1553

ஒழுக்கம் விழுப்பம் உயிரினும்
ஓம் என்றுரைத் திருந்தால்
ஓம் என்றுரைத் திருந்தால்
கொழிக்குமோ தானே குலவி
நடந்து குவலயத்தீர்
ஒழுக்க வடிவாம் கிறிஸ்துவை
உன்னி உளத்தொழுதால்
அழுக்கைக் கழுவும் ஒழுக்கம்
அரும்பி அலர்ந்திடுமே.

- அருள் வேட்டல் - திரு.வி.க.

தெய்வம் பரிசுத்த குருவாக உலகில்
தோன்றித் தம்மை வெளிப்படுத்தின
கிருபையை அறியாத மூடர் அவரை
நம்மைப் போல் மனிதர் என்பர்.

- திருமந்திரப்பாடல் - 61

குரு எல்லாவகைகளிலும் பரிசுத்தவான் பிறரைப் பரிசுத்தப்படுத்துகிறவன், கருணை வடிவன், தன் ஜீவனைத் தந்து பாவம் போக்குபவன்.

- குருகீதை 111:12

பல நாட்டுத் தலைவர்கள்

"இயேசு கிறிஸ்துவைப்பற்றி"

நான் இயேசு கிறிஸ்துவை நம்பினால் கிராமம் கிராமமாகச் சென்று இரத்தம் சிந்தப் பாடுபடுவேன்.

- ரஷ்யப் பிரதமர் - குருசேவ்

இயேசுவின் சிலுவைமரணம் இன்றும் உலகை வென்று கொண்டிருக்கிறது. நான் உயிருள்ளவரை என் சேனை எனக்குப் பணியும். ஆனால் இயேசு ஜீவனைவிட்ட பின்பும் அவரது சேனை உலகெல்லாம் பரவி வருகிறது. என்ன விந்தை! என்றென்றும் நிலைத்திருக்கும் அரசை ஸ்தாபித்தார்.

-நெப்போலியன்

நெப்போலியன் செயின்ட் ஹெலின் தீவில் இருக்கையில் தன் நண்பன் கௌண்ட்மந்தௌலானிடம் கிறிஸ்து யார் என்று கேட்டான். நண்பன் பதில் தரவில்லை.

நான் சொல்லுகிறேன். அலெக்சாண்டர், சீஷர் போன்றவர்கள் தங்கள் அதிகாரத்தினால் ராஜ்யம் கட்டினார். ஆனால் கிறிஸ்துவோ அன்பினால் கட்டினார். அதை அழிக்கவே முடியாது. உள்ளங்கள் பறிபோகின்றன அவரது தெய்வீகத்தைத் தெரிவிப்பது இதுவே

-சிட்னிகல்லெட்

இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களுக்கு மட்டும் தெய்வமல்ல. அவர் முழு உலகமனைத்திலுமுள்ள சகல இன, ஜனங்களுக்கும் தெய்வம். அவருடைய வார்த்தைகள் எல்லா இன மக்களின் இதயங்களையும் கவர்ந்து கொண்டது.

இந்திய முன்னாள் ஜனாதிபதி. டாக்டர் நாராயணன்

விஞ்ஞானிகள், தத்துஞானிகள் இயேசு கிறிஸ்துவைப்பற்றி கூறியுள்ளவை:

கடவுள் போதனையில்லாத கல்வியையே நான் விரும்புவது. என்றாலும் நன்னடத்தைக்குச் சமய உணர்வு வேண்டும். கிறிஸ்தவ வேதத்தை பயன்படுத்தாமல் சமய உணர்வை பேண முடியாது. கிறிஸ்துவை அறியாத அறநெறியாரிடம் உயிருமில்லை கவர்ச்சியுமில்லை.

- விஞ்ஞானி - ஹக்ஸ்லி

கிறிஸ்துவுக்கு மற்றெந்தப் பெரியாரும் நிகராகார். தம் உயிரையே கொடுத்து, வழிகாட்டி, வாழவேண்டிய முறையைக் காட்டிச் சென்றார். வாழவிரும்புகிறவன் அவரையே பின்பற்ற வேண்டும். அவர் கூறிய வழியைவிட சிறந்த வழி வேறு இல்லை.

- ஜான் டுவர்ட் மில் - ஆங்கிலச் சித்தாந்தி

மனிதன் சந்திரனில் நடந்தான் என்பதைக் காட்டிலும் இயேசுகிறிஸ்து இப்பூமியில் நடந்தார் என்பதே உன்னதமானது. (ஜிம் இர்வின் அப்பொல்லோ) இவர் பி.பி.சி.யில் வானவெளிக்குக் கொடுத்த பேட்டி.

சுவிசேஷத்தின் உட்பொருள்களையும், அதிகாரமுடைமையையும் நீங்கள் உய்ந்து உணரக்கூடியவராயின் இயேசு உண்மையாக தேவகுமாரன் எனக் கண்டு கொள்வீர்கள்.

- ஸ்ரீ இராமகிருஷ்ணர்

மாசுமிகுந்த, மனித இருள்போக்க வந்த இயேசுவே உம்மை நான் மறவேன்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க.

இவ்வுலகில் பத்தாயிரம் ஆண்டுகள் வசித்தாலும் சந்திரமண்டலத்தைப்போல அனுபவமில்லை. ஆனால் இப்பூமியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு கூட நடக்கிற நடையே சந்திரனில் நடந்ததைவிட மிக உன்னத மானது. (அப்பொல்லோ 16-ல் சந்திரனுக்குச் சென்று திரும்பிய சார்லஸ் டியூக் - சாட்சி சொன்னது)

இயேசுநாதர் என் உள்ளத்தை முற்றுமாக உடைத்துவிட்டார்

- ஜவஹர்லால் நேரு

கிறிஸ்தவர்களை ஒன்றும் செய்யாதே. அவர்களை நசுக்கினால் மூட்டைப் பூச்சியைப் போல் பெருகிவிடுவார் கள். அவர்களைச் சீண்டினால் ஜெபம் பண்ணத் தொடங்கு வார்கள். ஆடாத அரசும் ஆடிவிடும்.

- ராஜாஜி

இயேசு பாவமில்லாத பரிசுத்தர் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

- மகாத்மா காந்தியடிகள்

என் செயல்கள் அனைத்தையும் வழிநடத்தும் அஹிம்சைக் கொள்கையின் பாலுள்ள என் நம்பிக்கை அசையாததாக உருவாவதற்குச் சிலுவையில் அறை யுண்ட கிறிஸ்து ஒருவரே என் முன் மாதிரியான விளக்கு.

- மகாத்மா காந்தியடிகள்

சிலுவைமீதிருந்த சான்றோரை நினைப்பீர்களாக சிலுவையிலறையப்பட்ட அந்தப் பெருந்தகையாரின் சிறப்பையும் அருளையும் நாம் எப்படி அறியமுடியும்.

– விவேகானந்தர் ஞானதீபம் சுடர் 2 பக்கம் 372

எழுத்தாளர்கள்

இயேசு கிறிஸ்துவைப்பற்றி கூறிய சாட்சிகள்:

வரலாற்று ஆசிரியரான இவர் கூறியுள்ளது. உயர்ந்த குறிக்கோளுடைய தன்னிகரற்ற ஒருவரை கிறிஸ்தவம் உலகிற்கு அளித்துள்ளது. மூன்று ஆண்டுகளில் அவர் செய்த செயலை ஒப்பிடவே முடியாது பைபிள் புதிய ஜீவனையும் இரக்கத்தையும் கொடுத்துள்ளது.

- வில்லையம் EH லக்கி

மன்னுயிரின் மாசகலபாழ்ச் சிலுவையிலேறி வஞ்சகரை மன்னித்து செங்குருதி சிந்தி தன்னுயிரை மன்பதைக்கே ஈந்த அருள் தெய்வம்.

தரணியில் மூன்றாம் நாள் சாவை வென்றதெய்வம்.

- முகம்மதலி

இயேசு கிறிஸ்து உலக கால அட்டவணைக்கு மட்டுமின்றி முழு உலக சரித்திரத்திற்கு மையமாகவும் திருப்பு முனையாகவும் இருப்பதோடு, உலகின் எல்லா இரகசியங்களின் திறவு கோலாகவும் விளங்குகிறார்.

ஸ்காப்-சரித்திர ஆசிரியர்

வரலாற்று ஆசிரியரான இவர் இயேசுவைச் சந்தித் தாகவும் ஒருவரிடமும் காணாத மிகச் சிறந்த பண்புகள் அவரிடம் இருந்ததாகவும், இராணுவப் படையைக் கண்டு பயப்படுவதைவிட இயேசுவைக் கண்டு நடுங்குவதாகவும் எழுதியிருக்கிறார்.

- வேலியஸ் பேட்டர் குயுலஸ்

நாத்திகர்களின் கூற்று
"இயேசு கிறிஸ்துவைப்பற்றி"

பிரெஞ்சுப் புரட்சி நடந்தபோது பிரெஞ்சுத் தலைவன், பாரா என்ற வீரனிடம் கிறிஸ்துவமதத்தை அழித்து வேறு மதத்தை எப்படி அமைப்பது எனக்கேட்டான்.

அதற்குப் பாரா, யாராவது உம்மை வெள்ளிக்கிழமை கொன்று, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிரோடே வாரும் அதன்பின் யோசிப்போம் என்றான்.

ரெவையேர்

நாத்திகன் ஒருவன் இயேசுவிடம் விசுவாசிகயைப் பார்த்து நம்பியிருக்கிற தச்சன் மகன் இப்போது எங்கே என்று கேட்டான். அதற்கு விசுவாசி, எனக்கு ஒரு மோட்ச வீட்டையும் உனக்கு ஒரு நரகத்தையும் தயார் செய்து கொண்டிருக்கிறார் என்றான்.

சாட்சி பெற்ற வேத புத்தகம்

கிறிஸ்தவர்களின் வேதபுத்தகம் (பைபிள்) பற்றி கொடுக்கப்பட்டுள்ள சாட்சிகள்

இதோ நித்திய ஜீவனைக்கொண்டு வருகிறேன். Behold, I bring life etemal.

அரசர்கள் கொடுத்த சாட்சிகள்

இங்கிலாந்தின் மகிமைக்குக் காரணம் பரிசுத்த வேதாகமம்.

- விக்டோரியா மகாராணியார்

இந்த உலகத்தினால் பெறக்கூடிய மிக உயர்ந்த விலையேறப்பெற்ற ஒன்று பரிசுத்த வேதாகமம்.

- ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்

உலகிலேயே மிகச் சிறந்த புத்தகம் பைபிள். நான் பார்த்திருக்கிற நூல் நிலையங்களிலுள்ள கருத்துக்களை விட மிக மேலான சத்தியங்கள் இதில் அடங்கியுள்ளன.

- ஜான் குயினி ஆதாம்

எங்கள் சுதந்திரத்திற்கு அடிப்படையான நங்கூரம் பைபிள்.

- U.S. கிராண்ட்

பரிசுத்த வேதாகமத்தைப்பற்றிய அறிவு இல்லாமல் எவ்வளவு படித்திருந்தாலும் அது அறிவாகாது.

- தியோடர் ரூஸ்வெல்ட்

பைபிளை அறியும் அறிவானது மிக உயர்ந்த நிலையில் நம்மை வைத்து நித்திய ஜீவனுக்கும் போவதற்கான சத்தியத்திலும் ஆவியின் வழியிலும் நடத்துகிறது.

- டுவைட் ஐசனோவர்

அறிஞர்கள், வழக்கறிஞர்களின் சாட்சிகள்

சிறைவாசம் போலுள்ள இந்த உலகத்தில் பைபிள் நமக்கு ஒரு ஜன்னல்போல் உள்ளது அதன் மூலம் நாம் நித்திய ஜீவனை அடையலாம்.

– தீமோத்தேயு உவைட் (அறிஞர்)

என்றென்றும் நிலைத்திருக்கும் ஜீவத்தன்மை யுடைய பைபிளைப்போல வேறொரு புத்தகம் இந்த உலகில் இல்லை. இது செல்வாக்கும் தெய்வத் தன்மையும் கொண்டது. இதை அழிக்கவே முடியாது.

– ஹென்றி வேன்டைக் (அறிஞர்)

உலகில் அச்சிடப்பட்டுள்ள எல்லாப் புத்தகங்களை யும் விட மிக மேலாகவும், அதிகமாகவும் அச்சிடப்பட்டுள்ள புத்தகம் பைபிள்.

– பேட்ரிக் ஹென்றி வழக்கறிஞர்

பைபிலுள்ள பழைய புதிய ஏற்பாட்டுச் சத்தியங்கள் தேவ சித்தங்கொண்ட தேவ வசனங்களாக உள்ளன என நான் முழுவதுமாக நம்புகிறேன்.

– டானியேல் வெப்ஸ்டர் (வழக்கறிஞர்)

இளைஞர்களுக்கு நான் கூறும் அறிவுரை யாதெனில் உலக ஞானத்திலும் வளருங்கள் ஆனாலும் பைபிள் கூறும் தேவ சத்தியங்களில் உறுதியாயிருங்கள்.

– பெஞ்சமின் பிராங்களின் (வழக்கறிஞர்)

நான் போகிற பரலோகத்திற்கு வழிகாட்டியான பரிசுத்த வேதாகமத்தை நான் வாசிக்கிறேன்.

– சாமுவேல் மோர்ஸ்

பரிசுத்த வேதாகமம் தத்துவ ரீதியானது. இயற்கை விதிக்கு ஒத்தது.

- ராபர்ட் பாயில்

மக்களை மிக உயர்ந்தவர்களாக மாற்றுவது இவ்வுலகத்தில் பைபிளே

- ஜான் ஜெபர்சன்

பரிசுத்த வேதாகமத்தில் நான் எல்லா விளக்கம், தத்துவம், கருத்து வெளிப்பாடு காண்கிறேன்.

- மாக்ஸ் முல்லர்

பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும் எந்தவொரு இனத்தையும் சரீரத்திலோ, சிந்தைனையிலோ அவர்களை அடிமைத்தனத்திற்கு உட்படுத்தவே முடியாது.

- யோரேஸ் சிரிலி

எல்லா புத்தகங்களையும் விட பைபிள் மிக அவசிய மானதும் மிக உபயோகமானதும், மிக மேலான ஞானத் தைத் தருவதுமான புத்தகமாக உள்ளது.

- சார்லஸ் டானா

மனிதவர்க்கத்தினுடைய அனுபவத்தில் எப்போதும் நிலைத்திருப்பதும். மனிதனுக்கு அதிக நன்மைபயப்பது மான புத்தகம் பைபிள் மட்டுமே.

- இம்மானுவேல் கான்ட்

பைபிள் எவ்விதக் குறைபாடும் இல்லாமல் சத்தி யத்தை உண்மையாகவும், சுத்தமாகவும், வெறொரு சத்தியமோ, உண்மையோ அதற்குத் தேவையற்றதாகவும் எழுதப்பட்டது அதன் ஆக்கியோன் தேவன்

- ஜான் லாக்ஸ்

வேதாகமத்தின் அறிவு இல்லாமல் தற்போதுள்ள சமூகத்தில் ஒரு குழந்தை நல்ல குடிமகனாக வாழமுடியாது.

- கவுன்லியோ டால்டாய்

பெரிய பெரிய நூல்களை நான் படித்தும் என் வாழ்வில் எழுதியும் இருக்கிறேன். என் வாழ்வில் சமாதானம் தந்தது வேதாகம சத்தியங்களே

- ஜான் ரஸ்கின்

சூரியனைப் போன்று பிரகாசிக்கக் கூடியதும் பரிசுத்த மானதுமாக உள்ளது பைபிள். அது ஒவ்வொரு தலை முறைக்கும் வெளிச்சம் தந்து வருகிறது. இதைவிட வேறொரு சத்தியம் தேவைப்படாது.

- வில்லியம் கூப்பர்

ஆச்சரியமான இந்த பைபிள் புத்தகத்திற்குள்ளே எல்லா இரகசியங்களும் அடங்கியுள்ளன.

- சர் வால்டேல் ஸ்காட்

இவ்வுலகில் பைபிளைப் போல ஒரு புத்தகம் இருந்ததுமில்லை. இனி மேல் இருக்கப்போவதுமில்லை.

- சார்லஸ் டிக்கின்ஸ்

பைபிலுள்ள ஒவ்வொரு வரியும் தேவனைப்பற்றியே கூறுகிறது. அது ஆணையிடக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

- ஜான் ஓனிடன்

பைபிளைப்பற்றிய அறிவுடையவன் உண்மையில் கற்றவன் ஆவான். கல்லூரிப் படிப்பின்றி வேத அறிவு பெற்றால் அது கல்லூரிப் படிப்பைவிட அதிக மதிப்புள்ளதாகும்.

- வில்லியம் பெல்ஸ்

வேதபுத்தகத்தில் கூறப்பட்டுள்ள ஞானப்பாட்டு களையும் தீர்க்கத்தரிசனங்களையும் தீர்க்கத்தரிசனங் களை உரைத்த தீர்க்கத்தரிசிகளைப் போலவும் வேறு ஒன்றும் கிடையாது.

- ஜான் மில்டனி

பரிசுத்த வேதாகமத்தைக் குறித்த அறிவு, இது இல்லாமல் வாழ முடியாது. படித்த கல்லூரி அறிவைவிட சிறந்தது.

- வில்லியம் லயன பெல்ஸ்

மனித சமுதாயத்துக்கு கிடைத்த உயர்ந்த பரிசு பரிசுத்த வேதாகமம்

- கிளாட்ஸ் டோன்

பரிசுத்த வேதாகமத்தின் செல்வாக்கு தான் மனித வளர்ச்சிக்கு காரணமாகும். எதிர்காலத்திலே நம்மை வழிநடத்த பரிசுத்த வேதாகமத்தையே நாம் நோக்கிப் பார்க்க வேண்டும்.

- கிராண்ட்

வேதபுத்தகத்தைப் படிப்பதால் உள்ளங்கள் பரிசுத்தப்படுகிறது. அதைப்படிப்பது நல்லது. அதன் ஆழத்தைக் காண முடியாது.

- ஜான் கிறிஸ்டம்

பரிசுத்த வேதாகமத்தில் ஓர் ஆழ்ந்த நம்பிக்கையை உருவாக்கிக்கொள்ளுங்கள் என்பதே நான் இளைஞருக்குக் கொடுக்கும் ஆலோசனை.

– பெஞ்சமின் பிராங்ளின்

பரிசுத்த வேதாகமத்தைத் தங்களுக்கு வழிகாட்டி யாக மக்கள் கொள்வார்களென்றால் அவர்கள் எப்படி வழிதவறிப் போக முடியும்?

– மைக்கேல் பாரடே

என்னுடைய பெருமை என் பெற்றோர் எனக்கு வேதம் கற்றுத் தந்ததேயாகும். வேத கற்பனைக்கு செவிகொடாதே போனால் அழிவானது நம்மை இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிடும்.

– டேனியல் வெப்ஸ்டர்

இளைஞர் முதிர்வயது வரை தம் வாழ்நாளில் கற்றது விஞ்ஞானம் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள உண்மைகளைவிட அதிகமான விஞ்ஞானம் இல்லை.

– ஜென்னி ஓவிட் டானா

என் வாழ்வில் 95 புகழ் வாய்ந்த பெரியோர்களை அறிவேன். அவர்களில் 87 பேர் பைபிளை பின்பற்றினவர்களே

– வில்லியம்கிலேடுஸ்டோன்

பைபிளுடன் பிறபுத்தகங்களை ஒப்பிட முடியவே முடியாது. என்னுடைய கஷ்டங்கள், துயரங்கள் ஆகிய நேரங்களிலெல்லாம் அது எனக்குப் பெலன் தரவும் வழிகாட்டவும் தவறினதேயில்லை.

– ஜெனரல் ராபர்ட் லீ

வேதபுத்தகத்தில் மிக அதிகமான தீமைகளை வெல்லக்கூடிய பலம் வாய்ந்த நம்பிக்கை இருக்கிறதாக உணருகிறேன்.

- ஹெலன் கெல்லர்

எல்லாப் புத்தகங்களைக் காட்டிலும் மேலான இடத்தில் பைபிளை நான் வைத்திருக்கிறேன். ஒவ்வொரு வரும் இதை வாசிக்க வேண்டும். மனித வர்க்கத்துக்கு வரும் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான வழியை இதில் காணலாம்.

- பெரமர் பார்ச்

தோற்றத்தில் தன்னிகரற்ற பரிசுத்த வேதாகமத் திற்கும் அதனுடன் போட்டியிடும் மற்றப் புத்தகங்களுக்கும் அளவிட முடியாத இடை வெளியுண்டு.

- கிளாட்ஸ் போன்

ஆன்மீக வாதிகளின் சாட்சிகள்

வேதபுத்தகத்தின் வாயிலாக தேவன் நம்மோடு பேசுகிறார். நாம் தினமும் கேட்போம்.

- லூதர்

பரிசுத்த ஆவியானவரின் பள்ளிதான் வேதவசனங்கள். அதில் நாம் தவிர்க்கக் கூடியது எதுவுமில்லை. நமக்குப் பயன் இல்லாததும் அதில் ஒன்றுமில்லை.

- கால்வின்-மதக்குரு

எவருமே பைபிளை எதிர்க்க முடியாது.

- சரித்திரச் சான்று.

வேதபுத்தகத்திலுள்ள தெய்வீக அறிவுரைகளில் யாரும் குற்றங்கண்டுபிடிக்க முடியாது. அது பரிசுத்த ஆவியானவரால் எழுதப்பட்டது.

- ஆரிஜன்

அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் தேர்தலில் நிற்பவர் நான் பைபிளை நம்புகிறேன் என்று சொன்னதால்தான் தேர்தலில் நிற்க முடியும்.

- தேர்தல் அறிக்கை U.N.A.

சத்தியம் பல்கலைக் கழகத்தின் விளக்கம்

பரிசுத்த வேதத்தின் வார்த்தையில் மூன்று சாட்சிகளின் வழியாக ஆராய்ச்சியை மையமாகக் கொண்டு இயங்குவதே சத்தியம் பல்கலைக்கழகம்

★ வெளிப்பாடு

★ சீர்திருத்தம்

★ மறுமலர்ச்சி

சத்தியம் பல்கலைக்கழகம் வார்த்தையின் வெளிப்பாடுகளைப் போதிக்கிறது. அதன் விளைவு சீர்திருத்தம் ஏற்படுகின்றது. அதன் பலனாக மறுமலர்ச்சி உண்டாகின்றது. இதன் நோக்கம் வேதமே சிறந்தவைகளில் சிறந்தது என நிரூபிப்பது.

சத்தியமாவது என்ன? (யோவா. 18:37; எரே 5:1)

★ பிதாவாகிய தேவன் சத்தியம் - ஏசா 65:16

★ குமாரனாகிய தேவன் (இயேசு) சத்தியம்- யோவா 14:6

★ பரிசுத்த ஆவியானவராகிய தேவன் சத்தியம்
- யோவா 16:13

★ வேதத்தின் எழுத்துக்கள் சத்தியம் - தானி 10:21

★ வேதத்தின் (முழுவசனமும்) வேதமே சத்தியம்
- சங். 119:160,142

★ வார்த்தையாகிய தேவனே சத்தியம் -யோவா 1:1

சத்தியமாவது பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியானவராகிய தேவனாகும். மேலும் அவருடைய வேத எழுத்துக்களும், எழுத்துக்கள் சேர்ந்த

வார்த்தைகளும், வார்த்தைகள் சேர்ந்த வசனங்களும் மொத்தத்திலே வேதமே சத்தியமாகும். தெளிவாக விளங்கிக் கொள்ள வார்த்தையாகிய தேவனே சத்தியம்.

சத்தியத்தின் இரகசியம் (கொலோ 1:25-27; எஸ்றா 7:10)

★ **ஆத்துமாவில் வேதம்**

★ **ஆவியில் வேதம்**

★ **சரீரத்தில் வேதம்**

சத்திய தேவனுடைய திட்டத்தின், சித்தத்தின், இரகசிய மானது, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வார்த்தையின் வழியாக வந்து வாசம் பண்ண வேண்டும். வார்த்தையை நம்முடைய ஆத்துமா, ஆவி, சரீரத்தில் நிரப்பி எஸ்றாவைப் போல இருதயம் பக்குவப்படுத்தப்பட இந்த ஆராய்ச்சிப் பயிற்சிகள் சத்திய போதனையாக பயிற்சியளிக்கப்படுகின்றது.

சத்தியவான்கள் உருவாக்கப்படுவதின் காரணம் (2 தீமோ 4:4; 2 பேது 1-3)

★ **சத்தியத்திலே நடக்கிறவர்கள் - 3 யோவா 4**

★ **சத்தியத்தினாலே நற்சாட்சிபெற்றவர்கள்**
- 3 யோவா 12

★ **சத்தியத்திற்கு உடன்வேலையாட்கள்**
-3 யோவா 8

வேதமாகிய சத்தியத்தை விட்டு கள்ள உபதேசங்களுக்கு செவிசாய்ந்து போகுங் காலம் வருமென்று வசனம் எச்சரிக்கின்றது. எனவே இதனை உணர்ந்து சத்திய வார்த்தையினுடைய போதனையின் மூலம் சத்தியத்திலே நடக்கிறவர்களையும், சத்தியத்தினாலே நற்சாட்சி பெற்றவர்களையும், சத்தியத்திற்கு உடன்வேலையாட்களையும் உருவாக்குவதே இதன் காரணமாகும்.

சத்தியத்தினாலே இவ்விதமாக உருவாக்கப் படுகின்றோம்

- ★ **சத்திய வீடு**
- ★ **சத்திய நகரம்**
- ★ **சத்திய தேசம்**

மேற்கண்டபடி நாம் உருவாக்கப்பட வீடுகளிலும், நகரங்களிலும், தேசங்களிலும், சத்திய (வார்த்தை) ஆராய்ச்சி மையத்தை நிறுவ வேண்டும். இவ்விதமான ஆராயச்சி மையங்களை ஏற்படுத்துவதினால் சத்தியத்தின் வழியாகவே சத்திய வீடாக சத்திய நகரமாக, சத்திய தேசமாக மாற்றப்படுவோம்.

சத்தியம் பல்கலைக் கழகத்தின் தரிசனம்

மனிதனுடைய வாழ்வில் எழுப்புதல்

★ தனிப்பட்ட வாழ்க்கை- சந்தோஷம்

★ குடும்ப வாழ்க்கை -சமாதானம்

★ பொது வாழ்க்கை - நீதி / நியாயம்

சத்தியத்தின்மூலம் மனிதனுடைய தனிப்பட்ட வாழ்வில் சந்தோஷத்தையும், குடும்ப வாழ்க்கையில் சமாதானத்தை யும் பொது வேலை ஊழிய வாழ்க்கையில் நீதி, நியாயங் களையும் உண்டாக்கி அதன்மூலம் எழுப்புதலைக் கொண்டு வருவதே சத்தியம் பல்கலைக்கழகத்தின் தரிசனமாகும்.

சந்திக்கப்படாதவர்களைச் சந்திப்பது

★ புறஜாதிகள்

★ இஸ்ரவேலர்கள்

★ பாரம்பரிய கிறிஸ்தவர்கள்

தேவனை அறியாத புறஜாதிகளையும், வார்த்தையை (இயேசு) இஸ்ரவேலர்களையும், சத்தியத்தை அறியாத பாரம்பரிய மனுஷ கற்பனையை அறிந்து கிறிஸ்தவர் களையும் சத்தியத்தின் வழியாக சந்திப்பதே சந்திக்கப் படாதவர்களைச் சந்திப்பதாகும்.

இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தம்

★ குமாரனுடைய சாயல்

★ ஆவியானவருடைய மகிமை

★ பிதாவாகிய தேவனுடைய மறுரூபம்,
உயிரடைதல்

சந்திப்பதின் மூலம் நம்முடைய ஆத்தும [illegible] இரட்சிப்பைப் பெறுவதும், ஆவி ஆவிக்குரியவர்களுடைய மகிமையை அடைவதும், சரீரம் [illegible] மறுரூபம் அல்லது உயிரடைவதற்கும் நாம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக்கப்படுவதே நமது தரிசனமாகும்.

சத்தியம் பல்கலைக் கழகத்தின் திட்டம்

★ வார்த்தையினால் உலகத்தைச் சந்தித்தல்

★ ஆராய்ச்சி மையங்களை உருவாக்குதல்

★ வேதக்காரர்கள், வேதத்தலைவர்கள், வேத தீர்க்கர்களை உருவாக்குதல்

சத்தியம் பல்கலைக்கழகம் உலகத்தை வார்த்தையினால் சந்திக்க உலகமெங்கும் ஆராய்ச்சிமையங்களை ஏற்படுத்துகின்றது. ஆராய்ச்சி மையங்களில் பயிற்சி பெற்ற சத்திய தலைவர்களை உலகமெங்கும் அனுப்புவதே இதன் திட்டமாகும்

சத்தியம் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள்

- ★ **வார்த்தையைத் தேடுதல்**
- ★ **வார்த்தையைத் தியானித்தல்**
- ★ **வார்த்தையை ஆராய்தல்**

சத்தியம் பல்கலைக்கழகத்தில் ஈடுபட்டு பயிற்சி பெறுகின்றவர்கள் அன்றாட வாழ்வில் வேதத்திற்கு முக்கியமளித்து வார்த்தையிலே தேடி வாசிக்கவும், தியானம் பண்ணவும், ஆராய்ந்து வாசிக்க பயிற்சியளிப்பதே இதன் செயல்பாடாகும்.

அ. சீஷத்துவ ஆராய்ச்சிப் படிப்பு பிரிவுகள் (வேதாகம தெய்வீகம்)

1. B.Th - இயேசு கிறிஸ்து - 2 வருடம்
2. M.Th - பரிசுத்த ஆவியானவர் - 2 வருடம்
3. D.Th - பிதாவாகிய தேவன் - 3 வருடம்

ஆ. ஊழியம், போதனைக்கான ஆராய்ச்சிப் படிப்பு பிரிவுகள் (வேதாகம தெய்வீகம்)

1. B.M.(B.D) - இயேசு கிறிஸ்து - 2 வருடம்
2. M.M (M.D) - பரிசுத்த ஆவியானவர் - 2 வருடம்
3. D.M (D.D) - பிதாவாகிய தேவன் - 3 வருடம்

1. B.Ed - இயேசு கிறிஸ்து - 2 வருடம்
2. M.Ed - பரிசுத்த ஆவியானவர் - 2 வருடம்
3. Ph.D - பிதாவாகிய தேவன் - 3 வருடம்

இ. பண்டிதர்களுக்கான ஆராய்ச்சிப் படிப்பு பிரிவுகள் (11 துறைகளில்)

1. வேதாகம வானவியல்
2. வேதாகம பூமியியல்
3. வேதாகம சமுத்திரவியல்
4. வேதாகம சட்டவியல்
5. வேதாகம மருத்துவயியல்
6. வேதாகம பொறியியல்

7. வேதாகம தொழிநுட்பவியல்

8. வேதாகம கலையியல்

9. வேதாகம அறிவியல்

10. வேதாகம வியாபாரயியல்

11. வேதாகம அரசாங்கயியல்

★ **இளநிலை பட்டப்படிப்பு**

★ **மேல்நிலை பட்டப்படிப்பு**

★ **பண்டிதர் பட்டப்படிப்பு**

வேத ஆராய்ச்சிப் பயிற்சிகள்

சத்தியம் பல்கலைக்கழகம் மறுரூபப்படுவதற்கு தேவையான தலைசிறந்த ஈடுஇணையற்ற போதனைகளை, பயிற்சிகளைத் தயார் செய்து வழங்குகின்றது.

1. வார்த்தை ஆராய்ச்சி
2. வசன ஆராய்ச்சி
3. அதிகார ஆராய்ச்சி
4. புத்தக ஆராய்ச்சி
5. பொருள் ஆராய்ச்சி
6. குணப்பாத்திர ஆராய்ச்சி
7. எண்கள் ஆராய்ச்சி
8. நாமங்களின் ஆராய்ச்சி
9. காலங்களின் ஆராய்ச்சி
10. ஊழியத்தின் ஆராய்ச்சி
11. போதனையின் ஆராய்ச்சி
12. புதிர்களின் ஆராய்ச்சி
13. சிருஷ்டிப்பின் ஆராய்ச்சி
14. நித்திய ஆராய்ச்சி

இவைகள் மூலமாக

அ. பிராந்திய மையங்கள்

ஆ. தங்கி படிப்பதற்குரிய படிப்பு பிரிவுகள்

இ. தொலைதூரக் கல்வி

★ வேத வாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்

★ வேத வாக்கியங்களை தேடி வாசியுங்கள்

★ வேத வாக்கியங்களை தியானம்பண்ணுங்கள்

ஜீவ விருட்சத்தின் வெளியீடுகள் ([illegible]

1. தமிழ், ஆங்கிலம், மலையாளம் மற்றும் இந்தி (சாப்ட்வேர்கள்) மென்பொருள்கள்

- ★ தமிழ்வேதம்
- ★ ஆங்கில வேதங்கள் (ஒன்பது)
- ★ எபிரெய வேதம்
- ★ கிரேக்க வேதம்
- ★ 12 வேதங்களை ஒத்துப் பார்க்கின்ற வசதி
- ★ தமிழ் அகராதி
- ★ ஒரு வார்த்தை, இரண்டு வார்த்தைகள், மூன்று வார்த்தைகள் ஆராய்ச்சி வசதி
- ★ 66 புத்தகங்களின் முழு விபரங்கள்
- ★ ஆயிரம் இரகசியங்கள் (ஆதியாகமம் முதல் வெளிபாடு வறை)
- ★ 935 இரசியங்கள் (ஆதியாகமம் முதல் வெளிப்பாடு வறை)
- ★ அறிவியல் மற்றும் சரித்திரத்தினுடைய 100 காரணங்கள்
- ★ வரைபட விளக்கங்கள், அகராதிகள்
- ★ தோட்டத்தின் ஆழமான 28 இரகசியங்கள்
- ★ பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருடைய ஆராதனை
- ★ ஒன்று முதல் ஏழு வரையிலான தெய்வீக கணிதம்

★ அன்றாட துதி செய்ய வசனத்தோடு கூடிய திட்டம்

★ அன்றாட வாக்குத்தத்தம்

★ அனுதின ஜெபமுறைகள்

★ குறிப்புகளைதயார் செய்யும் வசதி

★ தமிழ் தட்டச்சுப்பலகை

2. இணை வேதாகம (சாப்ட்வேர்) மென்பொருள் (தமிழ், ஆங்கிலம், மலையாளம் மற்றும் இந்தி)

3. வேதாகம சிப்புகள்

4. புடவைகள்

5. பனியன்கள்

6. கைக் கடிகாரங்கள் (ஆண், பெண்)

7. சுவர்க் கடிகாரங்கள்

8. DVD's ஆழமான இரகசியங்களடங்கிய ஒலி ஒளி குறுந்தகடுகள்

சத்திய வேதமே சிறந்தவைகளில், சிறந்தது என நிரூபிக்க, பல அரிய பொக்கிஷங்களை (Tree of Life) ஜீவ விருட்சத்தின் மென்பொருள்கள் மிகச் சிறந்த ஆராய்ச்சிக்குரியவைகள். வேதாகம சிறப்புகள் முழு வேதத்தையும் கைப்பேசியின் மூலம் கேட்டு தியானம் செய்யலாம். தேவனுடைய நாமங்கள் பொறித்த உடை கள், கடிகாரங்கள் நமக்கு உகந்த பாதுகாப்புதருகின்ற அத்தியாவசியமானவைகள். மேலும் ஒலி ஒளியில் DVD

வார்த்தை ஊழியம்

வார்த்தை என்பது சர்வ வியாபியாகிய, சர்வ ஞானி யாகிய, சர்வ வல்லவராகிய தேவனே, தெய்வீகத்தை குறிப் பிடுகின்றது. வார்த்தையின் மூலமாகவே ஆக்கல், காத்தல், அழித்தல் என்கின்ற முத்தொழில்களும் நடைபெறு கின்றன. வார்த்தையாகிய தேவன் இந்த முத்தொழிலை தேவஞானம், தேவகணிதம், தேவட்ரைவியம் என்பவை களின் மூலமாக இயக்குகின்றார்.

தரிசனம்

தேவனுடைய ராஜ்யத்தில் ஊழியத்தை மூன்றாக பிரிக்கலாம். ஒன்று (பரலோக தேவனுடைய ராஜ்யம்), இரண்டு (பழைய ஏற்பாட்டு தேவனுடைய ராஜ்யம், மூன்று (புதிய ஏற்பாட்டு தேவனுடைய ராஜ்யம்). புதிய ஏற்பாட்டு ஊழியத்தில் சபையானது வார்த்தையினாலே, வார்த்தை யைக்கொண்டு, வார்த்தையின்படியே உருவாக்கப் படுகிறது.

தகுதிகள்

இந்த திட்டத்தின்கீழ் இணைந்து புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடு, நித்திய ஏற்பாட்டிற்கான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள விரும்பும் ஊழியர்களுக்கான தகுதிகள்:

1. தேவ ஊழியத்திற்கென தேவ வசனத்தால் அழைப்பு, தெரிந்து கொள்ளுதல் உண்மை இருக்க வேண்டும். குறைந்தது மூன்று முதல் ஏழு வருடங்கள் ஊழிய அனுபவம்.

2. செய்த ஊழியத்திற்கான ஆதாரங்கள், சான்றிதழ்கள், சாட்சிகள் இருக்க வேண்டும்.

3. தேவ ஊழியத்திற்கு அவசியமான தாலந்துகள், வரங்கள், கிருபை இருக்க வேண்டும்.

4. எங்களது B.Th., BD யை முறைப்படி கற்று சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள வேண்டும் (வேறு எந்த இறையியல் கல்வி தகுதிகளும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

5. திங்கள் முதல் சனிக்கிழமை வரை சபையிலே வேதாகம ஆராய்ச்சி பள்ளியை பகலிலே நடத்த வேண்டும்.

6. திங்கள் முதல் சனிக்கிழமை வரை மத்தியானத்திலே வேலைக்கான தொழிற்கல்வியை வழங்கும் போது சுய வேலை வாய்ப்பு திட்டத்தை கவனித்துக் கொள்ள வேண்டும்.

7. திங்கள் முதல் சனிக்கிழமை வரை மாலை நேரத்திலே தேவ திட்டத்தின்படி சுவிசேஷ ஊழியம் செய்து ஆத்து மாக்களை ஆதாயப்படுத்தி சபைக்கு கொண்டு வர வேண்டும்.

8. ஐந்து, ஆறு, ஏழாவது வருடங்களில் இரண்டு அல்லது மூன்று சபை கிளைகளை உருவாக்கியிருக்க வேண்டும்.

9. வார்த்தை என்ற இந்த அமைப்பின் எல்லாவிதமான சட்டதிட்டங்களுக்கும், விதிமுறைகளுக்கும், ஒழுங்கு களுக்கும் கீழ்ப்படிந்து, ஒத்துழைத்து நடக்க வேண்டும்.

செயல்பாடு

1. முதல் வருடத்திலே : எந்தவொரு சபையை, ஸ்தாபனத்தை சேர்ந்த ஊழியராக இருந்தாலும் அவருக்குத் தேவையான வேத போதனைகளை (B.Th) கொடுத்து, வேத வசனங்களின் அடிப்படையில் சபையை நடத்துவதற்குரிய பயிற்சியையும் (BD) கொடுப்பது, மேய்ப்பர்களுக்குரிய சான்றிதழ்களை யும் (Pastor's Certificate), ஊழியர்களுக்குரிய உரிமங்களையும் (Minister's License) வழங்குவது.
2. இரண்டாவது வருடத்திலே : வார்த்தை என்ற இந்த அமைப்பின் சகல சட்ட திட்டங்களுக்கும், விதி முறை களுக்கும் கட்டுப்பட்டு நடந்தால் சில நிபந்தனை களின் அடிப்படையில் சபையினுடைய மாதாந்திர வாடகை வழங்கப்படும்.
3. மூன்றாவது வருடத்திலே : சபை மேய்ப்பனுடைய கடைசி இரண்டு குழந்தைகளுக்கான பள்ளிக்கூட செலவுகளை வார்த்தை என்ற இந்த அமைப்பு பொறுப்பெடுத்துக் கொள்ளும்.
4. நான்காவது வருடத்திலே : சபையின் மேய்ப்பருக்குரிய தகுதிக்கேற்ப, ஒத்துழைப்புக்கேற்ப, செயல்பாட்டிற் கேற்ப மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படும்.
5. ஐந்தாவது வருடம், ஆறாவது வருடம், ஏழாவது வருடம்: இந்த மூன்று வருட காலத்திற்குள் இரண்டு அல்லது மூன்று கிளை சபைகளுக்கு மேற்கண்ட

உதவிகளை முதல் சபை செய்ய வேண்டும் காணிக்கை தசமபாகம் நன்கொடை இன்னும் இது போன்ற பணக் கரியங்களில் வார்த்தை அமைப்பின் ஆலோசனையின்படி நடந்து கொள்ள வேண்டும்.

6. எட்டாவது வருடத்திலே : தேவைப்பட்டால் அந்த சபை விசுவாசிகளின் ஒத்துழைப்புடன் சபைக்கு கட்டிடம் கட்டித்தரப்படும்.

திட்டம்

வார்த்தையாகிய பிதா சபையை குடும்பமாக உருவாக்கி வருகின்றார். வார்த்தையாகிய இயேசு சபையை சரீரமாக உருவாக்கி வருகின்றார். பரிசுத்த ஆவியானவர் சபையை ஆலயமாக உருவாக்கி வருகின்றார். எனவே, எந்தவொரு சபையாக இருந்தாலும் அதனை வசனத்தின் படி உருவாக்கி வருகைக்கு ஆயத்தப்படுத்துவதுதான் எங்களது திட்டம்.

2011

January

S	M	T	W	T	F	S
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

February

S	M	T	W	T	F	S
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28					

March

S	M	T	W	T	F	S
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

April

S	M	T	W	T	F	S
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

May

S	M	T	W	T	F	S
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

June

S	M	T	W	T	F	S
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

July

S	M	T	W	T	F	S
31					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

August

S	M	T	W	T	F	S
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

September

S	M	T	W	T	F	S
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	

October

S	M	T	W	T	F	S
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

November

S	M	T	W	T	F	S
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30			

December

S	M	T	W	T	F	S
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

2012

January

S	M	T	W	T	F	S
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

February

S	M	T	W	T	F	S
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29			

March

S	M	T	W	T	F	S
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

April

S	M	T	W	T	F	S
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30					

May

S	M	T	W	T	F	S
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

June

S	M	T	W	T	F	S
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

July

S	M	T	W	T	F	S
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

August

S	M	T	W	T	F	S
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

September

S	M	T	W	T	F	S
30						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

October

S	M	T	W	T	F	S
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

November

S	M	T	W	T	F	S
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	

December

S	M	T	W	T	F	S
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

சத்தியத்தை
அறிவீர்கள்
சத்தியம்
உங்களை
விடுதலையாக்கும்
யோவா 8:32

Truth University

www.truthuniversity.net